T. 413

MEDIÆVAL TALES OF SOUTHERN INDIA

IN TAMIL.

PANDIT S. M. NATESA SASTRI, B.A., M.F.L.S.

திராவிட

மத்தியகாலக் கதைகள்.

இஃது
லண்டன் கதாசபை மெம்பர்,
பண்டித நடேச சாஸ்திரியாரால்
இயற்றப்பட்டது.

All Rights Reserved.

Madras:
PUBLISHED BY THE
MADRAS SCHOOL BOOK AND LITERATURE SOCIETY
MOUNT ROAD.

1897.

திராவிட

மத்தியகாலக் கதைகள்.

முதலாவது,

ஜோஸியன் பிள்ளை.

[illegible]
ஜோஸியனுக்கு உடம்புக்கு நோய் வந்துவிட்டது. இன்
ழிகையிலோ அல்லது அரைநாழிகையிலோ தன் பிராண
விடவேண்டுமென்பது அவனுக்கே நிச்சயமாய்த் தெரிந்து
உடனே அவன் தன் பிள்ளைகளிருவர்களையும் கூப்பி
வனுக்குத் தன் ஆஸ்திகளையெல்லாம் கொடுத்துப் பிறகு
னுக்கு ஒரு ஓலை நறுக்கில் ஸமஸ்கிருதத்தில்
திக்கொடுத்தான். அது என்னவெனில்,

"ஜந்மப்ரபுர்தி தாரித்திரியம் தசவருஷா
சமுத்திர தீரேமரணம் கிஞ்சித்போ

ன் அர்த்த மென்னவென்றால், "உனக்
தான். பத்துவருஷம் நீ கொட்டடி
வண்டும். சமுத்திரக்கரையில் உன
ல ஸ்திதியிலிருப்பாய்." இந்த
த்துவிட்டு ஜோஸியர் பர

அவருக்கு நடக்கவேண்டிய உத்தரகிரியைகளெ... கன
கிரக எக்கியமும் முடிந்தது. தமையன் தம்பியைப் ப...
நம்முடைய தகப்பனார் என்னதான் எட்டிற்குறித்துக் ... ந்த
போதிலும் நீ பயப்படாதே. வீட்டுத் திண்ணையை வி... ழ
இறங்கினாலல்லவோ குற்றஞ்செய்ய வரும். அதன்போ... வா
நீ கொட்டடிக்குப் போகவேண்டும். அவைகளொன்... ய
லிருக்கிறவனாயில் நாம் மரியாதையாயிருப்பதில் என்ன... க
யம். தகப்பனார் உனக்கு ஆஸ்தி ஒன்றும் கொடுக்கவில்லை ... தில்
நீ மனதில் சந்தேகம் வைக்கவேண்டாம். இந்த வீடுவாசல் ... ஸ்தி
பாஸ்தி எல்லாம் உன்னுடையதே. நீ சொஸ்தமாய் மனதிற் ... சந்
தபடி சௌக்கியமாயிரு'' என்றான். தம்பி தமையன் சொ... தை
எல்லாம் கேட்டுக் கடைசியாய்த் தமையனைப்பார்த்து ''அ... ணா
இதென்ன வார்த்தை நீர் சொல்லுகிறது, இதுவனாயில் எப் ... பாழு
தாவது அப்பாவின் குறிப்புகள் பிசகினதுண்டா. என்ன ... க்கிர
தையாய்த்தான் ஒருவனிருந்தாலும் அவர்மட்டில் உனக்கு உன்
ஜாதகரீதியாய் இன்னமாத மின்னதேதி இன்ன ஆபத்து வரும் என்று
சொன்னால் அந்த மாதிரியே வரும். வெள்ளம் வருவதற்கு முன்னம்
அணைகட்டி வைப்பதுபோல ஆபத்து வரப்போகிறதென்பதையறிந்து
அதற்குத் தகுந்த பிராயச்சித்தங்கள் செய்தோமானால் அது ஒருவாறு
குறைந்துவரலாம். ஆகையால் நம்முடைய அப்பா சொல்...
கிறபடி என்விஷயத்தில் நடக்காமலிருக்கப்போகிறதில்லை...
களைக் கொஞ்சம் குறைக்க நான் புண்ணியந் தேடவேண்டும்.
தென்னவெனில், காசியிற்சென்று விசுவேசுவரன் ...
...ண்டும்'' என்றான். எப்படியும் ரத்தவாஞ்சை ய...
... ஆனமட்டுந் தடுத்துப்பார்த்தான். பயன்படவில்லை...
... தலைவிதிப்படி நடந்தே தீரும் என்று விட்டுவிட்...
கங்காதரன் என்று ஜோஸியருடைய இரண்ட...
...ர். க... காதரனும் தன் ஏட்டைப் படித்துப் ப...
... க்கலானான்:—''கஷ்டம், கஷ்டம் நாப...
...றந்தோம். நாம் இந்த ஜன்மமெடு...
...னால் போகட்டும், பணம் வருகிற...
...ந்தாலே என்றால் பின்பு நமக்கு...
...வண்டுமாம். தலையிலெழுத்தி...
...என்றால் கடற்கரையில் சா...
... பந்துக்கள் சிநேகிதர்கள்...
...ல் கடற்கரையிற் சாக...
...து. பிறகு கொஞ்ச...
...படி வாழ்கிறது, ...

உபகாரம் பண...

பாம்பு, எலி இவைகளை எடுத்து ...
மானுக்குமட்டில் கைகொடுக்கவேண்டாம்" என்று கங்க...
எச்சரித்துவிட்டு தன்னுடைய பசி பொறுக்கமாட்டாமல் சரே...
"நான் போய்வருகிறேன்" என்று சொல்லிவிட்டுப் புலி ...
போய்விட்டான்.

இப்படி இது சொன்னதைக்கேட்டு கங்காதரன் ஆச்சரியப்...
"ஆ! ஆ! இந்த ஆச்சரிய மிதுவரையில் கேட்டதில்லையே. கம்...
கள் அவ்வளவு பொல்லாதவர்களா. அவர்களப்படி என்பது ...
ரையில் எட்டிவிட்டதா" என்று நினைத்துக்கொண்டு செம்...
கிணற்றில் விட்டான். அதை இரண்டாந்தட்டிற் பாம்பு ...
கொண்டு தன்னை எடுத்துவிட கேட்கவே வேறு விதியில்லாமல் அ...
யும் கங்காதரன் எடுத்து விட்டான். பூமிக்கு வந்ததும் பாம்பான...
அவனைப் பிரதக்ஷணம் வந்து நமஸ்காரம்பண்ணி, "ஐயா! நான் பாம...
களுக்கெல்லாம் அரசன். மூன்றுநாளாய் அன்ன ஆகாரமற்று பி...
ணன்போய்க் கிடந்தேன். அப்பேர்ப்பட்ட என்னை வெளியெ...
டுத்து விட்டதால் எனக்கு உயிரைக் கொடுத்தீர்கள். ஆகையால் த...
களை இன்றுமுதல் என் இரண்டாவது தகப்பனாரென்றே சொல்...
வேண்டும். நான் மூன்று தினங்களுக்கு முந்தி வெயிலிற் பட...
டுத் தாடிக்கொண்டிருந்தேன். அப்பொழுது என் முன்னம் ஒ...
எலி ஓடிக்கொண்டிருந்தது. அதை நான் துரத்தினேன். அ...
ஓட நானோட நாங்களிருவரும் இந்தக் கிணற்றில் வந்து குதி...
தோம். எலியானது மூன்றாந் தட்டில் விழுந்தது. நான் இர...
டாந் தட்டில் விழுந்தேன். பிராணனைக்காதில் வைத்துக்கொண்...
அது இன்னும் மூன்றாந் தட்டில்தான் கிடக்கிறது. அதை எடுத்...
விட்டாலும் எடுத்துவிடலாம். நான்காந் தட்டிலிருக்கிற கம்மாளனை...
மட்டில் எடுத்து விடவேண்டாம். தாங்கள் மனுஷ்ய நாற்றங் கண...
டோடி அடிக்கிற புலியை நம்பினாலும் நம்பலாம். கடித்தால் பி...
ணனைப் போக்கும் பாம்பை நம்பினாலும் நம்பலாம். கம்மாளனை...
மட்டில் நம்பவே கூடாது. அவர்கள் கால்பொன்னில் மாப்பொ...
திருடப்பட்டவர்கள். பெயரிலேயே சுவர்ண தஸ்கராள்—...
திருடிகள் என்று பெயருள்ளவர்கள். நான் சொல்லியும் கேட்...
அவனுக்குமட்டில் உபகாரம் செய்வீர்களாகில் அதன் பலனை...
லனுபவிப்பீர்கள். நான் சர்ப்பங்களுக்கெல்லாம் அரசன்...
பொழுது சாவகாசமாய் நின்றுபேச சரிப்படவில்லை. தா...
வது ஆபத்திலிருக்கும்பொழுது என்னை நினைப்பீர்களாகில்...
நானவ்விடம் வந்து தங்களுக்குவேண்டிய ஒத்தாசை செய்...
என்று சொல்லிவிட்டுப் பாம்பின் அரசனான அந்த சர்ப்ப...

...டுத்து வி...
...தை நன்றாய் அறிந்துகொண...
..ரக் கன்னியில் சாவு என்று தகப்பனார் ஜாதகம் குறித்துக் கொ
நப்பதை மனதில் வைத்து, இந்தப் புலியை எடுத்துவிட்டால்
நம்மைக் கொல்லமாட்டாதென்றெண்ணி அதை எடுத்து விட்
. புலியரசனும் தான் சொன்ன சொற்படியே தன்னை ரக்ஷித்த
மனுவ... னை மூன்றுதடவை வலம்வந்து சாஷ்டாங்கமாய் நமஸ்
ப்பண்ணிப் பின் வருமாறு சொல்லியது. "சுவாமிகளே! தங்
யொத்த இரண்டொரு புண்ணியவான்கள் இருக்கிறபடியால்
இந்த உலகத்தில் மழைபெய்கிறதும் வெயிலெரிக்கிறதும். தாங்
ட்டில் புலியாயிற்றே என்று எண்ணி என்னை எடுத்து விடாமற்
பாயிருப்பீர்களேயானால் நானிறந்துபோ யிருக்கவேண்டுமே
ல்லாது வேறல்ல. இந்தக் காட்டில் வேறு யார் வரப்போகிறார்
ா. நல்லது அப்படித்தான் வந்தார்கள், எவர்கள் என்னைத் துணிந்
தடுத்து விடுவார்கள். இந்த உபகாரத்தை நான் ஒருக்காலும் மற
வன். தாங்கள் என்னை எப்பொழுது நினைக்கிறீர்களோ அப்பொ
ழுது நான் தங்களிடம் வந்து சேருவேன். தங்களுக்கு என்னால்
ன்ன உபகாரம் செய்யக்கூடுமோ அவைகளைத் தப்பாமல் செய்
வன். தங்களுக்கும் தாகம், எனக்கும் பசி. ஆயினும் ஒரு வார்த்
த தங்கள் க்ஷேமத்தை உத்தேசித்தே சொல்லுகிறேன். நான் எப்
டி இங்கே வந்தேன் என்று கேட்பீர்களாகில், அது என் கொழுப்
பால். மூன்று நாளைக்கு முந்தி அடுத்த காட்டில் நான் மேய்ந்து
காண்டிருந்தேன். அப்பொழுது என் முன் ஒரு கம்மாளன் வழிப்
பணம் போய்க்கொண்டிருந்தான். நான் அவன்பேரில் பாயப்போ
னன். அவன் அதைக் கண்டு அதிக வேகமாய் ஓடினான். நான்
வனைத் துரத்தினேன். கடைசியாய் என் ஓட்டத்தை மிஞ்சக்கூ
ாமல் அந்தக் கம்மாளன் இந்தக் கிணற்றில் குதித்தான். நானும்
வனை விட்டுவிடுகிறதா என்னும் ரோஷத்தின்பேரில் குதித்தேன்.
வன் நான்காவது தட்டில் விழுந்தான், நான் முதல் தட்டில் விழுந்
தன். பின்பு முதல் தட்டிலிருந்து அவனிருக்கும் தட்டிற்குப்
க்கக்கூடாமற் போய்விட்டது. அவனின்னும் நான்காந் தட்டிற்
ணனைப் பிடித்துக்கொண்டு பிழைத்திருக்கிறான். இரண்டாந்
ற் பாம்பொன்று நான் விழுந்தவன்று சாயந்தரமே விழுந்தது.
அவ்விடத்திலேயே இருக்கிறது. மூன்றாந் தட்டில் எலி ஒன்று
றன்னால் வந்து விழுந்தது. அதுவும் அவ்விடத்திலேயே
ரது. இப்பொழுது தங்களுடைய க்ஷேமத்திற்காக நான்
தென்னவெனில், கடைசித் தட்டிலிருக்கும் கம்மாளனுக்கு
உபகாரம் பண்ணாதேயுங்கள். கம்மாளர்கள் வெகு கெட்ட

ாதரனிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு போய்விட்டது. இவனுக்கோ கம் பொறுக்கக்கூடவில்லை. ஒவ்வொன்றையும் எடுத்து விடுவ டன் அது சொல்வதை எல்லாம் கேட்டனுப்பவேண்டி யிருந்தது. ஆயினும் அவைகள் பேசின பேச்சைக் கேட்டு ஆச்சரியப்பட்டு]வைகளை இந்தமாதிரியாகப் பேச எந்தப் பள்ளிக்கூடத்தில் படிப் பித்தார்கள் என்று நினைத்துக்கொண்டே கங்காதரன் மூன்றுந் டவை செம்பைக் கிணற்றில் விட்டான்.

இந்தத் தடவை எலி பிடித்துக்கொண்டது. இவனுக்கோ தாகம் ட்டிக்கொள்ளுகிறது. அப்பா சொன்ன ஜோஸியம் பொய்யாய்ப் போய் இவ்விடத்திலேயே நாம் நாவறண்டு சாகவேண்டியதுதான் என்ற எண்ண முண்டாய்க்கொண்டிருந்தது. ஆகவே முன்பின் யோசியாமல் எலியைக் கங்காதரன் மேலெடுத்து விட்டான். ஆனல் அதுவும் பேசாமற் போகவில்லை. புலிராஜன் பாம்பரசன் இவர்கள் சொன்னபடியே கம்மாளனை எடுத்து விடாதே என்று சொல்லித் தானும் எலிராஜனென்றும், அவன் எப்பொழுதாவது சங்கடத்திலி ருக்கும்பொழுது தன்னைப்பற்றி நினைத்தால் தான் அவ்விடம் வந்து அவனிடையூற்றைத் தீர்ப்பதாகவும் சொல்லிப் போய்விட்டது.

தெய்வம் வரங்கொடுத்தும் பூசாரி வரங் கொடுக்கவில்லையே. இந்த அரண்யத்தில் கிணற்றைக் கண்டும் அதிலிருந்து ஒரு சொட்டுத் தண்ணீர் வாயிலெடுத்துவிட சரிப்படவில்லையே என்று நினைத்தவ னாய்க் கங்காதரன் தன் செம்பை நாலாந்தடவை கிணற்றில் விட் டான். கம்மாளனானவன் விடுவனா? செம்பைப் பற்றிக்கொண்டு "புலி, பாம்பு, எலி இவைகள் சொன்னதெல்லா மென்காதில் விழுந் தன, சொல்லுகிறவர்கள் சொன்னல் கேட்கிறவர்கள் புத்தி எங்கு போயிற்று. புலிக்கும் பாம்புக்கும் எலிக்கு முபகாரஞ் செய்து விட்டு மனுஷ்யனாகிற என்னைமட்டில் இந்த அவாந்தரத்தில் விட்டுப் போனல் அப்புறம் என் கதி என்ன. என் கையிலில்லையா விசை. நீமட்டில் என்னை எடுத்து விடாவிட்டால் நானும் உன் செம்பை விடுகிறதில்லை" என்றான். கங்காதரன் இவன் சொன்னதை எல் லாம் கேட்டு இவனுக்கும் நாம் ஏனுபகாரம் செய்யக்கூடாதென்று, புலி, பாம்பு, எலி ஏதோ உளறிப்போனதாக எண்ணி கம்மாளனை யும் வெளியி லெடுத்துவிட்டான். அவனும் கங்காதரனைச் சுற்றிச் சுற்றி வந்து "எல்லா சாஸ்திரங்களுங் கற்றறிந்ததுபோ லெங்கள் ஜாதியையே புலியானது தூஷித்தது. பாம்பும் எலியும் அப்படியே செய்தன. தெய்வாதீனமாய் நீ இவர்கள் பேச்சைக் கேட்டு என்னை இந்தக் கிணற்றிலேயே வைத்துவிடாமல் எடுத்துவிட்டாயே, அதுவே நீ எனக்குச் செய்த ஆயிர முபகாரமாக எண்ணுகிறேன். என் வீடு

உச்சினி என்னும் பட்டணத்தில் கீழ் ராஜவீதியில், என் பெயர் மாணிக்காசாரி என்பார்கள். இப்போது உச்சினியைக் கடந்து வந்திருக்கவேண்டுமாகையால் காசியிலிருந்து வரும்பொழுதாவது வந்தால் அப்பொழுது நான் தங்களுக்குச் செய்யு முபகாரத்தைப் பார்க்கலாம்'' என்று சொல்லிவிட்டுப் பாம்பு, புலி, எலி இவைகளுக்குட் பாவம்பண்ணின மாணிக்காசாரியும் உச்சினி பட்டணஞ் சென்றான்.

கம்மாளன் போனதும் கங்காதரன் செம்பை மறுபடியும் கிணற்றில் விட்டு, இன்னும் யாராவது பிடித்துக்கொண்டால் நமக்கும் மென்னியைப் பிடித்துக்கொள்ள வேண்டியததானென்று எண்ணி ஜலம் முகந்தான். மெதுவாய்ச் செம்பை வெளியிலிழுத்து முகத்தைக் கழுவிக்கொண்டு நீரருந்தி பிழைத்தேன் இன்றையதினம் என்று எண்ணிக்கொண்டு வழி நடந்து வெகுநாள் யாத்திரைசெய்து காசி வந்து சேர்ந்தான். அவ்விடம் மணிகரணிகையில் ஸ்நானம் செய்கிறதும் விசுவேசுவரரைத் தரிசனம்செய்கிறதும், தீர்த்த சிரார்த்தம் பண்ணுகிறதுமாய் பத்துவருஷகாலங் கழித்தான். பின்பு ஒரு நாள் சாப்பாடு செய்துகொண்டு உட்கார்ந்திருக்கையில் கங்காதரனுக்கு தன் ஊர்நினைவும் தமையன், தலமயன் குழந்தைகள் நினைவும் வந்துவிட்டது. உடனே அவன் ''இதுவரையில் சம்பாதித்த புண்ணியம் போதும். ஊரைவிட்டு இத்தனைநாளா யிங்கு வந்திருந்தோம். ஒரு நாளாவது நம்முடைய தமையனைப்பற்றி நினைத்தோமில்லை'' என்று எண்ணின மாத்திரத்தில் ஊரைப் பார்க்கத் திரும்பிவிட்டான். ''சமுத்திரக்கரையில் சாவு'' என்பதை மறக்காமல் தான் முன்னமே வந்த வழியாகவே பிரயாணஞ்செய்து வந்தான். வழியில் விந்தியமலையை யடுத்த பாலைவனத்தைக் கடக்கப் போகும்பொழுது முன் மோசம்போனதுபோல் போகாமல் இரண்டு மூன்று நாளைக்கு வேண்டிய ஆகாரம் தீர்த்தம் கையில் வைத்துக்கொண்டான். மணற்காட்டில் வழி நடந்துகொண்டிருக்கையில் தான் முன்னமேயே புலி, பாம்பு, எலி, கம்மாளன் இந்த நான்குபெயர்களுக் குபகாரஞ்செய்த பாழுங்கிணற்றண்டை வந்து சேர்ந்தான். உடனே கங்காதரன் மனதில் பழைய சங்கதிகளெல்லாம் ஞியாபகத்திற்கு வந்தன. வந்ததும் அவன் ''நாமித்தனை நாளாய் காரணங்களில்லாததா லிவைகளை நினைக்கவில்லை. இப்பொழுது நினைத்தா லிவைகள் வருகின்றனவா பார்ப்போம்'' என்று எண்ணி புலியை ஸ்மரித்தான். உடனே அது பெரும் கிரீடத்தை வாயிலெடுத்துக் கொண்டு வேகமாய் ஓடிவந்து கங்காதரன் முன் வைத்து ''என்னையன! இத்தனைநாள் தாங்களிப்படி என்னை மறக்கலாமா. நானப்படிப் பட்ட பாவம் என்னசெய்தேன். நல்லது போனது போகட்டும், இதுவரையில் இருந்ததுபோ லெப்பொழுதும் என்னை மறந்துவிடாம லிப்

தப்போன மூன்று ஜோஸியமும் சரியாய் நடக்கப்போகிற தில் சந்தேகமில்லை. கடைசி வரி ஒன்று பிற்காலம் எனக்குக் சுகம் உண்டாகப்போகிற தென்பதாகக் கண்டிருக்கிறதே, பொழுது! என்ன சுகம்! இவைகள் மட்டில் எனக்குப் இல்லை. முதலில் கடற்கரையில் செத்துப்போய்விடவா சுகமுண்டாகப் போகிறதாவது இறந்தபிறகு சம்பவிக்கும் இந்த ஜந்மத்து சுகமல்ல. ஜோஸியர்கள் என்னதான் சமர்த்தர் ருந்தபோதிலும் நாம் இறந்தபிறகு நமக்குண்டாகப்போகிற களை எடுத்துரைக்கவேமாட்டார்கள். ஆகவே நாம் நினைக்க டிய தென்னவென்றால், நம்முடைய அப்பா சொல்லிப்போ கும் நான்கு ஜோஸியங்களுக்குள் மூன்று பலித்தே தீரும். யாய் சுகம் உண்டாகப்போகிறதென்ற எழுத்துப் பொய்யாய்த் முடியும். அப்படிச் சொன்னால்தான் பையன் சுமாராய் துக்கங்களையும் சகிப்பானென்று நம்முடைய தகப்பனார் அவர் ட்டிப் போயிருக்கிறார். நல்லது நாம் இனி காசிக்கு உடனே டுப் போவோம். சமுத்திரக்கரை வழியாய்ப் போனாலன்றோ க்கு சம்பவிக்கும், விந்தியதேச மார்க்கமாய்ப் போவோம்" யோசித்து, தமையனிடம் தம்பி செலவு பெற்றுக்கொண்டு, முகமாய்த் திரும்பிவிட்டான். இரண்டாம் வேஷ்டியடங்கிய மூட்டையும் செம்புந்தான் அவன் கைச்சுமை. எங்கே ந்கிரகாரம் கண்டவிடத்தில் தங்குகிறதும், பிச்சை எடுக்- ம், மிருந்ததைக் கையில் வைத்துக்கொண்டு நடக்கிறது. யான் யாத்திரை செய்துகொண்டே விந்திய மலைக்குச் சமீபம் சேர்ந்தான்.

ந்த வழி பெரிய மணற்காடு. ஒரு பாலை வனமாகவு மதைச் லலாம். இரண்டு மூன்று நாள் பயணம் மணற்காட்டிலேயே வேண்டும். வழியில் ஊர் முதலான யாதொன்றும் கிடை இந்த சமாசாரம் கங்காதரனுக்குத் தெரியாதாகையால் தான் வழிபோலவே அங்கு மிருக்குமென்றெண்ணி அந்தப் பாதை யே சென்றான். ஒருநாள் இரவும் பகலுமாய் நடந்து வழியில் ஷ்யப் பூண்டையே காணமல் மனவருத்தமுற்றவனாய் யாத்திரை துகொண்டிருந்தான். கையிலிருந்த ஸ்வல்ப சாப்பாடு ஆய் -து. குடிக்கச் சொட்டு தண்ணீர்கூடக் கிட்டவில்லை. எங்கு ப்பார்த்தாலும் மணற்காடு. கரேமான வெயில். ஒகோ! நம்மு தகப்பனார் சமுத்திரத்தில் நமக்கு மரணம் என்று விதித்தது பொய்யாய் நாம் இங்குதானே மாண்டுவிடுவோம்போலிருக் இந்த மணற்காட்டை எப்படித் தாண்டப்போகிறது. ஆயினும் னது இதுவரையில் வியர்த்தமாய்ப் போனதில்லை

யாகையால் இந்தக் காட்டை விட்டுச் சேமமாய் வெளிப்பட
சகாயம் செய்வார் என்று எண்ணினன். இந்தமாதிரியான எ
கொஞ்சம் பலத்தையுங் கொடுக்கவே சரசரவென்று ந
போன உயிரைத் திருப்பிக் கொடுக்கிறதுபோல் ஒரு கிண
கங்காதரனுக்கு முன்னமே தென்பட்
செம்பு தண்ணீர் முகந்து நாக்கிலூ
நெஞ்சு நனையும் என்று அவ்விடம் (
பாழும் கிணருய்க் கிடந்தது. அடியில் தண்ணீர் அதிக பாத
விருந்தது. கண்ணுக்குத் தெரியவேயில்லை. ஆயினு மிவன்தா
னுக்கே தெரியுமாகையால் தன் செம்பை மூட்டையில் தான்
பொழுதும் வைத்திருந்த கயிற்றில் கட்டிக் கிணற்றில் விட்
கொஞ்சதூரம் போனவுடனே அது படக்கென்று நின்றது. உ
பின்வரும் சொற்கள் கிணற்றினின்று வெளிப்பட்டன:—
நீர் யாராயினும் சரி. இந்த ஆபத்திலிருந்து என்னை நீக்கிவிட
மாய் எண்ணி ஈசுவரர் உங்களை இவ்விடம் அனுப்பினதா
கிறேன். நானிந்தக் காட்டிலிருக்கும் புலிகளுக்கெல்லா
என் பெயர் புலிராஜன். மூன்று நாளைக்குமுன் நானிந்த
விழுந்து அன்னுகாரமில்லாமலிருக்கிறேன். என்னை நீ
விட்டால் நூறு உயிர்களைக் கரை யேற்றின புண்
என்னை ஆதரியும்.''

இந்தச் சொற்களைக் கேட்டுக் கங்காதரன் தியங்
தன்னி கிணறு வெட்டப்போய் பூதம் புறப்பட்டதென்
நாம் தாகத்துக்குத் தண்ணீரெடுக்கப்போய் புலி கையி லக
கொண்டோம்'' என்றெண்ணி கிணற்றைப் பார்த்து ''ஐயா
ஜரே, அநேக தர்மசாஸ்திரங்களில் புலிக்கு உபகாரம் செ
நமக்கு ஆபத்தாய் முடியுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.
றியும் நீர் மூன்றுநாளாய் பட்டினியா யிருப்பதாகச் சொல்லு
நான் இப்பொழுது உம்மை வெளியிலெடுத்துவிட்டால் என்
முதற் பாரணையாகப் பண்ணுவீரே, என்ன செய்கிறது'' என்
இப்படிக் கங்காதரன் சொன்னதைக் கிணற்றுக்குள்ளிருந்த
கேட்டு ''ஆம், நீர் சொல்வது சரியே. ஆனல் அப்படிச் செ
புலி நானல்ல. உலகவியவகாரம் தர்மசாஸ்திரம் இவைகள்
றுந் தெரியாதவைகள் அப்படிச் செய்யும். நானே புலிகளுக்
லாம் அரசன். தினம் சாஸ்திரங்கள் படித்துப் படித்து தர்மம்
னது அதர்மம் இன்னது என்று நன்ருய்ப் பரிசோதித்திருக்கி
ஆகையால் என்னிடம் அவநம்பிக்கை யில்லாமல் என்னை
லெடுத்து விடுங்கள். அப்படியில்லையோ நானிந்தச் செம்பை
யும் விடுகிறதில்லை; மேலேயும் விடுகிறதில்லை'' என்றது.

பொழுதாவது ஸ்மரித்தீர்களே இதுவே போதும்'' என்று உட சொல்லிப் பின்பு ''என்னிடத்தில் அனேக ஆபரணங்கள் வெகு யிருக்கின்றன. அவைகளி லெல்லாவற்றிலு மிது மிகவும் விலை யுயர்ந்ததாகையாலும், ஒரே உருப்படியா யிருக்கிறபடியாலும் இதைத் தங்களிடம் கொண்டுவந்தேன். இதை ஊரில் கொண்டுபோய் விற் றால் உங்களுக்கு வெகு பணங் கிடைக்கும்'' என்று பேச்சை முடித்து கிரீடத்தையும் கங்காதரனிடம் புலியானது கொடுத்தது.

கங்காதரன் கிரீடத்தைப் பார்த்து கண் குளிர்ந்து ''ஆ! ஆ! இந்தப் புலியல்லவோ சினேகிதன். இது ஏதோ மிருகமென்றிருந்தோமே. அப் படி யில்லாமலிது நாம் நினைத்தமாத்திரத்தில் இந்த உலகத்தையெல் லாம் விலைக்கு வாங்கும்படியான கிரீடம் ஒன்றைக் கையில் கொடுத்து விட்டதே'' என்று சந்தோஷித்து புலிராஜனுடன் தான் போய்வந்த சங்கதியை கொஞ்சநாழிகை சொல்லி அதற்குச் செலவுகொடுத்தனுப் பிவிட்டான்.

பின்பு தனது இரண்டாவது மித்திரனுன பாம்பை நினைத்தான். அதுவும் தன்னிடத்திலிருந்த நாகரத்தினத்தைக் கக்கி கையிலெடுத் துக்கொண்டு அனேக அன்பு மொழிகளுடன் கங்காதரனைக் கண்டு வணங்கிற்று. அத்துடன் அரைநாழி பேசிவிட்டு அதற்கும் விடை கொடுத்தனுப்பி கங்காதரன் தனது மூன்றும் சினேகிதனுகிய எலியை நினைத்தான். அதுவும் ஒரு நகை ஒன்று கங்காதரன் கையிற் கொடுத் துத் தன் வளை சென்றது. இந்த மூன்று மிருக ராஜர்களும் தாங்கள் சொல்லியிருந்தபடி வந்து போகக் கண்டு கங்காதரன் பின்வருமாறு யோசிக்கலானுன்—''மிருகங்களாகிற இவைகள் நாம் பத்துவருஷங் களுக்கு முன் செய்த உபகாரத்தை நினைத்துக்கொண்டிருக்கின்றன வே, நம்மைப்போலொத்த மனுஷ்ய ஜாதியாகிய மாணிக்காசாரி இவைகளைவிட எவ்வளவு நன்றாய் எண்ணியிருக்கமாட்டான். நாமிப் பொழுது அவனைப் போய்க் காணுவோம். அவன் நமக்கொன்றும் கொடுக்க வேண்டியதில்லை. இந்தக் கிரீடம் அப்படியே மூட்டை யில் வைக்கக் கூடவில்லை. அப்படி வைத்தாலும் வெளியில் நன் றாய்த் தெரிகிறபடியால் வழியில் யாராவது திருடர்களிதைக் கொள் ளையடித்துக்கொண்டு போய்விடுவார்கள். மாணிக்காசாரிமட்டில் இதை உருக்கித் தங்கத்தை எடுத்து விளாங்காய்போலுருட்டி என் கை யிற் கொடுத்து ரத்தினத்தையும் பிரித்துத் தருவானேயானுல் நாம் கள் ளர் பயமில்லாமல் வழியில் காட்டில் நடக்கலாம். இவ்வளவுதான் அவன் நமக்குச் செய்யாமற் போவானு'' என்று இவ்வாறுலோசித்து கிரீடம், ரத்தினம், நகை மூன்றையும் மூட்டையில் வைத்துக் கட்டி உச்சினிபட்டணம் கீழ் ராஜவீதி வந்து சேர்ந்தான். அவ்விடம் வந்

கங்காதரன் தன் சினேகிதன் வீடு விசாரித்து அதில் நுழைந்தான். ஆசாரியும் காசிக்குப் போயிருந்த தன் சிநேகிதனை கங்காதரன் தன் வீட்டிற்கு வரக் காணவே ஆவலுடன் ஓடி வந்து, அநேக உபசாரஞ் செய்தழைத்துத் தன் வீட்டிற்குள்ளிருத்தி அவனை யோகக்ஷேமம் விசாரித்தான். கங்காதரனும் கம்மாளன் செய்யு முபசாரத்தால் இவ்வளவு நல்லவனுக்கு உபகாரம் பண்ணக்கூடாதென்று முன்னொருகாலத்தில் புலியும், பாம்பும் நம்மைத் தடுத்ததல்லவா. அவைகளின் சொல்லை நம்பாம லிவனை நாம் பிழைப்பித்தோமே என்று சந்தோஷப் பட்டான். பிறகு கங்காதரனவன் மாணிக்காசாரியினிடம் தான் காசிக்குப் போய் பத்துவருஷகாலம் அங்கு வாசஞ்செய்ததையும் வரும் பொழுது புலி, பாம்பு, எலி இவைகளைக் கண்டதையும் புலியினிடமிருந்து கிரீடம் பெற்றதையும் சொல்லி "நேசனே, நீமட்டிலிந்தக் கிரீடத்திலிருக்கிற தங்கத்தையும் ரத்தினங்களையும் பிரித்துக் கொடுப்பாயாகில் அதையே நான் ஒரு பெரிய உபகாரமாய் எண்ணிக்கொள்வேன்" என்று சொன்னான். மாணிக்காசாரியும் "ஆகா, அதற்கு என்ன தடை. இதற்கு தாங்களிவ்வளவுதூரம் சொல்லவும் வேண்டுமா. எதிர் வீட்டில் சகல சாமான்களும் அனுப்பிவைக்கிறேன். தாங்கள் நதிக்குச் சென்று ஸ்நானம் செய்து அனுஷ்டானங்களை முடித்து வந்து சாப்பாட்டைப் பண்ணிக்கொள்ளுங்கள். உங்களைப் பார்த்தால் வெகுநாள் பட்டினியா யிருந்தவர்போல் காணப்படுகிறது" என்றான். அப்படியே ஆசாரிவீட்டில் மூட்டையை வைத்துவிட்டுப் பிராமணனும் நதிக்குச் சென்றான்.

புலியின் வாயில் அந்தக் கிரீடம் வந்த காரணம் என்னவென்று இதற்கு முந்தியே இச்சிறு கதை படிப்பவர்களுக்குத்தோன்றி யிருக்கலாம். அதன் காரணம் கடினமானதல்ல. ஒரு அரசன் அதன் வாயிலகப்பட்டு மாண்டிருக்கவேண்டும். அப்படி மாண்டவன் உச்சினி அரசன். இந்த ராஜாவானவன் பத்துநாளைக்கு முந்திக் காட்டில் வேட்டையாடச் சென்றான். இவனுடன்கூட இருநூறு வேடர்களும் சென்றார்கள். திடீர் என்று ஒரு புலி காட்டிலிருந்து கிளம்பி செங்குத்தாய் அரசனைத் தூக்கிக்கொண்டு போய்விட்டது. அப்படித் தூக்கிப்போன புலி புலிராஜனே. அது ராஜப்புலியானதால் அரசனையே தூக்கிற்றேயன்றி அவனோடுகூட இருநூறு பெயர்கள் போனபோதிலும் அவர்கள்மேல் லட்சியமே வைக்கவில்லை. அரசன் போய்விடவே வேடர்களும் ஊர்வந்து சேர்ந்து ராஜகுமாரனிடம் தகப்பனார் இறந்துபோன விவரத்தைச் சொன்னார்கள். அவன் மட்டில் இவர்கள் சொன்னதை நம்பவேயில்லை. "ஓஹோ, கூடப்போன இருநூறு பெயர்களை விட்டு அரசனையே புலிவந்து தூக்கவேண்டுமோ. ஆகையால் அப்படி யிருக்கவேமாட்டாது. நம்முடைய

தகப்பனாருக்கு எப்பொழுதும் ஆபரணங்களில் பயித்தியமுண்டு. வேட்டைக்குப் போகும்போதுகூட அநேக நகைகள் போட்டுக் கொண்டு போயிருக்கவேண்டும். நகைகளைக் கைப்பற்றிக்கொள்ள ஆசைப்பட்டு யாரோ வேடனோ அல்லது காட்டாளோ தனிமையில் அரசனைக் கொன்றுவிட்டு இந்தமாதிரி அபவாதம் சொல்லுகிறான்'' என்று மனதில் கருதித் தகப்பனார் போய்விட்டதைப்பற்றி வெகு வாய் துக்கித்து தகப்பனாரைக் கொன்றவனைப் பிடிக்கக் கருதி ''யார் அரசனைக் கொன்ற பாதகனைக் காட்டித்தருகிறானோ அவனுக்கு என் ராஜ்யத்தில் பாதி கொடுக்கிறேன்'' என்று ஊர் முடிய தண் டோரா போட்டுவைத்தான்.

உச்சினி அரசனை தூக்கிக்கொண்டுபோன புலிராஜனானது அவனை யதேச்சையாய் இரண்டு மூன்று நாள் வைத்துக்கொண்டு சாப் பிட்டுவிட்டுக் கடைசியாய் கங்காதரன் அதை நினைத்தபொழுது அரசனுடைய கிரீடத்தை அவனிடம் கொண்டுவந்து கொடுத்தது. கங்காதரனும் அந்தக் கிரீடத்தைக் கம்மாளனிடம் வைத்துவிட்டு ஸ்நானத்திற்குச் சென்றதாக முன்னமேயே சொல்லியிருக்கிறோமே. அவன் அப்படிச் சென்றதும் மாணிக்காசாரியும் கிரீடத்தைக் கையி லெடுத்துக்கொண்டு ''நல்லது, இப்பொழுது கங்காதரன் அரசனைக் கொன்றானென்றும், அதற்கு ருசுவாக அவனிடத்திலிந்த கிரீடமாகிற தடையமு மகப்பட்டதென்றும் நாம் ராஜனிடத்தில் சொன்னால் அவன் இதை ஒப்புக்கொண்டு கங்காதரனை சிரச்சேதம் பண்ணிவிட்டு நமக்குப் பாதி ராஜ்யம் கொடுத்துவிடுவான். நமக்கு வேண்டியது பாதி ராஜ்யம். கங்காதரன் எப்படிப் போனால்தானென்ன'' என்று நினைத்து உடனே கையுங் கிரீடமுமாய் அரண்மனையை நோக்கிச் சென்றான். அவ்விடம் ராஜகுமாரன் முன்னின்று ''மகாராஜாவே, தங்கள் தகப்பனாரைக் கொலைசெய்த பாதகனை நான் பிடித்துவந் தேன். அவனிடமிருந்து இந்தக் கிரீடம் அகப்பட்டது. இது நம் முடைய பெரியவருடையதல்லவா, செம்மையாய்ப் பாருங்கள்'' என்று கிரீடத்தை அவன் முன்னம் வைத்தான். அவனுமதை எடுத் துத் திருப்பித் திருப்பிப் பார்த்து அரசனுடையதென்று நிச்சயித்து மறுபடியும் அப்பொழுதுதான் தன் தகப்பனார் விழுந்துபோனது போல் கண்ணீர்வடித்து ''அந்தச் சண்டாளன் எங்கே'' என்றான். நதியில் இன்ன படித்துறையில் ஸ்நானம் செய்கிறான். அவன் அடை யாளங்க ளிவைகளென்று ஆசாரி சொல்லவே, உடனே கிராதகர்கள் போன்ற நான்கு வீரர்கள் நதியை நோக்கி ஓடினார்கள். அப்பொழுது தான் கங்காதரனும் ஸ்நானம் முதலியவைகளைச் செய்துவிட்டுக் காயத்திரியி லுட்கார்ந்திருந்தான். பெரிய அடிகளாய் முதுகில் அவ னுக்கு இரண்டடிகள் விழவே நடுநடுங்கிப் பின் திரும்பிப் பார்த்

தான். கத்தியுங் கையுமாக நாலு போர்வீரர்கள் இவனைக் கட்டி "வா சண்டாளா அரண்மனைக்கு. உனக்கு விபூதியும் ருத்திராக்ஷமு மில்லாமல்தான் குறையாயிருந்ததோ. அரசனைக் கொன்ற பாவம் எப்படி உன்னை விடும் என்றெண்ணியிருந்தாய். கிரீடம் நமக்கே நிலைத்துப்போகும் என்று நம்பினையல்லவா" என்று சொல்லி அரண் மனைக்கு இழுத்தார்கள். உடனே இவன் மனதில் சுருக்கென்றது. இதற்குள் முன்னும் பின்னுமாய் கல்தா கொடுத்துத் தள்ளிக்கொண்டு போர்வீரர்கள் இவனை ராஜகுமாரன் முன் கொண்டுவந்து விட்டார் கள். அவனும் தன் தந்தையைக் கொன்றவன் பிராமணனாயிருக்கக் கண்டு, "கொண்டுபோய் இவனை காராகிரகத்தில் தள்ளிவிடுங்கள்" என்று கட்டளையிட்டுவிட்டான். அந்த உத்தரவின்படியே போர் வீரர்களும் இவனைக் கரகரவென்று இழுத்துப்போய் பட்டணத்திற்கு வெளியில் கொஞ்சதூரம் சென்று ஒரு பெரும் இருப்புக் கதவைத் திறந்து அதன்கீழ் பூமிக்குள் தென்பட்ட ஒரு அறையில் தள்ளி விட்டார்கள்.

இந்த அறைக்குத்தான் காராகிரகம் என்று பெயர். இதில் கொல்லக்கூடாத சில குற்றவாளிகளைத் தள்ளிவிடுவது வழக்கம். தள்ளப்பட்ட மனுஷ்யனும் அந்தச் சுரங்கத்துக்குள் அன்னாகாரமற்று இரண்டொரு தினத்தில் மாண்டுபோய்விடுவான். இந்த அறையா னது பூமிக்குள் தோண்டப்பட்டு உறுதியான கருங்கற்களால் சுவ ரடைக்கப்பட்டிருக்கும். எவ்விதத்தாலு மதை இடித்துக்கொண்டு ஒருவன் வெளியில் வருவது கஷ்டம். பக்கங்களி லிடித்தால் பூமிக் குள்ளேயே போய்க்கொண்டிருக்கவேண்டும். மேலோ இரும்பு. இப்பேர்ப்பட்ட அறையில் கங்காதரன் வந்து விழவே, அவன் மனதி லுண்டான துக்கத்திற்கு அளவேயில்லை. "ஐயோ, பாழும் மனமே, ஒரு நாழிகைக்கு முந்தி புலி, பாம்பு, எலி சொற்களைக் கேட்டு கம்மா ளனைக் கிணற்றிலிருந்து எடுத்துவிடாமலிருப்பது பிசகென்றெண்ணி எடுத்துவிட்டதாக நினைத்துக் களித்தேனே. அப்படி நான் அவனுக்கு உபகாரஞ்செய்த பலன் இதோ அனுபவிக்கிறேன். ஏதோ அந்த மிருகங்கள் உளறிப்போனதாக நினைத்திருந்தோமே. அவைகள் பேச்செல்லாம் நிசமாயும் அவைகள் சத்தியத்திற்குக் கட்டுப்பட்ட வைகளாயு மாய்விட்டனவே, மானிடஜென்ம மெடுத்தும் கம்மா ளன் பாதகனானானே. கிரீடத்தை அவன் எடுத்துக்கொண்டால் போகட்டும், என்னை விட்டுவிடலாமல்லவா. ஒருநாளும் நோவறி யாத என்னை இன்றையதினம் எத்தனை பெயர்கள் குத்தினார்கள். இனி போன பேச்சைப்பற்றிப் பேசுவதில் பிரயோசனமில்லை. நமக்கு நேரிட்ட இவ்வளவு சங்கடங்களுக்கும் காரண மவனே. அவனையு மிவனையும் சொல்வதினாலாவதென்ன. நம்முடைய தலை

யெழுத் தப்படியிருக்க நம்மை அப்படி எல்லாம் செய்வித்தது: தகப்பனாரும் பத்து வருஷகாலம் நமக்கு கொட்டடியிலிருக்கப் போட்டிருப்பதாகச் சொல்லியிருந்தாரல்லவா. ஆமாம், அன்னுகார மில்லாமல் இன்றைக்குப் பிழைத்திருக்கக்கூடும். நாளையும் பிழைத்திருக்கக்கூடும். பத்து வருஷம் எப்படி தள்ளுகிறது. அது ஒருநாளும் நடக்கப்போகிறதில்லை. இங்கு மாண்டுதான் போகவேண்டும். அப்படி யமன் வரும் முன்னமே நாம் நம்முடைய பரம மித்திரர்களான புலி, பாம்பு, எலிகளை நினைத்துப் பார்ப்போம், எந்த சங்கடத்திலும் ஒத்தாசை செய்வதாக அவைகள் சொல்லியிருந்தனவே. இந்த சமயத்தில் அவைகளால் என்ன ஆகக்கூடும்'' என்று அவைகளை கங்காதரன் நினைத்தான்.

அவைகளும் அவைகள் சொல்லியிருந்த உறுதிச் சொற்படியே ஆபத்திலிருந்த தங்கள் சிநேகிதனைக் காண காராகிரகத்திற்கடுத்த ஒரு தோட்டத்தில் சந்தித்தன. இவைகள் ஒவ்வொன்றுக்கும் இயற்கையான பகை யிருந்தபோதிலுந் தங்கள் சிநேகிதனைக் காணவேண்டுமென்ற காரண மொன்றுகவிருந்தபடியால் இவைக ளிப்படிச் சேர்ந்து கங்காதரனை எப்படிப் போய்க் காணுவோம் என்று யோசிக்கத் தலைப்பட்டன. எலிராஜன் தான் முதலில் எழுந்திருந்து இந்த சமயத்தில் நாம் ஒன்றுஞ் செய்யாம லிருக்கக்கூடாது. எப்படியாவது ஒரு வழி உண்டாக்கி நம்முடைய பரம உபகாரியான கங்காதரனைப் போய்க் காணவேண்டுமென்று சொல்லி உடனே அந்தப்படி வழி ஒன்று தோண்டுவதற்காகத் தன் சைனியங்களுக்கு ஆக்ஞாபித்தது. உடனே எல்லா எலிகளுமாய்ச் சேர்ந்து காராகிரகத்திற்கு அடுத்திருந்த அந்தத் தோட்டத்தின் பாழுங்கிணற்றுச் சுவரின் வழியாகப் பூமிக்குள் வளை தோண்டிக்கொண்டே போய்க் காராகிரகத்தின் சுவர் வரையில் தோண்டிவிட்டன. பின்பு அவைகளின் பற்கள் அந்தக் கற்சுவரை யசைக்க முடியவில்லை. பெருச்சாளிகளை கெஞ்சிக் கேட்டுக்கொள்ளவே அவைகள் வந்து முன்னின்று காராகிரகத்தின் சுவரில் ஒரு எலிதாராளமாய்ப் போய் வரும்படியான துவாரம் பண்ணிவிட்டு விடைபெற்றுச் சென்றன. உடனே எலியரசனும் சர்ப்பராஜனும் அந்த வழியே காராகிரகத்திற்குட் சென்றன. புலியரசன் தான் தன்னுடைய பெரிய உடலுடன் உட்செல்ல சாத்தியப்படாமல் தான் துக்கப்பட்டுக்கொண்டிருப்பதை பாம்புமன்னன் மூலமாய்ச் சொல்லியனுப்பிற்று.

ஒருவரையும் பார்க்க யாதொரு வழியுமில்லாமல் அறையிலடைக்கப்பட்ட கங்காதரன் என்னசெய்வேன் ஈசுவரா என்று திகைத்து நிற்கையிலேயேதானே அவனுடைய முக்கிய நேசர்களாகிய சர்ப்பனும் எலியரசனும் அவன்முன் வந்து நின்றன. இவைகளைக்

கண்டவுடன் கங்காதரன் மனதிலுண்டான சந்தோஷத்தைச் சொல்ல வேண்டுமா. "இவைகளல்லவோ நல்லாத்துமாக்கள். ஜந்துக்களா யிருந்தபோதிலும் பயபக்தியுள்ளவைகள், விசுவாசம் நிறைந்தவைகள். ஐயோ! இவைகளின் உத்தரவுப்படிமட்டில் நான் நடந்திருப்பேனே யானால் இவ்வளவு துக்கத்திற்காளாகமாட்டேனே. பாவி கம்மாளன் கெடுத்தானே. இந்த ஜந்துக்களின் உணர்ச்சி அவனிட மில்லாமற் போயிற்றே" என்று நினைத்துத் தனது சிநேகிதர்களைக் கண்டவுடன் தன் துக்கத்தை யடக்கமாட்டாமல் அழுதான். அவைகளும் இவன் துக்கப்படவே தங்கள் துக்கத்தை யடக்கிக்கொள்ளமாட்டாமல் வாய் விட்டலறி, "ஐயோ நாங்களப்பொழுதே சொன்னோமே, அந்தப் பாவிக் கம்மாளனுக்கு ஏன் உபகாரஞ்செய்திருக்கவேண்டும்" என்று கங்காதரனைக் கேட்டன. அதற்கவன் "இனி யதைச் சொல்லுவதில் பிரயோஜனமில்லை. நடந்தது நடந்துவிட்டது. போகிறவழி என்ன. நான் எப்படி இந்த ஆபத்திலிருந்து வெளிப்படுகிறது" எனவே அதற்கு எலிராஜன் "நான் தங்கள் ஆகாரவிஷயத்தில் யாதொரு குறை வில்லாமல் பார்த்துக்கொள்ளுகிறேன். உங்களுயிருக்குச் சேதமில்லை" என்றது. அதைக் கேட்டுப் பாம்புராஜன் "நானும் புலியும் தங்களை இந்த இடத்திலிருந்து விடுவிக்க வழிபண்ணுகிறோம்" என்றன.

உடனே எலிராஜன் தன் சேனைகளை வரவழைத்து அவைகளைப் பார்த்து "எலிகாள்! நீங்கள் தினந்தோறும் எந்தெந்த வீடுகளில் பக்ஷணங்கள் பண்ணுவார்களோ அந்த வீடுகளை நாடிச் சென்று நல்ல நல்ல பக்ஷணங்களை நம்முடைய நண்பராகிய கங்காதரருக்குக் கொண்டுவந்து கொடுக்கவேண்டும். அன்றியும் அவருக்குத் தீர்த்தம் வேண்டுமே. அதற்காக எந்தெந்த வீடுகளில் மடிவேஷ்டிகள் உலர்த்தப்பட்டிருக்குமோ அவ்விடங்களிற் சென்று வேஷ்டிகளைக் கத்தரித்துத் தண்ணீரில் நனைத்து நனைந்த துண்டுகளை இவரிடம் கொண்டுவந்து சேர்க்கவேண்டும். துண்டுகளைப் பிழிந்து பிழிந்து தீர்த்தம் பண்ணிக்கொண்டு நம்முடைய நண்பர் அனுஷ்டானங்களுக்கும் குடிப்பதற்கும் வைத்துக்கொள்வார்" என்றது. அப்படியே செய்வதாக எலிகளும் ஒப்புக்கொண்டு கங்காதரனுக்கு ஆகாரமும் தீர்த்தமும் கொண்டுவந்து கொடுத்துவந்தன.

பாம்புராஜனும் கங்காதரனைப் பார்த்து "சுவாமி, வரக்கூடாதது வந்துவிட்டது. இனி மனதைத் தைரியப்படுத்திக் கொள்ளவேண்டுமே யன்றி துக்கப்படுவதில் பிரயோசனமில்லை. நாங்களனைவரும் தங்களை நேரில் வந்து பார்த்துக் களித்தோம். புலியரசனுக்கு இங்கே கூட இல்லை. தங்களிடம் அவர் சொல்லும் உபசாரங்களையும் என்னையே சொல்லிவரச்சொன்னார். இப்பொழுது காராகிரகத்தி லிருந்

யது ஒன்றைத்தவிரத் தங்களுக்கு வேறு என்ன குறையிருக்கிறது. எலியரசனே வேண்டுமென்கிறமட்டும் ஆகாரம் கொண்டுவந்து கொடுக்க ஏற்பாடு செய்துவிட்டுப் போய்விட்டது. நானும் புலியரசனும் தங்களை வெளியில் விடுவிக்க என்னென்ன செய்யவேண்டுமோ அவ்வளவையும் செய்கிறோம். அதாவது என்னவெனில், நாங்கள் இன்றுமுதல் எங்கள் சைனியங்களுக்கும் உத்தரவுபண்ணி மாடுகளையும் மனுஷ்யர்களையும் கண்ட இடங்களில் வதைக்கும்படி ஏற்பாடு செய்கிறோம். இந்த உச்சினி தேசத்தில் அப்பொழுது பாம்பு புலி உபத்திரவ மதிகப்பட்டுக் காலமில்லாத காலத்தி லனேகர் மாண்டுபோய்விடும்படி நேரிடும். தாங்கள் தினம் எலிகள் கொண்டுவந்து கொடுக்கும் ஆகாரத்தைப் புசித்துவிட்டு காராகிரகத்தின் வாசற்படியிற்போய் உட்கார்ந்துகொள்ளவேண்டியது. யாராவது தலைமேல் நடக்கிறதுபோல் சப்தம் காதில் விழுந்தால் உடனே "ஐயோ பாவி என்னை வீணாய் பந்தனத்தில் வைத்தான். நான்மட்டில் வெளியிலிருந்தா லிவ்வளவு சாவு நேரிடமாட்டாது. எல்லாவற்றையும் மந்திர சக்தியால் அடக்கிப்போடுவேன்" என்று சொல்லுங்கள். இதை யாராவது கேட்டு உச்சினி ராஜகுமாரனிடத்தில் தெரிவித்தால் தங்களுக்கு விடுதலையாகும்" என்றது. கங்காதரனும் அப்படியே செய்ய ஒப்புக்கொண்டான். மறுபடியும் மனதைத் திடப்படுத்திக்கொள்ளச் சொல்லிவிட்டு எலியரசனும் பாம்பு மன்னனும் வெளியில் வந்துவிட்டார்கள்.

அன்றுமுதல் காராகிருகத்தில் யதேஷ்டமாய் கங்காதரனுக்கு எலிகள் ஆகாரம் கொண்டுவந்து கொடுத்துவந்தன. பாம்புகளும் புலிகளும் அந்தத் தேசத்தை வெகுவாய் பீடிக்கத் தலைப்பட்டன. எங்கு கேட்டாலும் பாம்பு கடித்து செத்தான், புலி யடித்து மாண்டான் என்றசொல் உண்டாய்விட்டது. கங்காதரனும் யாராவது போவதாய் காணும்போதெல்லாம் "ஐயோ, என்னை வெளியில் விட்டிருந்தால் இந்த உபத்திரவங்களை அரைநாழிகைப்பொழுதி லடக்குவேனே" என்று சொல்லிக்கொண்டே இருந்தான். ஆனால் இவன் சொல்வது ஒருவர் காதிலும் படுகிறது கஷ்டம். இரண்டொரு சேவகர்கள் காதில்மட்டும் விழுந்தது. அவர்கள் அதை ஏதோ பேயோ பிசாசோ பேசுகிறதென்றும், அப்பொழுது தள்ளப்பட்ட பிராமணனாவது இதுவரையில் பிழைத்திருக்கவாவது என்று எண்ணிக்கொண்டு போய் விட்டார்கள். இந்தப்படியாய் தினம் நடந்துகொண்டுவந்தது. கங்காதரனுக்கு கதிமோக்ஷமுண்டாகவில்லை. ஏனெனில், "தசவர்ஷாணி பந்தநம்" பத்துவருஷம் கொட்டடி வாழ்க்கை நடக்கவேண்டுமென்று முன்னமேயே அவன் தகப்பனார் குறித்துக் கொடுத்துப் போயிருக்க அதற்கு விரோதமாய் எப்படி நடக்கக்கூடும். இப்படி

யாய் ஒரு நாள்குறைய பத்துவருஷமாய்விட்டது. கடைசி நாள் ஒரு பாம்பானது உச்சினி நகரத்தரசனுடைய குமாரத்தி படுத்துறங்கும் பள்ளியறைசென்று அவள் பிராணனை உறிஞ்சிவிட்டது. அந்த அரசனுடைய ஒரே அருமைமகள் அநியாயமாய் மாண்டாள். அவனுடைய துக்கத்திற்குச் சொல்லவேண்டுமா. கீழே விழுந்து வெகுநேரம் புலம்பிச் சுற்றிக் காதவழியிலுள்ள பாம்பு வைத்தியர்களைக் கொண்டுவாருங்கள் என்று அரசன் கட்டளையிட்டான். அன்றியும் தன் மகளை பிழைப்பு உண்டாக்குகிறவனுக்கு அவளை மணம் புரிவிப்பதாகவும் தெரிவித்தான். அரசன் படுந்துக்கத்தைப் பொறுக்கமாட்டாமல் அனேகர்கள் சென்று சுற்றுக் காதவழியிலிருந்த ஒவ்வொரு விஷ வைத்தியர்களையும் அழைத்து வந்தார்கள். அந்த சமயத்தில் கங்காதரன் சுரங்கத்திலிருந்துகொண்டே தான் ஒரு பெரிய மந்திரவாதியர்க செய்துவந்த பிரகடனத்தைக் கேட்டிருந்த ஒரு சேவகன் அரசனிடம் சென்று ''மகா ராஜாவே, 'நான்மட்டில் இந்தகாலத்தில் வெளியில் இருப்பேனேயானால் இந்த விஷ உபாதிகளை நிறுத்திப்போடுவேன்' என்று யாரோ ஒருவன் பேசுவதுபோல் ஒரு சப்தம் காராகிருகத்திலிருந்து தினம் உண்டாய்க்கொண்டு வருகின்றது. இப்பொழுது அவ்விடத்திற் போய்ப் பார்த்து யாராவது ஒரு மனிதன் இருக்கக் கண்டால் அவன் தப்பாமல் இந்த விஷத்தை இறக்கிவிடுவான்'' என்றான். இதைக் கேட்ட அரசன் உடனே ஓடிப்போய் அவனைத் தேடிப் பாருங்கள் என்று கட்டளையிடவே, வேலைக்காரர்களும் அப்படியே செய்தார்கள். அவ்விடத்தில் வருஷம் பத்துக்கு முன்னம் அடைக்கப்பட்ட மனிதன் இருக்கக்கண்டு வியப்புற்று ''ஆகாகா, இவன் மனிதனல்ல. தெய்வப் பிறப்பாகவேண்டும்'' என்று திகைத்தார்கள். கங்காதரனுடைய மேனியும் அவர்கள் என்ன எண்ணினாலும் அதற்கிடமாகும்படியா யிருந்தது. மழை வெயில் காற்று முதலியவைகள் ஒன்றும் மேலேபடாமல் பத்து வருஷகாலம் யாதொரு வேலையுமில்லாமல் இருட்டறையில் எலிகள் கொண்டுவந்த பக்ஷணங்களை சாப்பிட்டுச் சீவித்துவந்தமையால் கங்காதரன் பறங்கிப்பழம்போல் சிவந்து மாம்ஸபர்வதம்போல் ஆய்விட்டான். தாடியும் மீசையும் தலையில் தீக்ஷையும் ஏகமாய் வளர்ந்து, கண் காதுகளைத் தேடிப்பார்க்க வேண்டியதாயிருந்தது. அறையைச் சோதிக்கவந்த ஆட்கள் அவனைக் கண்டு ''இவன் இராஜ குமாரத்தியை மணம்புரிவானென்பதில் ஆக்ஷேபமில்லை. அவளை இவன் பிழைப்பூட்டியே வைப்பான்'' என்று யோசித்துக்கொண்டே கங்காதரனை ராஜசபையில் கொண்டுவந்து விட்டார்கள்.

யோகீசுவரர்போல் தாடியும் மீசையுமாய் வந்த புருஷனைக் கண்டு அரசன் உளறி அடித்துக்கொண்டு கீழே விழுந்து சாஷ்

டாங்கமாய் நமஸ்காரம் பண்ணி அவர் மேனியைக் கண்டு களித்து "சுவாமி, இந்த உலகத்தில் தெய்வம் எனக்குத் தாங்களே. என்னுடைய துர்ப்பாக்கியத்தால் என்னுடைய ஒரே குழந்தை இறந்துவிட்டாள். அவளை எப்படியாவது பிழைப்பித்து என்னை கடைத்தேறப் பண்ணப் பிரார்த்திக்கிறேன்" என்று சொல்லித் தனதிருகரங்களையுங் கூப்பிக்கொண்டு நின்றான்.

இவ்வளவு சொற்களுக்கும் பதிலாக கங்காதரன் "இன்னும் ஒரு முகூர்த்தத்திற்குள் சுற்றுக்காதவழியிற் பாம்பினாலாவது புலியினாலாவது நாசமடைந்திருக்கும் பிணங்கள் யாவற்றையுங் கொண்டுவா" என்னும் உத்தரவையே மறுமொழியாகச் செய்து வாயை மூடிக்கொண்டான். இப்படி இவன் செய்துகொண்ட அமைவு சபையிலிருப்பவர்களுக்கெல்லாம் இவனைப்பற்றி ஒரு பெரிய கௌரவத்தை யுண்டாக்கிற்று.

கங்காதரன் சொன்ன சொல்லின்பேரில் ராஜா செய்யவேண்டிய விஷயம் ஒன்றும் இருக்கவில்லை. சுற்றியிருந்த ஜனங்களே கங்காதரன் உத்தரவை வெளியில் தெரிவிக்கவே அங்கங்கிருந்தவர்கள் தங்கள் தங்களூரிற் செத்துக்கிடந்த பிணங்களையெல்லாம் வண்டியில் வாரிப் போட்டுக்கொண்டு கங்காதரன் குறிப்பிட்டகாலத்திற்கு அரைநாழிகை முந்தியே வந்து சேர்ந்தார்கள். சமாதியில் இரண்டொரு நாட்களுக்கு முந்தி வைக்கப்பட்டு அழுகிக்கொண்டிருந்த பிணங்களைக்கூட எடுத்துவந்திருக்கலாம்.

பிணங்களெல்லாம் வந்து சேர்ந்ததும் கங்காதரன் தன் நாக ராஜனையும் புலி ராஜனையும் நினைத்து ஜலத்தை எடுத்து சவங்களின்பேரில் இறைத்தான். அவைகளெல்லாம் உயிருள்ளவைகளாய்த் தூங்கி எழுந்தவர்கள்போல் எழுந்திருந்து தங்கள் தங்கள் வீடு சென்றார்கள். ராஜகுமாரத்தியும் இவர்களுடன் பிழைத்தாள்.

போன பெண்ணுடன் மற்றும் அனேக கோடி ஜனங்கள் பிழைக்கக் காணவே உச்சினி அரசனுக்கு உண்டான வியப்பு அவ்வளவு இவ்வளவல்ல. இப்பொழுதுதான் விஷவைத்தியன் தான் பத்து வருஷத்திற்கு முந்தி தன் தகப்பனைக் கொன்ற குற்றத்திற்காக சிறையிலடைத்த பிராமணன் என்று அரசனுக்குத் தெரிந்துவிட்டது. இப்பேர்ப்பட்ட மஹான் அந்த குற்றஞ் செய்திருக்கவேமாட்டார். நாம் கம்மாளன் பேச்சைக் கேட்டு மோசம்போனோமே என்னும் பயமும் மனதில் வரவே, அரசன் கை கால் நடுங்கித் தடுமாறி கீழே விழுந்து "சுவாமி, இந்த ஏழை செய்த அபசாரத்தை மன்னிக்கவேண்டும். ஏதோ தெரியாமற் செய்துவிட்டேன். இன்றுமுதல் என் ராஜ்ஜியம் தங்களுடையதே. என் பெண்ணையும் தங்களுடைய மனைவியாக

ஒப்புக்கொள்ளுங்கள்" என்று மிகவும் வணக்கமாய்த் தெரிவித்தான். அதற்கு கங்காதரன் ஒன்றும் பேசவில்லை. அரசன் மறுமொழி வராமலிருக்கக் கண்டு வியப்புற்று, நல்லது, இந்த சங்கதியைப்பற்றிப் பின்னால் பார்த்துக்கொள்வோம். அவர் எங்குபோனூர், நாம் எங்குபோனும். முதலில் இந்த பாம்பு புலி உபத்திரவங்களை ஒழிக்க வழி தேடுவோம் என்று உத்தேசித்து "சுவாமி, அந்தக் கேள்விக்குத்தான் பதிலில்லை. பாம்பு புலி உபத்திரவங்களை நீக்கி அந்தத் துஷ்ட ஜந்துக்களின் வாயையாவது கட்டிக்கொடுங்கள்" எனவே, அதற்கு கங்காதரன் ஒப்புக்கொண்டு, "உன் பட்டணத்தாரை எல்லாம் சாயந்தரம் இந்த ஊருக்குச் சமீபத்திலிருக்கும் காட்டிற் சேர்த்துவை. அவ்விடம் நான் வந்து புலி பாம்புகளை வரவழைத்து ஆக்ஞாபிக்கிறேன்" என்றான். அப்படியே சாயங்காலத்தில் உச்சினி பட்டணம் முழுதும் அந்தக் காட்டிற்குச் சமீபத்தில் மனிதர்களுக்குப் பொல்லாச் சத்துருவாகிய பாம்பு புலிகளை அடக்க வந்திருக்கும் மனிதனுகிய கங்காதரன் சாமர்த்தியத்தைப் பார்க்க வந்து நிறைந்துவிட்டது. கீழேயிருந்தால் எங்கு ஒருக்கால் புலி விழுங்கிவிடுமோ என்று ஒருவன் மரத்தின் மேலேறிக்கொண்டான். மற்றொருவன் நான்கு பெயர்களை முதலில் தின்றுவிட்டுத்தான் புலி நம்மிடம் வரவேண்டுமென்று நான்கு பெயர்களுக்குப் பிந்தி உட்கார்ந்தான். மூன்றாவன் விதியிருந்தால் விடாது, எல்லாவற்றையும் நன்றாய்ப் பார்ப்போம் என்று முன்னம் தைரியமாய் வந்து நின்றான். பத்து வருஷம் அன்னுகாரமில்லாமற் பிழைத்திருந்தவன் மனிதனு! ஆகையால் நமக்கென்ன பயம் என்று அநேகர் தைரியமாய் உட்கார்ந்திருந்தார்கள். ஜனங்களெல்லாம் வந்துசேர்ந்ததும் கங்காதரன் என்பவன் விபூதி ருத்ராக்ஷமணிந்து எல்லாரும் தன்னைப் பார்க்கக்கூடிய அருகாமையிலிருந்த சிறிய மேடை ஒன்றின்பேரில் போய் உட்கார்ந்தான்.

உட்கார்ந்து தனது பரம மித்திரர்களாகிய பாம்பு, புலி ராஜாக்களை நினைக்கவே, அவைகள் தங்கள் தங்கள் பரிவாரங்களுடன் வந்துவிட்டன. காட்டில் எங்கு பார்த்தாலும் புலி பாம்புமயமாய் இருந்தது. பாம்பென்றால் படையும் நடுங்குமென்பது பழமொழி. அப்படியே ஜனங்கள் எல்லோரும் ஓடத்தலைப்பட்டார்கள். பயப்படவேண்டாம் என்று சொல்லி அவர்களை எல்லாம் கங்காதரன் நிறுத்தினுன்.

மாலை வெயிலும் பறங்கிப்பழம்போன்ற கங்காதரனுருவமும் ஏகமாய்ப் பூசப்பட்டிருந்த விபூதியும் கழுத்தில் காணப்பட்ட ருத்திராட்சமும் பாம்பு புலிகள் பாதம் பணிவதும் பாமர ஜனங்களின் மனதில் வெகுவாய்ப் பதிந்து இவன் நிஜமான கங்காதரனே என்னும் எண்ணத்தை உண்டாக்கிற்று.

இப்படி இவர்கள் திகைத்து நிற்கும்பொழுது கங்காதரனும் தன் சமீபத்தில் தங்கள் தங்கள் பரிவாரங்களுடன் வந்து நின்ற புலி, பாம்பு அரசர்களை தட்டிக்கொடுத்து "ஏன் என் குழந்தைகாள் இந்த மாதிரியாக உச்சினி ஜனங்களின் பிராணனை வதைக்கிறீர்கள். இனி யாவது சரியாய் நடக்கவேண்டும்" என்றான். அதற்குப் புலியரசன் "உச்சினியரசன் சரியாய் நடந்துவந்தாலல்லவோ நாங்களும் சரியாய் நடப்போம். கம்மாளப் பயலா இவன் குரு. அவன் சொல்வதுதானா இவனுக்கு சத்தியம். அவன் வந்து தாங்கள் இந்த அரசன் தகப்பனை க் கொன்றுவிட்டதாய்ச் சொன்னால் அதைச் சரியாக நம்பி உடனே தங்களை குழியில் தள்ளினனே. இதுதானா நியாயமான ராஜ்ஜிய பரிபாலனம். நல்லது தாங்கள் கொன்றதாகவே பேசுவோம். தங்களை ஒரு வார்த்தையாவது இந்த அரசன் விசாரித்தானா, தங்கள் சக்தியால் எப்படியோ தாங்கள் பத்துவருஷ காலத்தையும் கடந்து வந்தீர்கள். மற்றபெயர்கள் எவ்வளவோ அநேகர் இந்தப்படி மாண்டிருக்க வேண்டும். நல்லது வேடர்களெல்லாரும் தகப்பனைப் புலி கொண்டுபோய்விட்டதென்று இந்த அரசனிடம் வந்து சொன்னார்களல்லவா. அதை ஏன் நம்பக்கூடாது. நான்தான் இவன் தகப்பனை அடித்துக் கொண்டுபோய் மூன்று நாள் குகையில் வைத்து தின்றுகொண்டிருந்தவன். அந்த அரசன் கிரீடத்தைத்தான் நான் தங்களுக்கு இனமாக்க் கொடுக்கப்போய் இவ்வளவு துக்கங்கள் வந்து சேர்ந்தன. ஆகையால் இவ்வளவு அவிவேக அரசனிட மிருந்து எப்படி நல்லவழியாய் நாங்களிருப்போம். இவன் தன் வழியை சீர்திருத்திக்கொண்டாலொழிய நாங்கள் எங்கள் சேஷ்டைகளை விடமாட்டோம்" என்றது.

அரசன் புலியின் பிரசங்கத்தைக் கேட்டு வயிற்றிலும் வாயிலுமடித்துக்கொண்டு "ஐயோ கம்மாளனை நம்பிக் கெட்டேனே, என்னை மன்னியுங்கள். இனி ஒருநாளும் அப்படிச் செய்யேன்" என்றான். நாங்களும் ஒருநாளும் சத்தியம் தவறமாட்டோம் என்று பிரதிக்கினை செய்து புலிராஜனும், பாம்புராஜனும் கங்காதரனிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு தங்கள் தங்களிருப்பிடஞ் சேர்ந்தார்கள். கம்மாளன் தன் சங்கதி வெளிப்பட்டுப்போகவே உயிருக்குப் பயந்து ஓடினான். அரசனுடைய சேவகர்கள் அவனைத் தொடர்ந்தோடிச் சென்று அவனைப் பிடித்து வந்தார்கள். போனது போய்விட்டது. நான் அனுபவித்தது என் கர்மம். அவனை விட்டுவிடுங்கள் என்று கங்காதரன் சொல்ல அரசனும் அவனிஷ்டப்படி உத்தரவு செய்தான். எல்லோரும் வீட்டிற்குத் திரும்பினார்கள்.

இவைகளை எல்லாங் கண்டு அரசன் திகைத்துக் கங்காதரன் கையைப் பிடித்துத் தன் குமாரத்தியைக் கலியாணஞ் செய்துகொள்ள

வேண்டுமென்று பிரார்த்தித்தான். கங்காதரனே தன் தகப்பனார் தனக்குச் சொன்ன நான்கு ஜோஸியங்களில் இரண்டு பலித்துவிட்ட படியால் பாக்கி இரண்டும் பலித்தே தீரும். நாம் அரசன் மகளைக் கலியாணம் பண்ணிவிட்டுச் சமுத்திரக்கரையில் பிராணனை விட்டு விட்டால் அவள் அறையிலடைத்துக் கிடக்கவேண்டுமே என்று நினைத்து, அதை வெளியில் காட்டிக்கொள்ளாமல் அரசனைப் பார்த்து "மகாராஜனே, நானிப்பொழுது காசியிலிருந்து என் தமையனைப் பார்க்கப் போய்க்கொண்டிருக்கிறேன். ஏதோ என் கஷ்ட காலத்தால் பத்துவருஷம் சிறையிலிருக்கும்படி நேரிட்டது. அது தீர்ந்து விட்டது. பாம்பு, புலி உபத்திரவத்தையு மடக்கியாய்விட்டது. எனக்கு இப்பொழுது தமையனைப் பார்க்கவேண்டிய ஆவல் வெகுவாயிருக்கிறது. அதற்குமட்டில் எனக்கு உத்தரவு கொடுத்தால் நான் என் தேசஞ்சென்று தமையனைப் பார்த்துக்கொண்டு வந்து விடுகிறேன். பின்பு தங்கள் குமாரத்தியைக் கலியாணஞ் செய்து கொண்டு சுகமா யிவ்விடத்திலேயே ராஜ்ஜியபாரம் பண்ணிவரு கிறேன்" என்றான். இதை அரசன் கேட்டு ஆனால் தங்களுடன் சேனை முதலிய பரிவாரங்களை யனுப்புகிறேன். தாங்கள் சுகமே சென்று திரும்புங்கள் எனவே, அதற்கு கங்காதரன் "வாகனங்களி லும் சேனை முதலானவைகளுடனும் போனால் எனக்கு கங்காயாத் திரையின் பலன் போய்விடுமாகையால் நான் என் காவடி சகிதம் போய்வருகிறேன்" என்றான். அரசனும் தன் பேச்சு பலிக்காது என்பதை யறிந்து அந்தப்படியே செய்யக் கங்காதரனுக்கு உத்தரவு கொடுத்தான். அவனும் அன்றையதினமே புறப்பட்டுத் தன்னூ ரைப் பார்க்கத் திரும்பினான். வழிப்பிரயாணத்தில் சில நாளுஞ் சென்றது.

இப்படி ஒருநாள் கங்காதரன் காட்டுவழியாய்ப் போய்க்கொண் டிருக்கையில் தன்னையறியாமல் சமுத்திரக் கரைக்கு ஒருநாழிகை வழிக்குச் சமீபத்தில் நடக்கும்படி நேரிட்டது. அதே வழியாய் அவன் தமையனும் காசிக்கு வந்துகொண்டிருந்தான். அவன் "நம் முடைய தம்பி வெகுநாளாய்க் காணமற் போய்விட்டானே. நமக் கும் புண்ணியந்தேட காலம் வந்துவிட்டதே. அவனைப் பார்த்துக் கொண்டு கங்கா யாத்திரையும் முடித்து வருவோம்" என்று எண்ணிப் புறப்பட்டு வந்துகொண்டிருந்தான். தம்பியும் தமையனும் ஒருவரை யொருவர் எதிர்பாராமலே அந்த இடத்தில் சந்திக்கவே அவரிரு வர்களும் ஒருவரை யொருவர் கட்டிக்கொண்டு வாய்விட்டு கேள்வி கள் கேட்கக்கூட நாவெழாமல் நான்கு கண்களாலும் ஆனந்த பாஷ் பம் வடித்தவர்களாய்ப் பிரமித்து நின்றார்கள். தமையனைவிட தம்பி ஆனந்தத்தில் மூழ்கவே, அது அவனையே தன்னில் முழுக்கிக்

கொண்டுவிட்டது. அதாவது கங்காதரன் சந்தோஷத்தாலேயே பூரித்து பிரமித்து இறந்தான்.

தமையனுடைய துக்கம் இன்ன மாதிரி இருக்கலாம் என்பதை நாம் ஊகித்துக்கொள்ளலாம். அநேக நாளாய் இழந்துவிட்டு அன்றையதினம் கண்ட தம்பியோ போய்விட்டான். "நல்லது கண்டது கண்டோமே. சந்தோஷப்படும் முன்னம் "நீ எங்கிருந்தாய்" "என்னமா யிருந்தாய்" என்று இரண்டொரு வார்த்தையாவது கேட்டோமா, ஒன்றும் செய்யவில்லையே. பாவி நமன் நமக்கு சத்துருவாய்த் தான் வந்தான். கொஞ்சகாலம் அவனை ஆயுசுடன் வைத்திருக்கக் கூடாதா" என்று பலவாறு துக்கித்தான். என்ன துயரப்பட்டால்தானென்ன, போனவன் எப்படித் திரும்புவான்.

கங்காதரன் தமையன் உச்சிஷ்ட கணபதி உபாசகன். அவன் தம்பி விழுந்துபோன நாள் வெள்ளிக்கிழமை. அன்று கணபதி பூசையின்றி இருக்கிறதேயில்லை. ஆனதுபற்றி தம்பி போய்விட்ட துக்கம் ஒரு பக்கமிருந்தபோதிலும் அதை கணபதிபூசை செய்து முடிக்கும் வரையில் விசேஷமாய்க் காட்டிக்கொள்ளக் கூடாதென்று நினைத்து, தம்பியைக் கொளுத்திவிட்டால் உடனே சூதகம் வந்துவிடும். பூசை செய்துவிட்டுக் கொளுத்துவோம் என்றெண்ணி தம்பியைத் தோளில் தூக்கிக்கொண்டு சமீபத்தில் இருக்கும் கணபதி கோவிலை நாடிச் சென்றான். அருகாமையிலவர் கோவிலொன்றைக் கண்டு அதனுட் சென்று கணபதியை யழைத்து "சுவாமி, நானோ, உங்களுபாசகன். இன்றையதினமோ வெள்ளிக்கிழமை. என் தம்பியோ என் பாபத்தால் இறந்தான். அவனை இப்பொழுது எரித்துவிட்டால் பிறகு சூதகம் வந்துவிடும். இவ்விடம் எங்கேயாவது வைத்துவிட்டுப் பூசைக்கு ஆரம்பித்தாலோ பேயோ பிசாசோ அல்லது நாயோ நரியோ தூக்கிக்கொண்டு போய்விடும். ஆகையால் என் சுவாமியே! நான் தங்கள் பூசையை முடித்து வருகிற வரையில் இந்தப் பிணத்தை வைத்து ரக்ஷித்துக் கொடுக்கவேண்டியது தங்கள் பொறுப்பு" என்றான். கணபதியும் அப்படியே ஆகட்டுமென்று ஒப்புக்கொண்டு தன் பூதகணங்களினிடம் நான் மறுபடியும் கேட்கும்பொழுது சாக்கிரதையாய் ஒப்புவியுங்களென்று உத்தரவு பண்ணி பிரேதத்தைக் கொடுத்துவைத்தார்.

இப்படி இவர் செய்தது விளாக்கோட்டையில் எலியை வைத்துக் கட்டியதுபோலாம்.

ஒரு மனுஷ்யன் தான் வெளியிலிருந்து திரும்பி வீடுவரும்பொழுது வாழைப்பழம் ஒன்றைத் தன் அருமைச் செல்லக் குழந்தை

டம் "அப்பா, இதை அம்மாளிடம் கொண்டுபோய்க் கொடு" என்று சொல்லிக் கொடுத்தால் அதை அக்குழந்தை என்னமாய் நடத்துமோ அதே மாதிரியாய் கணபதியுடைய பூதகணங்கள் கங்காதரனுடைய பிரேதத்தைச் செய்துவிட்டன..

எலி பரிவாரங்கள் பத்து வருஷமாய்க் கொண்டுவந்து கொடுத்து வந்த பக்ஷணங்களை ஏகமாய்ச் சாப்பிட்டு கங்காதரன் கொழுத்திருந்ததாக முன்னமேயே சொல்லியிருக்கிறோமே. மாம்ச பர்வதம்போலிருக்கும் பிணத்தை பூதகணங்கள் பார்க்கவே அவைகளின் வாயில் ஜலம் ஊற ஆரம்பித்தது. நம்முடைய எஜமான் என்ன செய்வார். இன்றைக்கெல்லாம் ஒரு அடி அடிக்கப்போகிறார். அல்லது பத்து அடிதான் அடிக்கட்டுமே, என்று நினைத்துக்கொண்டு ஒவ்வொரு பூதமும் எனக்குக் கொஞ்சம், உனக்குக் கொஞ்சமென்று கங்காதரனைப் பூராவாய் பலகாரம் பண்ணிவிட்டது.

இதற்குள் கங்காதரன் தமையனும் தான் செய்யவேண்டிய பூசையை எல்லாம் முடித்துத் தன் தம்பியுடைய பிரேதத்திற்குப் பரலோகக்கிரியை செய்யக் கருதி கணபதியை நோக்கி: "சுவாமி, தங்கள் காரியம் முடிந்துவிட்டது. இனி என் தம்பி காரியமாகவேண்டும். அவன் பிரேதத்தை திருப்பிக்கொடும்" என்றான். கணபதியும் கணங்களை வரவழைத்தார். எல்லாக் கணங்களும் ஆடு திருடின கள்ளர்கள்போல் விழித்துக்கொண்டு முன்னமே வந்து நின்றன. பிணம் வராமலிருக்கவே தமையன் வருத்தமுற்று, "என்ன சாமி, இவ்வளவுதானா உம்மை உபாசித்த பலன், உம்மை நான் சாஸ்தியாய் ஒன்றும் கேட்கவில்லையே. நான் கொடுத்த பிணத்தைத் திரும்பக் கொடுக்கக்கூடாதா. இவ்வளவு வல்லமையில்லையா உமக்கு" என்று தான் பிறந்தநாள் முதல் புகழ்ந்துவந்த தெய்வத்தை யிகழ்ந்தான். உடனே இந்த தெய்வத்திற்கும் மனதிலிரக்கம்வந்து தன்னுபாசகன் மனக்குறையைத் தன்னுடைய மனக்குறையாக எண்ணி, தன்னுடைய சக்தியினால் கங்காதரனை மறுபடி உயிருடன் உண்டாக்கி அவன் தமையன் கையில் ஒப்புவித்து: "பக்தா, நான் உன்னை பரிசோதித்தேன்: நீ இவ்வளவு நாளாய் நம்பிச் செய்த பூசை வீண் போகுமா. நீ கொடுத்த பிரேதத்திற்குப் பதிலாக உயிருள்ள உன் தம்பியை இதோ கொடுக்கிறேன்" என்றார். தமையனும் தன் தெய்வத்தை வாழ்த்தி, தம்பியை உயிருடன் கண்டு களித்து முதலிற்றான் கேட்கவேண்டிய எல்லாவற்றையும் கேட்டான்.

சகோதரர்கள் இருவர்களும் உச்சினியை நோக்கிச் சென்றார்கள். அவ்விடத்திய ராஜகுமாரத்தியை கங்காதரன் கலியாணஞ் செய்துகொண்டு அந்தத் தேசத்தை தன் ஆளுகைக் குள்ளாக்கி

னன். பிறகு தமையன் குஞ்சு குழந்தைகளை அவ்விடம் துக்கொண்டு எல்லாருடன் சுகமாயிருந்தான்.

சமுத்திரதீரே மரணம்
கிஞ்சித்போகம் பவிஷ்யதி.

சமுத்திரக்கரையில் சாவு, கொஞ்சகாலம் சுகத்திலிருப்பாய் என்ற ஜோஷியம் பொய்யாகுமா. நம்முடைய தகப்பனர் இந்தமாதிரியாய்ச் சொல்ல ஒருநாளும் கேட்டோமில்லையே என்று கங்காதரன் அந்த வாக்கியத்தின் நிச அர்த்தத்தை அறிய பெரிய ஜோஷிய சபை ஒன்று கூட்டினன். அதில் வெகுபெயர்கள் எழுந்திருந்து வெகு திருத்துப்பாடுகள் சொன்னர்கள். கங்காதரராஜன் அவைகளை ஒப்பவில்லை. கடைசியில் ஒரு குட்டி ஜோஷியன் சமுத்திரக்கரையில் சாவு கொஞ்சகாலம், சமுத்திரதீரே மரணம் கிஞ்சித்து, சுகத்திலிருப்பாய் அப்புறம், போகம் பவிஷ்யதி, என்று ஜாதகத்தின் பின்பாதியை விவரித்தான். எல்லாரும் அவனை மெச்சினர்கள். கங்காதரனும் "நான் அப்பொழுதே சொன்னேன் அல்லவா. அப்பா ஜோஷியம் அர்த்தமில்லாமல் இருக்கமாட்டாதென்று" என்று சபைக்குவந்தவர்களை எல்லாம் கௌரவப்படுத்தினன். நெடுநாள் தான் பாம்பு, புலி, பந்துக்கள் சகிதம் வாழ்ந்துவந்தான். நகைகள் வெகுவாய்ச் செய்யவேண்டி யிருந்தபடியால் கம்மாளனையும் கைவிடவில்லை.

இரண்டாவது,

ரணவீரசிங்கு கதை.

முன்னெரு காலத்தில் வஞ்சைமாநகர் என்ற ஒரு பட்டணத்தில் சிவாசாரன் என்று ஒரு அரசனிருந்தான். அவன் கறந்த பாலைக் காக்கை கொத்தாமலும், எறிந்தகல் கீழேவிழாமலும், எருதும் புலியும் ஒரே குளத்தில் நீர் குடிக்கும்படியாகவும், வெகு நீதியாய் அரசாண்டுவந்தான். அவன்காலத்தில் தேசங்களெல்லாம் சுபிட்சமாகவும் ஜனங்களெல்லாம் சந்தோஷமும் அமரிக்கையு முள்ளவர்களாகவும் காணப்பட்டார்கள். இவ்வளவு சந்தோஷத்துடன் இராஜ்ஜியபாரம் செய்துவந்தும், அவன் முகத்தில்மட்டும் துக்கம் எப்பொழுதும் தென்பட்டுக்கொண்டே யிருந்தது. ஏனெனில், இகலோகத்தில் மனிதர் வாழ்க்கையைக் குளிரச்செய்து பரலோகத்தில் புத் என்னும்

ந்து மனிதனைக் காப்பாற்றும் புத்திரனென்னும் சம்பத் பருதவனாக சிவாசாரனிருந்தான். இந்தப் பாக்கியத்தைப் அவன் செய்த புண்ணியங்கள் கொஞ்சநஞ்சமல்ல. அசுவத்த தக்ஷணம் பண்ண அநேகமாயிரம் பிராமணர்களைப் பிரதிதினம் நியமித்துக்கொண்டிருந்தான். பெரிய வைத்தியர்கள் இரகசியத்திலும் பகிரங்கமாயும் செய்யச்சொன்ன அநேக ஔஷதங்கள் செய்தும் பார்த்தான். "பிள்ளையாசை பீயைத் தின்னு" என்றல்லவோ பழமொழி. அதன்பிரகாரம் என்னதான் செய்துவந்தபோதிலும் பயன் படவில்லை. ஏனெனில் வேளைக்காரன் வரவேண்டுமல்லவா?

சிவாசாரன் என்ற இந்த வஞ்சைமாநகர ராஜனுக்குக் கரவதனன் என்று ஒரு மந்திரியுண்டு. அவனோ நாமிதுவரையில் கண்ணால் கண்டு காதால் கேட்டிராத ஒரு பெரும்பாவி. அரசனுக்குச் சந்ததி இதுவரையிலில்லை. இனி உண்டாகப்போகிறதுமில்லை என்ற எண்ணம் அவனை சதா ஆனந்தப் படுத்திக்கொண்டேயிருந்தது. அன்றியும் அரசனுக்குப் பிற்காலத்திலும் நாமும் நம்முடைய பிள்ளைகளுந்தான் இந்த சிம்மாசனத்தில் உட்காருவோம் என்ற நம்பிக்கை அவன் மனதில் குடிகொண்டிருந்தது. இப்படிப்பட்ட இந்த துஷ்டனுடைய எண்ணங்கள் யாவையும் சிவாசாரனுக்கு நன்றாய்த் தெரியும். ஆனால் அவன் என்ன செய்யக்கூடும். கர்த்தாவே, இந்தப் பாவியினுடைய எண்ணங்களைக் குலைக்கவாவது எனக்கு ஒரு புத்திரனையளிக்கலாகாதா? என்னைத்தான் புத் என்னும் நரகத்திலிருந்து ரக்ஷிப்பதி லுங்களுக்கு மனமில்லையா? என்று சதா சிவாசாரன் பரமேசுவரனைத் தியானித்துவந்தான்.

கடைசியாய் ஈசுவரன் சிவாசாரனிடமிரங்கினார். ஏனென்னில், உண்மையாய் நம்பினவன் எவன்தான் நல்லகதியடையவில்லை. அரசனுக்கு அறுபதுவயதில் ஒரு புருஷக் குழந்தை பிறந்தது. அப்பொழுது அவன் மனதிலுண்டான சந்தோஷத்திற்கு அளவுமுண்டா? புத்திரோத்ஸவத்திற்காக லட்சக் கணக்காய் பிராமண போஜனஞ் செய்து வைத்தான். சிறைச்சாலைகளையெல்லாம் திறந்து கைதிகளை விடுதலை செய்தான். பூதானம், கோதானம் முதலான சோடசதானமென்று சொல்லப்பட்ட பதினாறுவிதத் தானங்களையும் கிரமமாகச் செய்தான். ஸூதிகாகிருஹ வாசமென்ற பத்துநாளும் கடந்தவுடன் அநேகநாளாய் எதிர்பார்த்துவந்த பேரானந்தமாகிய தனது பிள்ளை முகத்தை சிவாசாரன் கண்டு களிகூர்ந்து, சிசுவின் முகக்குறிகளிலே யேதானே வித்தை, வீரியம், தயை, தாராளம் முதலிய நற்குணங்களைக் கண்டு ஆனந்தக்கடலி லாழ்ந்தான்.

தொட்டிவிடுதல், பெயரிடுதல் முதலான கலியாணங்களெல்லாம் ராஜகுமாரனுக்கு விமரிசையாய் நடந்தன. பெரியோர்கள் குழந்

தைக்கு சுந்தரம் என்று பெயர் வைத்தார்கள். அரசன் செய்த தருமங்களாலும், அவனுடைய நற்குணத்தினுலும் தேசமெங்கு "நம்மதிர்ஷ்டம் மகாராஜனுக்குக் குழந்தை பிறந்தது" என்று சந்தோஷக் கூச்சல் உண்டாயிருந்தது. ஆனுல், இவைகளெல்லாம் ஒரு பிராணிக்குமட்டில் வயிற்றெரிச்சலாக இருந்தது. இது யாரெனில் மந்திரி கரவதனனே. தனக்கும் தன் பிள்ளைகளுக்கும் ராஜ்ஜியம் கிடைக்கப்போகிறதென்று எண்ணியிருக்கையில் இவன் மனதிற்கு விரோதமாய் அரசனுக்கு அறுபதாவது வயதில் குழந்தை பிறந்தால் இவன் அதை எப்படிச் சகிப்பான். அதுமாத்திரமல்ல. கரவதனன் மனதில் இந்த இடையூற்றை எப்படியாவது நீக்கி நமக்குப் பட்டம் கிடைக்கும்வழியைப் பார்க்கவேண்டுமென்ற கெட்ட அபிப்பிராயம் உண்டாய்விட்டது. நல்லது நமக்கு வழியில்லையா? அரசனுக்கோ வயது உள்ளபடியாய்விட்டது. இவனுக்குப் பிற்காலம் நாம் கொஞ்சநாள் ராஜ்ஜியத்தைப் பாதுகாத்துத்தான் இவன் குமாரனுக்குக் கொடுக்கவேண்டுமேயல்லது வேறு மார்க்கமில்லை. அப்பொழுது இந்த ராஜ்ஜியத்தை என் வசப்படுத்திக்கொள்ள எனக்குத் தெரியாதா? என்று மனதிற்குள் தீர்மானஞ் செய்துகொண்டு வெளியில் வெகு சாதுவாக நடந்துவந்தான்.

ஆனுல் இவன் இப்படிக் கொண்டிருந்த எண்ணங்களை சிவாசாரன் என்னும் அரசன் நன்ருய் அறிந்துகொண்டிருந்தான். ஏனெனில் அவன் வெகு தந்திரி. அவன் மனதில் "இந்த மகா பாபியாகிய மந்திரி இந்தத் தேசத்தை நமக்குப் பிற்காலத்தில் கைப்பற்றிக்கொண்டால் போகட்டும். அது ஒரு பெரிய காரியமல்ல. நமது பிள்ளையை மட்டில் வதைசெய்யாமல் விட்டுவிடுவானேயானுல் அதே அவன் நமக்குச் செய்யும் கோடி உபகாரம். ஆனுல் இவைகளைப்பற்றி நாம் என்ன செய்யக்கூடும். ஈசுவரன் விட்டவழி நடக்கும், சங்கரனை விட வேறு தெய்வமில்லை. அவன் செயல்படியே நடந்துதீரும். நமது பையன் தலையில் அந்தப்படி எழுதியிருந்தால் நாம் என்ன செய்கிறது" என்று சிவாசார மகாராஜன் யோசித்து அதே சிந்தனையால் நாளுக்குநாள் உடம்பு இளைத்து துர்ப்பலம் மேலிட்டு வியாதியாய்ப் படுத்தார். கிழவயதில் வியாதிவந்தால் விசேஷமாய் அநுகூலப்படுவது சாத்தியமில்லாதகாரியம். அதுபோலவே என்னதான் வைத்தியம் பார்த்தபோதிலும் மகாராஜனுக்கு உடம்பு சொஸ்தமாகவேயில்லை. கடைசியாய் அந்தியகாலம் வந்துவிட்டதுபோலும் தென்பட்டது. அக்காலத்தில் சுந்தரன் என்ற ராஜகுமாரனுக்கு வயது பத்து.

இப்படி தனக்கு நாள் குறுகினதை அரசன் கண்டுகொண்டு, உடனே தனக்குள்ளிருந்த ரணவீரசிங்கு என்ற ஒரு முக்கிய சிப்பா

பரவழைத்து, அவனையும் தன் குழந்தையாகிய சுந்தரனையும் தன் ருகாமையில் உட்காரவைத்துக்கொண்டு, மற்றவர்களை யெல்லாம் வெளியிற் போகச்சொல்லி கதவைத் தாளிட்டு சிப்பாயைப் பார்த்து அரசன் பின்வருமாறு பேசலானான்:— "அப்பா ரணவீரசிங்கு, பார்த்தாயா எனக்கு வந்துவிட்ட கதியை. இந்த உலகத்தில் என் வாழ்வு இன்னும் கொஞ்ச நாழிகைதான். நான் சொல்லுவதைச் சற்று நிதானித்துக் கேட்டு அந்தப்படி நீ நடப்பாயானால் உனக்கு இந்த ஜன்மத்தில் மோட்சம் உண்டு. நமக்குமேல் ஒரு ஈசன் இருக்கிறார் என்பதும், நம்முடைய நடக்கை நல்லதோ அல்லது கெட்டதோ அதின்பிரகாரம் நம்மை தண்டித்து அல்லது அநுக்கிரகித்து வருகிறாரென்பதும், எல்லாருக்குந் தெரிந்த விஷயந்தானே. நான் இப்பொழுது நம்பிக்கையின்பேரில் உன்னிடத்தில் ஒப்பிவைக்கப் போகிற பொருளை நீ துரோகஞ் செய்தால் உனக்கும் அந்தத் தண்டனை ஈசுவரன் விதிப்பாரல்லவா? இந்த சுந்தரன் என்னும் ஒரு புத்திர சம்பத்தடைய நான் பட்ட சிரமமெல்லாம் உனக்குத் தெரியாதவைகளல்லவே. எத்தனை கோவில்கள் கட்டி வைத்தேன். எத்தனை பிராமண சமாராதனை நடத்தினேன். எத்தனை மந்திரங்களாலும் தந்திரங்களாலும் பணம் செலவு செய்தேன். கடைசியாய் ஈசுவர கடாக்ஷ மிருந்தபடியால் நமக்கு ஒரு குழந்தையும் பிறந்தான்." இவ்வளவு சொல்வதற்குள் அரசனுக்கு துக்கம் மேலிட்டுவிட்டது. வாய்விட்டு விம்மியழத்தலைப்பட்டான். "நம்முடைய விதிப்படி நடக்குமென்று தெரிந்திருக்க நீங்கள் ஏன் எனக்காக அழவேண்டும். பிரமன் தலையில் எழுதினபடி நடக்கவேண்டும்" என்று சொல்லி தகப்பனை அழவேண்டாமென்று சுந்தரனென்னும் சிறு பையன் சாந்தம் பண்ணினான். இப்படி மகாராஜா விசனப்படுவதும், ராஜகுமாரன் தகப்பனை யழவேண்டாமென்கிறதும் யார் மனதைத்தான் உருக்காது. அதிலும் ரணவீரசிங்கன் கோழைமனது உருக கேட்கவேண்டுமா. அவன் கண்ணீர் விட்டழுது, சுந்தரத்தை தன் மடியில் தூக்கி வைத்துக்கொண்டு தன் அங்கவஸ்திரத்தினால் அவன் கண்களைத் துடைத்தான். பிறகு கொஞ்சம் துக்கத்தை அடக்கிக்கொண்டு மகாராஜா ரணவீரசிங்கைப் பார்த்து "அப்பா ரணவீரா, நான் பட்ட சிரமம் உனக்குத் தெரியுமல்லவா. அப்படி எல்லாம் என்னத்திற்கு செய்தேனென்று இப்பொழுது நான் எண்ணவேண்டியதாகவிருக்கிறது. ஏனெனில் இந்த க்ஷணத்தில் என் பிராணன் போய்விட்டதேயானால் அடுத்தக்ஷணத்தில் என் பிள்ளைக்கு கதி யாரிருக்கிறார்கள். மகா சண்டாளப்பயல் கரவதனன் உபாயத்தின்மேல் உபாயம்பண்ணி என் குழந்தையை எப்படியாவது கொன்றுவிடப்போகிறானே. ஆனால் எனக்கு உறுதியான நம்பிக்கை உன் ஒருவனிடந்தான்.

ன்னும் கொஞ்சகாலம் நமது பையனுக்கு வயது சென்
ஜியத்தை அவன் வகிப்பானென்று எண்ணிவிட்டான்.
சிலகாலஞ் சென்றுகொண்டே வந்தது.

ராஜா சிவாசாரன் பரலோகப்பிராப்தி யடைந்து சற்றே
ப வருஷம் எட்டு ஆய்விட்டது. ஆகவே சுந்தரனுக்கும்
மார் பதினெட்டு சென்றுவந்தது. அவன் படிப்பு விஷயத்
தொரு குறைவுமின்றி ரணவீரசிங்கு, தகப்பனுருக்கு ஜாஸ்தி
ய நடத்திவந்தான். அப்படியிருந்தும் அவன் ராஜகுமாரன்
ம்சாரத்தினிடம் நடந்துகொள்ளவேண்டிய காரியங்களில் சரி
இடங்கொடுக்காதபடியால் கிழவன் என்னதான் தன்னிடம் பக்ஷ
க் காண்கினும் ராஜகுமாரன் அவனை வெறுத்தேவந்தான். கடை
ாய்ச் சுந்தரனுக்கு எப்பொழுதும் பிரியமுள்ள பெயர்கள் அவன்
சிநேகிதர்களாகிய பிரபுக்களின் புத்திரர்களே.

ஒருநாள் வைகாசி மாதம் வசந்தகால சாயங்காலம் கிருஷ்ண சதுர்த்தசியின்பொழுது சூரியாஸ்தமன காலத்தில் ராஜகுமாரன் தன்ன ரண்மனை ஏழாம் மாடி உப்பரிகையின்மேல் தனது இருபது தோழர் களோடு உல்லாசமாய் உட்கார்ந்துகொண்டிருந்தான். வீட்டிலோ சுகமில்லாதவனுகையால் ஏதோ முகஞ்சுண்டினவனுக ஊரில் நடக் கும் வேடிக்கைகளை உப்பரிகையிலிருந்து பார்க்கும்பொருட்டு தனது கண்களைக் கிழக்கு முகமாய் நோக்கிப் பார்த்தான். அப்பொழுது தான் முச்சந்தியுங் கூடுகிறவேளை. சூரியாஸ்தமனமாய், சொற்ப நிமிஷங்களாயிருந்தன. சந்தியாதேவதை என்பவள் தனது படுதாவை ஒவ்வொரு வஸ்துவின்பேரிலும் பரப்ப ஆரம்பித்தாள். அவனவன் பகலெல்லாம் உழைத்து அலுத்து அப்பொழுதுதான் வீட்டுக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தான். இந்த சமயத்தில் கிழக்குக் கோட் டை வாசலுக்குச் சமீபத்தில் ஒரு பெரிய கட்டிடம் சுந்தரன் கண் களுக்குத் தென்பட்டது. ஊமைபோல் வாயை மூடிக்கொண்டி ருக்கக் கூடாதென்று நினைத்து, அவன் தன் சிநேகிதர்களைப் பார்த்து, "தோழர்களே, அதோ தென்படுகிறதே, கைலாயம்போல் விளங்கு கிற கட்டிடம் என்னவென்று" கேட்டான். "அண்ணு, அதுதான் நமது ராஜஸ்தான கச்சேரி, இரண்டு வருஷகாலமாய், நீ உட்கார்ந் திருக்கவேண்டிய இடம், பொல்லாத பாவி கரவதனன், உன்னு டைய பதவியை அபகரித்துக்கொண்டுவிட்டான். அவன் அப்படிச் செய்யாமலிருக்கும் பக்ஷத்தில் இரண்டு வருஷத்திற்கு முந்தியே உன் பட்டத்தை உனக்குத் திருப்பிக் கொடுத்திருப்பானல்லவா? இதுவரையில் நீ பிழைத்திருப்பதைப்பற்றியே நாம் சந்தோஷப்பட வேண்டும், ஏனெனில் அந்தப் பாவி அப்பொழுதே உன் தலையை கிள்ளுகிறவனுக்குக் கோடி மொகரா இனும் வைத்தான். ஆனல்

இதுவரையில் ஈசன் நம்மைக் காப்பாற்றிவிட்டார்" எ
கிதன் சொல்லி வாயை மூடினுன்.

இந்தப் பேச்சுகளெல்லாம் சுந்தரம் காதுகளில் ராமப
விழுந்தனவேயன்றி வேறல்ல. ராஜகுமாரனுக்கு இந்த
ஒன்றுந் தெரியாது. தனக்கு இரண்டு வருஷங்களுக்கு மு
ஜியங் கிடைத்திருக்கவேண்டுமென்ற சங்கதி இப்பொழு
சிநேகிதன் சொல்ல அவனுக்குத் தெரிந்தது. "பார்த்தாயா,
நமக்கு அவமானம் வந்ததே" என்று நினைக்கவே அவன் முகம்
கத்தினுல் விகாரப்பட்டது. இந்த சிநேகிதர்கள் கண்டுகொ
"ஐயோ! இப்படி சுந்தரம் மனவருத்தப்படுவானென்முல் இந்த
கதியைப்பற்றி இவன் ஏன் பேசினுன்" என்று தங்களுக்குள்ளே
சங்கடப்பட்டார்கள். இவ்வித சங்கடங்களை ராஜகுமாரன் மு
குறிப்பா லறிந்துகொண்டு இப்படி நம்மைக்குறித்து இவர்கள் சங்க
டப்படும்படி நாம் மனஞ் சளைத்தோமே யென்று தன்னைத்தானே நிந்
தித்துக்கொண்டு வேறு விஷயமாய்ப் பேச்சை மாற்றினுன். இருட்டி
வெகுநாழிகைவரையில் பேசிக்கொண்டிருந்துவிட்டு சிநேகிதர்கள்
தங்கள் தங்க ளிருப்பிடம் போக விடை கேட்டார்கள். அதற்குச்
சுந்தரம் விடைகொடுத்து "நீங்கள் நாளை அதிகாலையில் இவ்விடம்
வந்தால் நாம் சீக்கிரம் ஸ்நானம் செய்து அற்ப ஆகாரமும் பண்ணிக்
கொண்டு பட்டணஞ் சுற்றிப் பார்த்துவருவோம்" என்முன். அவர்
கள் அப்படியே என்று ஒப்புக்கொண்டு வீடு போய்விட்டார்கள்.
சுந்தரம் மாத்திரம் தனிமையில் கீழே வந்து, தனது ரக்ஷகனுகிய ரண
வீரசிங்கைக் கூப்பிட்டு "ஐயா, இந்தப் பட்டணத்தை இதுவரையில்
நாம் சுற்றிப் பார்க்கவில்லையே. நாளைத் தோழர்களை வரச்சொல்லி
யிருக்கிறேன். எங்கள் இருபத்தொரு பெயர்களுக்குச் சேணங்
கட்டின இருபத்தொரு குதிரைகளும், நம்முடன்கூட ஓடிவர சில
ஆட்களும் சித்தமாயிருப்பதுடன் காலை எங்கள் ஸ்நானம் போஜனம்
இவைகளுக்குத் தகுந்த ஏற்பாடுஞ் செய்யவேண்டும்" என்று கட்
டளையிட்டான். இதைக் கேட்டதும் ரணவீரனுக்கு ஆனந்தம்
பொறுக்கக்கூடவில்லை. "மை பாப் சக்கிரவர்த்தியே! என்
கண்ணே! இதுவரையில் என்றையதினம் நீ தனக்குத்தானே உத்
தரவு செய்யப்போகிமு யென்றல்லவோ காத்திருந்தேன். நான்
அப்படியே சித்தப்படுத்திவைக்க ஏற்பாடு செய்கிறேன்" என்முன்.
உடனே வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் நடந்துவிட்டது. சவாரிக்கு
முன் போவதற்கு பத்து நான்கு பக்கங்களுக்கும் பத்து போர்வீரர்கள்
ரணவீரசிங்கு சித்தப்படுத்திவைத்தான்.

பொழுது விடிந்தது. தோழர்களெல்லாம் சொல்லிப்போனபடி
வந்து சேர்ந்துவிட்டார்கள். ஸ்நானமும் ஆகாரமும் செய்துகொண்டு

என் குழந்தையை உன் கையில் ஒப்புவிக்கிறேன். நீ என... ணுவாயோ பண்ணிக்கொள்" என்று சொல்லி, என்ன இடுப்... டிந்து படுக்கையில் கிடந்தபோதிலும் ஆக்ரஹத்தால் சிவாசார ம... ராஜா கொஞ்சம் எழுந்திருந்து தன் குமாரனாகிய சுந்தரத்தின் கை... யை எடுத்து கண்ணில் கடைசியாக தான் ஒத்திக்கொண்டு ரணவீரசிங் குகையில் கொடுத்தார். பிறகு அவனைப் பார்த்து "அப்பா ரணவீரா, என் குழந்தைக்கு மட்டில் துரோகம் செய்துவிடாதே. அவனுக்கு ராஜ்ஜியம் கிடைக்காவிட்டால் அவனைச் சேர்ந்த பீடை போயிற்று. பாபி சண்டாளப் பயலான மந்திரி கையில்மட்டில் காட்டிக்கொடுக் காமல் பாதுகாத்துவந்தால் அதே பெரிய உபகாரம். இந்தக்ஷண முதல் இந்த அரண்மனைக் கதிபதி நீயே. நான் உன்னிடத்தில் ஒப் புவிக்கும் நம்பிக்கையை துரோகம் பண்ணாமல் காப்பாற்றவேண் டிய பொறுப்பு உன்னுடையதே" என்று சிவாசாரன் தன் பேச் சை முடித்தான். உடனே மந்திரியை அழைத்துவர ஆளனுப்பினான். ஏனெனில் அவன் என்னதான் வஞ்சகனாயிருப்பினும் அவனிடம் வாய் வார்த்தை சிலவைகள் சொல்லி அவனிடம் ராஜ்ஜியத்தை ஒப் புவிக்கவேண்டுமல்லவா? மந்திரி வந்து சேர்ந்ததும் அவனைப் பார்த்து மகாராஜாவானவர் "அப்பா கரவதனா, இப்பொழுது நானிருக்கும் நிலைமையைப் பார்த்தாயா? நேற்றே இந்த மாடமாளி கை கூடகோபுரங்கள் கூடிய ராஜ்ஜியம் என்னுடையதாக விருந் தது. ஆனால் இன்றே மயானத்திற்கு இன்னும் கொஞ்ச நாழி கைக்குள் போகவேண்டியவனாக ஆய்விட்டேன். ஆகையால் மனி தவாழ்க்கை மிகவும் அநித்தியம். இன்றைக்கு இருப்பாரை நாளைக் குக் காணோம். இதோ என் முத்திரை மோதிரத்தைப் பிடி. இது முதல் இந்த சிம்மாசனம் உன்னுடையது. பையனுக்குத் தகுமான வயது வருகிறவரையில் நீதான் ராஜனாக இருக்கவேண்டும். அப்பு றம் உன் தயவிருந்தால் அவனுக்கு ராஜ்ஜியம் கிடைக்கலாம். ஜனங் களை ஆதரவாய்க் காப்பாற்றினால்தான் நமக்கு எசஸுண்டு. பையனி டத்தில் நானிருப்பதுபோல் இருந்துவா. அவனுக்கு வயது வருங் காலத்தில் கால்கட்டு ஒன்றுமாத்திரம் கட்டிவை" என்று சொல்லிக் கொண்டிருக்கையிலேயே அரசனுக்கு மேல்மூச்சு கிளம்பிவிட் டது. பேச்சை முடிக்கும்வரையில் எமதர்மராஜன் நிற்பானா. மந் திரி அரசன் சொல்லுவதற்கெல்லாம் தலையை யாட்டிவந்தான். அர சனும் பரலோகப் பிராப்தியடைந்தார். வழக்கமான துக்க நடவடிக் கைகள் கிரமப்படி நடந்தன. அரசனை சந்தனச் சிதையில் வைத்து தகனஞ்செய்தார்கள். அவருடைய அநேக பத்தினிகளும் அவரு டன் உடன்கட்டை யேறினார்கள். மந்திரியே நேரில் நின்று சகல கிரியைகளையும் நடத்திவைத்தான்.

அநாள்முதல் வஞ்சைமாநகரின் அரசனுக கரவதனனை பட்டாபிஷேகம் செய்தார்கள். அரண்மனைக் கதிபதியாக ரணவீரசிங்கு அதிகாரம் வகித்தான். அவன் எப்பொழுதும் தான் சொன்ன சொல்லு சரியாக சுந்தரனைப் பாதுகாத்துவந்தான். அரை நிமிஷமேனும் அவனை விட்டுப் பிரிகிறதேயில்லை. குழந்தை விளையாட்டுக் கெட்டுப்போகக் கூடாதே என்று நல்ல உயர்குலத்தில் பிறந்த பிரபுக்கள் பிள்ளைகள் இருபது பெயர்களைத் தோழர்களாக அரண்மனையில் சுந்தரனுடன் சேர்ந்திருக்க நியமனஞ் செய்தான். ஒவ்வொரு பாஷைக்கும் ஒவ்வொரு உபாத்தியாயர்களை திட்டப்படுத்தி ராஜகுமாரன் படிப்பில் முட்டாளாய்ப் போகாத வழியைத் தேடிவந்தான். சுந்தரனுக்கு யாதொரு விஷயத்திலும் குறைவு வைக்காமல் ரணவீரசிங்கு நடத்திவந்தா னென்றாலும் அவன் பையனை அரண்மனையை விட்டு வெளியே போகவிடவேயில்லை. அப்படி யவன் செய்தாஞே பையன் பிழைத்தாஞே. இல்லாதபக்ஷத்தில் அவன் தலை அன்றே உருண்டிருக்கும். ஏனெனில் கரவதனனென்ற மந்திரி அரசனைச் சுட்டுவந்த மறுநாளே, ராஜகுமாரனைக் கொன்று அவன் தலையைக் கொண்டுவருகிறவனுக்குக் கோடி மொகரா இனுமென்று ரகசியத்தில் சொல்லியிருந்தான். அதற்குள்ளாகவே அநேக அயோக்கியர்கள் அந்தத் தலைக்காகத் தேடிக்கொண்டிருந்தார்கள். ஆனுல்,அது என்னகாரணமோ ஈசுவரனுக்குத்தான் தெரியவேண்டும்; ஒரு நல்ல பெண்ணைமட்டில் ராஜகுமாரனுக்காக திட்டஞ்செய்து அவளை அவனுக்கு மந்திரியாகிய கரவதனன் விவாகஞ் செய்து வைத்தான். அவளும் அரண்மனையில் புருஷனுடன் வசித்துவந்தாள். ஆனுல் அந்தப் பெண் என்னதான் அழகாயும் பதவிசாயும் தென்படினும் அவளிடத்தில் ரணவீரசிங்குக்கு நம்பிக்கைமட்டில் இல்லவேயில்லை. கரவதனன் பார்த்து திட்டஞ்செய்த பெண்ணை நம்பக் கூடாது. நீ அவளுடன் ஒரே அறையில் படுக்கக்கூடாது. அவள் கையிலிருந்து ஒரு வெற்றிலைக் காம்புகூட வாங்கி சாப்பிடக்கூடாதென்று சதா ரணவீரசிங்கு சுந்தரனுக்குக் கட்டளையிட்டுவந்தான். பையனுக்கோ பால்யம். ரணவீரசிங்கு செய்யும் கட்டளைகளெல்லாம் சகிக்கக்கூடாமலிருந்தன. ஆனுல் அவன் சொற்படி நடப்பதைவிட ராஜகுமாரனுக்கு வேறு மார்க்கமில்லாம லிருந்தது. இந்தமாதிரி கொஞ்சம் காலஞ்சென்றது.

சுந்தரனுக்கு வயது பதினறு ஆய்விட்டது. மந்திரி ராஜ்ஜியத்தைத் திருப்பிக் கொடுக்கும் எண்ணமுள்ளவனுய் இருக்கவில்லை. ராஜகுமாரனும் தானிருந்த பந்தேகானவில் ராஜ்ஜிய மொன்றுண்டென்பதையும், மந்திரி யதைத் தனக்குத் திருப்பவேண்டிய தென்பதையும் மறந்தேவிட்டான். ரணவீரசிங்கும், இதற்குள் நாம் பதறு

எல்லாரு- குதிரையின்பேரில் சவாரியா
ளில் போர்வீரர்களும், மத்தியில் சுந்தரமும்
நகர் ராஜவீதி வழியே வேடிக்கையைப் பார்த்து
யை மெதுவாய் நடத்திக்கொண்டு வந்தார்கள்.
அடுத்த ஸ்தானத்தில் உருவின கத்தியுங் கையுமாக ரணவ
ையின்பேரில் வந்தான். இவர்கள் போகும் வழிகளி
யாவரும் எழுந்திருந்து இவர்களுக்கு மரியாதை பண்ணி
கடைசியாய் மந்திரி மாளிகையிருக்கும் வீதிவழியே போகு
ழுது வாசலில் கச்சேரி பண்ணிக்கொண்டிருந்த மந்திரிமு
எழுந்திருக்கவேயில்லை. இது ரணவீரசிங்குக்குப் பொறுக்கவில்லை. ராஜன் வருகிருனென்று எல்லாரும் எழுந்திருந்து மரியாதை பண்ணும்பொழுது இந்தக் கரவதனனுக்குமட்டில் இவ்வளவு இறுமாப்பா என்று தன் உதட்டையும் பற்களையும் நறநறவென்று கடித்து கையைப் பிசைந்தான். இவன் பட்ட ரோஷத்தை ராஜகுமாரன் கண்டு மனதிற்குள்ளே புன்சிரிப்புக் கொண்டான். பதினைந்து நாழிகைக்கெல்லாம் திரும்பி அரண்மனை வந்து சேர்ந்தார்கள். தோழர்களெல்லாரும் அவரவர்கள் வீடுபோய்ச் சேர்ந்தார்கள். சுந்தரமும் அன்று அமாவாசை யானபடியால் தர்ப்பணஞ் செய்துவிட்டு கொஞ்சம் ஆகாரம் பண்ணினன்.

அவன் மனதில் காலையில் செய்து வந்த சவாரி பலமாய்ப் பதிந்திருந்தது. அப்பொழுது ரணவீரசிங்கு செய்த அங்கசேஷ்டைகளுக்காக தான் சிரித்தபோதிலும், தன் மனதில்மட்டும் வருத்தம் அவனைவிட பதின்மடங்காயிருந்தது. பகல் அநேகமாய் முடிந்துவிட்டது. அஸ்தமித்தவுடன் கொஞ்சம் பலகாரம் செய்துவிட்டு சிரமம் மேலிட்டிருந்தபடியால் சீக்கிரமாய்ப் படுத்துக்கொள்வோமென்று சுந்தரம் தன் மாடியின்பேரில் சென்ருன். அவ்விடத்திலேயே தன் பள்ளியறைக்கு வெளிப்புறத்தில் ரணவீரசிங்கு காத்துக்கொண்டிருந்தான். அவனைத் தாண்டிக்கொண்டு உள்ளே சென்றவுடன் ராஜகுமாரன் தனக்கு முன்னமேயே தன் மனைவி அங்கு மஞ்சத்தில் தூங்கக்கண்டு "ஐயோ, பாவம், பெண்பால் இவள் தூங்குகிருள், நாம் எழுப்பவேண்டாம்" என்று எண்ணி ஒன்றுந் தோன்ருதவனைய்க் கிழக்கும் மேற்குமாக அந்த அறையில் உலாவினன். அவ்விடத்தில் ஒரு மூலையில் ஒரு நூல்பந்துபோ லொன்று தென்பட்டது. என்னவென்று அதை விளக்கின் சமீபத்தில் கொண்டு வந்து பார்க்கையில் அது ஒரு நூலேணியா யிருக்கக்கண்டு களித்து, நம்முடைய நற்காலத்திற்கே இது இங்கு எப்படியோ வந்திருக்க வேண்டும், ரணவீரசிங்கு இப்பொழுது சாப்பிடப் போயிருப்பான். இவளோ தூங்குகிருள். நல்லது ஓடிப்போக இதுதான் ச

..ாலேணியுடன் உள்ளே விட்டு வெளியே ..கு சாப்பிடப் போய்விட்டது. வந்தால் ..ம் ஓடிப்போகவேண்டுமென்று அங்கு நின்றபடி ..ன்பட்ட ஒரு பூவரசமரத்தை நோக்கி ஏணியை ..து இவன் நற்காலத்தால் ஒரு பெருங் கிளையில் போய்ச் ..ாண்டது. இழுத்துப் பார்த்து அது கெட்டியாய் இருக்கக் பரமேசுவரனும் நம்முடைய பக்ஷத்திலிருக்கிறாரென் றெண்ணி, ..ணி வழியாக மரத்திலிறங்கி, ஏணியை வெடுக்கென் றிழுத்து ..சசெறிந்துவிட்டு கீழ்வீதியில் வந்து சேர்ந்தான். அப்பொழுது இருட்டி இன்னும் சாமவேளைகூட ஆகவில்லை. ரணவீரசிங்கு தன்னை சாக்கிரதையாய்க் காப்பாற்றி வந்ததெல்லாம் ராஜகுமாரனுக்கு வெறுப்பாயிருந்தது. கடைசியாய் அரண்மனையை விட்டு இன்று தெய்வச்செயலாக வெளிப் புறப்பட்டுவிட்டோம் என்று தான் செய்த சாகசத்தைத் தனக்குள்ளேயே யவன் மெச்சிக்கொள்ள வேண்டியதாயிருந்தது.

ஆனால் உயிரென்றால் எல்லாருக்கும் வெல்லமல்லவா? மந்திரியின் மனிதர்களில் யாராவது நம்மைக் கண்டு கொன்றுவிட்டா லென்னசெய்கிறது என்று ராஜகுமாரன் கொஞ்சம் மயங்கினான். பிறகு சங்கரனைத்தவிர தெய்வம் வேறில்லை. அவன் விட்டவழி என்று தேறுதல் செய்துகொண்டான். ஊரோசை யடங்கவில்லை. அதுவரையில் இங்கு உட்கார்ந்திருப்போமென்று சமீபத்தில் இருந்த திண்ணையை நோக்கிச் சென்றான். ஆனால் அங்கு போனதும் நல்லதாகவேதான் இருந்தது. எப்படியென்றால், அவன் தங்கின திண்ணைக்கு அடுத்த அறையில் ஒரு வயதுசென்ற பிராமணன் தன் பெண்சாதியைப் பார்த்து "நீ ஏன் வருத்தப்படுகிறாய். கண்ணைத் துடைத்துக்கொள். நாம் என்ன செய்கிறது. நமது தலையில் இப்படிப் பிரமதேவன் எழுதிவிட்டானே, பழைய ராஜா இருக்கும்பொழுது அவர் நம்முடைய யோக்கியதையை யறிந்து சங்கராந்திதோறும் வேதத்திற்காக நமக்குத் தருந்த தக்ஷிணை கொடுத்துவந்தார். ஆனால் இப்பொழுதோ ஒரு கொடும்பாவி நம்முடைய ஊரில் ஆளுகிறான். சிவாசாரனுடைய குமாரன் ஒருநாள் பட்டத்திற்கு வருவான் என்று இதுவரையில் காத்திருந்தேன். அதற்கும் காலம் இரண்டு வருஷத்திற்குமேல் ஆயும் ஒன்றுங் காணோம். இனி கூடிய சீக்கிரத்தில் இந்தப் பாழும் ஊரை விட்டு வேறு நல்லவர்கள் வசிக்கும் இடம் போனாலொழிய நமக்குப் பிழைக்க மார்க்கம் இல்லை" என்றான். இப்படிக் கிழவன் கிழவியைப் பார்த்துச் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் சுந்தரன் காதில் விழுந்தது. ஏற்கனவே ..ன் மனதில் எரியும் நெருப்புக்கு நெய்போலாயிற்று. "ஆகா,

இப்படியா நமது தேசம் போய்விட்டது. நல்லவர்கள் நடுநடு ஓடவும் கெட்டவர்கள் களைக்கவும் காலம் வந்துவிட்டதே. எத்தனை பெயர்கள் இந்தப் பிராமணனைப்போல் வருத்தப்படுகிறார்களோ. இவர்கள் எல்லாம் இப்படியிருக்க நான் இனி பயந்து என் உயிரைக் காப்பாற்றி வைத்துக்கொள்வதால் என்ன பயன். நான் இனி எங்கே யாவது சென்று என் தேசத்தைக் கைப்பற்றும் வகையைப் பார்க்கவே ண்டும். ஜெயித்தாலோ எத்தனையோ பெயர்களைக் காப்பாற்றுவேன். இல்லையெனிலோ என் ஒரு உயிர்மட்டும் சேதமாகும். பார்த்துக் கொள்வோம்" என்று யோசித்து, ஒன்றுந் தோன்றாதவனாக கிழக்கு வாசலைநோக்கிச் சென்றான். அமாவாசை யிருட்டு இருண்டு எங்கு பார்த்தாலும் ஒரே கறுப்பாயிருந்தது. இத்துடன் வானத்தில் மேக சஞ்சாரமும் இருந்துகொண்டு புசு புசு என்று தூரவும் ஆரம்பித்தது.

கிழக்குவாசலைத் தாண்டி சுந்தரம் கொஞ்சதூரம் போகையிலே யே மழை அதிகரிக்கும்போல் காணப்பட்டபடியால் வழியில் இருந்த ஒரு ஓட்டைப் பிள்ளையார்கோவில் வாசலில் மழையைப் பார்த்துக் கொண்டு போவோம் என்று உட்கார்ந்தான். உடனே கொஞ்சநேரத் திற்கெல்லாம் வேறு இரண்டு மனிதர்கள் கோவிலைநோக்கி வந்தார் கள். மந்திரியோ கோடி மொகரா நமது தலையின்பேரில் வைத்திருக் கிறான் என்று சுந்தரன் நினைத்துக்கொண்டு கொஞ்சம் மறைவாயிருப் போம் என்று கோவிலுக்குள் சென்றான். அந்த மனிதர்களும் முன்னம் இவன் உட்கார்ந்த இடத்தில் வந்து உட்கார்ந்தார்கள். அவர்கள் பேச் சால் அவர்கள் சமீபத்தில் ஒரு வயலில் ஆட்டுக்கிடை மறித்திருந்த இர ண்டு இடையர்களென்றும், தூரல் அதிகரிக்கவே வயலைவிட்டுக் கோ விலுக்கு மழைக்குத் தங்கவந்தவர்களென்றும் தெரியலாயிற்று. அவர் கள் தங்கள் பாக்குப்பையை எடுத்து கொஞ்சம் வெற்றிலை போட்டுக் கொள்ள ஆரம்பித்தார்கள். இதற்குள் ஒரு பல்லி சொத் சொத் சொத் என்று ஒலித்தது. அதைக் கேட்டு அவர்களில் ஒருவன்,

"அண்ணே, ராமக்கோனே, உனக்கு கவுளிசாஸ்திரம் தெரியுமல் லவா அது இப்போது என்ன அடித்தது. அதை நீ எனக்குச் சொல் ான் கேட்கிறேன்" என, அதற்கு ராமக்கோன்,

"அது நான் ஒருவருடனும் சொல்லக்கூடாது. ஆயினும் இப் போது இங்கு நான்காம் மனுஷ்யர் ஒருவரும் இல்லை. இந்த மழை யில் இங்கு யார் வருவார்கள். அந்த கவுளி பட்டணத்து ராஜகுமாரன் இந்தக் கோயிலிலே இருக்கிறான் என்றது. அதுக்குத்தான் அவ னிருக்கான் என்று அறிந்தே நானும் நான்காம் மனுஷ்யர் ஒருவ ும் இல்லை என்று சொன்னேன். என்னமோ அந்தக் கடவுள் இது ாயில் அவன் தலையை ரட்சித்துவிட்டார். இனியும் அவர்தான்

_சிக்கவேண்டும்'' என்று சொல்லி வாய்மூடும்முன்னமே இன்னொரு கௌளி கவுளியடித்தது. உடனே ராமக்கோன் மற்றொரு இடையனைப்பார்த்து,—

''இப்போது நீ சொல்லேன். பல்லி என்ன சொல்லிற்று'' என்றான். அதற்கு அவன்;—''அப்பா தம்பி இது ராஜகுமாரனுக்கு கெட்ட அர்த்தமே. இன்னும் ஒரு நிமிஷத்திற்குள் இந்தப் பட்டணத்து மந்திரியும் பிரதானியும் இங்கே ஏதோ ஆலோசிக்க வருகிறார்கள் என்றது'' என்று சொல்லும் முன்னமேயே தூரமாக ஒரு வண்டியும் ராந்தலும் தென்பட்டன. ''அதோ மந்திரிவண்டி. ராஜகுமாரனை சுவாமிதான் காப்பாற்றவேண்டும்'' என்று சொல்லிக்கொண்டு கோனுன்கள் ஓடிப்போய்விட்டார்கள்.

உள்ளே பதுங்கிக் கிடந்த ராஜகுமாரன் மனது என்னமாயிருக்கவேண்டும். தன்னுடைய பிராண சத்துருவாகிய மந்திரியே தான் இராத்திரி ஒண்டியாக ஒளிந்திருக்கும் இடத்திற்கு வந்தானென்றால் அவன் பயம் எப்படியிருக்கமாட்டாது. சூரங்கென்று ரணவீரசிங்கை திட்டினோமே. இங்கு நம்மை ஆர் ரக்ஷிப்பார்கள் என்று எண்ணிக்கொண்டு ராஜகுமாரன் கோவிலுக்குள் கர்ப்ப கிரஹத்தண்டை சென்று பிள்ளையார் வைத்திருந்த இடத்தை தடவிப்பார்த்து அவருக்குப் பின்னால் பிள்ளையாருடன் பிள்ளையாராக பதுங்கிக்கொண்டான். அவ்விடத்தி லிருந்துகொண்டே, கோனுன்களுடைய கொச்சைப் பேச்சையும், சொன்ன ஜோஷியத்தின் உண்மையையும் அவர்களுடைய நல்ல குணங்களையும் நினைத்து நினைத்து ஆச்சரியப்பட்டான். ஏனெனில் அவர்கள்மட்டும் கெட்டவர்களாக இருந்திருப்பார்களேயானால் அந்தக்ஷணமே ராஜகுமாரனைப் பிடித்து மந்திரியினிடம் கொடுத்திருப்பார்களல்லவா? அவர்கள் ஓடிப்போனவுடன் ஒரு வண்டி ராந்தல் சகிதம் பிள்ளையார்கோவில் முன்வந்து நின்றது. அதனின்று மந்திரியும் பிரதானியும் கீழிறங்கி கோவில்வாசல் திண்ணையில் வந்து நின்றார்கள். அங்கு அவர்கள், வண்டிக்காரன், நமக்குத் தெரிந்தபடி சுந்தரன் இவர்களைத்தவிர வேறு ஒருவரும் கிடையாது. ஏதோ ரகசியமான விஷயத்தைக்குறித்துப் பேசும்பொருட்டே மந்திரி தனிமையில் பிரதானியை இந்தப் பாழுங் கோவிலுக்கு அழைத்துவந்தான் என்று எண்ணவேண்டியதேயன்றி வேறல்ல. கோவில்வாசல் வந்ததும் மந்திரியானவன் பிரதானியைப்பார்த்து ''என்ன பிரதானி, அந்த ஜாண்பயலுக்கு எவ்வளவு கர்வம். என் தேசத்து வாசலில் அவன் சவாரிபோகவாவது, கோடி மொகரா என்று கூறியிருந்தும் அந்த நேற்றுப்பயல் தலையை கிள்ள நம்மிடத்தில் ஒருவரும் இல்லாமல் போனார்கள் பார்த்தையா. நம்முடைய உப்பு இ

தனை பெயர்கள் சாப்பிட்டும் இன்றுகாலமே அவன் தலையை கோத ஒருவனாவது இல்லாமற்போனானே" என்று விசனப்பட! அதற்குப் பிரதானி,

"சுவாமி, ஒரு விண்ணப்பம். என்பேரில் சற்று ஆயாசப்படாமல் கவனித்துக் கேட்கவேண்டும். நமக்கோ சுவாதந்திரியமில்லாத ஒரு ராஜ்ஜியத்தை நாம் பிடித்துக்கொண்டு ஆளுகிறோம். இரண்டு வருஷங்களுக்கு முந்தியே ராஜகுமாரன் நம்மை ராஜ்ஜியத்தை விட்டுவிட கேட்டிருப்பானேயானால் நாம் விட்டுவிட்டிருக்கவேண்டுமேயல்லாது வேறல்ல. அவனும் அப்படி கேட்கவில்லை, நாமும் விடவில்லை. அந்தக் குழந்தையோ ஒன்றுந்தெரியாதவனாக இருந்துகொண்டு தானிருக்கிற விடங்கூட காட்டிக்கொள்ளாமல் அரண்மனைக்குள் அடைத்திருக்கிறான். அவனால் நமக்கேதாவது தீங்குண்டா? எத்தனையோ லட்சம் ஜனங்கள்போல அவனும் ஒருத்தன். அப்படியிருக்க அவனை நாம் வீணாகக் கொல்லுவானேன். அந்த பாபத்தை வீணாகக் கட்டிக்கொள்ளுவானேன். அவன் எப்படியிருந்தாலும் அவன் தகப்பனார் சிவாசாரன் என்று அந்த பழைய ராஜாவின்பொருட்டு இவனை விட்டுவிடலாகாதா" என்று சொல்லிக்கொண்டு வருகையிலேயே கரவதனனுடைய கோபக்குறிகளைக் கண்டு இனி நாம் பேசினால் தலை போய்விடுமென்று எண்ணி வாயை மூடினான். உடனே சிம்மம் கர்ச்சித்ததுபோல் மந்திரி,

"அடா பயலே! அற்பநாயே! என்னசொன்னாய். நீயா எனக்கு தர்மோபதேசம் பண்ணுகிறவன். நல்லது நாளை சூரிய உதயத்திற்குள் இதன் பயனை நீ அறிவாய்" என்று சீறக்கண்டு, பிரதானியானவன் தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள பயந்து எஜமான் நோக்கத்தின்படியே "சுவாமி என்னமோ சொன்னேன், பைத்தியக்காரன். என்னை மன்னிக்கவேண்டும். இன்னும் ஒருவாரத்திற்குள் அந்த பொல்லாத ராஜகுமாரன் தலையைக் கொண்டுவந்துவிடுகிறேன்" என்றான். மந்திரிக்கு வேண்டியதெல்லாம் அவ்வளவுதான் ஆகையால், "நல்லது இன்னும் ஒரு வாரத்திற்குள் அப்படி செய்யாவிட்டால் அப்பொழுது தெரியும்" என்று சொல்லி பயமுறுத்தினான். பின்பு இவ்விருவர்களும் அனேக விஷயங்களைப்பற்றி பேசினார்கள்.

இதற்குள் கணேச விக்கிரஹத்தின்பின் உட்கார்ந்திருந்த சுந்தரத்திற்கு மூச்சே போய்விட்டதென்றாலும் சரியாக இருக்கும். அவன் ஒருக்கால் தான் அதிகமாய் மூச்சுவிட்டாலும் சப்தமாகுமென்று நினைத்து மெதுவாய் மூச்சை விட்டுவந்ததே அவனைக் கொல்ல போதுமானது. பேச்செல்லாம் முடியவே கரவதனனும் பிரதானியும் தங்கள் வீட்டிற்குப்போக உத்தேசித்து வண்டியில் ஏறிக்கொண்டார்

கள். இப்பொழுது ராஜகுமாரனுக்கு ஒருநாளுமில்லாத தைரியம் வந்துவிட்டது. சங்கரன் இதுவரையில் நம்மைக் காப்பாற்றினர். இன்னும் அவர் நம்மைக் காப்பாற்றுவார் என்று சுந்தரன் தன் மனதைத் திடப்படுத்தி கொஞ்சமேனும் சத்தம்பண்ணுமல் ஊர்ந்து நடந்து வண்டிக்குப்பின்வந்து அவ்விடத்தில் மெதுவாய் உட்கார்ந்துகொண்டு "நல்லது இவர்கள் போகிறவழியே போகிறேன். இன்னும் என்னைப்பற்றி என்னென்ன பேச யோசித்திருக்கிறார்களோ அவைகளைக் கேட்கிறேன்" என்று எண்ணிக்கொண்டான்.

உடனே வண்டியும் ஓட ஆரம்பித்தது. அது ரஸ்தாவின் வழியே சென்று பட்டணத்தின் மேற்கு வாசலைக் கடந்து அப்பால் இரண்டு நாழிகை வழிதூரத்திலிருந்த ஒரு தோட்டத்தைப் பார்க்கச் சென்றது. வண்டியின் பின்பக்கம் கொஞ்சமேனும் பயமில்லாமல் உட்கார்ந்திருந்த சுந்தரனும் வண்டியோடேயே சென்றுகொண்டிருந்தான். அந்தத் தோட்டத்திற்குள் வண்டி சென்றதும், சரி இவர்கள் இங்குதான் வருகிறார்கள், இனி வண்டியில் இருந்தால் மோசம், என்று, நினைத்து, ராஜகுமாரன் சத்தம்பண்ணுமல் இறங்கி, ஒரு பூச்செடியில் மறைந்தான். அவன் இறங்கிய கொஞ்ச நிமிஷங்களுக்கெல்லாம் இந்த வண்டியானது தோட்டத்தின் மத்தியிலிருந்த ஒரு ரமணீயமான குளக்கரையில் வந்து நின்றது. மந்திரியும் அங்கு இறங்கிக்கொண்டு பிரதானியை வண்டியில் வீட்டிற்கு அனுப்பிவிட்டான். அந்தக் குளத்தின் மத்தியில் ஒரு அழகான சிறிய தீவு தென்பட்டது. அதில் தங்க ஸ்தம்பங்களாலும், வெள்ளிக் கட்டில்களாலும், கல்லிழைத்த கதவுகளாலும் கூடிய ஒரு சிறிய பங்களா கட்டப்பட்டிருந்தது. பங்களா நின்ற தீவிற்கும் குளக்கரைக்கும் இருபக்கங்களில் மல்லிகை முல்லைகளால் நிறைந்து சமான் விளக்கப்பட்ட ஒரு கரைவழி கட்டப்பட்டிருந்தது. அந்த தோட்டம் எங்கும் பெண்கள் மயமாயிருந்ததேயன்றி மருந்திற்குக்கூட ஒரு புருஷனைக் காணும். தீவிற்குப் போகும் வழியண்டை மந்திரி வந்தவுடன் அங்கு ரம்பை ஊர்வசி திலோத்தமைகள் போன்ற அதிசௌந்திரியம் பொருந்திய பெண்கள் இருபது பெயர்கள், அதிபால்லியமுள்ளவர்கள், மந்திரியைக் கைகொடுத்துக் கரைவழியாய் புஷ்ப பந்தல் மார்க்கமாய் பங்களாவுக்கு அழைத்துப்போய் அங்கு ஒரு தங்கக் கட்டிலின்பேரி லுட்கார வைத்தார்கள். மந்திரி கீழ் உட்கார்ந்ததும், "எங்கே அவள், சீக்கிரம்" என்றான். உடனே அந்த இருபது பெண்களும் பக்கத்திற்கு பத்து பெயர்களாக ஒரு தந்த பல்லாக்கை எடுத்துக்கொண்டு புறப்பட்டார்கள். இவைகளை எல்லாம் பூச்செடி மறைவிலிருந்த ராஜகுமாரன் கண்டு "என்ன ஆச்சரியம். இவர்களையோ ரம்பை ஊர்வசி என்கலாம். இவர்களைப் பல்லாக்குத் தூக்கச்செய்து இவர்கள் தலைமேல் சவாரி

செய்ய யோக்கியமுள்ள அவ்வளவு சௌந்தரியமுள்ள பெண்ணும் இந்த உலகத்தில் இருக்கிறாளா. ஆகா அவளைப் பார்த்தல்லவோ நமக்கு ஈசன் கண்கொடுத்ததின் பலனை அடையவேண்டும்'' என்று கருதி, செடிகளை நீக்கி அவைகளின் வழியாய்க் கண்ணை வைத்து மந்திரி யிருக்கும் இடம் பார்த்தவனாய் ராஜகுமாரன் பதுங்கி யிருந்தான். இதற்குள் பல்லக்கு திரும்பிவந்துவிட்டது. அழகே உருக்கொண்டதுபோல் ஒரு பெண்மாணிக்கம் அதில் இருந்து கீழே குதித்தாள். அவள் யார் என்று ராஜகுமாரன் பார்த்தான். ஆச்சரியம்! ஆச்சரியம்!! அவள் வேறொருவருமில்லாமல் தன் மனைவியா யிருக்கக் கண்டான். "என்ன நம்முடைய கண்கள் சரியாய்ப் பார்க்கின்றனவா'' என்று துடைத்துத் துடைத்துப் பார்த்தான். அவளே, அவளொழிய வேறு பெண் பல்லக்கை விட்டு கீழிறங்கவில்லை. ராஜகுமாரன் தான் பார்த்ததைக் கண்டு அரைநாழிகை திகைத்துப்போய் விட்டான். இதற்குள் மந்திரியும் அவளைக் கைலாகுகொடுத்து அழைத்துப்போய் தன் கட்டிலின்பேரில் உட்காரவைத்துக்கொண்டான். திகைப்பு நீங்கி அதையும் ராஜகுமாரன் கண்ணால் பார்க்கவே அவன், ஆகா, நாம் இனி வணங்கவேண்டிய தெய்வம் ரணவீரசிங்கே. அந்த கபடமற்ற கிழவனை வீணாய் நான் நிந்தித்துவந்தேனே. என் பெண்சாதியுடன் நான் பேசக்கூடாதென்று பொறாமைப்படுகிறான் என்று அவதூறு சொன்னேனே. அப்படி அவன் நிர்ப்பந்திக்காமல் இருந்திருப்பானேயாகில் இதுவரையில் நான் பிழைத்திருப்பேனா. அவன் எத்தனை நாளைக்கு முந்தியே அறிந்த சங்கதி இன்றல்லவோ எனக்குத் தெரியவருகிறது. நமது அந்தப்புரத்துக்கு ஏதோ ஒரு கள்ள வழியை இந்த சூன்யக்காரமுண்டைகள் ஏற்பாடுபண்ணி வைத்துக்கொண்டு இருக்கிறார்கள்போல் இருக்கிறது. அவளிடம் நான் தூங்கியிருப்பேனேயானால் இங்கு ஒரு நாள் தப்பாமல் வந்திருப்பேன். அவளிடம் ஏதாவது வாங்கிச் சாப்பிட்டிருந்தாலும் அன்றே மாண்டிருக்கவேண்டும். "ஆகா, நமது பிராணனை என்றைக்கும் குறைவு வராமல் காப்பாற்றினவன் நம்முடைய கிழவன், ரணவீரசிங்கே'' என்று எண்ணி கை கூப்பி ஈசுவரனைப் பிரார்த்தித்தான். இதற்குள் சுந்தரத்தின் பெண்சாதியாகிய அந்தப்பெண் கொஞ்சம் கோபித்துக்கொண்டதுபோல் முகத்தைச் சுணங்கிக்கொண்டு காலமே தனது ''புருஷனை வெளிப்புறப்பட்டிருக்க [illegible]வனை என் உயிருடன் மறுபடி வீட்டிற்குத் திரும்பி வரச்செய்[illegible]ய் என்று மந்திரியை கேட்[illegible]த் தலைப்பட்டாள். தான் பிசகிப்போன குற்றத்தையும், இன்னும் ஒருவாரத்திற்குள் பிரதானி அவன் தலையை கொண்டுவருவானென்றும் மந்திரி தெரிவித்தான். பின்பு அவர்கள் இருவர்களும் உல்லாசமாய் இருந்தார்கள். நடந்த சங்கதிகளை எல்லாம் கண்ணால் நேரில்

பார்த்தபிறகும் காதால் கேட்டபிறகும் அவனுடைய பாவங்கள் என்னமாய்த்தான் இருக்கமாட்டாது. "அப்பா கரவதனு, இப்படிப் பட்ட பெண்ணுக்கா என்னைக் கட்டிவைத்தாய். தெய்வானுகூலத்தா லல்லவோ நான் இதுவரையில் பிழைத்தேன். ரணவீரனல்லவோ என்னைக் காப்பாற்றினுன்" என்று ராஜகுமாரன் யோசிக்கையிலே யே ஒரு ஆந்தை கூவிற்று. அங்கிருந்த இருபது பெண்களில் ஒருத்தி ஆந்தை சாஸ்திரம் அறிந்தவள் ஆகையால் உடனே அவள் "பட்டணத்து ராஜகுமாரன் பூச்செடி மறைவில் இருக்கிறுன்" என்று ஜோசியஞ் சொன்னுள். இதைக் கேட்டதும், ராஜகுமார னுக்கு பாதி உயிர் போய்விட்டது. பூச்செடி நிழலிலேயே அங்க பிரதக்ஷணம் பண்ணி சுவரேறிக் குதித்து காத்தாடிபோல் பறந்து வடக்கு வீதி வந்து சேர்ந்தான். தோட்டத்திலோ ஜோசியம் கேட்ட மாத்திரத்தில் நமக்குக் கிடைக்காதா கோடிமொகரா, என்று சொல் லிக்கொண்டு அவ்விருபது பெண்களில் ஒவ்வொருத்தியும் சுந்தரனைத் தேட ஆரம்பித்தாள்.

இவர்களுக்கு முன்னமே சுந்தரம் காற்ருய்ப் பறந்தது சொல்லி யிருக்கிறேமே. ராஜகுமாரன் பட்டணத்து வீதியில் இருக்கிறுன் என்ற சமாசாரம் ஊரெல்லாம் பரவி எல்லாரும் அவனைத் தேட ஆரம்பித்தார்கள். தோட்டத்தில் மந்திரி முதற்கொண்டு எல்லாரும் தேடி ஒன்றுமில்லாமல் இருக்கக்கண்டு ஜோசியஞ்சொன்னவளை நிந் தித்து இராத்திரி அகாலமாய் விட்டபடியால் எல்லாரும் நித்திரை செய்யச் சென்ருர்கள். சுந்தரம் தான் வடக்கு வீதி வந்தவுடன் அங்கு எங்கு பார்க்கினும் ஜனங்கள் தன்னைத் தேடுவது கண்டு நடு நடுங்கி தனக்குச் சமீபத்தில் இருந்த ஒரு கஞ்சிசத்திரத்தில் நுழைந் தான். அந்த இடம் சிவாசாரன் நாளில் ஏழை அனுதைகளுக்குக் கஞ்சி சோறு போடும் இடமாயிருந்தது. கரவதனன் நாளில் அந்த தர்மம் நடக்க இடமில்லாமல் பாழடைந்துகிடந்தது. ஆனல் பிச்சைக் காரர்கள் தூங்க இராக்காலங்களில் இந்த இடத்துக்கு வந்துகொண் டிருந்தார்கள். ஜனங்களெல்லாம் தன்னைத் தேடுவதை சுந்தரம் கேட்ட வுடன் சரேலென்று அந்த பாழும் சத்திரத்தில் நுழைந்து பிச்சைக் காரர்களுடன் பிச்சைக்காரனுக அவர்கள் மத்தியில் உறங்கினுன். உறக்கம் எங்கிருந்துவரும், உறங்குபவன்போல் படுத்திருந்தான்.

அந்த வடக்குக் கோட்டை வாசலுக்கு அப்பால் மூன்று நாழிகை வழி தூரத்தில் காட்டுராஜா என்ருெரு கள்ளன் இருந்தான். அவன் ஏழு வருஷத்திற்கு ஒருதடவைதான் கொள்ளைக்குப் புறப்படுவது வழக்கம். கொள்ளையிடும் வீடுகளில் வெள்ளி தங்கம் இவைகளை அவன் விரலால்கூட தொடுகிறதில்லை. நவரத்தினம், கோமேதகம்,

புஷ்பராகம் முதலான விலை உயர்ந்த மாணிக்கங்களை கொள்ளை யடித்து யாராவது ஒரு கூலிதலையில் வைத்து வீடு கொண்டுவந்து சேர்ப்பான். பிறகு கூலியை அனுப்பிவிட்டால் தான் இருக்கும் சங்கதி எல்லாருக்கும் தெரிந்துவிடும் என்று எண்ணி கூலியை தன் குகைக்குள்ளேயே கழுத்தை அறுத்துவிடுவான்.

அன்று சுந்தரம் வெளிப்புறப்பட்ட அமாவாசை இராத்திரி காட்டுராஜாவும் வெளிப்புறப்பட்டு திருடுகிறமுறை. அன்று நடு ஜாம வேளையில் தன் குகையைவிட்டுப் புறப்பட்டு அவன் வழி யில் கூலியைப் பிடித்து போவதற்காக வடக்குவாசல் வழியே பட் டணத்திற்குள் வந்தான். இன்னார் வீடுபோய்த் திருடுகிறதென்பது அவனுக்கே தெரியவில்லை. இப்படியிருக்க ஜனங்கள் ராஜகுமார னைத் தேடுவதுகண்டு சரி இன்று அரண்மனையில் ஒருவரும் இல்லை போல் காண்கிறது. அங்குபோய் கொள்ளை செய்வோம் என்று யோசித்து கூலி ஒருவனைப் பிடித்துக் கொண்டுபோக கஞ்சித்தொட்டி சத்திரத்தில் புகுந்தான். அவ்விடம் படுத்துத் தூங்கும் பிச்சைக்காரர் களை இவன் சொத்தை, அவன் சப்பாணி என்று பார்த்துப் பார்த்துத் தள்ளி கடைசியாய்ப் படுத்திருக்கிற சுந்தரனைப் பார்த்து, "இவன் நல்ல பலவான். பெரு மூட்டை எடுப்பான்" என்று நிச்சயித்துத் தன் கையிலிருந்த பிரம்பால் அவனைத் தட்டினான். அப்பொழுது தான் ராஜகுமாரன் கொஞ்சம் கண்ணை மூடினான். உடனே மந்திரி துரத்துவதுபோலும் தன்னைப் பிடிப்பதுபோலும் ஸ்வப்னம் கண்டு கொண்டிருக்கையிலேயே திருடன் முதுகில் பிரம்பால் தட்ட சுந் தரம் உளறிக்கொண்டு எழுந்திருந்தான். முதுகில் அடிவிழுந்ததும் அவன் தான் கண்டது ஸ்வப்னம் அல்ல. மந்திரி மனிதர்கள் தன் னைப் பிடித்துவிட்டார்கள் என்று எண்ணினான். காட்டுராஜாவும் உளறிக்கொண்டு எழுந்திருந்தவனைப் பார்த்து "நீ யார்?" என்று வினவ, அதற்கு சுந்தரம் "நான் இந்த பட்டணத்தில் பிச்சையெடுத் துக் கஞ்சிகுடிக்கும் பண்டாரப்பிள்ளை" என்றான். "இப்பொழுது இராத்திரி என்னமாயிருக்கிறது" என்று திருடன் கேட்க சுந்தரம் "ஒன்றும் தெரியாமல் வெகு இருட்டாயிருக்கிறது" என்றான். அவன் கண்ணில் காட்டுராஜா கொஞ்சம் மையிட்டு இப்பொழுது என்னமா யிருக்கிறதென்று வினவ, "கோடி சூரியோதயமானாற்போல் இருக் கிறது" என்றான். உடனே அவன் நெற்றியில் ஒரு பொட்டை வைத்து அவனைப்பார்த்து திருடன் பின்வருமாறு சொல்லலானான்:—"நான் இன்றையதினம் இந்தப் பட்டணத்து அரண்மனையில் கொள்ளையிடப் போகிறேன். உன் கண்ணில் இட்ட மையானது இராத்திரியை பகலாகச் செய்ததுபோல உன் நெற்றியில் வைத்த பொட்டும் உன்னை என் ஒருவன் கண்ணிற்குத்தவிர மற்றவர்கள் கண்ணிற்கு மறைத்து

விடும். நீ என்னுடன்கூட அரண்மனைக்கு வரவேண்டியது. அங்கு அரைநாழிகைக்குள் நாம் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு திரும்பி வீடுபோகலாம்'' என்று திருடன் சொல்லி ராஜகுமாரனையும் தன்னுடன் அரண்மனைக்கு அழைத்துக்கொண்டு போய்விட்டான். தன் சொந்தவீட்டைக் கொள்ளையடிக்கத்தானே ராஜகுமாரன் சகாயமானான். அரண்மனை சேர்ந்தவுடன் திருடன் ஒவ்வொரு பூட்டுகளின்பேரிலும் ஒரு பச்சையிலை வைப்பான். உடனே பூட்டுமுறிந்துவிடும். இந்தப்படி ஒரு இடத்திலிருந்து அரண்மனையிலிருந்த பெட்டிகள் அறைகள் எல்லாவற்றையும் காட்டுராஜா ஒரு நாழிகைக்குள் திறந்து அங்கங்கிருந்த விலையுயர்ந்த மாணிக்கங்களையெல்லாம் எடுத்து மூட்டையாகக் கட்டி ராஜகுமாரனுகிற கூலியின் தலைமேல் வைத்துக்கொண்டு, தன் குகையை நோக்கி திரும்பிவிட்டான். ராஜகுமாரன் மனதில் உண்டான ஆச்சரியத்திற்கு வரம்பேயில்லை. இப்படியும் ஒரு திருடன் உலகத்தில் இருப்பானென்று நாம் எண்ணவே இல்லையே. என்ன இலை, என்ன பொட்டு, என்னமை என்று ஆச்சரியப்பட்டுக்கொண்டு சுந்தரம் நடந்துகொண்டே குகைக்கு சமீபத்தில் திருடனுடன் வந்து சேர்ந்தான்.

காட்டுராஜாவுக்கு அருமை மகள் ஒருவளுண்டு. அவள் திருடனுக்குப் பிறந்தவளாயினும் வெகு லட்சணமுள்ளவள். ''இந்த கூலி வெகு அழகாயிருக்கிறுன், நம்முடைய பெண்ணுக்குத் தகுந்த புருஷனுகவிருப்பான். எல்லாவற்றிற்கும் நமதுபெண்சாதியின் இஷ்டத்தைக் கேட்போம்'' என்று திருடன் நினைத்து குகைக்குச் சமீபத்தில் வந்ததும் சுந்தரத்தின் தலையிலிருந்த மூட்டையை இறக்கி மற்ருெரு குகைக்குள் அவனைப் போகச் சொன்னுன். கூலியாகிய ராஜகுமாரன் அப்படியே குகைக்குள் சென்றவுடன் ஒரு மந்திரத்தைத் திருடன் உச்சரிக்கவே, அந்த குகையின் வாய் ஒரு பெரிய கல்லால் மூடப்பட்டது. உள்ளே அகப்பட்டுக்கொண்ட ராஜகுமாரன், அன்றுவரையில்தான் தன் வாழ்நாட்கள் என்று நினைத்து, எப்பொழுது யார் தன்னைக் கொல்ல வரப்போகிறுர்களோ என்று நடுநடுங்கிக்கொண்டு இருந்தான். இதற்குள் திருடனும் மூட்டையுடன் உட்சென்று தன் பெண்சாதியைப் பார்த்து ''இன்று வந்திருக்கும் கூலி வெகு லட்சணமாய் இருக்கிறுன். அவனைக் கொல்ல எனக்கு மனதில்லை. நம்முடைய பெண்ணுக்கு அவன் தகுந்த புருஷன்'' என்று சொன்னுன். பெண்சாதி அக்கருத்துக்கிசையாமல் ''அவன் யாரோ எவனே, அவனை எப்படி கலியாணஞ் செய்துவைக்கிறது. அடுத்த காட்டு முரட்டு ராஜா பிள்ளை யழகாயிருக்கிறுனும். அவனுக்குக் கொடுத்துவிடுவோம். இப்பொழுது வந்திருக்கும் கூலியை வழக்கப்படி கொன்று

விடுங்கள்" என்றான். புருஷனும் பெண்சாதி மனதிற்கு விரோதமாய் நடக்காதவனானகையால் வேகமாய் உள்சென்று கத்தி எடுத்து வரப் போனான்.

இந்த சங்கதிகளை எல்லாம் கொஞ்சதூரத்திலிருந்து கேட்டுக்கொண்டிருந்த காட்டுராஜா குமாரத்தி திடுக்கிட்டு "ஓகோ! நமது தகப்பனார் பிரியப்பட்டு எவனைப் புருஷனாக கொண்டுவந்தாரோ அவன்தான் நம்முடைய புருஷனாகவேண்டும். நமது தாயார் சொல்வது சரியல்ல" என்று எண்ணிக்கொண்டு வேகமாய் வெளியில் ஓடிவந்து கூலியைவைத்து மூடியிருக்கும் குகைமுன் நின்று ஒரு மந்திரத்தை உச்சரித்தாள். கல் மறைந்தது. பிராணனைக் கையில் பிடித்துக்கொண்டு எந்த வேளையில் யமன் வருகிறானோ என்று நடுங்கிக்கொண்டிருந்த சுந்தரம் தன் முன் ஒரு அழகான பெண்கிளி வரக்க ண்டான். அவள் வேகமாய்க் குன்றின முகத்துடன் சுந்தர னிடம் வந்துநின்று கைகளைக் கூப்பிக்கொண்டு "என் பிராணநாதா, இரவ நிமிஷங்களுக்குமுன் என் தகப்பனார் வாக்கால் என்னைத் தங்க கு சத்தஞ்செய்துவிட்டார். என் தாயாருக்கு அது சம்மதம் இல் படியால் அவர் தங்களைச் சிரச்சேதம்பண்ண கத்திகொண்டு வரட ாயிருக்கிறார். அவருக்குமுன் நான் இங்கு ஓடிவந்து கத வை 'றந்துவிட்டேன்; நான், என் தாயார், தகப்பனார், இந்த மூக ாத்தவிர மூடிய கல்லைத் திறக்க ஒருவராலும் முடியாது. நான் ப்யவேண்டியதைச் செய்துவிட்டேன். தாங்கள் வந்தவழி யாய் போகாமல் எந்த வழியாவது ஓடிவிடுங்கள். தங்களையே தஞ் அடைந்திருக்கும் என்னை நான் இப்பொழுது தங்களை ரச போல், என்றைக்கும் ரக்ஷித்தருளவேண்டும். அதிகமாய்ப் ே காலம் இல்லை. தாங்கள் என்னைத் தேடிவந்து கலியாணஞ் ே வளையில் நான் கன்னியாய் இருப்பேனே யல்லாது வேறு பு மனதால்கூட ஸ்மரியேன்" என்று சொன்னாள். சொன் ல "சீக்கிரம் காற்றாய் பறங்கள்" என்று குகையைவிட்டு ஓ டாள். ராஜகுமாரனும் ஓடிக்கொண்டே திரும்பி "உன்னை ய மற்றெவளையாயினும் நான் கனவிலும் நினையேன்" எ ால்லிக்கொண்டு மறைந்துவிட்டான். அப்பொழுது இரவு ரு மமாய்விட்டது. பொழுதுவிடிய ஒரு ஜாமநேரமிருந்தது. சு தவழியை விட்டு வேறுவழியாய் ஓடி தெற்கு வாசல் வழி ய ணத்திற்குள் நுழைந்தான். பயத்தினாலும் திகிலினாலும் வ பெருமூச்சுவாங்க ஆரம்பித்தது. கொஞ்சம் யார்வீட்டுத் தி ாவது உட்கார்ந்து போவோமென்று நினைத்து ஒரு பிரா டுவாசல் வந்து சேர்ந்தான்.

அதோ, அன்னவஸ்திரத்திற் கில்லாத ஒரு ஏழை சாஸ்திரி வீடு. வீட்டுக்காரன் பெயர் சுப்பாசாஸ்திரி. அவர் பெண்சாதிக்குக் கட்டிக்கொள்ளக்கூட நல்ல புடவை கிடையாது. வீடோ அவலைப்பந்தல். பெரியவர்கள் தேடிவைத்த ஒரு பழையநாள் வீடு மட்டும் அவர்களுக்குள்ள ஆஸ்தி. சுந்தரம் திண்ணையின் ஒரு மூலையிலுட்கார்ந்த கால் நாழிகைக்கெல்லாம் அந்தப் பிராமணன் பிராதஸ்நானம் செய்வதற்காக விடிய மூன்றே முக்கால் நாழிகைக்கு எழுந்திருந்து வாசலில் ஜலஸ்பரிசத்திற்கு உட்கார்ந்தார். ஜோதிஷசாஸ்திரம் நன்றாய்ப் படித்தவராதலால் கீழ் உட்காரும் பொழுது ஆகாயத்தில் நட்சத்திரத்தைப் பார்த்து "அடடா! வந்ததே மோசம்! இன்னும் ஒரு முகூர்த்தகாலத்தில் அதாவது; சரியாய் சூரியோதயமாகும்பொழுது ஒரு காலசர்ப்பம் ராஜகுமாரனைத் தீண்டப்போகிறதே. நமது சிவாசாரனுடைய ஒரே குமாரனுக்கு ஆயுள் இவ்வளவு சீக்கிரத்தில் முடியப்போகிறதே" என்றார். தைக்
கதவுமூலையில் செம்பில் ஜலம்வைத்துக் காத்துக்கொண்டிருந் அவர்
பெண்சாதி கேட்டு "அடடா! ஐயோ பாவம்! மந்திரிதான் ஒர்ஜி
யத்தைக் கொடுக்கவில்லை என்றால், அந்த துளிக்குழந்தை ணை
ளோடு இருக்கக்கூடாதா" என்றாள். இதைத் திண்ணையே தில்
உட்கார்ந்துகேட்ட ராஜகுமாரன் ஓடிவந்து சுப்பாசாஸ்திரி யில்
விழுந்து "ஐயா சுவாமி, தெய்வம் நீங்கள்தான். ஆபத்தைச் ான
வர்களுக்கு ஆபத்தை நீக்கத் தெரியுமல்லவா. அந்த எங்க ாப்
பிரபுவாகிய சின்னராஜாவை பாம்பு கடிக்காத வழியைப் க்க
வேண்டும். அவர்கள் வீட்டு இடையன் நான்" என்று பரித ன்.
இதைக்கேட்ட சாஸ்திரிகள் மிகவும் பரிதபித்து "அப்பா, கப்
படி பாம்பைத் தடைகட்டி ராஜகுமாரனைக் கடிக்காமல் ச்
செய்ய எனக்குத் தெரியும். ஆனால் அதற்கு ஓமம்செய்ய ட
நெய் வேண்டும். ஒரு சோமன் சோடும் தேவை. இந்த ந
பத்துரூபாய் செல்லும். நானோ பரம்பரை தரித்திரன், சு
கூட கையில் இல்லையே" என்றார். அண்டை அயலில் ா
மென்று யோசித்து வீடுவீடாய்ப் போய் "ராமா சாஸ்திரிக ா
யண சாஸ்திரிகளே, கேசவ சாஸ்திரிகளே என்று கதவை ஓ
சங்கதியைச் சொன்னால், அவர்கள் போ, போ, ராஜ
பாம்பு கடித்தாலென்ன, பல்லி கடித்தாலென்ன. உனக்கு ப
தினம் பிழைக்க வழியில்லை, பிதற்றுகிறாய் போ"
இதற்குள் ஒரு நாழியாய்விட்டது. "ஐயோ! என்ன
ஒருவனும் என் பேச்சைக் கேட்கிறவனாய் இல்லையே" எ
சாஸ்திரி திகைக்க, ராஜகுமாரனும் பிரமித்து கையைப்
உடனே தன் மோதிரம் ஒன்று கையில் [illegible] கழற்

சுவாமிகளே, நேற்று நான் பால்கறந்து கொடுக்கும்பொழுது சின்ன ராஜா கிட்ட இருந்தார். இந்தா மோதிரம் உனக்கு இனும் என்றார். அந்த மோதிரம் இப்பொழுது அவருக்கே உதவிற்று'' என்று சொல்லி அதை சாஸ்திரி கையில் கொடுத்தான். அவர் அதை உடனே சமீபத்தில் இருந்த ஒரு செட்டிகையில் கொடுத்து அதன் விலையைக் கேட்க, அதற்கு அவன் இது விலையேறப்பெற்ற மோதிரம் என்று அறிந்துகொண்டும் நான்குபடி நெய்யும், ஒருசோடு சோமனும், அம்மாளுக்கு ஒரு புடவையும் அதற்குப் பதிலாகக் கொடுத்தான். இவைகளை வாங்கிக்கொண்டு சாஸ்திரிகள் வீடுவந்து வேகமாய் ஸ்நானம் அனுஷ்டானம்பண்ணி ஓமத்திற்கு ஆரம்பித்தார். இடையனைப்போ லபிநயித்த ராஜகுமாரனும் காலசர்ப்பத்திற்குப் பயந்து ''நான் வெளியில் இருக்கமாட்டேன். தங்கள் பார்வையிலேயே கொஞ்சம் தூரமாக உட்காருவேன்'' என்றான். ''அப்படியே செய்'' என்று சாஸ்திரிகளும் உத்தரவு கொடுத்துவிட்டு ஓமத்தை நடத்தினார். இதற்குள் சமயம் வந்துவிட்டது. சொன்னபடி சரியான சூரியோதயவேளையில் மேகமண்டலத்தை விட்டு ஒரு காலசர்ப்பம் கிளம்பி சுருட்டிக்கொண்டு ராஜகுமாரன் தலையில் வந்து விழுந்து வாய்மந்திரத்தால் கட்டுண்டபடியால் அவனைக் கடிக்க சரிப்படாமல் ஓமத்தின் அனலில் விழுந்து பிராணனைவிட்டது. சாஸ்திரி பத்தினியும் அங்கு உட்கார்ந்திருப்பது இடையனல்ல, ராஜகுமாரனே என்றாள். உடனே சுந்தரம் எழுந்திருந்து, மேல்போட்டிருந்த அங்கவஸ்திரத்தை இடுப்பில் வரிந்துகட்டி அவர்கள் இருவரையும் வலம் வந்து தெண்டனிட்டு ''ஐயா, இந்த உலகத்தில் என்னைப் பெற்றவர்களல்ல என் தாய்தந்தைகள்; நீங்கள்தான் என்னைப் பெற்றவர்கள். இப்பொழுது. நேற்றிரவு எனக்கு மிகவும் ஆபத்தான இராத்திரியாய் இருந்தது. என் புத்தியால் அவைகளை எல்லாம் தப்பினேன். கடைசியாய் தப்பின ஆபத்து பிரம்மாவால்கூட அகற்றக்கூடாததாய் இருக்கும். அதினின்று தப்பியது தங்களாலேயேயன்றி வேறல்ல. நன்றாய் வெளிச்சம் ஆகுமுன் நான் அரண்மனை போகவேண்டும். சீக்கிரம் நான் தங்களை அவ்விடம் வரவழைத்துக்கொண்டு சாவகாசமாய் எல்லாம் சொல்லுகிறேன்'' என்று சொல்லி அரண்மனை சேர்ந்தான்.

அங்கு இதுவரையில் என்ன நடந்ததென்பதை சற்று விசாரிப்போம். ராஜகுமாரன் பட்டணத்துத் தெருவில் இருக்கிறான் என்ற சங்கதியும், அவனை அநேகர்கள் தேடுகிறார்கள் என்ற சங்கதியும் ரணவீரசிங்குக்கு எட்டிவிட்டன. ''மோசம்போனோமே, நம்மையறியாமல் அவன் எப்படி வெளியிற்போனான். அவன் படுக்கையறையில் உறங்குகிறா னென்றல்லவோ நினைத்திருந்தோம்'' என்று தலையில் அடித்துக்கொண்டு அரண்மனை முடிய சுந்தரத்தை ரணவீர

சிங்கு தேடினன். உள்ளுள்ளாய் தனக்கு முன் திறக்கப்பட்டு எல்லா திரவியங்களையும் அபகரித்திருக்கக் கண்டு, "ஓகோ, ராஜகுமாரனையும் திருடிக்கொண்டு போய்விட்டார்கள்போல் இருக்கிறது" என்று நினைத்து ஓ என்று கதறிக்கொண்டு ஒன்றுந் தெரியாதவனாக தரையில் புரண்டுகொண்டிருந்தான். இப்படி இவன் இருக்கையில் அங்கு சுந்தரம் வந்து சேரவே, அவனைக் கண்டவுடன் ரணவீர சிங்குக்குண்டான ஆனந்தத்திற்குச் சொல்லவேண்டுமோ? "அப்பா என் குழந்தாய், பிழைத்துவந்து சேர்ந்தாயா. நமக்குச் சத்துருக்கள் இத்தனைபெயர்கள் இருக்கிறார்கள் என்று அறியாமல் இப்படி வெளியில் போகலாமா" என்று ஓ என்று கதறினன். சுந்தரனும் விசனப்பட்டு, "துக்கப்படவேண்டாம் இன்றுமுதல் நமக்கு நல்லகாலம் வந்துவிட்டது. நான் சொல்லுவதைச் சற்று கேட்டு அந்தப்படி நீ நடப்பாயானல் இன்னும் இரண்டு நாழிகைக்குள் நான் ராஜாவாய் விடுவேன். நம்முடைய சத்துருக்களையும் மித்திரர்களையு மறிந்துவந்து விட்டேன்" என்று சொல்லி இராத்திரி தான் புறப்பட்டதுமுதல் அப்போதுவரையில் நடந்ததை நடந்தபடிச் சொல்லிவிட்டான். ரணவீரசிங்கு ராஜகுமாரன் சொன்னதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு "இவ்வளவு சங்கதிகளையும் ஒரு இரவில் எப்படி அறிந்தாய்" என்று கேட்டான். சுந்தரம் உடனே கீழ்வீதியில் தான் இராத்திரி தங்கின வீட்டுக்கிழவன் கிழவியைக் கச்சேரிக்குக் கொண்டுவரும்படியும், பிரதானி வீடுசென்று மூன்று நாழிகைக்கெல்லாம் கச்சேரிக்கு வந்து கதவைத் திறந்து விடும்படியும் சொல்லி, கோனன்கள், மேலவாசல் தோட்டத்துப்பெண்கள், சாஸ்திரிக்கூட்டங்கள் இவர்களையும் வரவழைக்க ஆளனுப்புவிக்க ஏற்பாடுசெய்தான். இருபது பெயர்களையனுப்பித் தன் பெண்சாதியும் மந்திரியும் கட்டிலில் தூங்கிக்கொண்டிருக்கும்பொழுதே அவர்களை அப்படியே கட்டிலுடன் சங்கிலி போட்டுக் கட்டிக்கொண்டு வரும்படிக்கும், திருடன், திருடன் பெண்சாதி இவர்களையும் அப்படியே கயிறுபோட்டுக் கட்டிக் கொண்டு வரும்படிக்கும் ஏற்பாடுசெய்தான். பிறகு அரண்மனைத் தந்தப் பல்லாக்கை யனுப்பி திருடன் பெண்ணை மரியாதையுடன் அதில் கொண்டுவந்து ஸ்நானஞ்செய்வித்து கச்சேரியில் ஒரு இடத்தில் திரைக்குள் வைத்திருக்க ஏற்பாடுசெய்து, பட்டத்து யானையைச் சிங்காரித்து சுப்பாசாஸ்திரியை யழைத்துவர ரணவீரசிங்கையே யனுப்பினன். ரணவீரனும் நகை துணிகள் யானை சகிதம் ஒரு ஆளை சாஸ்திரிகளையும் அவர் பெண்சாதியையும் கொண்டுவர அனுப்பிவிட்டுத் தான் நேராக பிரதானி வீடுசென்று அவருடன் சகல சங்கதிகளையும் பேசிக்கொண்டு அவரும் ராஜகுமாரன் பட்டத்திற்கு வரவேண்டும் என்ற எண்ணங்கொண்டிருந்தபடியால் அவனா

யழைத்துக்கொண்டு கச்சேரியைத் திறந்து வைத்தான். ரணவீரசிங்கு அனுப்பிய மனிதர்களெல்லாம் வெகு புத்திமான்களாகையால் எல்லா ஆட்களையும் அரைக்ஷணத்தில் கொண்டுவந்து சேர்த்தார்கள். மந்திரி, அவன் முண்டை, திருடன், திருடன் பெண்சாதி முதலான எல்லோரும் கச்சேரி வாசல் வந்துவிட்டார்கள். பிரதானியின் சந்தோஷத்திற்குச் சொல்லவேண்டுமா. அவனே நேரில் தன் கையால் பூட்டை யுடைத்தான். திருடன் பெண்ணும் ஸ்நானஞ்செய்து கச்சேரிக்குள் ஒரு திரை மறைவாகவே வந்திருந்தாள். இதற்குள் ராஜகுமாரனும் ஸ்நானஞ்செய்து சிம்மாசனம் ஏறவேண்டிய உடுப்புகளுடன் சபைவந்து சேர்ந்து சபை நடுவே பிரதானி எடுத்துப்போட்டிருந்த சிம்மாசனத்தில் சுப்பா சாஸ்திரியையும் அவர் பெண்சாதியையும் உட்காரவைத்து தான் வைக்கிலாக இருந்துகொண்டு நேற்றிரவு துக்கப்பட்டவர்கள் பிசகி நடந்தவர்கள ளிவர்களையெல்லாம் விசாரித்து சாஸ்திரிகளிடம் தெரிவித்து அவரவர்களுக்குத் தக்கபடி தீர்மானித்தான். முதலில் தான் விசனப்படக் கேட்ட கிழவன் கிழவியைக் கண்டு அவர்களுக்கு நல்ல வார்த்தை சொல்லி கிழவருக்கு அரண்மனையில் வேதம்படி என்று சம்பளம் போட்டுவைத்தான். கோனன்களுக்கு இனாம் கொடுத்தான். இருபது பெண்களையும், போக்கிரிகளான சாஸ்திரிகளையும் ஊரைவிட்டுத் துரத்திவிட்டான். திருடன், திருடன் பெண்சாதி இவர்களையும், மந்திரி, தன் பெண்சாதி இவர்களையும் சுண்ணாம்புக் காளவாயில்போட்டு கொளுத்திவிட்டான். பிறகு சுப்பா சாஸ்திரி, ரணவீரசிங்கு, பிரதானி இவர்கள் உத்தரவுடன் சுந்தரம் என்னும் சிவாசார மகாராஜாவின் குமாரர், திருடன்பெண் இரத்தினத்துடன் வேதகோஷ்டி மத்தியில், மங்கள வாத்தியங்கள் முழங்க சிம்மாசனமேறினார். அன்றுமுதல் வஞ்சைமாநகரம் நீதியான அரசாக்ஷியில் வந்தது. தனது அன்புள்ள பத்தினி, கிழவன் ரணவீரசிங்கு, பிரதானி, உயிர்கொடுத்து ரக்ஷித்த சுப்பா சாஸ்திரி இவர்களுடன் வெகுகாலம் சுந்தரமகாராஜா வஞ்சைமாநகரை யாண்டுவந்தார். சாஸ்திரிகளுடையதே ராஜ்ஜியமாய் இருந்தது.

மூன்றாவது,
தர்மமே ஜெயம்.

தேவை என்னும் பட்டணத்தில் சுகுணன் என்று ஓர் அரசன் இருந்தான். அவன் மகா நீதிசாலி. அவனைவிட பதின்மடங்கு நற்குண நற்செய்கைகள் பொருந்திய தர்மசீலன் என்கிற மந்திரி அவனுக் கொருவனுண்டு. இவர்கள் இருவர்களு மிருந்து தேவையில் அரசாளுகையில் தர்ம தேவதையே அங்கு வாசஞ் செய்தாற்போல் இருந்தது. அரசன் மந்திரி இருவர்களுக்கும் புத்திரர்களுண்டு. ராஜகுமாரன் பெயர் சுபுத்தி. அவன் தன் பெயருக்குச் சரியாகவே எப்பொழுதும் ஜனங்களுக்கு நன்மை செய்யும் திருஷ்டியுடையவனாகவே இருந்தான். மந்திரி குமாரனின் பெயர் துர்ப்புத்தி. இவனோ இவன் பெயர்போலவே மிகக் கெட்ட எண்ணக்காரனா யிருந்தான். குழந்தைமுதல் பட்சிகளைப் பிடித்து அவைகளின் கைகால்களை முறிப்பதே இவனுடைய பெரிய விளையாட்டாக இருந்தது. வயதாக வயதாக இவன் கெட்ட எண்ணங்களும் செய்கைகளும் அதிகரித்துக்கொண்டே வந்தன. இப்படி இவர்கள், சுபுத்தி என்னும் ராஜகுமாரனும் துர்ப்புத்தி என்னும் மந்திரி குமாரனும், விரோதமான எண்ணங்களுள்ளவர்களாக இருந்தபோதிலும் இவர்கள் எப்பொழுதும் இணைபிரியாத சிநேகிதர்களாக இருந்தார்கள். படுக்கையைவிட்டு எழுந்திருக்கும்பொழுதும், ஜபதபாதிகள் பண்ணும்பொழுதும், சாப்பிட உட்காரும்பொழுதும், கையலம்பும்பொழுதும், எந்த வேலை செய்யத் துவக்கும்பொழுதும் ராஜகுமாரன் "தர்மமே ஜெயம்" என்று சொல்லிக்கொண்டு ஆரம்பிப்பான். மந்திரிகுமாரனோ இதற்கு நேர்விரோதமாக "அதர்மமே ஜெயம்" என்று சொல்லிக்கொண்டிருப்பான். ஜனங்களெல்லாம் சுபுத்தியினுடைய நற்குண நற்செய்கைகளுக்காக அவனை மெச்சி அவனிடத்தில் அன்பு பாராட்டி வந்தார்கள். ஆனால் துர்ப்புத்தியினிடத்திலோ எல்லாருக்கும் பரம துவேஷம். சொந்த தகப்பனார்கூட தன் பிள்ளையின்பேரில் பிரியமில்லாதவனாக இருந்தான். நாம் என்ன பாபம் பண்ணினோமோ, இந்தமாதிரி நமக்கு வந்து பிள்ளை பிறந்ததென்று தன்னை மிகவும் நொந்தவனாய்த் தன்னால் கூடியவரையில் துர்ப்புத்தியின் மனதைச் சீர்திருத்திப் பார்த்தான். கூடவே கூடவில்லை; இந்த இரண்டு குமாரர்களும் ஒரே பள்ளிக்கூடத்தில் ஒரே உபாத்தியாயர்களிடத்தில் படித்துவந்தபோதிலும் சுபுத்தி நல்லவழியாய்ப் போகவும், துர்ப்

புத்தியின் மனம் விபரீதமாய்ப் பலிக்கும்படியும் ஈசுவரன் விதித்தார். துர்ப்புத்திக்கோ சொந்த தகப்பனுர்கூடச் சத்துருவாயிருந்தார். மற்று யார்தான் அவனுக்கு மித்திரனென்ருல், சுபுத்தி ஒருவனே.

இப்படி எல்லாரும் ராஜகுமாரன்பேரில் விசுவாசமாய் இருப்பதும், தன்பேரில் அதிருப்தியாய் இருப்பதும் மந்திரிகுமாரனுக்குத் தெரிந்த விஷயமே. ஒருநாள் அவன் சுபுத்தியைப் பார்த்து "தோழா, இப்படி எல்லாரும் உன்பேரில் விசுவாசமாயிருக்கிருர்கள். என்னையோ ஒரு பிராணியாவது விரும்புகிறவர்கள் இல்லை. என்ன செய்கிறது. நமது பெரியவர்களுக்குப் பிற்காலத்தில் நீ பட்டத்திற்கு வரும்பொழுது நான் எப்படி மந்திரியாகிறது. ஜனங்கள் விரும்பினுலல்லவோ நான் மந்திரியாகக்கூடும்" என்ருன். அதற்கு ராஜகுமாரன் "அப்பா, நீ பயப்படவேண்டாம். நான் இராஜனுகும்பொழுது உனக்குத் தப்பாமல் மந்திரிவேலை செய்துவைக்கிறேன்" என, துர்ப்புத்தி "நல்லது அதுதான் அப்படியானது. என்னை ஒருவரும் கலியாணஞ் செய்துகொள்ளமாட்டார்களே. தகுமான வயது வந்தவுடன் நீ நல்ல ஒரு பெண்ணை மணம்புரிவாய் என்னை யார் லட்சியம்பண்ணுவார்கள்" என்று துக்கித்தான். அதற்கும் ராஜகுமாரன், "நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். 'காசுக்கு இரண்டு பெண்சாதி' என்றல்லவோ பழமொழி. அப்படியே நான் என்ன செலவானுலும் செய்து உனக்குக் கலியாணஞ் செய்து வைக்கிறேன்" என்ருன். அதற்குத் துர்ப்புத்தி "அப்படி உனக்குக் கலியாணம் நடந்து, எனக்கு நடக்காமலிருந்தால் உன் பெண்சாதியை எனக்கு ஒருநாள் கொடுப்பாயா"வென்று வாய் கூசாமல் சுபுத்தியாகிய தனது ஒரே சிநேகிதனைக் கேட்டான். இப்படி ஒருவன் கேட்டால் யாருக்குத்தான் கோபம் வரமாட்டாது. ஆனுல் சுபுத்தியின் குணம் அதிகம்பீர குணமாதலால் அவன் துர்ப்புத்தி கேட்ட கேள்விக்குக் கோபித்துக்கொள்ளாமல் "ஆகா நல்லதப்பா, அப்படியே தருகிறேன்" என்று அந்தச் சண்டாளனுக்குப் பதில் சொன்னுன். இந்த மாதிரியாக சுபுத்தி துர்ப்புத்தி இவ்விருவர்களுக்கும் ஒரு விளையாட்டாக சிறுவயதிலேயே வாக்குத்தத்தம் நடந்திருந்தது.

இம்மாதிரி வாக்குத்தத்தம் நடந்து சில வருஷங்களுக்குப் பின்பு சுபுத்தி துர்ப்புத்தி இவ்விருவர்களும் அநேக வேட்டைக்காரர் சகிதம் ஒருநாள் காட்டிற்கு வேட்டையாடச் சென்ருர்கள். வேட்டையெல்லாம் முடிந்து கடைசியாய் வீட்டிற்குத் திரும்பும் சமயத்தில் ஒரு புள்ளி மான் புதரிலிருந்து கிளம்பியோடிற்று. அதைப் பிடிக்க வேண்டுமென்று ராஜகுமாரனும் மந்திரிகுமாரனும் குதிரையை என்னவேகமாய் நடத்தியும் மான் கையில் அகப்படவில்லை. திரும்பிப்

பார்த்தாலோ பெரும் காடு. வேட்டைக்காரர் போனவிடந் தெரியவில்லை. மேலும் தங்கள் ஊருக்குப்போகும் வழி தெரியாதவர்களாக அஸ்தமன காலத்தில் இவர்கள் நடுக்காட்டில் சிக்கிக்கொண்டார்கள். இவர்கள் வேட்டையாடின இடத்திலிருந்த வேடர்களோ ராஜகுமாரனையும் மந்திரிகுமாரனையும் கொஞ்சதூரம் தொடர்ந்துபோய்ப்பார்த்து அவர்கள் கண்ணிற்கெட்டாத தூரத்தில் அடர்ந்த காட்டில் மறைந்துவிடவே, இனி இவர்களைத் தொடர்வது சாத்தியமில்லையென்றெண்ணி திரும்பி தேவை வந்து சேர்ந்து அரசன் மந்திரி இவர்களிடம் நடந்ததை நடந்தபடி சொன்னார்கள். அவர்களும் நமது பிள்ளைகள் பெரியவர்களானபடியால் இராத்திரிபொழுதை எங்கேயாவது ஒரு கிராமத்தில் போக்கி, காலமே வருவார்களென்றெண்ணி யிருந்துவிட்டார்கள்.

சுபுத்தியும் துர்ப்புத்தியும் மானைத் தொடர்ந்துகொண்டு நடுக்காடு போனதாகச் சொன்னோமே, அவர்களோ அன்று காலை அவ்வளவு பழையமுது சாப்பிட்டவர்களேயன்றி வேறு யாதொரு ஆகாரமும் இல்லாதவர்களாக இருந்தார்கள். பசியோ வயிற்றைக்கெல்ல ஆரம்பித்துவிட்டது. குடிக்கச் சொட்டு தண்ணீர்கூடக் காணப்படவில்லை. குதிரையின்மேல் சவாரிசெய்த வேசத்தால் சகிக்கக்கூடாத பசியும் தாகமும் மேலிட்டுவிடவே, இனி நாம் பிழைக்கப்போகிறதில்லை என்று மனதில் எண்ணிக்கொண்டு குதிரைகள் போனவழியே போகட்டுமென்று விட்டுவிட்டார்கள்.

இந்தக் குதிரைகளுக்கும் சகிக்கக்கூடாத தாகம்; எஜமானர்கள் களைத்துப்போய்விட்டதை அசுவங்கள் நன்றாயுணர்ந்துகொண்டு எங்கு ஜலத்தைக் காணலாமென்று முதுகில் தூக்கினபடியே படபடவென்று போய்க்கொண்டிருந்தன. கடைசியாய் நடுராத்திரியில் ஒரு குளக்கரைமேல் குதிரைகள் வந்து நின்றன. அப்பொழுது தான் சுபுத்தியும், தன்னால் கூடியவரையில் சகித்து, பசிதாகந் தாங்கமாட்டாமல் குதிரையின்பேரி லுட்கார்ந்தபடியே கண்ணை மூடினான். குதிரை நிற்கவே கண்ணை விழித்துப் பார்த்தான். தன் கண்முன் சாகரம்போல் ஒரு குளம் பெருகியிருக்கக் கண்டு, ஆனந்தமடைந்து "கடவுளே, உன் மாயையே மாயை, உன் குழந்தைகளாகிய எங்களை இரக்ஷிக்க உன்னைத்தவிர வேறொருவருமுண்டோ: குதிரைகள் போனபடி போகட்டுமென்று நாங்கள் கடிவாளத்தை விட்டுவிட்டு கையைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருக்க எங்களை குதிரைகள் சகிதம் இவ்விடம் கொண்டுவந்து சேர்த்தாயே" என்று பலவாறு தெய்வத்தைக் கொண்டாடினான். பின்பு தான் குதிரையை விட்டிறங்கி தன்னிலும் களைத்துப்போன துர்ப்புத்தியைக் கீழே இறக்கி

விட்டான். தன் மேலான குணந்தவறுதவனாக தான் , குடித்துத் தாகம் தீர்த்துக்கொள்ளும் முன்னம் குதிரைகளைக் தில் கொண்டுபோய் நீர்காட்டிக் கரைமேல் நன்றாய் புல் அட திருந்த ஒரு இடம்பார்த்துக் கட்டினான். பின்பு தான் ஜலத்தின் மத்தி யில் சென்றான். துர்ப்புத்தியும் பின்னால் ஜலத்தில் நின்று கைகால் கூடக் கழுவாமல் நான்கு கைத் தண்ணீரள்ளி வாயில் ஊற்றிக் கொண்டான். சுபுத்தியோ அன்று தான் குளக்கரையில் வந்து சேர்ந்ததற்காக தெய்வத்தை நினைத்து கண்ணைமூடி பிறகு நான்குகை தண்ணீர் அள்ளிக் குடித்தான். பின்பு குளக்கரை வந்து நல்ல இட மாய்ப் பார்த்து உட்காரும்பொழுது "தர்மமே ஜெயம்" என்றான். துர்ப்புத்தியோ அப்பொழுதுகூட சாக்குருவிபோல "அதர்மமே ஜெயம்" என்று சொன்னான்.

இப்படி அன்று நடுராத்திரியில் ஒரு சொட்டு ஜலத்திற்கு தாளம் போட்டுக் கடைசியாய் ஈசுவரனுடைய கிருபையா லந்தக் குளக் கரை வந்து சேர்ந்து தாகத்தைத் தீர்த்துக்கொண்டு சுபுத்தி "தர்மமே ஜெயம்" என்று உட்காரும்பொழுது அவனுக்குத் துர்ப்புத்தி அப் பொழுதுகூட "அதர்மமே ஜெயம்" என்று சொன்ன சொல் பொறுக் கவேயில்லை. "சண்டாளா! பாபி! இப்பொழுதுகூட உன் துர் வாக்கியத்தைச் சொல்லவேண்டுமா. இதுவரையில் நீ கெட்டுப்போ னது போதும். இனியாவது நல்ல வழிக்கு வந்துசேர். அதர்மமா வது ஜெயிக்கவாவது. அதர்மமே ஜெயம் என்று கூறும்வரையில் நீயும் உருப்படப் போகிறதில்லை. நீ இன்னும் முன்னுக்குவர சமயம் தப்பிப்போகவில்லை. அதர்மம் ஜெயிக்கிறதென்பதை இனியாவது விடு. நம்மைப் படைத்து காக்கும் ஈசனை நம்பு" என்று சுபுத்தி அதிக கோபத்தோடு துர்ப்புத்தியைப் பார்த்துச் சொன்னான்.

துர்ப்புத்தியோ சுபாவமாகவே வெகு பொல்லாதவன். ராஜ குமாரன் இப்படிச் சொன்ன நல்ல வார்த்தைகளெல்லாம் அவன் காதில் நாராசம்போல் விழுந்தன. "போதும் உன் கடையைக் கட்டு. உனக்குத் தெரிந்த அவ்வளவு தர்மசாஸ்திரம் எனக்கும் தெரியும். உன் வாலை நீ இங்கு ஆட்ட முடியாது. ஒரே அமுக்கலாய் அமுக்கி விடுவேன்" என்று சொல்லிக்கொண்டே துர்ப்புத்தி சுபுத்தியின்பே ரில் பாய்ந்து அவனைக் கீழே உதைத்துத் தள்ளி மேல் உட்கார்ந்தான். சுபுத்தியும் இந்தமாதிரி துர்ப்புத்தி செய்யப்போகிறானென்று எதிர்பார் த்து தன்னை ரக்ஷித்துக்கொள்ளாம லிருந்தபடியால் அவனிடம் சிக்கிக் கொண்டான். துர்ப்புத்தியோ சுபுத்தியை நன்றாக அடித்து சமீ பத்திலிருந்த ஒரு சிறு குச்சியினால் அவன் இரண்டு கண்களையுந் தோண்டி எறிந்து கண் பள்ளங்களில் கொழுந்து மணலைத் தூவி "உன்

ஜயிக்கட்டும்'' என்று சொல்லிவிட்டு தன் குதிரையை ததுக்கொண்டு அப்பொழுதே குதிரை அடியைப் பார்த்துக் ண்டு ஓடிவிட்டான்.

சுபுத்திக்கோ பிராணன் அநேகமாய்ப் போய்விட்டதென்கலாம். தேகமாத்யந்தம் காயம். கண்களோ போய்விட்டன. அல்லாமல் கண் பள்ளங்கள் ரத்தமும் மணலுமாகக் குழம்பி எரிய ஆரம்பித் தன. அவன் தேகவேதனை பொறுக்கக் கூடவேயில்லை. ''என்ன, நம்மைக் காக்கும் ஈசன் ஒருவனுண்டோ இல்லையோ. அவனொரு வன் இருப்பது நிச்சயமாயிருந்தால் 'தர்மமே ஜெயம்' என்ற பேச்சை எப்பொழுதும் நம்பியிருக்க எனக்கு வனிந்த கதிவரவேண்டும்'' என்று சுபுத்தி யோசிக்கத் தலைப்பட்டான். இராப்பொழுது அநேக மாய்ப் போய்விட்டது. அருணோதய காலத்துக்காற்று குளுகுளு என்று அடிக்கவே அவனுக்குக் கொஞ்சம் பலம் வந்தது. கண் களோ போய்விட்டன. தேகமாத்யந்தமும் மரணவலியாய் வலிக்கத் தலைப்பட்டது. கைகளால் தடவிக்கொண்டு ஏதோ ஒரு கட்டிடம் போன்ற இடம் வந்து சேர்ந்தான், வந்துசேர்ந்ததும் உட்சென்று எங்கு ஒருக்கால் தான் பிழைத்திருப்பது தெரிந்தால் மறுபடி துர்ப் புத்தி வந்து தன்னைக் கொன்றுவிடுவானோ என்று கதவைச் சாற்றித் தாளிட்டுக்கொண்டான்.

இப்படி சுபுத்தி ஒளித்துக்கொண்ட இடம் ஒரு உக்கிரமுள்ள காளியின் கோவில். அவள் தினந்தோறும் காலமே எழுந்திருந்து காய் கிழங்குகள் கொண்டுவர காட்டிற்குச் சென்று பத்துநாழிகைக் கெல்லாம் திரும்பிவருவாள். அன்று அப்படியே போய்வரும் பொழுது தன் கோவிலுள் வேறு யாரோ புகுந்து தாளிட்டுக்கொண் டிருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டு ''என் கோவிலுக்குள் யாரவன் சீக்கிரம் கதவைத் திற. இல்லாவிடில் உன்னைச் சுட்டுச் சாம்ப லாக்கிவிடுவேன். பிடி சாபம்'' என்று காளி கர்ச்சித்தாள். சுபுத் தியோ கண்கள் போய் கால் கைகளெல்லாம் நடுக்க உள்ளிருந்து கொண்டிருந்தான். காளி பேச்சு காதில் விழவே ''என் தாயே, இந்த க்ஷணமே நீ என்னை எரித்துவிடு. நானோ கண்கெட்டவனாக இருக் கிறேன். நான் படும் மரணவேதனைக்கு உன் சாபத்தால் மாண்டு போவது உத்தமம். ஆகையால் நீ கண்கொடுத்தால் கதவைத் திறக் கிறேன். இல்லையெனிலோ நீயும் என்னை எரித்துவிடு. நானும் உன் கோவிலைத் திறக்கிறதில்லை'' என்றான். இப்படி ஆபத்கால தைரியத்தால் சுபுத்தி பேசினதைக் கண்டு காளி சந்தோஷப்பட்டு தன்னையும் பசி பீடித்துக்கொண்டிருந்தபடியால் சீக்கிரம் கோவி லுட்செல்ல ''கொடுத்தேன் கண்களைக் கதவைத் திற'' என்றாள். இப்

படி காளி சொன்ன க்ஷணமே சுபுத்திக்கு முன்னிலும் செம்மையாய் கண்கள் தோன்றிவிட்டன. அவன் சந்தோஷத்திற்குச் சொல்ல வேண்டுமா. குதித்துக்கொண்டு கதவண்டை சென்று தாளைத்திறந்து காளியைக் கண்டு அவள் திருவடிகளில் வணங்கி, "அம்பிகே! எனக்குத் தெய்வம் நீயே. நான் இனி இங்கு உன் பாதாரவிந்தத்திலொட்டின தூசியாயிருந்துகொண் டிருப்பேனேயல்லாது வேறல்ல" என்றுசொல்லி அன்றுமுதல் அங்கிருந்துகொண்டு காளியைப் பூஜித்துக்கொண்டுவரத் தலைப்பட்டான்.

துர்ப்புத்தியின் கதி என்னமாயிற்று என்பதை சற்று விசாரிப்போம். சுபுத்தியைக் காட்டில் கண்ணைக் குத்திவிட்டு அவனைக் கொன்றுவிட்டோம், இனி பிழைக்கான், என்ற நிச்சயமான எண்ணத்துடன், தன் குதிரையின்பேரில் ஏறிக்கொண்டு துர்ப்புத்தி என்பவன் குதிரைகள் காலடியைப் பார்த்து நடந்துகொண்டே தேவை வந்து சேர்ந்தான். தன் அரண்மனை சென்று மந்திரியாகிய தன் தகப்பனாரின் முன்பாக அவன் நின்றபொழுது அவனைப் பார்த்து அவன் தகப்பனார், "ராஜகுமாரனும் வீடுவந்தானா அவனெங்கே" என்று கேட்க, துர்ப்புத்தி, "நேற்று நாங்கள் இருவரும் ஒரு மானைத் துரத்திக்கொண்டு ஓடினோம். அடர்ந்தகாட்டி லிருட்டில் பிரிந்து விட்டோம். ராஜகுமாரன் போன இடம் தெரியாது. அவனைக் காடெங்கும் தேடிக்காணாமல் நான்மட்டில்தான் வந்தேன். அவன் எங்கு போனானோ எப்பொழுது வருவானோ தெரியாது" என்றான். இப்படி இவன் சொல்லும்பொழுதே இவன் முகத்திலுண்டான விகாரங்களால் சங்கதியைத் தெரிந்துகொண்டு தர்மசீலன் தான் தகப்பனாராக இருந்தபோதிலும் கொஞ்சமேனும் யோசிக்காமல் "அடா குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக்காம்பே! இந்த உலகத்தில் யார் சொன்னாலும் அவர்கள் பேச்சை நான் நம்புவேன், உன் பேச்சை மட்டும் ஒருநாளும் நம்பமாட்டேன். என்முன் நிற்காதே. கோபம் பொல்லாது. நான் இப்பொழுது உன்னைக் கொன்றுவிடுவேன். உனக்கு உன் உயிரின்பேரில் ஆசையிருந்தால் இங்கு ராஜகுமாரனன்னியில் திரும்பிவராதே பாபி! சண்டாளா!!" என்று தன் குமாரனை அடித்துத் துரத்திவிட்டான். துர்ப்புத்தியோ தான் சுபுத்தியை அதற்கு முதல்நாள் இராத்திரியே கொன்றுவிட்டதாக எண்ணின படியால் மறுபடியும் அந்த காட்டிற்குப் போகவே இல்லை. ஊருக்கும் வரக்கூடாது. வேறு எங்குபோனாலும் அரைநாழிகைகூட நிற்க யோக்கிய மில்லாதவனாக இருந்தான். சுபுத்தி காளிகோவில் தேவியைப் பிரார்த்தித்துக்கொண்டும் துர்ப்புத்தி அங்குமிங்கு மலைந்துகொண்டு மிருந்தார்கள்.

இப்படிச் சிலகாலஞ் சென்றது. சுபுத்தி செய்த பணிவிடைகளுக்குக் காளி மிகவும் சந்தோஷமடைந்து அவனை ஒரு நாள் தன்னருகாமையில் கூப்பிட்டு "அப்பா! என் குழந்தாய்! நீ செய்த பூசையெல்லாம் என்னைத் திருப்திப் படுத்தியது. நீ இத்தனைநாள் பட்டகஷ்டம் போதும். இனி உன் ராஜ்ஜியம்போய்ச் சேர்ந்து உன் தாய் தந்தைகளிடம் சுகமாய் வாழ்ந்திரு. அவர்கள் உன்னைக் காணாமல் கிழவயதில் எவ்வளவு துக்கப்படுகிறார்களோ, போய் அங்கு அவர்கள் மனதைக் களிக்கப்பண்ணு" என்று சொன்னாள். இப்படி அம்மன் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு சுபுத்தி "அம்மா! தாயே! நான் சொல்வதைச் சற்று காதுகொடுத்துக் கேட்டு ஏதேனும் பிசகிருந்தாலும் க்ஷமித்துக்கொள்ளவேண்டும். என்னைப் பெற்றவர்களல்ல என் தாய் தகப்பனார்கள்; ஏனெனில் அவர்களுக்குமட்டில் என்பேரில் உண்மையான பக்ஷமிருக்குமாகில் இந்தக் காடு ஒரு பெரியதா. இந்தக் காட்டைமட்டில் அவர்கள் தேடி இருப்பார்களேயானால் என்னைக் கண்டுபிடித்திருக்கமாட்டார்களா. எப்பொழுது அவர்கள் தேடவில்லையோ அப்பொழுதே அவர்கள் என்னை ஒரு பொருட்டாக எண்ணவில்லை. அதுபோலவே நானும் அவர்களை ஒரு பொருட்டாக எண்ணாமல் என் வாழ்நாட்களை இந்தக் காட்டில் உன் பாதங்களிலேயே கழிக்கிறேன்" என்று காளியை மிகவும் வணக்கமாய்க் கேட்கவே, காளியும் அப்படியே செய்யென்று சுபுத்திக்கு அனுமதி கொடுத்துவிட்டாள்.

இப்படியுங் கொஞ்சகாலஞ் சென்றது. பின்பு மற்றொருநாள் காளியம்மன் சுபுத்தியைத் தன்னிடம் கூப்பிட்டு அவனைப் பார்த்து "பையா, இன்னமொரு யோசனை தோன்றியிருக்கிறது. உனக்கு உன் தாய்தந்தைகளிடம் போக இஷ்டமில்லை, ஆகையால் நீ அவர்களிடம் போகவேண்டாம். இங்கிருந்து கொஞ்சதூரத்தில் காவேரிவளநாடு என்ற தேசம் ஒன்று இருக்கிறது. அத்தேசத்தரசன் என் முக்கிய பக்தர்களில் ஒருவன். கொஞ்சநாளைக்குமுன் அவன் பெண்பேரில் வைசூரி ரூபமாக நான் போய் விளையாடினேன். அப்பொழுது எனக்கு அவன் தகுந்த மரியாதைகள் செய்யாமலிருக்கவே நான் அவன் பெண் கண்களை ஊனஞ்செய்துவிட்டேன். தன் அருமைப் பெண்ணுக்குக் கண்கள் போய்விடவே அந்த அரசன் பயந்து, அவள் கண்களை மறுபடியும் சரியாய் சொஸ்தப்படுத்துகிறவனுக்கு அவளைக் கலியாணஞ்செய்து கொடுப்பதுடன் தன் தேசத்தையும் பட்டங்கட்டி வைப்பதாக ஒரு ஹாலாஸ்யமணி கட்டியிருக்கிறான். எந்த வைத்தியன் வந்தபோதிலும் அந்த மணியை யடிக்கவேண்டியது. உடனே அரசன் மணியை அடித்த வைத்தியனை அழைத்துப் போய் தன் பெண்ணின் கண்களைக் காண்பிப்பான். இதுவரையிற்

எத்தனையோ வைத்தியர்கள் வந்து ஒன்றுஞ்செய்ய சாத்தியப்படாமல் போனார்கள். ஏனெனில் தெய்வ குற்றத்தால் வந்த ஊனத்தை யார் தான் தீர்க்கக்கூடும். நான் இப்பொழுது உன்னை அந்தத் தேசத்திற்கு அனுப்ப யோசித்திருக்கிறேன். அவன் செய்த மரியாதைக் குறைவுக்கு நான் முதலில் அவனைத் தண்டித்தபோதிலும் நமது பக்தனே யென்ற தயை என்னை இப்பொழுது பீடிக்கிறது. நீயும் அந்த தேசத்திற்குப் போய் மணியை யடி. அந்த அரசனும் உன்னை வந்து அழைத்துப்போய் தன் பெண்ணின் கண்ணைக் காட்டுவான். நீ மட்டில் மூன்றுநாள் காலமே சாயந்தரம் என் திருநீறு பிரசாதத்தை அவள் கண்களில் இடுவாயாகில் அவள் முன்போல் நல்ல பார்வையுள்ளவளாக ஆய்விடுவாள். பின்பு அவளை விவாகஞ் செய்துகொண்டு காவேரிவளநாட்டையும் ஆண்டுகொண்டிருக்கலாம். நீயோ ஆளப்பிறந்தவனே யல்லது காட்டில் காய் கிழங்குகளை பறிக்கவேண்டியவனல்ல. நான் சொன்னபடி செய்யாவிட்டால் நான் கெட்டவ்ளாக இருப்பேன்'' என்று இவ்வாறு காளி சொல்லி முடித்தாள். அம்பிகை இப்படி சொல்லும்பொழுது சுபுத்தி எப்படி தான் தட்டக்கூடும். "அப்படியே செய்கிறேன்'' என்று காளியினிடம் விடைபெற்றுக்கொண்டு அவளாசீர்வாதத்துடன் காவேரி வளநாட்டை நோக்கிப் புறப்பட்டான்.

அங்குவந்து மணியை யடித்தவுடன் அந்த அரசன் ஆவலுடன் ஓடி வந்து புது வைத்தியனாகிய சுபுத்தியை உபசார வார்த்தைகளைச் சொல்லி யழைத்தான். நமது புது வைத்தியரும் தான் ஔஷதங்கள் ஒன்றும் போடுகிறதில்லை என்றும், ஜெபம்மட்டும்பண்ணி மூன்று நாள் காலமே சாயந்தரம் விபூதி போடுகிறதென்றும், வியாதி தீரும் பக்ஷத்தில் அதால்தான் தீரவேண்டுமென்றும் அரசனிடம் தெரிவித்தார். அவனும் இச்சிறு வாலிபன் ஏதோ தேவவரப்பிரசாதம் பெற்றவன்போல் காண்கிறதென்று நினைத்து "உமது யுக்தப்படி செய்து எப்படியாவது என் குழந்தை குறையை நீக்கி அவளை நீங்களே கலியாணஞ் செய்துகொண்டு இந்த இராஜ்ஜியத்தையும் கைப்பற்றிக்கொள்ளும்'' என்றான். அதேமாதிரியாக சுபுத்தி மூன்று நாள் திருநீறு இட்டுவர நான்காம் நாள் ராஜகுமாரத்தியின் கண்கள் முற்றிலும் அனுகூலமாய் விட்டன. அரசன் சந்தோஷத்திற்கு அளவுமுண்டோ. புது வைத்தியர் குலம் கோத்திரம் விசாரிக்கையில் அவன் கேவலம் வைத்தியனல்ல. தன்னைப்போலவே உயர்ந்த ராஜ வம்சத்தில் உதித்தவனென்று தெரியவந்தது. "அம்பிகே! என் தாயே! யார் என் பெண் கண்களை அனுகூலப்படுத்துகிறானோ அவனுக்கு அவளைக் கொடுக்கிறேனென்று நானே உறுதி செய்திருந்தேன். அற்பஜாதியானானாலும் அவன் அவளுடைய கண்களைச் சரிப்படுத்தி

யிருப்பானேயாகில் நான் அந்த வைத்தியனை மாப்பிள்ளையாக அங்கீகரிக்க வேண்டியிருக்குமல்லவா. அப்படிக்கெல்லாம் ஒரு அற்பன் அல்லது தாழ்ந்த ஜாதிக்காரனை எனக்கு மருமகனுகக் கொடுக்காமல் உயர்ந்த ராஜவம்சத்தில் பிறந்தவனைக் கொண்டுவந்து வைத்தியஞ்செய்ய விடுவதுபோல் விட்டுப் பிறகு மாப்பிள்ளையாகக் கொடுத்தாயே, உன் மாயையே மாயை'' என்று காவேரி வளநாட்டரசன் பலவாறு தெய்வத்தைப் புகழ்ந்தான். அந்தக்ஷணமுதல் கலியாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள்செய்து நல்ல சுபமுகூர்த்தத்தில் தன் பெண்ணைச் சுபுத்திக்குப் பாணிக்கிரகணஞ் செய்துகொடுத்தான். தனக்கும் வயது வெகுவாய் ஆனபடியால் தன் இராஜ்ஜியத்தையும் சுபுத்தியின் வசம் அந்த க்ஷணமே ஒப்புவித்தான்.

இப்படி காளியினுடைய பிரசாதத்தால் சுபுத்திக்கு அழகான மனைவியும் வளமான இராஜ்ஜியமும் கிடைத்தன. இவன் மிகவும் அமர்ந்தகுணமுள்ளவனென்று முன்னமேயே சொல்லியிருக்கிறேமே. இப்பொழுது தான் அரசனுனபோதிலும் கொஞ்சமேனும் மேன்மையைப் பாராட்டாமல் ஒவ்வொரு விஷயங்களிலும் தன் மாமனுரைக் கேட்டு நடந்துவந்தான். ஏதாவது புனசுருட்டான வியவகாரங்கள் வரும்பொழுதெல்லாம் அவன் தன் மாமனுரைக் கேட்டு அவர் உத்தரவின்படி நடப்பான். கையெழுத்துப் போடுகிற விஷயங்கள்கூட தன் மாமனுருடையதாகவே வைத்து விட்டான். சாதாரண நாளில்கூட கையெழுத்துவாங்கும் நிமித்தம் தன் மாமனுரிடம் போவது வழக்கம். இந்த மாதிரியாக இரண்டு வருஷகாலஞ் சென்றது.

ஒருநாள் சாயந்தரம் இராஜ்ஜிய வியவகாரங்களை எல்லாம் முடித்துக்கொண்டு சுபுத்தியென்னும் அரசன் தன் அன்புள்ள பெண்சாதி சகிதம் தனது அரண்மனை ஏழாவது உப்பரிகையில் உட்கார்ந்து கொண்டு பட்டணத்தில் நடக்கும் வேடிக்கைகளைப் பார்த்துக் கொண்டிருந்தான். வண்டிவண்டியாய்ச் சரக்குகள் போவதும், உயர்ந்த தினுசுகள் விற்பனைக்காக வெளியில் பரப்பப்பட்டிருப்பதும், உல்லாசமான உடுப்புகள் போட்டுக்கொண்டு விதம்விதமான ஜனங்கள் தங்களுக்கு இஷ்டமான தினுசுகளை வாங்கவருவதும், வர்த்தகர்கள் வழியில் நின்றுகொண்டு வரப்பட்டவர்களையெல்லாம் அது வாங்கவில்லையா இது வாங்கவில்லையா என்று வருத்துவதும், இவைகளை எல்லாம் சுபுத்தி மகாராஜா தன் பெண்சாதி சகிதம் மேலுப்பரிகையி லிருந்தபடியே பார்த்து வியப்புற்று இவ்வளவு செழுமையான ராஜ்ஜியத்திற்கு நாமல்லவோ அரசனுக வந்தோமென்று கர்வமடைந்தார். சந்தோஷ முண்டாகும்போதெல்லாம்

ஈசுவரன் அதற்குத் தக்கபடி ஏதாவது ஒரு குறைவும் வைப்பதுண்டல்லவா, ஆகையால் சுபுத்தி மகாராஜா மறுபடியும் தான் பார்த்த வீதியைப் பார்க்கும்பொழுது தான் முன் னெப்பொழுதோ பார்த்திருந்த முகம்போல் ஒரு முகந் தென்பட்டது. ஒரு கறுப்பு மனிதன் ஒரு இடிந்த திண்ணையின்பேரில் உட்கார்ந்துகொண்டு கிழிந்த கோணிகளைத் தைத்துக்கொண்டிருந்தான். சுபுத்தியும் அவனை உற்று உற்றுப் பார்த்து கடைசியாய் "யாரவன், தூர்ப்புத்தியா? அல்ல. அவனவ்வளவு கறுப்பாயிருந்தானில்லையே. ஆம் அப்பொழுது இல்லை" என்று யோசித்து பின்பு "அவனே யவன், அவனே யவன். என் பழைய சினேகிதன்" என்று வாய்விட்டு முகத்தைச் சுணங்கிக்கொண்டு சொன்னான். இப்படி சுபுத்தியின் பிரசன்னமான முகம் குன்றினது முதல் சாக்கிரதையாய்ப் பார்த்துவந்த அவன் பெண்சாதி "யாரவர், ஏனிப்படி முகம் மாறுகிறது" என்று கேட்கவே, அதற்கு சுபுத்தி "எனக்கு ஒரு சினேகிதன், மந்திரி குமாரனொருவன், தூர்ப்புத்தி என்னும் பெயர் பொருந்தியவனுண்டு. நாங்கள் பிறந்ததுமுதல் தோழர்கள். ஒரே மண்ணில் விளையாடி ஒரே பள்ளிக்கூடத்தில் படித்துவந்தோம். கொஞ்சநாளைக்கு முன் பிரிந்தோம். அதற்குள் அவன் இப்படி என்னகாரணத்தால் வந்தானோ தெரியவில்லை" என்று சொல்லி உடனே இரண்டு சேவகர்களைக் கூப்பிட்டு தூர்ப்புத்தி கோணி தைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்த இடத்தைக் காட்டி அவனைக் கைப்பிடியாய் அழைத்துவரும்படி அனுப்பினான். பின்பு தன் பெண்சாதியினிடத்தில் ஆதியோடந்தம்வரையில் தூர்ப்புத்தியின் சரித்திரத்தைச் சொன்னான். என்றாலும் அவன் தன் கண்ணைக் குத்திய சங்கதியைமட்டில் சொல்லவில்லை. ராஜகுமாரத்தியும் இனி புருஷர்கள் வரும்பொழுது நாமிங்கிருக்கக் கூடாதென்று தன் னந்தப்புரம் போனாள்.

சேவகர்கள் தூர்ப்புத்தியை யழைத்துக்கொண்டு வந்து சேர்ந்தார்கள். முன்னிருந்த தளதளத்த மேனியெல்லாம் போய்ச் சோற்றுக்குக் காய்ந்த வயிறுடன் தேகமெல்லாம் கறுத்து அடையாளமே தெரியாமல் கொண்டுவந்து விடப்பட்ட தூர்ப்புத்தியைப் பார்த்தமாத்திரத்தில் மகாராஜா சுபுத்தி கண்களில் நீர் ததும்பிற்று.

"என் அன்புள்ள தூர்ப்புத்தியே! இந்தக்ஷணமே நீ செய்த குற்றங்களையெல்லாம் மறந்துவிட்டேன். நீ இப்படி கூலிக்காரன் கதிக்கு வந்த காரணமென்ன? சீக்கிரம் சொல் பார்ப்போம்" என்று சுபுத்தி கேட்கும்பொழுதே அதிகமாய்ப் பேச நாவெழாமல் "கோ" என்று கதறத் தலைப்பட்டான். இப்படி இவனழவே தூர்ப்புத்தி கண்ணிலும் நீர் காணப்பட்டது. ஏனெனில் அவன் நிச்சயமாய்த்தான் அழு

தாலே, அல்லது பாசாங்கோ, அவன் பெரிய போக்கிரி. கொலைக் கஞ்சாதவன் என்பது நமக்குத் தெரிந்த விஷயமே. சுபுத்தி கேட்ட கேள்விக்கு துர்ப்புத்தி "நான் செய்த தீமைதான் என்னை இப்படி கஷ்டப்படுத்தியது. அந்தமாதிரியாக உன் கண்களை களைந்தெறிந்து விட்டு நான் நம்முடைய ஊர்போய்ச் சேர்ந்ததும் என் தகப்பனார் "ராஜகுமாரனன்றியில் இந்த ஊரில் காலடிவைக்காதே" என்று என்னை துரத்திவிட்டார். நீ அப்பொழுதே இறந்திருப்பாய் என்று நான் நிச்சயப்படுத்திக்கொண்டபடியால் உன்னைப் பார்க்க மறுபடியும் அந்தக் காட்டுக்கு வரவில்லை. "அநேகவிடங்களில் வேலைக்குப் பிரயத்தனப்பட்டும் ஒன்றும் சரிப்படாமல் கடைசியா யிந்த ஊரில் கூலித்தொழிலில் அமர்ந்தேன்" என்ருன்.

இப்படி மந்திரிகுமாரன் சொன்ன சங்கதிகளைக் கேட்கவே சுபுத்தியின் மனமுருகிற்று. தன் வேலைக்காரர்களைக் கூப்பிட்டு துர்ப்புத்திக்கு ஸ்நானம் செய்வித்து தன்னைப்போ லுயர்ந்த ஆடையாபரணங்கள் போட்டுக்கொண்டு வரும்படி கட்டளையிட்டார். பின்பு அவனுக்கு வயிறு நிறைய அன்னமிட்டு தன் வரலாற்றை முற்றிலும் அவனுக்குச் சொல்லி அந்தக்ஷணமுதல் அவனைத் தன் மந்திரியாக வைத்துக்கொண்டார்.

கண்குத்திய சமாசாரம் நீங்கலாக பாக்கி சங்கதிகளையெல்லாம் சுபுத்தி மகாராஜா தன் பெண்சாதி, மாமியார், மாமனாரிவர்களிடம் சொன்னார்.

இம்மாதிரியாக துர்ப்புத்தி என்பவன் சுபுத்தியின் தயாளகுணத்தால் தன்னுடைய பழைய பதவிக்கு வந்தான். இவ்வளவுமட்டில் சுபுத்தி நிற்கவில்லை. கையெழுத்துக்காக காகிதங்கள் சகிதம் துர்ப்புத்தியை பெரிய ராஜாவிடம் சின்ன ராஜாவாகிற சுபுத்தியனுப்பத் தலைப்பட்டார். இம்மாதிரி சிலமாதகாலம் நடந்துவந்தது. கையெழுத்து வாங்கப் போகும்பொழுதெல்லாம் துர்ப்புத்தி வெகு பதவிசாய் நடந்துவந்து தன்னுடைய கபட சாமர்த்தியத்தினல் பெரிய ராஜாவினுடைய மனதை முற்றிலும் கவர்ந்தான்.

ஒருநாள் சாயந்தரம் கையெழுத்துகளைப் பெற்றுக்கொண்டு ஏதோ சங்கதி சொல்ல உத்தேசித்திருப்பவன்போல் கொஞ்சம் துர்ப்புத்தி நின்ருன். "ஏன் நிற்கிறீர்" என்று பெரிய ராஜா கேட்க "ஒன்றுக்குமில்லை. தங்கள் தயவுவேண்டும்" என்ருன். இந்தமாதிரி வெகுநாள் செய்துகொண்டே வரத்தலைப்பட்டான். கையெழுத்து வாங்கிக்கொண்டபின் சற்று நிற்பான். "ஏன்" என்று பெரியவர் கேட்டால் "உங்கள் தயவு, அப்படி, இப்படி" என்று சமயத்துக்கு ஒவ்வாத மறுமொழிகளைச்சொல்லி ஏதோ சொல்லவந்தவன்போலும்,

அதைச் சொல்லக் கூச்சப்படுபவன்போலும் காட்டிக்கொண்டு அபிநயிப்பான். கடைசியாய் ஒருநாள் சாயந்தரம் பெரிய ராஜாவுக்குக் கோபம் வந்துவிட்டது. கோபம் அதுவாக வரவில்லை. தந்திரியாகிய துர்ப்புத்தி அம்மாதிரியுண்டாகும்படி செய்வித்தான். அவர் துர்ப்புத்தியைப்பார்த்து மிகுந்த கோபத்துடன் "உன்னைவிட பெரிய அற்பன் இந்த உலகத்தில் நானெங்கும் பார்த்ததேயில்லை. ஏதோ சொல்ல எத்தனிப்பவன்போல் தினம் நின்று நின்று சொல்லாமல் போகிறாய்" எனவே, அதற்கு அவன் "இல்லை சொல்லலாமோ வேண்டாமோ என்று யோசித்து யோசித்துப் பார்த்தேன். கடைசியாய் நமக்கென்னத்திற்கு. வீண்பாபம் என்று தோன்றுகிறது. இனி இப்படி நிற்க மாட்டேன்" என்றான். "பாபமாவது புண்ணியமாவது நீ சொல்லித்தான் தீரவேண்டும்" என்று பெரிய ராஜா சொல்லி அவன் கையைப் பிடித்து குலுக்கினார். எல்லாம் துர்ப்புத்தி செய்த பாசாங்கால் அவர் அப்படிச் செய்யும்படி யானதேயன்றி வேறல்ல. கடைசியாய்த் தனக்குக் கொஞ்சமேனும் சொல்ல மனதில்லைபோலும் நிர்ப்பந்தத்திற்குள்ளிட்டு சொல்லுகிறவன்போலும் தான் வெகு நாளாய் வைத்திருந்த கபடத்தை வெளிப்படுத்த துர்ப்புத்தி பிரசங்கித்தான்;— "மகாராஜாவே, நான் இங்கு மந்திரியாயமர்ந்ததுமுதல் தங்கள் குலத்தைப்பற்றி விசாரித்தேன். தங்கள் முன்னோர்கள் செய்த யாக எக்கியங்கள் தானதர்மங்கள் இவைகளை எல்லாம் காதால் கேட்டுக்கேட்டுக் களிப்புற்றேன். ஆனால் ஈசுவரன் ஆனந்தத்தை எப்பொழுதும் கொடுக்கிறவனாக இல்லை. இப்படித் தங்கள் முன்னோர்கள் செய்த புண்ணியங்களெல்லாம் கண்மூடிப் போயிற்றே. இவைகளெல்லாம் இந்த மாப்பிள்ளையையா உங்களுக்குத் தரவேண்டும். இந்த மாப்பிள்ளையின் ஜாதியை விசாரித்தீர்களா? கண்ணுக்கு இராஜகுமாரன் போல் காண்கிறான். ஆக்ஷேபமில்லை. இராஜரத்தமும் இவன் நரம்புகளில் ஓடுகிறது. ஆனால் இவன் தாயார் யார்? இவனுக்கு வைத்தியம் எப்படி வந்தது? இவைகளைச் சற்று விசாரித்தீர்களா. பரிஷ்காரமாய்ச் சொல்ல, எங்கள் தேசத்து இராஜா, என் தகப்பனார் யாரிடம் மந்திரியாயிருக்கிறாரோ அவர், ஒருநாள் வெளியில் சவாரி புறப்பட்டார். அந்த ஊர் அம்பட்டத்தெரு வழியாய்ப் போகையில் ஒருவீட்டில், அழகே வடிவெடுத்து வந்ததுபோல் ஒரு அம்பட்டச்சி நிற்கக்கண்டு அவள் அழகு நிமித்தம் அவள் ஜாதியை மறந்து அவளைத் தன் அந்தப்புரம் கொண்டுவந்து வைத்திருந்தார். அந்த வைப்பாட்டியின் பிள்ளை உங்கள் மாப்பிள்ளை. இராஜாவுக்குப் பிறந்தவனாகையால் இராஜ லக்ஷணமும், அம்பட்டச்சி வயிற்றில் உண்டானபடியால் வைத்தியமும் அவனிடத்தில் இருக்கிறது. இவனைத்தவிர மற்று அநேக வைத்தியர்கள் தங்கள் குமாரத்தி

கண்ணைச் சொஸ்தம் செய்ய வந்தார்களே அவர்களில் யாராவது இரா ஜகுமாரன் வந்ததுண்டா" என்று இம்மாதிரி சொல்லிக் கடித்த பாம்புபோல் அந்த இடத்தில் நிற்காமல் காகிதங்களைக் கையில் எடுத்துக்கொண்டு துர்ப்புத்தி ஓடிவிட்டான்.

தன் பொல்லாத அபிப்பிராயங்களை வெளியிடும்பொருட்டு அதிக சாமர்த்தியத்துடன் துர்ப்புத்தி உபயோகித்த இனிய சொற்கள், கிழ ராஜாவை மயக்கிவிட்டன. அநேக தலைமுறையாக பரிசுத்தமாக வந்த தன் வம்சம் கெட்டுப்போய்விட்டதென்ற எண்ணம் கிழராஜாவை மிகவும் பீடிக்கத் தலைப்பட்டது. வைத்தியஞ்செய்ய வந்தவனுக்குப் பெண்ணைக் கொடுப்பதாக ஒப்புக்கொண்ட கிழவனுக்கு இவ்வளவு ரோஷமென்னவென்று சிலர் கேட்கலாம். முதலிலேயே வந்த வைத்தியன் தான் அப்படிதான் என்று சொல்லியிருப்பானுகில் பெரிய அரசனுக்கு மனவருத்தம் இருந்திராது. இதுவரையில் தான் இராஜகுமாரனென்று எண்ணியிருந்த பையன் அம்பட்டனென்று மற்றொருவன் சொல்லவே அவனுக்கு மனவருத்தம் வரமாட்டாதா. தன் பெண்ணையும் மாப்பிள்ளையையும் கொன்றுவிட்டாலொழிய தன் வம்சத்தில் வந்த அவமானம் தீராதென்று எண்ணிவிட்டார். உடனே ஒரு கொலையாளியை வரவழைத்து அவனிடம் தன் முத்திரை மோதிரத்தைக் கழற்றிக்கொடுத்து "இதுதான் உனக்கு உத்தரவு, இரவில் என் மாப்பிள்ளையாகிய சிறிய இராஜாவும் என் பெண்ணும் படுத்து உறங்கும் பள்ளியறையைக் காவலாளிகளிடம் மோதிரத்தைக் காட்டி பலாத்காரமாய்ப் பிரவேசித்து அங்கு உறங்கும் என் மருமகனை அவன் பெண்சாதி சகிதம் வெட்டிக் கொண்டுவந்துவிடு" என்று உத்தரவு பண்ணினர். கொலையாளியும் அப்படியே ஆகட்டுமென்று மோதிரத்தை வாங்கிக்கொண்டு அதற்குத் தக்க ஏற்பாடு செய்ய தன் வீடு சென்றான்.

இப்படி பெரிய இராஜாவினிடம் துர்ப்புத்தி சொன்ன சங்கதியாவது அல்லது அவர் அந்த பதிதன் பேச்சை நிஜமாக நம்பிக்கொண்டு கொலையாளிகளைக் கூப்பிட்டு உத்தரவு பண்ணினதாவது சுபுத்தி மகாராஜாவுக்கும், அவர் பெண்சாதி அல்லது அவள் தாயாருக்கும் தெரியவே தெரியாது. கடைசியாய்க் கொலையாளிகளைக் கூப்பிட்டுச் செய்த ஏற்பாடு துர்ப்புத்திக்கும் தெரிய காரணமில்லை. பெரிய இராஜாவும் கொலையாளிகளிடம் கட்டளையிட்டுவிட்டு அப்பொழுதுமுதல் தன் பெண் போய்விட்டதாக கதவை மூடிக்கொண்டு துக்கப்பட ஆரம்பித்தார். அவரிடத்தில் நெருப்பை மூட்டிவிட்டுக் காகிதங்கள் சகிதம் துர்ப்புத்தி என்பவன் சுபுத்தி மகாராஜாவினிடம் வந்து சேர்ந்தான். தான் சொன்ன சொல்லைப்

பெரிய ராஜா நம்பிவிட்டாரென்றும் சுபுத்தி வெகுநாள் அங் போகிறதில்லையென்றும் அந்த துராத்துமா மனதில் தோன்ற சிறுவயதில் இராஜகுமாரன் பெண்சாதியை ஒருநாள் தனக்கு கொடுக்கவேண்டுமென்று மந்திரிகுமாரன் கேட்டிருந்ததாக நாம் சொல்லியிருந்தோமே. அதை அன்றிரவே நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் துர்ப்புத்திக்கு வந்துவிட்டது. சுபுத்தியினிடம் சமாசாரத்தைத் தெரிவித்து என்ன சொல்லுகிறாயென்று துர்ப்புத்தி கேட்க, அதற்கு சுபுத்தி கொஞ்சம் மயங்கிகடைசியாய்ச் சத்தியத்திற்குப்பயந்தவனாகி "தர்மமே ஜெயம்" என்று தன் மனதிற் சொல்லிக்கொண்டு, ஈசனொருவன் இருப்பது உண்மையேயானால் நம்முடைய பெண்சாதியின் மானத்தைக் காப்பாற்றி வைப்பார் என்று நினைத்து, சொன்ன சொல்லுக்கு இரண்டில்லாமல் தன் சிநேகிதனைப் பார்த்து, "நீ பயப்படாதே, என் படுக்கை அறையில் இன்று நீ போய்த் தூங்கலாம்" என்று ஏற்பாடு செய்துவிட்டு, தன் மனைவியினிடஞ்சென்று நடந்ததை நடந்தபடி அவளிடஞ் சொன்னான். அவளோ மகா பதிவிரதை. "ஆகா" என்று புருஷன் சொல்லைத் தள்ளாமல் ஒப்புக்கொண்டு, தன் தாயினிடம் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய்ப் போய்ச் சேர்ந்தாள்.

தாயைக் கண்டதும் இராஜகுமாரத்திக்கு துக்கம் பொறுக்கக்கூடவில்லை. "கோ" என்று கதறவே, கிழவி நடுங்கி "என்ன என்ன, யார் என்ன செய்தார்கள்" என்று தேகம் பதைக்கக் கேட்கவே, அதற்கு அவள் "அடியே அம்மா! உன் மாப்பிள்ளைக்கு சித்தம் சுவாதீனமில்லைபோலிருக்கிறது. அவர் அறைக்கு இன்று இராத்திரி மந்திரி வருவானாம். அந்தப் பாபியுடன் என்னைப்போய் இருக்கச் சொல்லுகிறார். இந்த இலக்ஷணமான காரியத்திற்கு சிறு வயதில் வாக்குத்தத்தம் ஒன்று நடந்திருக்கிறதாம். நான் என்ன செய்வேன்" என்று அழுது நின்றாள். இதைக் கிழவி கேட்டு "இவ்வளவுதானா பெண்ணே, பயப்படாதே, உனக்கு யாதொரு குறைவுமில்லாமல் உன் புருஷனிஷ்டப்படிக்கு நான் நடத்திவிடுகிறேன். மாப்பிள்ளைக்கா சித்தப் பிரமை. வாயைக் கழுவு. ஏதோ சிறுவயதில் புருஷன் பெண்சாதி என்னும் அர்த்தமே தெரியாமல் இருந்திருக்கும் பொழுது "என் மனைவியை ஒரு நாளைக்கு உனக்குத் தருகிறேன்" என்று சொல்லியிருக்கலாம். சத்தியசந்தனானபடியால் உன்னிடத் தே அப்படியே நடக்கும்படி சொன்னான். நீதான் இராஜகுமாரத்தி என்பது மந்திரிக்கு எப்படித் தெரியும், உன்னைப்போல் ஒரு கட்டழகி தேவடியாள் தெருவிலிருக்கிறாள். அவளை ஒருபடி பொன் கொடுத்து வரவழைத்து உன்னறையில் போய் மந்திரி குமாரனுடன் தூங்க ஏற்பாடுசெய்து அவன் கேட்கும் கேள்விகளுக்கெ

ஜகுமாரத்தியைப்போல் அபிநயிக்க திட்டஞ்செய்கிறேன். சங்கதி நாளை சின்ன மகாராஜாவுக்குத் தெரிந்தால் அதற்கவர் றுஞ் சொல்லமாட்டார். நீ சாப்பிட்டுவிட்டு பயப்படாமல் என் மெத்தையில் படுத்துக்கொள்'' என்று தேறுதல் சொல்லித் தன் அருமை மகள் கண்களைத் துடைத்துவிட்டு அந்தக்ஷணமே ஒருபடி பொன் அளந்து தாசிக்கனுப்பி அவளை வரவழைத்து, இராஜகுமாரத்தியைப்போல சிங்காரித்து, சொல்லவேண்டிய சங்கதிகளைச் சொல்லி திட்டஞ்செய்து பள்ளியவறைக்கு அனுப்பிவிட்டாள். இது சுபுத்திக்கு எப்படி தெரிந்திருக்கக்கூடும்.

இருட்டின ஒரு நாழிகைப் பொழுதுக்கெல்லாம் ராஜகுமாரத்தி போலபிநயித்த தாசி பள்ளியறை வந்தாள். அவ்விடம் அவளுக்கு முன்னமேயே மந்திரிகுமாரன் வந்து காத்திருந்தான். அவளைக் கண்டதும், துர்ப்புத்தி மனதிலுண்டான சந்தோஷத்திற் களவில்லை. அவன் செய்த பாவங்களெல்லாம் கைகூடிவிட்டது. ''ராஜகுமாரன் பெண்சாதியைக்கூட இன்று இராத்திரி அவனனுமதிப்படியே வரவழைத்துவிட்டோம்'' என்ற கர்வம் வெகுவாய் வந்துவிட்டது. ''அதர்மமே ஜெயம்'' என்று சொல்லிக்கொண்டு தன் மனதிஷ்டப்படி அவளுடனுறங்கினன். ஆனல் அதர்மமும் ஜெயிக்குமோ, கொஞ்சகாலம் ஜெயிக்கும்போல் காணலாமேயல்லது முடிவிலொரு நாளும் ஜெயிக்கமாட்டாது. ஆனலந்த சமாசாரம் மனுஷ்ய ஜன்மத்தில் அந்த துர்ப்புத்திக்கு ஈசுவரன் தோற்றுவிக்கவில்லை. வந்தவள் என்னதான் தாசியாயிருந்தபோதிலும், துர்ப்புத்தி மனதில் தான் ஒரு குலஸ்திரீயைக் கெடுத்துவிட்டதாகத்தா னெண்ணம். பாபம் அதிகரிக்க ஈசனுக்கே பொறுக்காது. ஆனதுபற்றி நடுராத்திரிவேளையில் பெரிய ராஜாவா லுத்தர விடப்பட்டிருந்த கொலையாளி பள்ளியறையைத் திறந்து துர்ப்புத்தியையும் அவனுடன் தூங்குகிறவளையும் ஒரே வீச்சாய் வீசி பெரிய ராஜா அழுதுகொண்டிருக்கும் அறையினிடம் அந்த இரண்டு தலைகளையும் கொண்டுவந்து ''மகாராஜாவே, உத்தரவின் படியே நடத்திவிட்டேன்'' என்றான். ''நல்லது, என் கண்முன் காட்டாதே'' என்று சொல்லி அவனை அனுப்பிவிட்டு பெரிய அரசன் தேம்பித் தேம்பி அழுதுகொண்டிருந்தார்.

பொழுது விடிந்தது. சுபுத்தி ராஜா தன் காலைக்கடனை முடித்துக்கொண்டு சிம்மாசனத்தில் வந்துட்கார்ந்து செங்கோல் நடத்திக்கொண்டிருந்தார். அவர் மனைவியாகிய பெரிய ராஜா குமாரத்தியுடைய தாயார் படுக்கையைவிட்டு எழுந்து மங்களஸ்நானஞ் செய்துவிட்டு தனது அறையில் சிங்காரம்பண்ணிக்கொண்டிருந்தாள். இந்த சமயத்தில் ஒரு வேலைக்காரன் ஓடிவந்து பெரிய ராணியைப் பார்த்து

"அம்மா! நமது பெரிய மகாராஜா, பெண் போய்விட்டாள், பிள்ளை போய்விட்டான், அம்பட்டனுயிருந்தாலென்ன, யாராயிருந்தாலென்ன, ஏன் கொல்லச் சொன்னோம் என்று தனது அறையில் உட்கார்ந்துகொண்டு அழுகிறார். அவர் சித்தம் சுவாதீனமாயிருப்பது போல் தெரியவில்லை. தாங்கள் வந்து அவரை சரிப்படுத்தவேண்டும்" என்று சொல்லவே, அதைக்கேட்டு ராணியம்மாள் வியப்புற்று தன் புருஷன் இருந்த இடம் வந்து பார்க்க, அங்கு அப்படியே இருக்கக் கண்டாள். "இது என்ன விபரீதம்; சொப்பனங் கண்டீர்களா என்ன? நமது மாப்பிள்ளை சிரஞ்சீவி கொலுமண்டபத்தில் செங்கோல் நடத்திக்கொண்டிருக்கிறார். நமது அருமை மகள் அவள் இருக்கவேண்டிய இடத்தில் சுகமாயிருக்கிறாள். இப்படி யழக் காரணமென்ன?" என்று ராணியம்மாள் அரசனைக் கேட்க, அவர் தன் மனைவி சொன்னதைக் கேட்டு திடுக்கிட்டு கொலையாளியை வரவழைத்து "கொண்டுவா தலைகளை" எனவே, அவனப்படியே கொண்டுவந்து வைத்தான். அவைகளைப் பார்க்கும்பொழுது மந்திரி குமாரன் தாசி இவர்களுடைய தலைகளாக இருக்கவே, அரசன் வியப்புற்று தன் மனைவி முகத்தைப் பார்த்து "இதென்ன ஆச்சரியம்" என்று கேட்டான். அவள் தான் பெண்மூலமாய்க் கேட்ட சங்கதியையும், அதற்குத் தகுந்த ஏற்பாடு தான் செய்த சமாசாரத்தையும் வெளிப்படுத்தவே, பெரிய ராஜாவுக்கு வந்த கோபம் சொல்லி முடியாததாக இருந்தது. தன் பட்டாகத்தியை உருவிக்கொண்டு வெறிகொண்ட சிம்மம்போல் தன் மாப்பிள்ளை உட்கார்ந்திருந்த கொலுமண்டபத்தை நோக்கி ஓடி அவன்முன் சீறிநின்று "நீ யார். உன் வரலாற்றை உள்ளது உள்ளபடி சொல். உனக்கு வைத்தியமெப்படி வந்தது. உன் தாயார் அம்பட்டச்சியல்லவா? நீ இராஜகுமாரனாகவிருந்தால் உன் தேசத்தை விட்டு வருவானேன். ஒருநாளைக்கு உன் பெண்சாதியை மந்திரிகுமாரனுக்குக் கொடுக்கவாவது, அந்த மனிதன் யார்? உள்ளதைச் சொல்லிவிடு. இல்லையெனில் உன்னை இந்த வாளுக்கு இரையாக்கிவிடுவேன்" என்றார். கிழவருக்கு வந்த கோபத்தைக் கண்டு சுபுத்தி நடுங்கி உள்ளதை உள்ளபடி ஒன்றும் விடாமல் சொல்லிவிட்டான். பெரிய இராஜா சங்கதிகளைக் கேட்டவுடன் அங்கம் மயிர் கூச்சலிட்டு கத்தியை வீசி எறிந்துவிட்டு மாப்பிள்ளையை கட்டிய[illegible] "என் மருமகனே! என் இரத்தினமே! என் கண்மணியே! [illegible]கா எவ்வளவு சரியான சங்கதி!!! தர்மமே ஜெயம் என்பதற்கு [illegible]ட வேறு உதாரணமும் வேண்டுமோ. நான் பாவியானேன். [illegible]ராத்துமா சண்டாளன் துர்ப்புத்தி சொன்னபடி நம்பி உன் [illegible]லைசெய்ய உத்தரவு செய்துவிட்டேன். ஈசனல்லவோ உன் [illegible]பாற்றினான். உன் தர்மமல்லவோ காப்பாற்றியது உன்னை.

ள அதர்மம் அவனையே கொன்றது" என்று பெரிய இராஜா பலவாறு புகழ்ந்து ஆனந்தபாஷ்பம் வடித்தார்.

இம்மாதிரி தன்னருமை மகளும் மருமகனும் பிழைத்ததற்காக மறு படியும் அவர்களை மணையில் வைத்துப் பார்க்க மனது தோன்றி தன் சம்பந்திகளும் அந்த ஆனந்தத்தை யடையும்பொருட்டு அறிக்கைக் காரர்களை கடிதசகிதம் தேவைக்கு அனுப்பினார். அங்கு சுகுண மகாராஜாவும் தர்மசீல மந்திரி இரத்தினமும் வெகு இடங்களில் சுபுத்தியைத் தேடிக் காணமல் பரிதபிக்குங்காலத்தில் காவேரிவள நாட்டிலிருந்து வந்த கடிதத்தைக் கண்டு கண்ணில் ஒத்திக்கொண்டு அந்தக்ஷணமே புறப்பட்டு சுபுத்தி மகாராஜாவுடைய தேசம் வந்து சேர்ந்தார்கள். பெரிய அரசன் தன் சம்பந்தியினிடத்தில், தர்மசீலன் கேட்டுக்கொண்டிருக்க, துர்ப்புத்திசெய்த சங்கதிகளைச்சொல்லி அதற்குமுன் காட்டில் அவன் ராஜகுமாரன் கண்களைத் தோண்டியதையும், பிறகு அவன் அதர்மத்தாலேயே அவனிறந்ததையும் தெரிவிக்க, சுகுண மகாராஜா வியப்புற்றார். தர்மசீலன் தன் பிள்ளை போய்விட்டதற்காக ஒரு சொட்டுக் கண்ணீர்கூட வடிக்கவில்லை அவன் பிறந்தபொழுதே அவன் நல்லத்திற்காக உண்டானவனல்ல என்பது எனக்குத் தெரியும். சீக்கிரம் போனதே க்ஷேமமென்று அவனை அந்தக்ஷணமே மறந்தான். காவேரிவளநாட்டில் சம்பந்திகளுக்கு மரியாதை விசேஷமாய் நடந்தது. சுபுத்தி மகாராஜா தன் தகப்பனார், மாமனார் பெண்சாதி மற்ற பந்துவர்க்கங்கள் சினேகிதர்கள் சகிதம் வெகுநாள் இராஜ்ஜிய பரிபாலனம் பண்ணிவந்தார். காளி பிரசாதத்தால் அநேக சத்புத்திரர்கள் அவருக்குண்டானார்கள்.

நான்காவது,

நான்கு நற்சகோதரிகள்.

கன்னியாகுமரி என்று ஒரு தேசமுண்டு. அதில் நரபதி என்றொரு அரசனிருந்தான். அவன் வெகு நீதிசாலி. குடிகள் உடமை தன்னுயிர்போல் பாதுகாத்து தேச பரிபாலனம் பண்ணிவந்தான். எல்லா பாக்கியங்களும் அவனிடத்தில் குறைவற இருந்தன. ஆனால் தனக்கு பிற்காலம் தன் சிம்மாசனத்திற்கு வார்ஸ்மட்டும் இல்லாதவனாக இருக்கவே, அதை நினைத்து நினைத்து மிகுந்த துக்கப்பட்டுவந்தான். அவன் மந்திரி முதலான யாவரும் நாங்கள் எல்லோரும்

உங்களுக்குக் குழந்தைகளாக இருக்க நீங்கள் இவ்வளவு துக்கப்பட வேண்டியதற்கு என்னகாரணம் என்று வெகுவாய்ச் சாந்தம்பண்ணிப் பார்த்தார்கள். பிரயோசனப்படவில்லை. கடைசியாய் நரபதி யென்னும் அரசன் காட்டிற்சென்று தபசுபண்ணித்தான் இந்தக் குறையைத் தீர்க்கவேண்டுமென்று உத்தேசித்து வனத்திற்குச் சென்றான்.

அங்கு குளிர்ந்தகாலத்தில் விரல் வைத்தால் கடுக்கும் தண்ணீர் மத்தியிலும், வெய்யில் காலத்தில் பஞ்சாக்கினி வளர்த்து அதன் மத்தியிலும், கடூரமான தபசை நரபதி என்னும் அரசன் வெகுகாலம் செய்துவந்தான். மரத்திலும் செடியிலும் உண்டாயிருக்கும் இலை காய்களை ஒடித்தால் எங்கு பாவம் சம்பவிக்குமோ என்று நடுங்கினவனாய் கீழ் உதிர்ந்திருக்கும் பழுத்த சருகுகளையும் பழுப்புகளையும் தன் ஜீவன் நிற்கப் புசித்துவந்தான். இந்த மாதிரி வெகுநாள் தபசு செய்தபிறகு அவனுக்கு ரிஷபாரூடர்களாய் பார்வதி பரமேசுவரர்கள் தரிசனங் கொடுத்தார்கள். அவனுக்கு அப்பொழுது உண்டான ஆனந்தத்திற்கு அளவு உண்டா? ஆனந்தத் தாண்டவமாடி "சுவாமி! இனி என் குறை நீங்கிவிட்டது, நீங்கிவிட்டது" என்று கையைக் கொட்டிக் கொட்டிக் கூத்தாடினான். சுவாமி மனமகிழ்ந்து "உன் மனதில் இருக்கிறதைச் சொல் நான் நிறைவேற்றி வைக்கிறேன்" எனவே, அதற்கு அரசன் "இத்தனை நாளாய் புத்திரனில்லாத பெரும் பாவியானேன். இனியாவது இந்த நாயின்பேரில் கிருபைகூர்ந்து இதற்குப் புத்திரபாக்கியம் அளிக்கவேண்டு" மென்றான். ஈசுவரன் சற்று யோசித்து "அப்பா, போனஜன்மத்தில் நீ செய்த கர்மம் இதுவரையில் அனுபவித்தாய், இன்னம் கொஞ்சமிருக்கிறது. உனக்கு பெரும் முட்டாளாகிய ஒரு குமாரன் விருப்பமா, அல்லது நற்குண நற்செய்கை வித்தியாசம்பத்தில் சரஸ்வதிபோன்ற நான்கு குமாரத்திகள் வேண்டுமோ?" என்று வினவவே, அரசன் தீர்க்காலோசனை பண்ணி, ஒரு முட்டாள் குமாரனைவிட நான்கு பெண்கள் சிலாக்கியம் என்பதை நிச்சயித்து "சுவாமி! பெண்ணாயிருந்தாலும் நற்குண நற்செய்கைகள் இருப்பதாலும் வித்தியாசம்பத்தையும் உடையவர்களாக இருப்பார்கள் என்பதாலும் எனக்கு அவர்களே வேண்டும். இந்த ஜன்மத்தில் எனக்கு அவ்வளவே பிராப்தி என்று எண்ணிக் கொள்ளுகிறேன்" என்றான். சுவாமியும் "கொடுத்தேன். ஆனால் அவர்கள் உன்னைவிட்டு சில வருஷகாலம் ஒரு சமயத்தில் பிரிந்து பிறகு உன் அந்தியகாலத்தில் உன்னிடமே வந்து சேருவார்கள்" என்று சொல்லி மறைந்தார்.

அரசன் பின்னால் ஈசுவரன் சொல்லிப் போனதைப் பார்த்து துக்தப்பட்டு ஆயினும் நம்முடைய பிற்காலத்தில் நம்மிடம் வந்து

சேர்வார்கள் என்று சொன்னாரே, அதுவே போதும் என்று எண்ணிக்கொண்டு வீடுவந்து சேர்ந்தான். தபசு சமாப்தியானதற்கு சமாராதனை முதலிய சடங்குகள் சரியாய்ச் சிறப்பித்தான். பின்பு கொஞ்சம் நாளைக்கெல்லாம் அரசன் பெண்சாதி கர்ப்பமானாள். உலக வழக்கம்போல் பத்தாம் மாதம் நான்கு பெண்களைப் பிரசவித்தாள். ஈசுவர பிரசாதத்தால் உண்டான குழந்தைகளாகையாலே அவர்கள் கோடிசூரியப் பிரகாசமாய் விளங்கினார்கள். அரசன் தன் பெண்சாதி பிரசவித்த சங்கதி கேட்டு ஆனந்தமடைந்து அதைச் சேர்ந்த சகல சங்கதிகளையும் கிரமமாய்ச் சிறப்பித்தான். குழந்தைகளுக்குத் தொட்டிலிட்டு சங்கரி, பவானி, ஈசுவரி, சுந்தரி என்று பெயரும் வைத்தான். அருமைக் குழந்தைகளுடன் அரசன் குழந்தைகளாகையால் இவர்கள் வெகு செல்வமாய் வளர்ந்துவந்தார்கள்.

அரசன் தன் பெண்களுக்கு ஐந்துவயதானவுடன் அவர்கள் படிப்பிற்கு உபாத்தியாயர்கள் நியமித்தான். அவர்களை வியாஜத்திற்கு வைத்துக்கொண்டு பெண்கள் தெய்வப் பிறப்புகளாகையால் சகல வித்தைகளையும் எளிதில் கற்றுக்கொண்டார்கள். பத்துவயது முடியும் முன்னமே சகலவித படிப்புகளிலும் கலைகளிலும் சரஸ்வதி போன்ற வல்லமையை உடையவர்களாக ஆய்விட்டார்கள்.

இப்படியிருக்க ஒருநாள் இவர்கள் தகப்பனாரான நரபதி எண்ணெயிட்டுக்கொண்டிருந்தார். அவர் முன்னம் ஒரு போகி நின்று தாறுமாறுமாய் தாளம்போட்டு எண்ணெய் தேய்த்துக்கொண்டிருக்கவே, அதை ராஜகன்னிகைகள் நான்கு பேர்களும் மாடியிலிருந்து பார்த்துத் தங்கள் தாயாரை வரவழைத்து "அம்மா, எங்கள் வித்தையை அப்பாவுக்குக் காட்டாமல் யாரிடஞ் சென்று காட்டுகிறது. இப்பொழுது எண்ணெயிடும் போகி இராக கியானமேயில்லாமல் கண்டபடி தாறுமாறுமாய் தலையை அசைத்து வைக்கிறான். நீ போய் அப்பாவைக் கேட்டுவந்தால் நாங்கள் வந்து அவருக்கு எண்ணெய் இடுகிறோம்" என்றார்கள். இப்படி அருமைப்பெண்கள் சொல்லிய சேதியை இராணியானவள் அரசனிடம் தெரிவிக்கவே, அரசன் மனமகிழ்ந்து போகியை அனுப்பிவிட்டுத் தன் மக்களைத் தனக்கு எண்ணெயிடச் சொல்லி, போட்ட தாளங்களால் மனமகிழ்ந்து அவர்களை அனுப்பிவிட்டுத் தான் ஸ்நானஞ்செய்து சாப்பிடாமல் தன் அறையிற் சென்று முகத்தை முக்காடிட்டுக்கொண்டு படுத்துக்கொண்டான். இப்படி அரசன் ஒன்றும் பேசாமல் மௌனம் சாதிக்கவே எல்லோரும் வருத்தமுற்றவர்களாய் இராணியினிடம் சென்று சமாசாரத்தைத் தெரிவித்தார்கள். அவள் வந்து அரசனை மனவருத்தத்திற்கு என்னகாரணமென்று வெகுவாய் விசாரித்தும் சொல்லாமற்போகவே

மந்திரியை வரவழைத்தாள். அவனும் வந்து 'ந னகாரணத்திற்காக ஸ்நானம் செய்துவிட்டு சாப்பிடாம கொள்ளவேண்டும் என்று கேட்கவே, அதற்கு அரசன், ஊரிலுள்ள பெரிய மனுஷ்யர்கள் எல்லாரையும் சபை கூட்டி கள் முன்பாக நான் ஒரு சந்தேகத்தை தீர்த்துக்கொண்டு பிறகு விக்கிறேன் என்றார். மந்திரியானவர் ஊரிலிருக்கும் பெரிய மனு யர்கள் யாவத்துப்பெயர்களும் இன்னும் ஒரு நாழிகைக்குள் வந்து சேரவேண்டுமென்று ஜரூரான தாக்கீது ஒன்று அனுப்பினார். அதைப் பார்த்தவுடன் ஊரிலிருந்த ஜனங்கள் எல்லாரும் சபை வந்து சேர்ந் தார்கள். அரசன் அவர்களை நோக்கி "பெரியவர்களே, என் சந்தேகம் ஒன்று சொல்லுகிறேன், அதைத் தீருங்கள்" எனவே, அவர்கள் எல் லாரும் "அது என்ன" என்றார்கள். அரசன் அதற்கு "நீங்கள் எங்கேயா வது வெளியிற்சென்று அபூர்வமான பதார்த்தம் ஏதாவது தேடிவந் தால் அதை நீங்கள் உங்கள் உபயோகத்திற்கு வைத்துக்கொள்ளுகி றீர்களா, அல்லது வேறு யாருக்காவது கொடுத்துவிடுகிறீர்களா" என வே, அதற்கு எல்லாரும் ஏகோபித்து "அப்படி அபூர்வமாயிருப்பதை நாங்களேதான் வைத்துக்கொள்ளுகிறோம்" என்றார்கள். அரசன் "அப் படியானால் நானும் அப்படி செய்வதில் நீங்கள் தடைசொல்லுவீர்க ளோ" என்று வினவ, அதற்கு அவர்கள் "மகாராஜாவாகிய தாங்கள் அப்படிச் செய்தால் தடை என்ன இருக்கிறது" என்றார்கள். உடனே அரசன் மானம் வெட்கம் என்பதை எல்லாம் விட்டு அந்த நடு சங் கத்தில் எழுந்து நின்று "நான் எவ்வளவோ தபசுசெய்து ஈசுவர பிரசாதம் பெற்று நான்கு குமாரத்திகளைக் கொண்டுவந்தேன். அருமை யான பொருள்கள் என்றால் இனி அவர்களுக்கு மிஞ்சி ஒன்று மில்லை. அப்படியிருக்க, அவர்களை நானே என் கலியாணம் செய்துகொள்ளக்கூடாது, இன்னமொருவனுக்கு என் அவர்களைக் கொடுத்துவிடவேண்டும்" எனவே, வந்தவர்கள் எல்லோரும் "அடா சண்டாளா, தான்பெற்ற பெண்ணை பெண்டாள நினைக்கிறாயா. உன் தலையில் இடிவிழ" என்று நினைத்துக்கொண்டு, "சரி அப்படி யே செய்யுங்கள்" என்று கூறி அரசனை வெறுத்து வீடுசென்றார்கள்.

உடனே அரசன் மந்திரியைக் கூப்பிட்டு "இந்த சமாசாரத்தை என் பெண்களிடம் நீபோய் தெரிவித்து கலியாணத்திற்கு முகூர்த்தம் வைத்துவா" என்று சொல்லி அனுப்பவே, மந்திரி பார்த்து "'கேடு வருமுன் மதி கெட்டு வரும்' என்னும் பழமொழிப்படி அரசன் புத்தி இப்பொழுது கெட்டுப்போயிருப்பதைப் பார்த்தால் சீக்கிரம் நாசம் வரப்போகிறதுபோலிருக்கிறது. இதுவரையில் ஸ்வப்னத்தில் கூட தகப்பனார் தன் பெண்களை கலியாணம் செய்துகொள்ள எத்த னித்தாய்க் கேள்விப்பட்டோமில்லை. இந்த காரியத்திற்கு நம்மைப்

து பெண்கள் அபிப்பிராயத்தைக் கேட்டுவரச் சொல்லி
. மாட்டேன் என்றால் நம்மை வதை செய்வான். பெண்
ண்டாள நினைக்கும் பாவி கையால் வெட்டுப்படுவதைக்
லும் அந்தப் பெண்கள் கையால் மாண்டால் பரலோகத்தில்
கதி உண்டு. அவர்கள் கையால் என் மாளவேண்டுமென்றால்
ந்த சமாசாரத்தை அவர்களிடம் சொன்னால் அவர்கள்தான் சும்மா
இருப்பார்களா. தகப்பனார்தான் மதிமயங்கிச் சொன்னால் நீ எப்படி நாக்கில் நரம்பில்லாம லிப்படி பேசினாய் என்று என்னை ஒரே வீச்சாய் வீசிவிடுவார்கள்" என்று பலவாறு யோசித்துக்கொண்டு ராஜகன்னிகைகள் வசிக்கும் உப்பரிகை வந்து சேர்ந்தான். அவர்கள் ஒருநாளுமில்லாம லன்று அங்கு மந்திரி வரவே எதிர்கொண்டு சென்று அவனை அழைத்துவந்து ஆசனத்திலிருத்தி இனியவார்த்தைகள் பேசி "அத்தி பூத்தாற்போல் ஆலங்காய் காய்த்தாற்போல் தாங்கள் இங்குவந்ததற்கு என்னகாரணம்" என்றார்கள். இப்படி இவர்கள் செய்த உபசாரங்களையும் சொல்லும் இனிய வசனங்களையும் இருக்கும் மரியாதையையும் பார்த்து "ஐயோ இன்னும் அரை நிமிஷத்தில் இவர்களுடைய கரும்புபோன்ற மனதை வேம்பாகப் பண்ணப் போகிறேனே" என்று தியங்கி பிரமித்தவனாக இருந்தான். அதை அரசன் பெண்கள் இங்கிதங்களினா லறிந்து "பயப்படவேண்டாம். உங்களைப் பார்த்தால் ஏதோ சொல்ல வந்தவர்கள்போலும், சொல்ல மயங்குகிறவர்கள்போலும் காணப்படுகிறது. இது அன்னிய கிரகமல்ல, தங்கள் கிரகமே. நாங்களும் அன்னியர்களல்ல தங்கள் குழந்தைகளே. ஏன் கண்களில் நீர் ததும்புகிறது" என்று இவர்கள் கேட்கக்கேட்க மந்திரிக்குத் துக்கம் பொங்கிற்றேயன்றி அரசன் தெரிவித்துவரச் சொன்ன சமாசாரத்தை எடுத்துப்பேச நா எழவில்லை. கடைசியாய் அவன் தேம்பித் தேம்பி பின்வருமாறு சொல்லலானான்:—"என் கண்மணிகளே! நீங்கள் என்ன பாபம் செய்து இந்த சண்டாளன் வயிற்றில் வந்து பிறந்தீர்களோ தெரியவில்லை. அந்த போகி எப்படி எண்ணெய் இட்டால்தான் என்ன. நீங்கள் வந்து உங்கள் வித்தையை உங்கள் தகப்பனாருக்குக் காட்டுவானேன். அப்படி நீங்கள் செய்தது நம்மெல்லாருக்கும் ஒரு பெரும் அபவாதமாய் வந்து முடிந்ததே" என்று பாக்கி சங்கதியை அவர்களுக்குத் தெரிவித்தான். அவர்கள் இதைக் கேட்டு திடுக்கிட்டு ஆ, ஆ, இதென்ன ஆச்சரியம் என்று திகைத்து மந்திரியைப் பார்த்து "சுவாமி, இனி அவரல்ல எங்கள் தகப்பனார். எங்கள் தகப்பன் மனதில் நாங்கள் செய்த பாபமே அப்படி தோன்றச்செய்தபடியால் இன்றுமுதல் அவரை நாங்களிழந்தோம். இன்றுமுதல் தாங்கள்தான் எங்கள் பிதா. இந்த அவமானத்தை விட்டு நீங்க எங்களுக்கு வேண்டியவைகளை எல்லாம் தாங்கள்

சேகரித்துக் கொடுக்கவேண்டும். அரசனிடத்தில் சென்று அவர் மனம் கோணுமலிருக்க நாங்கள் அவரை கலியாணம் செய்துகொள்ள ஒப்புக்கொண்டதாகச் சொல்லி பின்னும் எங்களுக்கு ஒரு விரதம் உண்டென்றும் அது முடிந்த பிறகுதான் கலியாணத்திற்கு இசைவோம் என்றும் அந்த விரதத்திற்கு வேண்டிய சாமகிரியைகள் கொடுக்க உத்தரவாகவேண்டுமென்றும் கேட்டு வாருங்கள்" என்றார்கள். மந்திரி அப்படியே சென்று கன்னிகள் விவாகத்திற்கு சம்மதித்ததை அரசனிடம் தெரிவிக்கவே, அரசன் ஆனந்தமடைந்தான். பிறகு விரத சமாசாரத்தை மந்திரி சொல்லவே அரசன் கொஞ்சம் வருத்தமடைந்து ஆயினும் அவர்கள் மனதுப்படி நடந்தாலொழிய தனக்கு லாபமில்லை என்பதை எண்ணி மந்திரியினிடம் நீயே கைகட்டி காத்திருந்து அவர்களுக்கு வேண்டியவைகளை எல்லாம் சேகரித்துக் கொடுத்துவா என்றான்.

மந்திரியானவன் கன்னிகளிடம் வந்து "அரசன் மனது கோணுமல் நீங்கள் கலியாணம் செய்துகொள்ள ஒப்புக்கொண்டதாகச் சொல்லி வந்துவிட்டேன். இனி உங்களுக்கு வேண்டியதைச் சொல்லுங்கள் எனவே, அவர்களுள் மூத்தவளாகிய சங்கரி என்பவள் "ஐயா, பெண்கள் தகப்பனை கலியாணம் பண்ணிக்கொள்வது எங்கேயாவது உண்டா, அவர் தப்பு எண்ணங்கொண்டிருக்கட்டும் என்று நாங்கள் கலியாணம் பண்ணிக்கொள்வதாகச் சொல்லியனுப்பினேமே யல்லது வேறல்ல. இனி நாங்கள் இந்த ஆபத்திலிருந்து தப்ப தெய்வசகாயம் வேண்டும். அதற்கு வரலட்சுமியை உத்தேசித்து தபசுசெய்யவேண்டும். அதற்காக எங்களுக்கு ஒரு அரக்கு மாளிகை தாங்கள் கட்டிக்கொடுத்து அதில் ஏழுமாடிகள் வைத்து ஏழாம் மாடியில் நாங்களிருந்து தபசுசெய்யும்படிக்கும், பாக்கி மாடிகளில் எங்களுக்கு பத்துவருஷத்திற்கு வேண்டிய அரிசி உப்பு புளி விறகு ஜலம் முதலிய சாமான்கள் சித்தப்படுத்தி வைக்கும்படிக்கும் ஏற்பாடு செய்யவேண்டும்" எனவே, அப்படியே மந்திரியானவன் அரக்குமாளிகையில் எல்லாம் சேகரித்து வைத்து அவர்களிடம் சென்று "அம்மணிகளே, அரக்குமாளிகை சித்தமாய்விட்டது, இனி உங்களிஷ்டப்படி செய்யலாம்" என்றான். அதன்பிறகு சங்கரி, பவானி, ஈசுவரி, சுந்தரி இந்த நான்கு பெண்களும் தங்கள் தாயாரிடம் சென்று "அம்மா இன்று முதல் நீ எங்களை இறந்ததாக நினை. பின்பு நமக்கு அதிர்ஷ்டமிருந்தால் மறுபடி சந்திப்போம்" என்று சொல்லி அவள் படும் மகத்தான துக்கத்தை எல்லாம் மாற்றி அரக்கு

க வந்து மந்திரி செய்திருந்த ஏற்பாடுகளை எல்லாம் பார்த்து

ர்ந்து "இந்த ஜன்மத்தில் எங்கள் தகப்பன் நீங்களே, தாங்

தோறும் காலையிலாவது மாலையிலாவது வந்து இந்த அரக்கு

மாளிகையை ஒருதடவை பார்த்துப்போகவேண்டும். இன்றுமுதல் இதன் கதவு சாற்றப்பட்டேயிருக்கும். என்றையதினம் கதவு திறக்கப்பட்டிருக்கிறதோ, அன்றையதினம் உள்ளே வாருங்கள், எங்கள் காரியம் சித்தியானதைத் தெரிவிக்கிறோம்'' என்றார்கள். மந்திரி அப்படியே செய்ய ஒப்புக்கொண்டு வெளியிற் சென்றவுடன் இவர்கள் கதவைச் சாற்றித் தாளிட்டு வரலட்சுமியை உத்தேசித்து தபசு பண்ண ஆரம்பித்தார்கள்.

காலமே எழுந்திருந்து ஸ்நானம் முதலியவைகளை முடித்துக்கொண்டு இவர்கள் நான்குபெயர்களும் தபசு செய்வார்கள். பதினைந்து நாழிகைவரையில் நிஷ்டையிலிருந்துவிட்டு அதன்மேல் நான்குபெண்களுமாய்க்கூடி சமையல்செய்து சாப்பிடுவார்கள். சாயங்காலம் தங்களிஷ்டப்படி படிப்பதும் பாடுவதும் வீணை வாசிப்பதுமாய்க் காலத்தைக் கழிப்பார்கள். இப்படி நான்குவருஷகாலம் தபசு செய்தபிறகு அவர்களுக்கு வரலட்சுமி பிரத்தியக்ஷமானாள். "என் குழந்தைகளே, இப்படி ஏன் தபசுபண்ணுகிறீர்கள்'' என்று அம்மன் வினவவே, அதற்குப் பெண்கள் அம்பிகே இன்றுமுதல் நீ எங்களுக்கு நினைத்த பலனைக் கொடுக்கவேண்டும். எங்கள் நால்வர்களுக்கும் ஒரே நாயகனை அளிக்கவேண்டும். எப்பொழுதும் உன் பெண்களாய் நாங்கள் குறைவின்றி வாழவேண்டும் எனவே, அம்மனும் அப்படியே நடக்கும். உங்களுக்கு யாதொரு குறைவும் வராது. நீங்கள் இன்று மந்திரியை வரவழைத்து நாளை முகூர்த்தம் வைக்கலாம் என்று உங்கள் தகப்பனாரிடம் தெரிவிக்கச் சொல்வீர்களானால் அவரும் அப்படியே ஒப்புக்கொள்வார். நாளை பத்து நாழிகைக்கெல்லாம் உலகத்தில் கேட்டிராத ஒரு அதிசயம் எல்லாரும் பார்த்து நகைக்க நடக்கும். அது கடைசியில் உங்களுக்கு க்ஷேமமாகவே முடியும். உங்கள் நான்குபெயர்களையும் கலியாணம்பண்ண இன்னும் ஒருவருஷத்திற்குள் ஒரு இராஜகுமாரன் உங்கள் அரக்குமாளிகை நாடிவருவான் என்று சொல்லி மறைந்துவிட்டாள். இராஜகன்னிகள் அதைக்கண்டு ஆச்சரியப்பட்டு, அம்மன் உத்தரவுப்படி செய்ய நிச்சயித்துக் கதவைத் திறந்து வைத்திருந்தார்கள். தினந்தோறும் நான்குவருஷகாலமாய் மந்திரி காலையிலும் மாலையிலும் கன்னிகைகள் கேட்டுக்கொண்டபடி அரக்குமாளிகையை வந்து பார்த்துப் போவான். ஒரு நாளாவது கதவு திறந்திருக்கமாட்டாது. இத்தனை நாளாய் குழந்தைகள் இதில் எப்படி வசிப்பார்கள். இருக்கிறார்களோ அல்லது இற[illegible]தார்களோ தெரியவில்லையே என்று மாளிகையைச் சுற்றிச்சுற்[illegible]வான். ஒவ்வொருவேளை இவர்கள் வாசிக்கும் வாத்தியத்தி[illegible]மும் குசுகுசு என்று பேசும் குரலும் கேட்பது முண்டு. இ[illegible]

கேட்டு குழந்தைகள் பிழைத்திருக்கிறார்கள் என்றெண்ணிக்கொண்டே போவான். இப்படியாய் நான்கு வருஷகாலம் முடிய சென்றது. ஒருநாள் மந்திரி அவ்விடம் தினம் வருவதுபோல்வந்தபொழுது அங்கு கதவு திறந்திருக்கக் கண்டு அதிக ஆவலுடன் ஓகோ இன்றையதினம் குழந்தைகளைக் காணலாம் என்று ஓடி வாசற்படியிற் கால்வைத்தான். கன்னிகைகளும் இவன் வரவை எதிர்பார்த்திருந்தவர்களாகையால் ஆவலுடன் எதிரோடிச் சென்று க்ஷேமம் விசாரித்தார்கள். இவர்களைக் கண்டவுடன் மந்திரி ஆனந்த பரவசமானான். அவர்களுடைய முகத்தில் ஈசுவரன் கடாக்ஷித்திருக்கும் தேசஸ் ஒன்று நன்றாய் அவனுக்குத் தெரியவந்தது. அவர்கள் தான் முன்னம் பார்த்திருந்த குழந்தை ஸ்திதியிலிருந்து இப்பொழுது நல்ல வாலிப திசையை அடைந்திருந்தார்கள். அவர்களுடைய அமரிக்கையையும் அழகையும் கண்டு மந்திரி மனமகிழ்ந்து அவர்களை நோக்கி "என் கண்மணிகளே! நீங்கள் இத்தனைநாளாய் எப்படி ஜீவனம்பண்ணினீர்கள். உங்கள் உடம்பு எப்படித்தான் இந்தக் கஷ்ட தபசுகளைச் சகித்ததோ" என்று பலவிதமாய்க் கேட்டான். அவர்களும் தங்களுக்கு அம்பிகை பிரத்தியக்ஷமானதையும் அவள் சொல்லிப்போன சமாசாரத்தையும் சொல்லி "அந்தப்படி தாங்கள் நாளை பத்து நாழிகைக்கு முகூர்த்தம் வைத்து வாருங்கள்" என்றனுப்பவே, மந்திரி மனதிற்குள் ஏதோ ஆச்சரியம் ஒன்று நாளை நடக்கப்போகிறதென்று எண்ணிக்கொண்டு அரசனிடம் வந்து "மகா ராஜாவே, நீங்களித்தனை நாளாய் எதிர்பார்த்திருந்த நாள் நாளை வந்துவிட்டது. இன்று நான் அரக்குமாளிகைக்குப் போயிருந்தேன். ஒருநாளும் திறவாத கதவு இன்று திறந்தது. பெண்கள் நான்கு பெயர்களும் என்னை வரவழைத்து உங்கள் க்ஷேமத்தை விசாரித்து நாளை பத்து நாழிகைக்கு முகூர்த்தம்வைத்துத் தங்களுக்குக் கலியாணம் பண்ணிவைக்க அவர்களை அழைத்துப்போகச் சொன்னார்கள்" எனவே, அரசனுக்கு அளவற்ற ஆனந்தம் வந்துவிட்டது. ஒரு முகூர்த்தத்திற்குள் பந்தல்கள் எல்லாம் போட்டாக வேண்டுமென்றும் அந்தந்த வியாபாரிகள் விலையின்றி அவரவர்களிடமிருக்கும் சாமான்களை கலியாணத்திற்குக் கொடுக்கவேண்டுமென்றும் கண்டிப்பான உத்தரவுசெய்து, சுற்றிப் பதின்காதவழியிலிருந்த் அரசர்கள் எல்லாரையும் வெகு சீக்கிரத்தில் மறுநாள் கலியாணத்திற்கு அழைப்பித்தான். வந்தவர்கள் எல்லாரும் சுபத்தைப் பார்க்க உத்தேசித்து வரவில்லை. அரசன் தன் பெண்ணையே கலியாணஞ்செய்துகொள்ளுகிறானுமே பார்ப்போம் என்ற எண்ணங்கொண்டவர்களாய் வேடிக்கை பார்க்க வந்தார்கள்.

மறுநாள் பொழுது விடிந்தது. தகப்பனே தன் பெண்களை கலியாணம் பண்ணிக்கொள்ளுகிற வேடிக்கையை பார்க்கவேண்டும் என்று

ஊராரெல்லாம் மணப்பந்தலில் வந்திருந்தார்கள். அரசன் பொழுது எப்பொழுது விடியப்போகிறது என்று ராத்திரிகாலமெல்லாம் தூக்கமற்று காத்திருந்தவனுகையால் பொழுது விடிந்ததும் எழுந்திருந்து கலியாண விரதம் ஆரம்பித்து ஓமங்களை எல்லாம் மணப்பந்தலில் நடத்தி, 10-நாழிகையானவுடன் பிச்சைக்காரவேடம்பூண்டு கிழிந்த செருப்பு சாலிவிட்டு ஒட்டைக் குடையை கையில் பிடித்து மற்றொருகையில் தாலியை எடுத்துக்கொண்டு ஊராரெல்லாம் மனதிற்குள் சிரிப்புடன் சூழ்ந்துவர, பதினெட்டு வாத்தியங்களும் முழங்க, அரக்குமாளிகையை நோக்கிப் புறப்பட்டான். மந்திரிமுதலான உத்யோகஸ்தர்கள் முன்கூடிச் சென்றுகொண்டிருந்தார்கள். ஊரிலிருக்கும் பெண்களெல்லாம் பார்த்து இதுவும் ஒரு அதிசயமா. இந்தக் கிழ அரசனுக்கு என்ன கேடு வந்தது. இவன் பெண்கள்தானு இவனுக்குக் கிடைத்தார்கள். இவன் நாசமாய்ப் போகானு என்று வீடுகள்தோறும் வெளியில் நின்றுகொண்டே மனதில் திட்டினுர்கள். ஊர்கோலம் அரக்குமாளிகைக்கு சமீபத்தில் வரவே, அதற்குள்ளிருந்த நான்கு ராஜகன்னிகளும் கண்டு திகைத்து ஒரு க்ஷணம் தங்களுக்கு முதல்நாள் பிரசன்னமானவரலட்சுமியைத் தியானித்து நாங்கள் நால்வரும் ஒரே புருஷனைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டியவர்களாகில் அப்பேர்ப்பட்டவன் யாரோ அவனுக்குமாத்திரம் இந்தக் கதவு திறக்கவேண்டும். மற்றப் பெயர்கள் யார் தொட்டாலும் திறக்கக்கூடாது என்று நினைத்தார்கள். அவர்களப்படி நினைத்தமாத்திரத்தில் கதவு திடீரென்று சாற்றிக்கொண்டது. இது அரசனை நன்றாக முதல் முதலில் அவமானப்படுத்திற்று. கதவு மூடின கால் நிமிஷத்திற்கெல்லாம் படபடவென்று ஒரு சத்தம் கேட்டது. சத்தம் உண்டான மாத்திரத்தில் அரக்குமாளிகை ஆகாயத்தில் கிளம்பி எல்லாரும் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே ஒரு நீருண்ட மேகம்போல் அவாந்தரத்தில் இறக்கையின்றி தெய்வ சக்தியால் பறந்துகொண்டு தொடர்ந்தவர்களுக்கு ஒரு வழியைக் காட்டி கண்ணிற்கு மறைந்து மற்றொரு வழியே சென்று மனுஷ்ய வாசனையற்ற ஒரு பெருங்காட்டில் விழுந்தது. இவ்விடம் "வேணுமந்தக் கிழவனுக்கு வேணுமந்தக் கிழவனுக்கு" என்று எல்லோரும் நரபதி அரசனைத் தாறுமாறுமாய் வாய்க்குவந்தபடி திட்டினுர்கள். அந்த அரசனுக்கு அதுவரையில் தான் செய்து வந்தது அக்கிரமம் என்று தோற்றவேயில்லை. கடைசியாய்த் தன் பெண்கள் அடங்கிய அரக்குமாளிகைகள் கண்ணிற்குத் தெரியாமல் போய்விட்டதையும், ஒருவனைப்போல் எல்லாரும் தன்னை நிந்திப்பதையும் பார்த்து "நாம் செய்தது பெரிய அக்கிரமம். இனி எப்படி இந்தப் பாபம் நம்மைவிட்டு நீங்குமோ தெரியவில்லையே. இவர்கள் எல்லாரும் உன்னைவிட்டுப் பிரிந்துபோவார்கள் என்று ஈசுவ

ரன் நமக்கு வரங்கொடுக்குங்காலத்தில் சொன்னதின் ... இது வேதானே. நல்லது இப்படிக்கெல்லாம் நடக்கவேண்டுமென்றே தான் ஈசன் நமக்கு இப்பேர்ப்பட்ட துஷ்டபுத்தியைக் கொடுத்தாரோ என்னமோ தெரியவில்லையே, என்ன செய்வேன் சங்கரா, எத்தனை தபசிருந்து நான் பெண்களைப் பெற்றேன். கடைசியாய் என் ஜன்மம் ஜனங்கள் நகைக்க ஒரு காரணம்போலாயிற்றேயன்றி வேறில்லை. ஆயினும் செய்த பாவத்திற்கு ஈசுவரனைத் தியானிப்போம். அவரும் எனக்கு அந்தியகாலத்தில் இவர்கள் மறுபடியும் என்னிடம் வந்து சேர்வார்கள் என்று சொல்லிப் போயிருக்கிறாரல்லவா. அதுதான் நமக்கு இனி பிடிப்பு. நாளை நம்மை நமன் கொண்டுபோக வரமாட்டானா. அதைச் சாக்கிட்டாவது மறுபடி என் பெண்கள் முகத்தைக் கண்டு அவர்கள் என்னை நமஸ்காரம் பண்ணவேண்டியிருக்க நான் அவர்கள் காலில் விழுந்து 'அபராதம் அபராதம் தெரியாத்தனத்தாற் செய்தேன்' என்று கன்னத்திற் போட்டுக் கொள்ளேனா" என்று பலவாறு அலறினான். என்றாலும் பார்த்த பெயர்கள் எல்லாம் இது கண்கெட்டபிறகு சூரிய நமஸ்காரம்போலிருக்கிறதே என்று நிந்தித்து உன் தலையெழுத்தை நீயே அனுபவி என்றார்கள்.

உடனே மந்திரியானவன் அரசன் படும் வருத்தத்தைக் கண்டு மனமிரங்கி ராஜாவே, நீங்கள் செய்தது செய்துவிட்டீர்கள். அவர்களோ தெய்வ கன்னிகைகள். உங்களுக்கு நற்புத்திவரும் வரையில் உங்கள் முகத்தில் விழிக்கக்கூடாதென்று போய்விட்டார்கள். இனி என்ன புலம்பித்தான் என்ன. யானை தன் தலையில் தானே மண்ணை வாரிப்போட்டுக்கொள்வதுபோல் நீங்களே உங்கள் தலையில் மண்ணைப்போட்டுக்கொண்டீர்கள். ஆயினும் ஈசுவரன் கருணையையே மேலாக உடையவர் ஆகையால் சீக்கிரம் உங்கள் வருத்தத்திற்கு இரங்கி உங்கள் பெண்களைக் கொண்டுவந்து சேர்ப்பார் என்று பலவாறு தேறுதல் செய்து அரசனை அழைத்துப்போனான்.

இந்த கன்னியாகுமரி தேசத்திற்கும் மேலான பொன்னி என்று ஒரு தேசமுண்டு. அவ்விடத்திய அரசன் ஏகசக்கிராதிபதியாயிருந்தான். அவனுக்கு ஒரே பிள்ளை. வித்தையில் சரஸ்வதியென்றாலும் அவனுக்கு அவள் ஒப்பாகமாட்டாள். ரூபத்தில் பூலோக மன்மதனென்றே அவனைச் சொல்லலாம். ஏகசக்கிராதிபதியின் ஒரே குமாரனாகையால் அவன் அருமை பெருமைக்குச் சொல்லவும் வேண்டுமா. பொன்னி அரசனுக்கு வயது வெகுவாய்ச் சென்றுவிட்டபடியாலும் குமாரனுக்கும் தக்க வயது வந்துவிட்டபடியாலும் சீக்கிரம் தான் பிழைத்திருக்கும்பொழுதே தன் பிள்ளை கலியாணஞ்செய்துகொள்ள

வேல் [illegible] னகிற ஆசை வெகுவாய் அவனுக்கு இருந்தது. ஆனல் பையனுக்குப் பிடித்த பெண் அகப்படவில்லை. பொன்னி அரசனுக்கு ஒரு தங்கை உண்டு. அவளுக்கு ஒரே பெண். வெகு அழகுள்ளவள். ஆனல் அவளுக்கு ஒரு கண் குருடு. அரசனுக்குமட்டில் என்ன தான் குருடாயிருந்தபோதிலும் தன் தங்கையுடைய பெண்ணயிருந்தபடியால் தன் பிள்ளை அவளைக் கலியாணஞ் செய்துகொள்ளவேண்டுமென்னுங் கருத்து இருந்தது. பையன்மட்டில் அவள் என்ன அழகாயிருந்தாலும் குருடி குருடிதானே. அவள் எனக்கு வேண்டாமென்றே தள்ளிவந்தான். அரசனுக்கு வயது ஆய்க்கொண்டே இருக்கவே, அவன் தினந்தோறும் தன் பிள்ளையை நிர்ப்பந்திக்க ஆரம்பித்தான். "அப்பா, என் காலம் இன்றைக்கோ நாளைக்கோ. ஏன் என் மனதைக் களிக்க உன் அத்தங்காளை கலியாணஞ் செய்துகொள்ளக்கூடாது" என்று தினம் தொந்தரவு செய்துவந்தான். இப்படி தகப்பனர்செய்யும் வருத்தம் பொறுக்கக்கூடாமல் வேட்டை என்னும் வியாஜத்தை வைத்துக்கொண்டு எங்கேயாவது போய்விடுவோமென்று பையன் ஒருநாள் காலையில் அநேக வேடர்களை அழைத்துக்கொண்டு காட்டிற்குப் புறப்பட்டான். "இதோ மான், அதோ புலி, விடாதே, அடி, பிடி, குத்து, அதோ ஓடுகிறது, பார், அப்படி, சபாஸ்" என்று சொல்லிக்கொண்டு காட்டைக் கிளறிக்கொண்டு வேடர்கள் வனத்தில் வளைய வந்தார்கள். பொன்னி தேசத்து ராஜகுமாரனே வேட்டைக்கு வந்தவன் அல்ல. ஆகையால் அந்தப்படி வேடர்கள் சொல்வதில் சற்றேனும் சந்தோஷமுற்றவனைய் தன் மனவருத்தத்தை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் சற்றுநேரம் வேட்டையாடி கடைசியாய் ஒரு மானைத் துரத்துவதுபோல் குதிரையை வேகமாய் விட்டு வேடர்கள் கண்ணில் நின்று மறைந்துவிட்டான். அவனுக்கு அப்பொழுது கலியாணதிசையும் வந்துவிட்டபடியால் அந்த மானனது அவனை அப்படி இழுக்கலாயிற்று. எங்கு வேடர்கள் நம்மைத் தொடருவார்களோ என்று பயந்து குதிரையை அதிவேகமாய் விட்டு அநேக யோசனைதூரம் தாண்டி அடர்ந்த ஒரு காட்டிற்குள் பிரவேசித்தான். அதின் வழியே கொஞ்சதூரம் போய்க்கொண்டிருக்கையில் அந்த மனுஷ்ய சஞ்சாரமற்றவிடத்தில் ஒரு அரக்குமாளிகை அவன் கண்ணிற்குத் தோன்றிற்று. "ஆ ஆ, இதென்ன ஆச்சரியம்! அரக்கு மாளிகையாவது இந்தக் காட்டில் இருக்கிறதாவது. இது பேய்களோ அல்லது பிசாசுகளோ வாசஞ்செய்யும்படியான இடம்போல் இருக்கிறது. ஆயினும் இப்பொழுது நமக்கு விதியில்லை. மேலும் பூதசஞ்சாரமெல்லாம் இராக்காலத்திலேயேயன்றி பகலிலில்லையாகையால் நம்மை ஒன்றும் பண்ணது. இப்பொழுதோ நாழிகை பதினைந்து ஆய்விட்டது. குதிரை கடுநடையால் களைத்துவிட்டது" என்று நினைத்து

அதைவிட்டு இறங்கி சமீபத்தில் தேங்கியிருந்த மழைத்தண்ணீரை அதற்குக் கொஞ்சம் காட்டி தானும் தாகம் தாளமாட்டாமல் கொஞ்சம் அருந்தி அந்த மாளிகை நிழலில் ஒரு பக்கத்தில் குதிரையை மேயவிட்டு தானும் துணியை விரித்துப் படுத்தான். சிரமம் மேலிட்டதனால் அவனுக்குத் தன்னையறியாமல் நித்திரை வந்துவிட்டது. ஒரு தூக்கம் தூங்கி அஸ்தமிக்க நான்கு நாழிகைக்கெல்லாம் திடீரென்று விழித்துக்கொண்டான். சுற்றிப்பார்த்தால் பெருங்காடு. சூழ கரடி புலிகள் வாசம்பண்ணும்படியான அடர்ந்த வனங்கள். இப்படி நான்கு பக்கமும் பார்த்து மனம் பதைத்துக்கொண்டிருக்கையில் இவன் மனதைச் சந்தோஷிப்பிக்கும்போலும் போன உயிரை திருப்பிக் கொடுக்கும்போலும் வெகுநாளாய் கட்டப்பட்டிருந்து பின்பு விடுபட்டுப் பாடும் கோகிலத்தின் தொனிபோலும் தெய்வலோக ஸ்திரீகள் யாரோ கானம்பண்ணுவதுபோல், ஒரு வீணை வாசிக்கும் குளிர்ந்த சத்தம் பொன்னி ராஜகுமாரன் காதில் விழுந்தது. "ஆ ஆ, இதென்ன ஆச்சரியம்! மனுஷ்யப் பூண்டற்ற இந்தவிடத்தில் வீணை காதில் கேட்கிறது. பொழுதோ அஸ்தமிக்கப்போகிறது. வெளியிலிருந்து துஷ்ட மிருகங்களுக்குப் பக்ஷணமாவதைவிட இந்த மாளிகைக்குள் சென்று, இதில் என்ன இருந்தாலுஞ்சரி, அதற்கிரையாவோம்" என்று யோசித்துக்கொண்டு தனக்கு வரப்போகிற சம்பத்தைக் கொஞ்சமேனும் எதிர்பாராதவனாய் மாளிகையின் கதவு எங்கிருக்கிறது பார்ப்போமென்று அதைச் சுற்றிச் சுற்றி பிரதக்ஷணம் வந்துகொண்டேயிருந்தான். கடைசியாய் கதவுபோல் ஒன்று தென்பட்டது. எல்லோருக்கும் உயிர் வெல்லமாகையால் உட்செல்லுவோமா வேண்டாமா என்று சற்றுநேரம் யோசித்துக்கொண்டிருந்தான்.

முன்னமேயே அரக்குமாளிகை கன்னியாகுமரி தேசம்விட்டு வரலட்சுமி சக்தியால் அந்த நான்கு பெண்களுடன் அந்தக் காடு வந்து விழுந்ததைச் சொல்லியிருக்கிறோமே. அதற்குள் இருந்த சாமான்களே முதலில் பத்துவருஷத்திற்குக் காணும்படியாய் வைக்கப்பட்டிருந்தவைகள். அவைகளில் தபசில் நான்குவருஷம்போய், பிறகு காட்டில் கொஞ்சகாலம் சென்றுகொண்டிருந்தது. அந்த இடத்தில் கன்னிகளுக்கு யாதொரு குறைவுமில்லை. நீர் முதற்கொண்டு உள்ளுக்குள்ளேயே இருந்துவிட்டபடியால் அவர்கள் யாதொரு அபேக்ஷையன்றியில் தங்கள் வீட்டைவிட பதின்மடங்கு சுகமாய் அதில் வாசம்பண்ணிக்கொண்டிருந்தார்கள். காலமே எழுந்திருந்து ஸ்நானம் பூசை முதலியவைகளை முடித்துக்கொண்டு சமையல்செய்து சாப்பிடுகிறதும் வெயில்வேளையெல்லாம் தூங்குகிறதும் சாயங்காலம் தங்களுக்கு இஷ்டப்பட்டபடி வாத்தியங்கள்

வாசித்தும் விநோதமாய் காலத்தைக் கழித்துவந்தார்கள். அன்று சாயங்காலமும் அந்தப்படி யவர்கள் வாத்தியம் வாசிக்கையில் பொன்னிபரசன் கண்டு திகைத்து மாளிகையைச் சுற்றிவந்தான். அதை பிரதக்ஷணம்பண்ணி கதவுமுன் நின்று சற்று யோசித்ததாகச் சொன்னோமே. பின்பு அவன் ஆனபடி ஆகிறது என்று கதவைக் கையால் தட்டினான். இவன் கை யதில் படவே அது படார் என்று தானே திறந்துகொண்டது. ஏனெனில் இவனைத்தான் அந்த ராஜ குமாரத்திகளுக்குத் தகுந்த புருஷனாக வரலட்சுமி உத்தேசித்திருந் தது. அவர்களும் எங்கள் நால்வரையும் கலியாணம் பண்ணிக் கொள்ள வல்லவன் வந்து தொட்டாலொழிய கதவு திறக்கக்கூடாது என்று சொல்லியிருந்தபடியால் அதுவரையில் மூடியிருந்த கதவு அவன் வந்து தொடவே தனக்குத்தானாய்த் திறந்துகொண்டது. அந்த சத்தத்தைக் கேட்டவுடன் இன்றுதான் அம்பிகை நம்முடைய மனோ ரதத்தை நிறைவேற்றிவைத்தாள் என்று சங்கரி, பவானி, ஈசுவரி, சுந்தரி யென்ற அந்த நான்கு ராஜகுமாரத்திகளும் ஓடிவந்து அவனை ஆசாரோபசாரம் பண்ணி உள்ளே அழைத்துப் போனார்கள். ராஜ குமாரன் உட்சென்றதும் கதவு தனக்குத்தானாகவே மூடிக்கொண்டு விட்டது. நான்கு கன்னிகளும் அவனை ஒரு ஆசனத்தில் உட்கார வைத்து, "தாங்கள்தான் எங்கள் நால்வருக்கும் உயிர்த்தோழர். நாங் கள் உத்தேசித்திருந்தபடி தங்களை அம்பிகை எங்களுக்கு அளித்தாள். முதலில் எழுந்திருந்து ஸ்நானத்திற்கு வாருங்கள், அக்கா வெந்நீர் போ டடி, குழந்தாய் சமையல் சீக்கிரம் ஆகட்டும்" என்று நான்கு பெயர்க ளும் ஒருவர்முன் ஒருவராய் ஆதரவுடன் பேசினார்கள். இவர்கள் சொ ல்லும் இனிய வசனங்களிலேயே அவனுக்குக் களை தீர்ந்துவிட்டது. பிறகு அவர்கள் சரித்திரத்தை யெல்லாம் விசாரித்து மனமகிழ்ந்து தன் சரித்திரத்தையும் அவர்களுக்குச் சொன்னான். இதற்குள் வெந் நீர் சமையல் எல்லாம் சித்தமாயிருந்தன. இவனுக்கு நான்குபெண் களும் அதியன்புடன் ஸ்நானஞ் செய்வித்து அமுதளித்து வெளியிற் சென்று குதிரையையுங் கொண்டுவந்து அதைத் தேய்த்து கட்டி கொள் முதலிய தீனிகள் வைத்து இருவர்களுடைய களையையும் மாற்றினார்கள். அன்றுமுதல் அந்தப் பொன்னி ராஜகுமாரனுக்கு இந்த நான்கு கன்னிகளும் பெண்சாதிகளாய்விட்டார்கள் என்று சொல்லலாம். நான்கு பெண்களில் ஒருவள் ஒருநாள் அவனுடன் கூடவே இருப்பாள். மற்ற மூவர்களும் அவ்விருவர்களுக்கும் வேலை செய்வார்கள். மற்றொருநாள் இன்னமொருவள் பொன்னி ராஜகுமார னிடமிருப்பாள். மற்ற மூவர்களும் இவர்களுக்கு வேலைசெய்து வருவார்கள். இந்தமாதிரியாய் யாதொரு வித்தியாசமன்றியே அரக்கு மாளிகையில் இவர்கள் புருஷன் பெண்சாதிகள்போல் காந்

தர்வ விவாகஞ் செய்துகொண்டு வாழ்ந்துவந்தார்கள். பொன்னி ராஜகுமாரன், இவ்வளவு அழகுள்ள நான்கு ராஜகன்னிகளை மணம் புரிய நமக்கு அதிர்ஷ்டமிருக்க ஒரு குருடியை சமுத்திரத்தில் கட்டிக் கொள்ள நம்முடைய தகப்பனார் கட்டாயம் பண்ணினாரே என்று நினைத்து வியப்படைந்தான். பிறகு தனது புதிய பெண்சாதிகளுடைய ஆனந்தத்தில் தன் பெற்றோர்கள் இன்னும் உண்டான பந்துக்கள் எல்லாரையும் மறந்தேவிட்டான். இப்படி இரண்டு வருஷ காலம் சென்றது. எப்படியும் இரத்தவாஞ்சை விடாதென்பது சாஸ்திரம். ஒருநாள் இவன் தன் தாய்தந்தையர்களை நினைத்துக்கொண்டு ஒரு மாதிரியாய் சந்தோஷமற்றவனாய் இருந்தான். பெண்கள் புத்தி அதிக தீக்ஷண புத்தியாகையால் அவர்கள் இதைக் கண்டு கவலையுற்று புருஷனிடம் வந்து "எங்கள் நாதரே, இன்று தங்களுடைய முகம் வாடியிருப்பதற்குக் காரணம் என்ன" என்று வினவினார்கள். பொன்னி ராஜகுமாரன் அதைக் கேட்டதும் தனக்கு ஊர் ஞாபகம் வந்ததையும் தான் ஒருதடவை போய்வரவேண்டும் என்றும் சொன்னான். உடனே அவர்கள் மகா விவேகிகளாகையாலும் புருஷன் மனதுகோண ஒருநாளும் நடக்கமாட்டார்களாகையாலும் தங்கள் அன்பைப் பார்த்து "சுவாமி, அப்படி தங்களுக்கு இஷ்டமிருக்கும் பக்ஷத்தில் தாங்கள் அவசியம் போய்வரவேண்டும். தங்களுக்கு இருப்பதுபோல் அவர்களுக்கும் ஐயோ நம்முடைய ஒரேபிள்ளை நம்முடைய நிர்ப்பந்தம் பொறுக்கக்கூடாமல் ஓடிப் போய் இரண்டு வருஷகாலமாயிற்றே, அவன் எங்கு போனானோ என்னமாயிற்றோ ஒன்றுந் தெரியவில்லையே யென்று தயங்கிக்கொண்டிருப்பார்களல்லவா? எங்களைப்பற்றி நீங்கள் யாதொரு கவலையும் படவேண்டாம். மறுபடி தாங்கள் வந்து தொட்டாலொழிய இந்த மாளிகையின் கதவு திறக்கமாட்டாது. சாமான்களோ நான்கு ஐந்து வருஷத்திற்குக் குறையாமல் காணும். நீங்கள் விசாரமற்று போய் வரலாம்" என்றார்கள். பொன்னி ராஜகுமாரன் இப்படி இவர்கள் சொன்னதைக் கேட்டு மனமகிழ்ந்து மறுநாள் புறப்படுவதாகச் சொன்னான். அவர்களும் புருஷனுக்கு வழிக்கு வேண்டிய பக்ஷணங்களை அன்று முடிய விதம்விதமாய்த் தயார்செய்து மாமனார் மாமியார்களுக்கும் அலாதியாய் ஒரு சிறு மூட்டையில் உயர்ந்த பக்ஷணங்கள் கட்டி, மறுநாள் புருஷனை இச்சிறு மூட்டைகள் சகிதம் மலர்ந்த முகத்துடன் "விசாரமற்றுப் போய்வாருங்கள். அவசரப்பட்டு சீக்கிரம் திரும்பிவரவேண்டாம். மாமனார் மாமியார் விடைகொடுக்குங்காலத்தில் வரலாம். எங்களைப்பற்றி கவலையே வேண்டாம்" என்று அனுப்பினார்கள். புருஷனும் தகப்பனாரைப் பார்க்கவேண்டும் என்ற கவலை ஒரு பக்கத்தில் இருந்தபோதிலும் அருமைப்

பெண்சாதிகளை விட்டு பிரியப்போகிறோமே என்று கொஞ்சதூரம் வருத்தத்துடன் சென்று பிறகு மனதை ஒருவாறு சமாதானப்படுத்திக் கொண்டு பொன்னியைப் பார்க்கச் சென்றான். இவன் பெண்சாதிகளும் புருஷனைக் கண்ணிற் கெட்டுந்தூரம்வரையில் பார்த்துவிட்டு "சுகமாய் நம்முடைய நாதன் வரவேண்டும்" என்று அம்பிகையைப் பிரார்த்தித்தவர்களாய் மாளிகை சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டு முதலிலிருந்ததுபோல் சந்தோஷமாய் இருந்தார்கள்.

பொன்னி ராஜகுமாரனும் தன் நான்கு பெண்சாதிகளால் அனுப்பப்பட்டு தகப்பனைப் பார்க்கப்போகிறோம் என்னும் வாஞ்சையினால் வழியை சடிதியிற் கடந்து தன் ஊர்வந்து சேர்ந்து அரண்மனையிற் சென்றான். வெகுநாளாய் இவன் காணப்படாமலிருந்து அன்று தோன்றவே, ஜனங்கள் இவன் பின்னே மந்தை மந்தையாய்ச் சென்றார்கள். தன் குமாரன் வருவது அரசனுக்குத் தெரிந்தவுடன் அவர் எதிர்கொண்டோடி புத்திரனைக் கட்டி யணைத்து "அப்பா வந்தாயா. இத்தனைநாள் எங்கிருந்தாய். இந்தக் கிழவனை இப்படி மறக்கலாமா?" என்று முத்துப்போல் கண்ணீர்களைச் சொரிந்து புலம்பி கடைசியாய் எப்படியாவது வந்தாயே என்று சந்தோஷப்பட்டார். குமாரனும் தான் அத்தனைநாள் இருந்த சுகமும் தனக்கு குருடிக்குப் பதிலாக நான்கு அப்சரஸ்போன்ற பெண்சாதிகள் கிடைத்ததும் அவர்கள் குணத்திலும் தேக சௌந்தரியத்தைவிட அழகாயிருப்பதையும் அவர்களுடைய தேவதா சித்தியையும் சொல்லி கிழவர் மனதைக் களிப்பித்தான். "எப்படியாவது நீ சுகமாயிருந்தால் சரி என்பது தான் என் கருத்து. என் நாட்டுப் பெண்களை இங்கு அழைத்துவந்து சௌக்கியமாய் இருக்கலாகாதா. அந்தக் காட்டிலேயே ஏன் இருக்கவேண்டும்" எனவே, அதற்குக் குமாரன், இன்னும் கொஞ்சகாலம் போகலாம் என்றிருக்கிறேன் என்றான். பின்பு கொஞ்சகாலம் ராஜகுமாரனும் தகப்பனுருடன் பொன்னி நகரத்திலிருந்தான்.

அரசனுக்கு தங்கை ஒருவள் இருந்ததாகவும் அவள் பெண் குருடியை ராஜகுமாரன் கலியாணஞ் செய்துகொள்ள வேண்டுமென்று அவன் தகப்பனார் உத்தேசித்திருந்ததாகவும் முன்னமேயே சொல்லி யிருக்கிறோமே. நான்கு ராஜகுமாரத்திகள் இவனுக்குப் பெண்சாதிகளாய் அமைந்ததாகக் கேட்கவே, தகப்பனார் அந்த விஷயமாய்ப் பேசுவதை விட்டுவிட்டார். அவர் தங்கைக்குமட்டில் நம்முடைய பெண்ணை நம்முடைய மருமகனுக்குக் கொடுக்கச் சரிப்படாமல் போய்விட்டதே என்பதினால் உண்டான துக்கத்திற்கு அளவில்லை. அதைவிட குருடிக்கும் துக்கம். "நாம் குருடியாய்ப் போ

யும் ஒரு சமயத்தில் ராஜகுமாரனைக் கலியாணம் செய்துகொள்ளப் போகிறோம் என்றுகூட யோசித்திருந்தோமே. காட்டில் அந்த நான்கு பெண்கள் அகப்பட்டபடியா லல்லவோ நம்முடைய அம்மாஞ்சி நம்மை அலட்சியம் செய்தான். மாமாவும் வாயைத் திறவாமல் இருக்கிறார். நாம் இப்பொழுது ஏதாவது ஒரு உபாயம் பண்ணி அந்த நான்குபெயர்களில் ஒருத்தியைக் கொண்டுவந்து கொலைசெய்துவிட்டால் பாக்கி மூன்று பெயர்கள் இவனை லட்சியம் பண்ணார்கள். இவனுக்கும் அப்பொழுது நம்மைவிட்டால் கதியில்லாமல் போய்விடும்'' என்று இவ்வாறு ஆலோசித்து தனக்குள் வெகுநாளாய் வேலை பார்த்துவந்த ஒரு கிழவியைக் கூப்பிட்டு அவளிடம் சங்கதிகளையெல்லாம் சொல்லி ''பாட்டி, நீ போய் அரக்குமாளிகை இன்ன காட்டில் இருக்கிறதாம். அவ்விடம் குறிப்பாய்ப் பார்த்துச்சென்று எப்படியாவது உட்புகுந்து அந்தக் கன்னிகளுடன் பழகி ஒரு சமயம் பார்த்து அவர்களில் யாராவது ஒருத்தியை என்னிடம் கொண்டு வந்து சேர்ப்பாயாகில் உனக்கு அநேக வெகுமானம் பண்ணிவைப்பேன்'' என்றாள். கிழவியும் அக்கருத்துக் கிசைந்தாள். உடனே அவள் ஊரைவிட்டுப் புறப்பட்டு ஒரு ஆளுக்கு இரண்டு மூன்றுமாதம் சாப்பிடவேண்டிய சாமான்கள் சகிதம் அரக்குமாளிகையை யடைந்தாள். அவ்விடம் காலமே சாயந்தரம் கொஞ்சம் சமையல் பண்ணி சாப்பிடுவதும் பாக்கி காலமெல்லாம் ''ஐயோ என் குழந்தைகளே, என்பேரில் தயையில்லையா, தகப்பனார்தான் உங்களுக்குச் சத்துருவானார். நான் என்ன பாபம்பண்ணினேன். என்னை உள்ளே வரவழைத்துக்கொள்ளக்கூடாதா. நான் உங்களுக்கு எவ்வளவு காரியத்திற்குப் பிரயோசனமா யிருக்கமாட்டேன். ஏன் என்னை எட்டிப் பார்க்கக்கூடாதோ'' என்று சதா புலம்புவாள். இந்த மாதிரியாய் நடந்துகொண்டிருந்தது. ராஜகுமாரத்திகளோ இவள் யாரோ எவளோ என்று இவளைக் கொஞ்சமேனும் லட்சியம் பண்ணாதவர்களாய் இருந்தார்கள். இப்படியே ராஜகுமாரன் வருமளவும் நடந்துகொண்டிருந்தது.

தன் தகப்பனாரிடம் இரண்டு மூன்று மாதம் சுகமாய் இருந்துவிட்டு அவருடைய அனுமதி பெற்றுக்கொண்டு மறுபடியும் ராஜகுமாரன் வனம் வந்து அரக்குமாளிகையின் கதவைத் தொட்டான். கதவு திறக்கவே ராஜகன்னிகள் எல்லாரும் ஓடிவந்து தங்கள் புருஷனை உபசரித்தார்கள். வரும்பொழுதே கிழவியை பார்த்திருந்தபடியால் அவள் யார் என்று தன் பெண்சாதிகளை ராஜகுமாரன் கேட்டான். அவள் வரலாற்றையும் அவள் செய்யும் தொந்தரையையும் கன்னிகள் தங்கள் புருஷனிடம் சொன்னார்கள். அவள் யாரோ எவளோ அவளை உள்ளே விடவேண்டாமென்று ராஜகுமாரனும் கட்டளைசெய்துவிட்டான்.

ஆனல் அவள்மட்டில் போகிறதாய் இல்லை. எப்பொழுதும் வாசலில் இருந்துகொண்டு கதறிக்கொண்டே யிருந்தாள். கடைசியாய் அவள் செய்யும் சப்தம் பொறுக்கக்கூடாமல் புருஷனே தன் பெண்சாதிகளைப் பார்த்து போனல் போகிறது இந்தக் கிழவி என்னதான் செய்வாள். நான் ஒருவன் இருக்கிறவரையில் பயம் இல்லை. கதவைத் திறந்து இவளை உள்ளே விடு எனவே, அவர்களும் அப்படியே செய்துவிட்டார்கள். கிழவி மாளிகைக்குள் வந்ததுமுதல் அவள் ராஜகன்னிகள் காலாலிட்ட வேலையைத் தலையால் செய்துகொண்டு இவளைப்போலும் கிழவி இந்த உலகத்தில் உண்டா என்று சொல்லும்படியாக அவர்களுக்கு வெகு வணக்கத்துடன் நடந்துவந்தாள். பெண்களுக்கும் ராஜகுமாரனுக்கும் இவள்மேல் அதிக நம்பிக்கையும் பிரீதியும் வந்துவிட்டது. இப்படியாய் ஒரு வருஷகாலஞ் சென்றது. மறுபடியும் ஒருதடவை தன் தகப்பனைப் போய் பார்த்து வந்து இனி நாமெல்லாம் பட்டணமே போயிருக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று ராஜகுமாரன் நினைத்து ஊர் போய்வர தன் பெண்சாதிகளைக் கேட்கவே, அவர்கள் அதற்கு என்ன ஆக்ஷேபம். நீங்கள் சௌக்கியமாய் ஊர்போய் சேர்ந்து அங்கு எங்களையும் அழைத்துப் போகவேண்டிய முயற்சி செய்துவாருங்கள் என்று வழிக்கும் மாமனர் மாமியாருக்கும் வேண்டிய பக்ஷணம் பண்ணிக் கொடுத்து அனுப்பினர்கள். அவைகள் சகிதம் வீட்டில் எல்லாரையும் சாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ள கிழவியினிடம் ஏற்பாடு செய்துவிட்டு ராஜகுமாரன் இரண்டாந்தடவை பொன்னி நகரத்தை நோக்கிச் சென்றான்.

அவன் அப்படிப் போனதும் கிழவியும் இனி நாம் சும்மாயிருக்கக் கூடாதென்று யோசித்து ஒரு மாத்திரை கலந்து அந்த நான்கு கன்னிகளுக்கும் எண்ணெய் தேய்த்தாள். உடனே அவர்கள் மயக்கமடைந்து தூங்கிவிட்டார்கள். அந்த மாத்திரையை சாப்பிட்டால் மூன்றுநாள் இடைவிடாமல் நித்திரை வருவது வழக்கமாம். அப்படி நான்கு கன்னிகளும் தூங்கிவிடவே அவர்களுள் கடைசியவள் சுந்தரியைத் தூக்கிக்கொண்டு கிழவி பொன்னியைப் பார்க்கத் திரும்பிவிட்டாள். இரண்டுநாள் தூங்கும் சுந்தரியைச் சுமந்து கொண்டே வழிநடந்து மூன்றுநாள் ஊர் சேர்ந்து அஸ்தமிக்கும்வரையில் வெளியில் காத்திருந்து இருட்டினவுடனே அந்த ராஜகன்னியை அந்தப் பாழுங்கிழவியானவள் குருடியினிடம் சேர்த்துவிட்டாள். குருடி இவள் அழகைப் பார்த்துக் கண் கூச்சுண்டு இந்த ஒருவளே தெய்வலோகப் பெண்கள் எல்லாரையும்விட அழகில் சிறந்தவளாய் காணப்படுகிறுளே. இப்படி நான்கு பெண்களைப் பார்த்தபிறகுகூட ஒற்றைக்கண் பொட்டையாயிருக்கும் என்னை

ராஜகுமாரன் விரும்புவானா? மாட்டவே மாட்டான். இப்பெ டிவள் அழகைக் குலைத்து விடுவோமா. அதுமாத்திரம் போதா_ டிவளைக் கொன்றுவிடுவோம் என்று யோசித்து இவள் தலைமயிரை வாங்கிப்போட கத்தியை எடுத்துவர ஒரு அம்பட்டனுக்குச் சொல்லி யனுப்பினாள். இதற்குள் சுந்தரிக்கும் மயக்கம் நீங்கி விழிப்பு வந்துவி ட்டது. கண் விழித்துக்கொண்டதும் தான் தன் மாளிகையில் இல் லாமல் அவ்விடம் ஒரு குருடிமுன் இருக்கக்கண்டு, "ஓகோ, நாம் சா தாரணமாய் எண்ணியிருந்த கிழவி நம்மை இந்த ஸ்திதிக்குக்கொண் டுவந்து விட்டாள். நம்முடைய தமக்கைகள் எவ்விதமானார்களோ. நம்முடையபுருஷர் ஒரு குருடியைப்பற்றி நமக்குச் சொல்லியிருந்தா ரே, அவள் இவளாக இருந்தால் நம்மை சுலபமாய் விடாளே என்று இவள் யோசித்துக்கொண்டிருக்கையில்தானே அங்கு கத்தியுங் கையு மாக அம்பட்டன் வந்துவிட்டான். சுந்தரியை எல்லாரும் கையைப் பிடித்துக்கொள்ளவே, அவன் அவள் தலையிலிருந்த மயிரையெல்லாம் வாங்கிவிட்டான். என் கண் குருடாயிருக்க உன் கண்மட்டில் இப்படி நன்றாய் இருப்பதற்குக் காரணம் என்னவென்று குருடியா னவள் சுந்தரி கண்களை தோண்டி அவள் மயிரையும் கண்களையும் எங்கேயாவது எறிந்துவிட தன் வேலைக்காரி கையில் கொடுத்தாள். அவள் அவைகளின் அழகைக் கண்டு ஆச்சரியப்பட்டு எறியாமல்வை த்திருந்தாள். பின்பு குருடி ஒரு கூடை ஊசிகளைக் கொண்டுவரச் சொல்லி சுந்தரி அங்கம் முழுவதும் மயிர்க்காலுக்கொரு ஊசியாக ஏற்றி தன் வீட்டிற்குச் சற்று தூரத்தில் இருந்த ஒரு பாழுங்கிணற் றில் அவளை தள்ளிவிட்டாள். இந்தக் கதையைப் படிக்கும்பொழுதே இந்த மாதிரி குருடி செய்ததை நினைக்க நமக்கு மனம் பதைக்கிறது. அவள் எப்படித்தான் அந்தக் காரியத்தைப் பெண்பாலா யிருந்தாலும் செய்தாளோ, ஆச்சரியம் ஆச்சரியம்! கிழவி தான் சொன்னபடி காரியத்தைச் செய்து முடித்தாள் என்பதைக் கண்டு சந்தோஷப்பட்டு அவளுக்கு வேண்டுமென்கிறபடி வெகுமானங்கள் செய்து குருடி அவளை ஒரு பெரிய பணக்காரியாகவும் ஆக்கிவிட்டாள்.

இவ்விடம் பாழுங்கிணற்றில் விழுந்த சுந்தரி கதி என்னமாய் முடிந்ததென்பதைச் சற்று விசாரிப்போம். அந்தக் கிணறு இருந்த தோட்டம் ஒரு குடியானவனுடையது. அதில் இரண்டொரு கீரைப் பாத்தி யுண்டு. அவைகளுக்கு அந்தப் பாழுங்கிணற்றிலிருந்து அவன் நீரிறைப்பதுவழக்கம். அப்படிசெய்ய அவன் அன்று சாயந்தரம் அங்கு வந்து பார்க்கையில் அதில் விழுந்திருந்த சுந்தரி மெதுவான குரலி னால் சொல்லி வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறதைக் கண்டு ஆச்சரி யப்பட்டு உடனே கிணற்றைப் பார்த்து "நீ யார், இப்படி சங்கடப் பட்டுக்கொண்டிருக்கிறாய். நீ பேயா பிசாசா, உண்மையைச்

௨௰ு. இல்லாவிடில் இந்தக் கிணற்றில் கல்லுகளையும் முள்ளுக ளையும் போட்டுத் தூற்றுவிடுவேன்'' என்ருன். இதைக் கேட்டதும் சுந்தரியானவள் இங்கு வந்திருப்பவன் சுவாமியால் அனுப்பப்பட்ட வணுகத்தான் இருக்கவேண்டும் என்று எண்ணிக்கொண்டு ''தாங்கள் யாராயிருந்தாலும் சரி. நாஞெரு பெண். என் கர்மத்தால் இந்தத் தசைக்கு வந்தேன். எனக்கு பேசக்கூட சக்தியில்லை. மேலெல் லாம் ஊசி ஏறி உடம்பு முழுதும் எரிகிறது. மெதுவாய் என்னை எடு த்து உங்கள் வீடு கொண்டுபோய் என்னைக் காப்பாற்றிஞல் உங்களை நான் ஒருநாளும் மறவேன்'' என்ருள். இதைக் கேட்டு குடியானவன் மனதிரங்கி அவள் பேசின கொஞ்சப் பேச்சிஞலேயே அவள் பெ ரிய குலத்துப்பெண் என்று எண்ணி, உடனே கிணற்றிலிறங்கி சுந்த ரியை வீட்டிற்கு எடுத்துப்போய் அவளைத் தன் பெண்சாதி வசத் தில் ஒப்புவித்தான். அந்தக் குடியானவனுக்கு நற்குண நற் செய் கைகள் பொருந்திய ஒரு மனையாளும் ஒரு பெண்ணும் உண்டு. அவர்கள் சுந்தரியின் அழகைப் பார்த்து அவளுடைய கேசம்போய் மேலெல்லாம் ஊசி ஏறியிருப்பதைக் கண்டு துக்கப்பட்டு அவளை நோக்கி, அம்மணி உனக்கு நாங்கள் இப்பொழுது என்ன செய்கிறது எனவே, அதற்கு சுந்தரி ''என் தேகமாத்தியந்தம் ரணமாயிருக்கிறது. நான்கு மரக்கால் நெல் புழுக்கி அந்த ஆவியில் என் தேகத்தைப் பிடித் துக்கொண்டு இந்த ஊசிகளைப் பிடுங்கிஞல் நான் ஒருவாறு பிழைப் பேன்'' என்ருள். அதற்கு அந்தக் குடியானவன் பெண், அம்மா நாங்கள் கீரைவிற்று கால்படி அரிசி கொண்டுவந்து ஜீவனம் பண்ணு கிருேம். நான்கு மரக்கால் நெல் எங்கே போய்க் கேட்கிறது என்ருள். சுந்தரியானவள் தன் இஷ்டதேவதையான வரலட்சுமியை தியானி த்து மூக்கைச் சிந்திஞள். உடனே அவள் மூக்கில் இருந்து ஒரு ரத்தி னம் விழுந்தது. அந்த ரத்தினத்தை சுந்தரி அவர்கள் கையில் கொடுத்து இதைக் கொண்டுபோய் விற்ருல் வேண்டிய பணம் அகப்படும். நாம் சுகமாய் வாழலாமென்ருள். குடியானவன் பெண்ணும் பெண்சாதி யும் இவள் மூக்கிலிருந்து ரத்தினம் விழுந்ததைப் பார்த்து வியப்புற்று, இவள் தெய்வப் பிரசாதம் பெற்றவளென்றும் இவளை நாம் காப் பாற்றுவோமாகில் நமக்கு க்ஷேமமுண்டென்றுமெண்ணி உடனே அந்த ரத்தினத்தைக் குடியானவனிடம் கொடுத்து நெல் வேண்டும் என்ருர்கள். அவன் ஓடிச் சென்று ரத்தினத்தை அப்புறம் விற்போ மென்று அதை அடகுவைத்து இரண்டொரு பொன் வாங்கி அதைக் கொண்டு நெல் வாங்கிவந்தான். உடனே குடியானவன் பெண்சாதி அதைப் புழுக்கிக் கொட்டி அந்த ஆவியில் சுந்தரியைத் தூக்கிப் பிடிக்கவே, அவள் வலிக்கு அது வெகு இதமாய் இருந்தது. உட னே ஒவ்வொன்ருய் அவள்மேல் இருந்த ஊசிகளை யெல்லாம் எடுத்து

தருந்த ரணவைத்தியத்தினால் காயத்தை ஆற்றினார்கள். தன்னை
யைத் தேற்றிக்கொள்ள நினைத்து சுந்தரி குடியானவனைக் கூப்பிட
அவன் முன்னம் வரலட்சுமியைத் தியானித்து மூக்கைச் சிந்தி அதில்
விழுந்த ஏழு ரத்தினங்களை அவனிடங் கொடுத்து "நீங்கள் எனக்கு
ஒரு பெரும் உபகாரம் பண்ணவேண்டும். என்னுடம்பு தேற
வேண்டியதற்கு நான் ஒரு உபாயம் சொல்லுகிறேன். இந்த ஏழு
ரத்தினங்களையும் கொண்டுபோய் விற்றுப் பணமாக்கி அதைக்
கொண்டு நூறு பசுமாடுகள் வாங்கி அவைகளின் பாலைக் கறந்து ஒரு
செம்பு பாலாய்க் காய்ச்சி அதை ஒருவேளை நான் சாப்பிடவேண்
டும். மற்றொரு வேளை தயிராகப் பண்ணித் தரவேண்டும்" என்றாள்.
அவனுமப்படியே செய்ய ஒப்புக்கொண்டு கடைக்குச் சென்
றான். உடனே அவள் குடியானவன் பெண்ணைக் கூப்பிட்டு அவ
ளிடம் தன் பிறப்பு வளர்ப்பு வாழ்க்கைப்பட்ட விதம், குருடி தன்
னைச் செய்தது எல்லாவற்றையும் சொல்லி "அக்கா! இன்று நம்மு
டைய தகப்பனாரிடம் நூறு பசுமாடுகள் வாங்கிவர பணமனுப்பி
யிருக்கிறேன். அந்தப் பால் ஒருவேளைப் பால் எனக்கென்றும் ஒரு
வேளைப் பால் தயிர்செய்து பிறகு விற்கவேண்டுமென்றும் சொல்லியி
ருக்கிறேன். நூறு மாடுகளின் பாலை ஒரு செம்பு பாலாகக் காய்ச்சி
அதைத் தயிராகத் தோயவைத்தால் அதன் ருசிக்குச் சொல்லவும் வேண்
டுமா. நீ அந்த தயிரை எடுத்துக்கொண்டு வாசலில் தயிர்வாங்க
வில்லையோ தயிர் என்று கூவிக்கொண்டு போகவேண்டும். யாரா
வது என்ன விலை என்றால் படி நூறு பொன் என்று சொல்லவேண்
டும். ஒருவரும் உன் தயிரை வாங்கமாட்டார்கள். கடைசியாய்
குருடி வீடு போய்ச் சேர். அவள் தயிர் கேட்டால் அவளிடமிதை
விற்று மெதுவாய் அவள் தயவு சம்பாதித்துக்கொள். அவள் தயவால்
நமக்குப் பின்னால் வெகு காரியம் நடக்கவேண்டும். நான் என்
வரலாற்றைப்பற்றி உன்னிடம் சொன்ன சங்கதியைக்குறித்து, உன்
பெற்றோர்களிடமாவது அல்லது குருடியினிடமாவது வாயைத் திற
ந்தே" என்றாள். குடியானவன் மகள் இவள் சொன்னதை எல்
ம் கேட்டு வியப்புற்று இவள் மகா புண்ணியசாலி, ஏதோ கர்மத்
குருடியினிடம் சிக்கிக்கொண்டாள் என்று நினைத்து அந்தப்படி
செய்துவர ஒப்புக்கொண்டாள். மாடுகள் எல்லாம் வாங்கின
ன் அவைகளின் பாலைக் கறந்து ஒருவேளை காய்ச்சி இவள் சா
கிறதும் மற்றொருவேளை தயிர்பண்ணி குருடியினிடம் விற்ப
ச் செலவு செய்து வந்தார்கள். குடியானவன் பெண்ணும்
கேட்டுக்கொண்டபடியே குருடியினிடம் காசுவாங்காமல்
று தயவு சம்பாதித்து வந்தாள்.

குருடியாலனுப்பப்பட்டு ஆஷாடபூதி வேஷம்போட்டு சுந்தரி ...ய குண்டுக்கட்டாய்க் கிழவி தூக்கிவந்த பிறகு பாக்கி மூன்று பெயர்களும் என்னமானுர்கள் என்பதை நாம் சற்று முன்னமேயே விசாரித்திருக்கவேண்டுமல்லவா? ஆயினும் சுந்தரியை நல்ல சௌக்கிய தசையில் வைத்தபிறகுதான் மற்ற மூன்று பெயர்களுடைய சரித்திரத்தைச் சொல்லவேண்டுமென்பது நம்மபிப்பிராயமாதலால், நாமிதுவரையில் தாமதித்தோம். அங்கு அரக்குமாளிகையில் அவர்கள் கிழவி ஓடிப்போன மூன்ருநாள் மயக்கந்தெளிந்து விழித்துப் பார்த்து கிழவியும் சுந்தரியும் இல்லாமலிருக்கக் கண்டு திடுக்கிட்டு ஓகோ கிழவிதான் மோசம் செய்தாளோ அல்லது நமது புருஷர்தான் சுந்தரியைமாத்திரம் பொன்னிதேசத்திற்குக் கொண்டுவந்து விடும்படி கட்டளையிட்டுப் போனுரோ. அப்படி அவர் வித்தியாசம் இதுவரையில் காட்டினவரல்ல. மறுபடி அவரைக் காணும்வரையில் நாம் என்னதான் நிச்சயம் சொல்லுகிறது என்று எண்ணி எண்ணி அழுதுகொண்டே பாழும் வயிற்றை ஏதாவது போட்டு நிரப்பவேண்டுமாகையால் காலை மாலை ஏதாவது கொஞ்சம் சமையல்செய்து சாப்பிட்டுவிட்டு தங்கள் சகோதரியைக் காணுமல் எப்பொழுதும் சங்கடப்பட்டவர்களாய் புருஷர் வரவை எப்பொழுதும் எதிர்பார்த்து நிமிஷந்தோறும் கிழவியை நிந்தித்து காலத்தைக் கழித்துவந்தார்கள்.

பொன்னி அரசனுக்காவது அல்லது அவன் குமாரனுக்காவது குருடி சுந்தரிவிஷயத்தில் செய்த அக்கிரமம் கொஞ்சமேனும் தெரியாது. ராஜகுமாரன் வழக்கப்படி தகப்பனுரிடம் இரண்டுமாதமிருந்துவிட்டு தன் பெண்சாதிகளைப் பட்டணத்திற்கு அழைத்துப்போக பல்லக்குகளுடன் வனத்திற்கு வந்தான். அங்கு அவனைக் கண்டதும் ஈசுவரி, பவானி, சங்கரி இம்மூவர்களும் கோ என்றலறி "இப்படிச் சுந்தரியைமாத்திரம் கிழவியைக்கொண்டு தூக்கிப்போய்விட்டு எங்களை இந்த நடுக்காட்டில் விட்டுவிடலாமா" எனவே, இதைக் கேட்டதும் ராஜகுமாரன் நடுநடுங்கி "ஐயோ, அந்தப் பாவிமுண்டை நம்முடை... தலையிற் கல்லை போடவந்தாளென்று அப்போதே நான் சொ... அழுதேனே" என்று அதிகமாய்ப் பேச நாவெழாமல் கோவெ... கதறினுன். அந்த மூன்று கன்னிகளும் இப்படி அவன் அழுவ... கண்டு, நம்முடைய நாதன்பேரில் வித்தியாசமில்லை என்று நினை... "ஐயோ ஒருக்கால் உங்களிடமிருப்பாளோ என்று இதுவரையில் ... ள் எங்கள் துக்கத்தை ஒருவாறு சகித்துவந்தோம். இனி எ... ...ய்யப்போகிறேும். வரலட்சுமித் தாயே, மறுபடி எங்கள் ... ...ரி எங்களிடம் வருவது நிச்சயமானுல் இப்பொழுதே எங் ...வொருவர் மூக்கிலிருந்து ஒவ்வொரு இரத்தினம் விழும் ...வேண்டும்" என்ருர்கள். இவர்கள் அம்பிகையை நினை...

மாத்திரத்தில் ஒவ்வொருவர் மூக்கிலிருந்தும் ஒரு ரத்தினம் உதிர்ந்தது.
ந்தபோதிலும் மறுபடி தங்கள் தங்கை வருவாள்,
குறைவுமில்லை என்று தேர்ச்சி அடைந்தார்கள்.
ழைகூட உட்காராமல் "நான் எப்படியாவது சுந்
ணியைக் கொண்டுவந்து சேருகிறேன். நீங்கள்
" என்று அவர்களுக்கு ஆறுதலைச் சொல்லி தான்
ள எல்லாம் மறுபடியும் ஊருக்கு வெறும் பல்லக்
போனுல் வெட்கமென்றெண்ணி அவ்விடம்
லேயே குடிசைபோட்டுக்கொண்டிருக்க ஏற்
ட்டில் ஊருக்கு வந்தான். "போனதுபோல்
ளை" என்றொரு பழமொழி சொல்வார்கள்.
தில்தான் சரியாயிருந்தது. தகப்பனுர் கேட்ட
மையை உரைக்காமல் அவர்களுக்கு கொஞ்சம்
லாமலிருக்கிறதென்றும் இரண்டொரு மாதம்
சொன்னதாகவும் சொன்னுன். இவன் சொல்
ரசன் திருப்தி அடையாமல் "இவன் இதுவரை
தெல்லாம் பொய், காட்டிலாவது அரக்குமாளி
ராஜகன்னிகளாவது, ஆயினும் அதைப்பற்றிப்
ன்று எண்ணிக்கொண்டு பையனைப் பார்த்
ன்கு பெண்சாதிகள் காட்டிலிருந்து இரண்
வும் என் பிராணன் நிற்குமென்று நான் எ
ான் இறந்தால் நாளை இரண்டாம் நாள். என
கிறது, எனக்குப் பிண்டம் யார் போடுவார்கள்.
ருவளிருக்கிறுளே, அவளையும் கலியாணஞ்
னக்கு ஐந்தாம் பெண்சாதி ஒருவளிருந்தால்
பலவாறு துக்கப்பட்டான். தகப்பனுர் படும்
வர் இன்னும் கொஞ்சநாள் ஜீவிக்கவேண்டு
ணம் செய்துகொண்டுதா னுகவேண்டும்போ
ணி, தனக்கு கிஞ்சித்தேனும் பிரியமில்லாமலி
பனுர் படும் அவஸ்தையைக் கண்டுகொண்டு
ல் "அப்பா, உங்களிஷ்டப்படியே இன்று பதி
ந்தம்" என்று ராஜகுமாரன் உத்தரவு கொடுத்
ர்க்கியத்தைக் கேட்டு சந்தோஷித்து ஊரெல்
சர்களுக்கு மணவோலை அனுப்பினுன். அர
ணமென்ற சங்கதி ஊரெல்லாம் பரவிவிட்டது.
பாணம் செய்துகொள்ளப்போகிறுேம் என்ற
அடக்கக்கூடவில்லை. குடியானவன் பெண்

தயிர்விற்க வந்தபொழுது அவளிடம் குருடி சங்கதியைத் தெரிவித்தாள். அவளும் சுந்தரியினிடம் சமாசாரத்தைச் சொன்னாள்.

மறுநாள் குடியானவன் குமாரத்தி தயிர்விற்கப் போகும்பொழுது சுந்தரி அவளைப் பார்த்து "அக்கா, நீ என…
உபகாரம் பண்ணவேண்டும். அது…
வாங்க வரும்பொழுது நீ அழுதுகொ…
றாய் என்று கேட்பாள். அதற்கு நீ எ…
அவள் தலை மயிரெல்லாம் உதிர்ந்துபோ…
யாயிருக்கிறது. உங்களிடம் ஏதாவ…
கூலம் என்று சொல்வாயானால் அ…
வைத்திருக்கிற என் தலைமயிரை ஒ…
அதை வாங்கிவா" என்று சொல்லி…
சொன்னபடியே கேட்க, குருடியும்…
திருந்த சுந்தரியின் தலைமயிரை தாதி…
கையில் கொடுத்துவிட்டாள். அவ…
வேகமாய் வீடுவந்து ராஜகுமாரத்தி…
அதைத் தன் தலையில் வைத்துக்கொ…
கவே, அவள் சிரசில் முன்னிருந்தது…

அதற்கு மறுநாள் குடியானவன் பெ…
பொழுது சுந்தரி அவளைக் கூப்பிட்டு…
சொன்னதுபோல் சொல்லி கண்களைக்…
துவிடுவாள். அப்புறம் நம்முடைய…
என்றாள். அவளும் அதேமாதிரியாய்ப்…
கொண்டுவந்து கொடுத்தாள். வரலட்சும…
கண்களும் சுந்தரிக்கு முன்போ லொ…
போல் தன் மேனிவந்துவிடவே சுந்தரி…
கலியாணத்திற்கு இன்னும் பதின் மூன்று…
கொள்ளுவோம் என்று எண்ணிக்கொண்டி…

மூன்றாநாள் காலமே வழக்கப்படி கு…
விற்கப் போகும்பொழுது சுந்தரி அவளை…
இன்று தயிர்விற்கச் சென்று குருடி வாங்க…
மயிரை தரையில்போட்டு தேய்த்துக்கொண்டி…
செய்கிறாய் என்று கேட்பாள். அதற்கு நீ, …
வைத்தியன் வந்திருக்கிறான். அவன் ஒரு…
தடவிவிட்டான். அந்த காரணத்தினால்…
பிடிக்குமேல் வளருகிறது. இதற்கு என்ன…
யிட முடியும்? ஆகையால் அப்படி வளராமலி…

யாய்த் தேய்க்கிறேன் என்று சொல். அந்த வைத்தியனிருக்கிருனு போய்விட்டாளு என்று குருடி கேட்டால் இருக்கிருன் என்று சொல் லிவா" என்ருள். இவள் சொன்னமாதிரியே குடியானவன் மகள் செய்ய, குருடி "அந்த வைத்தியனை நாளைக் காலமே என்னிடம் அழைத்துவா. கலியாணம் இன்னும் பன்னிரண்டு நாளிருக்கிறது. அதற்குள் எனக்கு பத்துசாண் வளர்ந்தாலும் போதும். என் தலையில் மயிரே யில்லையென்று உனக்குத் தெரிந்திருந்தும் இதுவரையில் நீ என்னிடம் சொல்லாம லிருந்தாயே அடி போடி பைத்தியக்காரி" என்ருள்.

தயிர்க்காரியான குடியானவன் மகளும் இதைச் சுந்தரியினிடம் தெரிவிக்கவே, சுந்தரியும் அவளைப் பார்த்து "அடியே அக்கா, என் மனோரதம் நாளைத்தான் நிறைவேறவேண்டும். நான் ஒரு வைத்தியன் மாதிரி வேஷம்போட்டுக்கொள்ளுகிறேன், நீ இவன்தான் வைத்திய னென்று என்னை நாளையதினம் குருடியினிடம் அழைத்துப்போய் விடு. பிறகு நடக்கிற வேடிக்கையைப் பார்" என்ருள்.

சுந்தரி சொன்னபடியே குடியானவன் குமாரத்தியும் மறுநாள் அவளை புருஷவேஷம் போட்டுவித்து குருடியினிடம் அழைத்துப் போனுள். சுந்தரி தான் போகும்பொழுது கையில் அப்பொழுது தான் புதிதாய் தீட்டிய இரண்டு அம்பட்டன் கத்திகளையும், சுக்கு, [illegible]ளகாய், மிளகு, பெருங்காயம், செங்கற்பொடி இவைகளை எல் [illegible]ாம் பொடித்துவைத்த ஒரு சிமிழையும் சின்னதாய் ஒரு உளியையும் [illegible]காண்டுபோனுள். குருடியைக் கண்டதும் வைத்தியன் ஒரு கும் [illegible]டு போடவே அதைக் குருடி பெற்றுக்கொண்டு "நீர்தானு வைத்தி [illegible]ன். நம்முடைய தலைமயிரை வளரச்செய்வீரா?" எனவே, அதற்கு வைத்தியவேஷம் பூண்ட சுந்தரி "அதற்கு என்ன ஆக்ஷேபம் ஒரு நாளைக்கு ஒருமுழம் வளரும்படியான ஔஷதங்கள் என் கையில் இருக்கின்றன. இப்பொழுது உங்கள் தலையில் மயிரிருந்தால் மருந்து பிடிக்காதாகையால், இதை மெதுவாய் எடுத்துப்போடவேண்டும். பிறகு வேரில்போய் மருந்து பிடிக்கும்படியாய்த் தலையைக் கொஞ்சம் மெதுவாய் உளியினுல் வெட்டி மருந்துவைத்து கட்டிவிட்டால் மூன்ருநாள் மூன்றங்குலம் முளை புறப்படும். மருந்து வைக்கையில் மட்டும் கொஞ்சம் எரியும். அதைமாத்திரம் சகித்துக்கொள்ளவேண் டும்" எனவே, அதைக் கேட்டு குருடி மயிர்வளரும் என்பது நிச்சய மாளுல் நான் என்ன எரிச்சலாயிருந்தாலும் சகித்துக்கொள்வேன் என்ருள். "அதற்கு ஆக்ஷேபமில்லை" என்று வைத்தியர் சொல்ல, உடனே மருந்துபோட ஆரம்பிக்கலாம் என்று குருடி சொல்லிவிட் டாள். சுந்தரி தானே கத்தியை எடுத்து குருடி தலையைத் தன்

தலையை முதலிற் சிரைத்ததற்காக பழிக்குப்பழி வாங்குவதுபோல் ஒழுங்காய்ச் சிரைத்து உளியால் தலைமுடிய அரை அங்குலம் கிளறி கையிற்கொண்டுவந்த பொடியையும் நிரம்ப தலையில் அமுக்கி மேலே ஒரு வாழைக்குருத்தைப் போட்டுவிட்டு "இன்று மூன்றும் நாள் கையை தலையில் வைத்துப் பார்ப்பீர்களாகில் உங்களுக்கு மூளை தெரியும். நான் சமீபத்திலொரு சிறிய ராஜ்ஜியமிருக்கிறது, அவ்விடம் போய் வருகிறேன்" என்று சொல்லி வைத்திய வேஷம்பூண்ட சுந்தரி வீடு திரும்பினுள். வழியில் மாப்பிள்ளைக்கு படுக்கையறை சிங்காரிப்பதற்காக ஒரு வர்ணக்காரன் வேண்டியிருப்பதாகவும் யாராவது கெட்டிக்காரர்களிருந்தால் வரலாம் என்றும் தமுக்குப்போட்ட ஒரு சத்தம் சுந்தரி காதில் விழுந்தது. "சுவாமி அல்லவா ஒருவரிருக்கிருர் நமக்கென்ன குறைச்சல்" என்று எண்ணி அவள் வீடுவந்து தன் வைத்தியவேஷத்தைக் கலைத்து வர்ணக்காரனைப்போல் வேஷம் பூண்டு அரண்மனை வந்து தன் புருஷனுகிய ராஜகுமாரனைக் கண்ணுற்கண்டு தனக்கு அவன்பேரிலிருந்த வாஞ்சையை தீர்த்துக் கொண்டு அவனைப் பார்த்து "மகா ராஜாவே, நான் தஞ்சாவூர் வேலைக்காரன். பொம்மை சித்திரம் இவைகள் நன்ருய் செய்வேன். மகாராஜாவுக்கு ஏதோ படுக்கை அறையில் வர்ணம் வைக்கவேண்டு மாம். அதற்கு நான் எப்படி செய்யவேண்டுமோ அவைகளைக் குறைவில்லாமல் செய்து தருகிறேன். ஆனல் ஒரு விண்ணப்பம். அந்த சித்திரங்கள் முடியும்வரையில் ஒருவரும் அதைப் பார்க்கக்கூடாது அப்புறம் நீங்கள் எல்லோரும் ஏககாலத்தில் போய் பார்க்காமல் முதலில் நீங்கள்மட்டில்போய் பிறகு எல்லாரையு மழைத்துப் போக வேண்டியது" என்ருள். அதற்கு ராஜகுமாரன் இசைய, அந்தப்படி படுக்கை அறையைச் சிங்காரித்து கொடுப்பதாக சுந்தரி ஒப்புக் கொண்டு வேலைக்காரம்பித்தாள். அதில் இரண்டாவது தடவை தன் கணவன் தகப்பனைக் காணப்போனதுமுதல் கிழவி செய்த மோசமும், குருடி செய்த கரேமும், குடியானவன் கருணையும், குடியானவன் பெண்ணினுடைய பணிவிடையையும், பதிலுக்குப் பதிலாக அவள் தலையை தான் தன் கையாலேயே சிரைத்து மருந்து கட்டினதையும், அப்புறம் தான் வர்ணக்காரன் வேஷம்பூண்டு வந்ததையும் ஒவ்வொரு படமாய் எழுதி அதன்கீழ் சுருக்கமாய் மாறுபாடான பெயர்கள் வைத்து தன் சரித்திரத்தை முடிய எழுதிவிட்டாள். பின்பு வெளியில் வந்து, நான் அவசரமாய்ப் போகிறேன். கூலி நாளைக்கு வாங்கிக்கொள்ளுகிறேன். என்று குடியானவன் வீடு போய் விட்டாள். ராஜகுமாரன் உட்சென்று பார்த்து அங்கு எழுதப்பட்டிருந்த ஒவ்வொரு சங்கதிகளிலும் பிராணன்போய் திரும்பிவந்தவனுய் கடைசியில் வர்ணக்காரன் தன் கண்ணுன சுந்தரி என்றறிந்த

வுடன் ஆனந்தமடைந்து ஆவலுடன் ஓடி குடியானவன் வீடு சென்று அங்கு அவளைக் கண்டு தாரைதாரையாய் கண்ணீர்விட்டழுதான். பிறகு கலியாணம்வைத்த முகூர்த்தத்தில் ஈசுவரி, சங்கரி, பவானி, சுந்தரி ஆக தன்னுடைய நான்கு பெண்சாதிகளையும் மணஞ்செய்து கொள்ள யோசித்து சுந்தரியை அழைத்துக்கொண்டு காட்டிற்கு அரக்குமாளிகையிடம் சென்றான். அங்கு எல்லாரும் சந்திக்கவே, எல்லாருக்கும் ஒருவிதமான ஆனந்தம் உண்டாயிற்று. சுந்தரி ஒவ்வொரு அக்காளிடமும் தான் பட்ட கஷ்டங்களை எல்லாம் சொன்னாள். அவர்களும் தனித்தனியே இவள் தலைமயிர் கண் எல்லாவற்றையும் தடவித் தடவிப் பார்த்து எப்படியாவது நீ பிழைத்துவந்தாயே அதுவே போதும் என்றார்கள். அரக்குமாளிகையில் நான்கு நாளிருந்துவிட்டு பிறகு ராஜகுமாரன் தான் முன்னமேயே அங்கு விட்டுப்போயிருந்த பல்லக்குகளில் தன் பெண்சாதிகளுடன் பொன்னிதேசம் வந்து சேர்ந்தான்.

இவன் அவ்விடம் வந்ததும் ஒருவர் முகத்திலாவது சந்தோஷமில்லாம லிருக்கக்கண்டு என்னகாரணம் என்று வினவ, அதற்கு ஒருவன் "அரசன் மருமகளை இன்னும் மூன்றுநாளைக்கெல்லாம் அரசன் மகனுக்கே கொடுப்பதாக நிச்சயம் பண்ணியிருந்தது. அவள் தலைமயிர் வளர சிகிச்சை செய்துகொள்ளப் போய் புழுப்புழுத்து இறந்தாள்" என்றான். இந்தப் புழுக்களைத்தான் வைத்திய வேஷத்துடன் வந்த சுந்தரி மூளை என்று மாறுபாடாய்ச் சொல்லிப் போனாள்.

குருடி இறந்தாளெனவே, ராஜகுமாரனுக்கு மிகுந்த சந்தோஷம் வந்துவிட்டது. அந்தப் பீடை நம்மை விட்டதென்று அரண்மனை வந்து சேர்ந்து தன் தாயார் தகப்பனார்களுக்கு அவர்கள் நாட்டுப்பெண்களைக் காட்டினான். அவர்களும் ராஜகன்னிகளைப் பார்த்து களிப்புற்று இப்பேர்ப்பட்ட ஸ்திரீகள் உன் ஜாதகரீதியாய் உனக்கிருக்கும்பொழுது குருடி ஏன் பிழைத்திருப்பாள். போனது போய் விட்டது, வைத்த முகூர்த்தத்தில் இந்த நான்கு பெயர்களையும் விதிவத்தாய் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்று ஏற்பாடுகள் செய்தார். அதேமாதிரியாய்க் கலியாணம் முடிந்தது. அந்தக் கலியாணத்திற்கு அந்த நான்கு பெண்களின் தகப்பனாரும் அவர் மந்திரியும் வந்திருந்தார்கள். நரபதி அரசனும் தன்னுடைய காணாமற் போன பெண்களைக் கண்டு "அம்மா, நான் பாவியானேன். என் பேரில் கோபிக்கக்கூடாது. அதெல்லாம் ஈசுவரன் மாயை" என்றான். கன்னிகளும் அதைக் கொஞ்சமேனும் மனதில் வைக்காமல் தங்கள் தகப்பனாருக்கும் மந்திரிக்கும் மரியாதை பண்ணினார்கள். பொன்னிதேசத்து ராஜகுமாரன் இந்த நான்கு பெண்சாதிகளுடன்

வெகுகாலம் பொன்னிதேசத்தையும், கன்னியாகுமரியையும் ஆண்டு வந்தான். வரலட்சுமி பிரசாதத்தால் இந்த நான்கு பெண்களுக்கும் அநேக பிள்ளைகள் பிறந்தன. சுந்தரி தனக்கு அதிக உபகாரம் பண்ணின குடியானப் பெண்ணை தனக்குள்ளேயே தோழியாக வைத்துக்கொண்டாள். குடியானவனையும் அவன் பெண்சாதியையும் அவரவர்கள் தரித்திர நிலைமையிலிருந்து நீக்கினாள்.

ஐந்தாவது,

சந்திரலேகை

பாண்டிய நாட்டில் கைவல்யம் என்றொரு நகரம் உண்டு. அதில் முத்துமோகனை என்றொரு தாசி இருந்தாள். ஈசுவரன் அவளுக்குத் தாசித்தொழிலை பூர்வ ஜன்ம கர்மத்தால் விதித்திருந்தும் அவள் அதில் எவ்வளவு நன்றாய் நடந்துகொள்ளவேண்டுமோ அப்படி நடந்துகொண்டு வந்தாள். தினந்தோறும் சிவதரிசனம், ஆலயப் பணிவிடைகள் இவைகள் ஒன்றும் செய்யாமல் சாப்பிடாள். இப்படியாக இவளிருக்கையில் ஈசன் இவளுக்கு ஒரு பெண் ரத்தினத்தை அளித்தார். அந்தக் குழந்தை கோடி சந்திரவடிவமாக இருந்தது. அதின் பெயர் சந்திரலேகை. முத்துமோகனைவுக்கு இந்தக் குழந்தைப் பெண் வெகுநாள் கழித்து உண்டானவளாகையால் இதின் செல்வத்திற்கும் சொல்லவேண்டுமோ. ஐந்து வயதானவுடன் குழந்தையைப் பள்ளிக்கூடத்திற்கு வைத்தார்கள். தாசித்தொழிலில் வெகு பெரிய மனிதர்கள் முத்துமோகனைவுக்குப் பழக்கம். ஆகையால் ராஜகுமாரன் மந்திரிகுமாரன் முதலான உயர்ந்த பிரபு பிள்ளைகளுடன் முத்துமோகனை மகளும் படித்துவந்தாள். தாயாருடைய நற்குண நற்செய்கைகளே சந்திரலேகைக்கும் நல்லொழுக்கத்தைப் பிறந்ததுமுதல் கொடுத்தனவென்று சொல்லலாம். அவைகளுடன்கூட அவள் செய்த பள்ளிக்கூட சாகவாசமும் மிகவும் நன்றாயிருந்தது. குணத்திலெப்படியோ, அதைப்போல் படிப்பிலும் சந்திரலேகை அதிக கெட்டிக்காரியா யிருந்தாள். ஒவ்வொரு பாடத்தையும் உபாத்தியாயர் ஒருதரம் சொல்லுமுன் படித்துக்கொள்வாள். இவளுக்குப் பாடம் சொல்லிக்கொடுப்பது உபாத்தியாயருக்கு பெரும் சந்தோஷமான காரியமாயிருந்தது. ஒருநாளாவது தனது பாடங்கள் படிப்பதிலும் சட்டங்கள் எழுதுவதிலும் தவறவேமாட்டாள். இப்படி

சந்திரலேகை எட்டு வருஷகாலம் படித்து பதின்மூன்ரும் வயதுக்குள் நான்கு வேதம் ஆறு சாஸ்திரங்களேயும் உபசாஸ்திரங்களேயும் சற்றுக்கொண்டாள்.

பெண்பாலாகையால் புருஷர்களேவிட அதிக சீக்கிரமாகவே யௌவன மிவளிடம் வந்தது. பதின்மூன்ருவது வயதில் பெரியவளானுள். பிறகு பள்ளிக்குப் போவது மரியாதை யல்லவென்று தாயார் சந்திரலேகையை வீட்டிலேயே நிறுத்திவிட்டாள். குருவினிடம் சென்று அவருக்குத் தக்க தக்ஷிணைகொடுத்து விடைபெற்றுவர தன் தாயைச் சந்திரலேகை கேட்க, அவள் அப்படியே செய்ய விடை கொடுத்து அளவற்ற திரவியத்தையும் அவளுடன் அனுப்பினுள். சந்திரலேகையும் குருவினிடம் சென்று முடிவணங்கி "என் ஐயனே, என்னிடமிருந்த அஞ்ஞான இருளேப்போக்கி கியானமார்க்கத்தைப் போதித்த குருவே! இத்தனை நாள் தாங்கள் என் படிப்பு விஷயமாய்ப்பட்ட சிரமத்திற்காக என்னுல் ஏதோ கொஞ்சம் பிரதியுபகாரமாக திரவியம் கொண்டுவந்திருக்கிறேன். எவ்வளவு கொஞ்சமாயிருப்பினும் பெற்றுக்கொண்டு எனக்கு விடைகொடுத்தருளவேண்டும்" என்று சொல்லி இருகரங்களேயும் கூப்பி நின்ருள். அந்த உபாத்தியாயருக்கு இவள் வடிவின்பேரில் புத்தி பிரவேசித்தது. கண்மூடிப்போய் வயது, குலம், கோத்திரம் ஒன்றின்பேரிலும் நிதானிக்காதவனுகி, "இவ்வளவு திரவியத்திற்காகவா நான் உனக்கு இப்படி படிப்பு சொல்லிக்கொடுத்தேன். இவைகளெல்லாம் எனக்குத் தேவையில்லை. உன்னை நான் கலியாணஞ் செய்துகொள்ளவேண்டுமென்று வெகுநாளாய் எண்ணங்கொண்டிருக்கிறேன். அதை நீ எனக்குப் பூர்த்திபண்ணி வைத்தால் போதும். இந்த பணம் காசு ஒன்றும் எனக்கு வேண்டவே வேண்டாம். எத்தனையோ பிரபுக்கள் என்னிடம் படித்துப் படித்து வீடு வாசல் எல்லாவற்றையும் பணத்தால் நிரப்பி வைத்திருக்கிருர்கள். அவைகளில் எனக்கு இச்சையில்லவே யில்லை. நீ என்னைக் கலியாணம் பண்ணிக்கொள்வாயாகில் அதுவே என் ஆவலின் பூர்த்தி" என்ருன். சந்திரலேகை தன் குரு தன்னைக் கலியாணம் செய்துகொள்ளவேண்டுமென்கிற எண்ணத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டு அநேக தர்மங்களே எடுத்து படிப்பு சொல்லிக் கொடுத்த குரு தந்தைக்குச் சமானமென்றும் தந்தை மகளேக் கலியாணம் செய்துகொள்வது அநியாயம் என்றும் வெகுவாய்ச் சொல்லி அந்த ஆசையை விட்டுவிடும்படிக்கும் தான் கொண்டுவந்த பணங்களே ஒப்புக்கொண்டு தனக்கு விடைகொடுத்தனுப்பும்படிக்கும் கேட்டுக்கொண்டாள். குருவின் எண்ணங்கள் மாறிப்போகவே அவர் ஒன்றும் சொல்லவில்லை. கடைசியாய் உபாத்தியாயர் தன்னிடம் எண்ணக்கூடாத எண்ணம் எண்ணியதற்கு அவளை வெறுத்து தான்

கொண்டுபோன அவ்வளவு பணத்துடனும் வீடு திரும்பிவந்தாள், முத்துமோகனு, இப்படி தன் பெண் வந்ததைப் பார்த்து அவளைக் காரணம் கேட்க, அவள் நடந்ததை நடந்தபடி சொன்னுள். அவள் தன் பெண்ணின் நடத்தையைக் கண்டு மெச்சி "இவ்வளவு நற்குண முள்ள நீ ஒரே புருஷனுக்குப் பெண்சாதியாகி சுகித்து வாழுவாய்" என்று தன் பெண்ணை வாழ்த்தினுள். உபாத்தியாயர் கொண்ட கருத்து ஒன்றும் நிறைவேருமற்போகவே, அவர் சந்திரலேகையை யாதொரு வாலிபர்களும் நாடிப் போகக்கூடாதென்றும் அவளை குட்டிச்சாத்திரி பிடித்திருப்பதாக பட்டணம் முடிய அபவாதம் பரவச்செய்தார். சாதாரணமாய் அவளைப்பார்க்க வரும் இரண்டொரு சிநேகிதர்கள்கூட அவள் வீட்டைவிட்டு வேறுவழியாய்ப் போகத் தலைப்பட்டார்கள். சந்திரலேகைக்கு இம்மாதிரி தன்னை அகாரணமான அபவாதங்களுக்கு உள்ளாக்குவது தன் பழைய குரு என்று தெரிந்திருந்தும், இப்படி எல்லாம் வரும்படி செய்வது ஈசன் என்று, அவருடைய பரிபூரண தயை என்று வரப்போகிறதென்று அதைத் தினந்தோறும் எதிர்பார்த்தவளாக இருந்தாள். உபாத்தியாயர் மனஸ்தாபத்தை ஒரு பொருட்டாக எண்ணவேயில்லை.

இப்படியிருக்க ஒருநாள் காஷாய வஸ்திரம் பூண்ட ஒரு பெரியவர் முத்துமோகனு வீட்டிற்கு வந்தார். அவரைப் பார்த்து அந்தக் கிழவி தன் பெண்ணுக்குப் பேய் பிடித்திருப்பதாகச் சொல்லி என்ன செய்தால் போகும் என்று கேட்டாள். அதற்கு அவர் ஒரு சதுர்த்தசி இராத்திரி நடுச்சாமவேளையில் மாவிளக்குக்கு வேண்டியவைகள் எடுத்துக்கொண்டு தான்மட்டில் தனியே சந்திரலேகை மயானத்திற்குப் போய் விளக்கிடுவாளானுல் அப்பேய் போய்விடும் என்ருர். அப்படியே அடுத்த சதுர்த்தசியில் செய்ய தாயானவள் தன் பெண்ணுக்கு உத்தரவு செய்தாள்.

கைவல்ய நகரிக்கடுத்த காண்டிபவனம் என்ற காட்டில் எட்டு திருடர்க ளிருந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் கொடிய பாவிகள். எப்பொழுதும் பிறர்களுடைய பணங்களைக் கொள்ளையிடுவது அவர்கள் தொழில். இந்தமாதிரி செய்யும் கொடுமைகளில் வதைத்தல் கொலை இவைகளுக்கு இவர்களஞ்சார்கள். சந்திரலேகை மயானத்திற்கு வர உத்தேசித்திருந்த அன்றையதினம் இவர்கள் எங்கேயோ போய் திருடி எட்டுப் பெட்டிகளில் முத்துக்களையும் மொகராக்களையும் எடுத்துக்கொண்டு வந்துகொண்டிருந்தார்கள். அப்பொழுது தான் சந்திரலேகையும் மயானத்திற்கு வந்து மாவிளக்கு ஏற்றிவைத்துக்கொண்டிருந்தாள். திருடர்கள் மயானத்திற்குக் கொஞ்சதூரம் வரும்பொழுதே இது ஏது இங்கு விளக்கு தெரிகிறது என்று யோசித்தார்கள். ஒருவன் கொள்ளிவாய் பிசாசு என்ருன். மற்றொருவன்

பாதி எரிந்து அணைந்து மறுபடி எரியும் பிணம் என்றான். இப்படி இவர்கள் பேசுவதை தூரத்திலிருந்தே சந்திரலேகை கேட்டு ஓகோ, இவர்கள் திருடர்கள்போலிருக்கிறது. நாம் மறைந்துகொள்ளவேண்டுமென்றெண்ணி உடனே தன் விளக்கு முதலியவைகளை அணைத்து ஒரு பள்ளத்தில் போய்ப் பதுங்கிக்கொண்டாள். திருடர்கள் கிட்ட வந்து பார்க்கும் முன்னமேயே தீபம் போய்விட்டவே, அவர்களுக்குச் சந்தேகமுண்டாயிற்று. மேலும் அவர்களுக்கு அன்று இராத்திரி வேறோரிடத்தில் திருடப்போக வேண்டியதாகவிருந்தது. முதலில் திருடிவந்ததை அங்கேதானே எங்கேயாவது நல்ல இடம் பார்த்துப் புதைத்து பத்திரம்பண்ணி வைக்கவேண்டுமென்பது அவசியமாக இருந்தது. மனிதர்கள் இங்கு யாராவது இருந்தால் நமது கன்னக்கோல் போய் அவர்களைக் கொல்லட்டுமென்று தங்கள் கன்னக்கோலை கூர்மையாகச் செய்து சுழற்றிவிட்டார்கள். பழைய காலத்துத் திருடர்கள் நடுக்காட்டில் சாணியைக் குவித்து வைத்திருந்து அதில் இடியின் சாரத்தை இடிவிழும்பொழுது இறக்கிக்கொண்டு அப்படி இறங்கின சாரமாகிற கோலைக் கன்னக்கோலாக உபயோகிப்பது வழக்கமாம். அக்கோலால் மலையையும் சத்தமன்றியில் துளையிடலாம் என்பது சித்தாந்தம்; அன்றியும் அந்தக் கோலை இருட்டிலும் விட்டால் அது வேற்று மனிதனிருக்கு மிடமறிந்து அவனைக் கொல்லும். அதுபோல இந்த எட்டுத் திருடர்களால் விடப்பட்ட கன்னக்கோலும் சந்திரலேகை முதுகில் வந்து கொஞ்சம் பாய ஆரம்பித்தது. அவள் அதை இருட்டிலிருந்தபடியே கப், சிப் என்று சத்தம்பண்ணமல் இழுத்து காலின் கீழ் போட்டு மிதித்துக்கொண்டு தனது முந்தாணியால் ரத்தத்தை அமுக்கினாள். கன்னக்கோலை வீசிவிட்டு திருடர்கள் தங்கள் எட்டுப் பெட்டிகளையும் ஒரு இடத்தில் புதைத்து மறுபடியும் திருடப் போய்விட்டார்கள். சந்திரலேகை பெட்டிகள் புதைக்கப்பட்ட இடத்தைப் பார்த்திருந்தவளாதலால், அந்தத் திருடர்கள் புறப்பட்டுப்போனதும் வெளியே வந்து அவைகளை எல்லாம் எடுத்துத் தன் வீடு கொண்டுவந்து சேர்த்தாள். அன்று இராத்திரியே அந்தப் பெட்டிகளிலிருந்த திரவியங்களையும் ரத்தினங்களையும் அப்புறப்படுத்தி பத்திரம் செய்துவிட்டு அவைகள் நிரம்ப இருப்புச் சட்டங்கள் நிரப்பி தன் கட்டிலின் கீழ் ஒவ்வொரு காலுக்கு இரண்டு பெட்டிகளாக வைத்து தன் கட்டிலின்மேல் வெகு சாக்கிரதையாய்ப் பெட்டிகளிலிருக்கும் பணங்களைக் காப்பவள்போல உறங்கினாள். முதுகிற்பட்ட காயத்திற்குமட்டும் ரகசியமாக சிகிச்சை செய்து கொண்டுவந்தாள். தன் முதுகிற் காயப்படுத்தின கன்னக்கோலையும் விடாமல் ஏதாவது ஒரு சமயத்திற்கு உதவும் என்று சாக்கிரதையாய்த் தன் பெட்டியில் வைத்துப் பூட்டிக்கொண்டாள்.

மறுநாள் காலமே அந்த எட்டுத் திருடர்களும் தாங்கள் பெட்டி புதைத்த இடம் வந்து பார்த்தார்கள். அங்கு பெட்டியும் காணேம், ஒன்றும் காணேம். வெகு மனவருத்தமுற்று யாரோ நேற்று மனிதர்கள்தான் இங்கு வந்திருக்கவேண்டும். அவர்கள்தான் நமது பெட்டிகளைக் கொண்டுபோயிருக்கவேண்டும். அவர்களைச் சுலபமாய் விடக்கூடாது. அவர்களைக் கொல்ல பிசகிப்போயிருந்தாலும் எங்கேயாவது ஒரு இடத்தில் நமது கன்னக்கோல் காயம்பண்ணியிருக்கும். அதைக்கொண்டு அவர்களை மெதுவாய் நாம் கண்டுபிடிக்கவேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டார்கள். இவர்கள் கொடிய பாவிகள் என்று முன்னமேயே சொல்லியிருக்கிறேமே. இவர்கள் எண்ணின காரியத்தைச் செய்தே முடிப்பார்கள். தங்கள் சொத்தைத் திருடினவனைக் கண்டுபிடிக்க இவர்கள் எல்லாரும் வெவ்வேறு வேஷம் போட்டுக்கொண்டு புறப்பட்டார்கள். அதில் ஒருத்தன் தைலம் விற்பவன்போல "தைலம் வாங்கவில்லையோ தைலம்; நல்ல தைலம் ரணத்தை ஆற்றும் தைலம்" என்று கூவிக்கொண்டு ஒரு தைல சீசாவையும் கையிலெடுத்துக்கொண்டு புறப்பட்டான். சந்திரலேகையுடைய வீடு விளக்குகிறவளுக்குத் தன் யஜமானி முதுகில் காயம் பட்டிருக்கிறதும் அவள் ஔஷதம் போட்டுக்கொள்ளுகிறதும் தெரியும்; ஆகையால் அவள் தைலம் விற்கிறவனை நிஜமான தைலக்காரன் என்றெண்ணி தன் யஜமானியினிடம் "ரணத்தை சொஸ்தம்பண்ணுகிற தைலம் கொண்டுவந்திருக்கிறுன்" என்று கொண்டுவந்து விட்டாள். சந்திரலேகைக்கு தைலக்காரனைக் கண்டதும் மனதில் திக் என்றது. வந்தவன் நியாயமான தைலக்காரன் அல்லவென்றும் மயானத்திற்கருகில் கண்ட திருடர்களிலொருவனுகத் தானிருக்கவேண்டுமென்றும் தோன்றிவிட்டது. அவனும் இவளைப் பார்த்தவுடன் மயங்கி "ஆகா உனக்கு இவ்வளவு அழகைக் கொடுத்த ஈசுவரன் இவ்வளவு சாமர்த்தியத்தையும் கொடுத்தானு. உன்னை நான் லேசில் விடுகிறதில்லை கொண்டுபோய் விடுகிறேன்" என்று மனதில் நினைத்துக்கொண்டான். சந்திரலேகை மனதில் விகற்பமடைந்தவள்போல் காட்டிக்கொள்ளாமல் கொஞ்சம் எண்ணெய் வாங்கிக்கொண்டு அவனை அனுப்பிவிட்டாள். போன தைலக்காரன் மற்ற ஏழு பெயர்களையும் சேர்த்து அவர்களிடம் தான் கண்டு வந்த பெண்ணை வர்ணித்து வர்ணித்துச் சொல்லி "இன்று இரவே நாம் போய் அவளைத் தூக்கிக்கொண்டு வந்துவிடுவதுடன் அவள் நம்மிடமிருந்து கொண்டுபோன பெட்டிகளையும் எடுத்துவந்து விடவேண்டும்" என்று சொன்னுன். அப்படியே செய்ய எல்லாரும் சம்மதித்தார்கள். சந்திரலேகை திருடர்களுடைய வெற்றுப் பெட்டிகளில் இருப்புச்சட்டம் நிரப்பி தன் கட்டிலின்கீழ், கட்டிற்காலுக்கு இரண்டாக போட்டுக்கொண்டு கட்

டிவின்பேரில் உறங்குவாள் என்று முன்னமேயே சொல்லியிருக்கிறோமே. அன்று இரவும் அப்படியே அவள் தூங்கிக்கொண்டிருந்தாள். திருடர்கள் எட்டுப்பெயர்களும் தங்கள் இந்திரசால வித்தையால் அந்த அறைக்குட் பிரவேசித்து சந்திரபிம்பம்போல் பிரகாசித்துக்கொண்டு தூங்கும் சந்திரலேகையைக் கண்டு கண்கூச்சுண்டு நின்றார்கள். "இவளை எங்கு விட்டோம். முதலில் இவள் நம்மிடமிருந்து கொண்டுவந்திருக்கும் பெட்டிகளைக் கொண்டுபோய் நமது சுரங்கத்தில் வைத்துவிட்டு வருவோம்" என்று நினைத்து ஆளுக்கு ஒவ்வொரு பெட்டியாய் எடுத்துக்கொண்டு தங்கள் சுரங்கத்தைப் பார்க்கப் புறப்பட்டார்கள். பெட்டிகள் கனமாகவே இருந்தபடியால் தாங்கள் கொள்ளையடித்து வைத்த பணங்கள் அவைகளிலிருந்ததாகவே நினைத்துக்கொண்டு போனார்கள். இவர்கள் குகை காண்டிபவனத்தின் மத்தியிலிருந்தது. அவ்விடம் போய்ச்சேர காலைவரையில் பிடித்தது. சூரியோதயமானதும் தங்கள் குகை முன்நின்று வெளியிலிருந்த பெரும்பாறையில் தங்கள் தங்கள் பெட்டிகளைப் போட்டு உடைத்தார்கள். பெட்டிகளிலெல்லாம் இருப்புச் சட்டங்களும் தகடுகளுமிருக்கக் கண்டு வருத்தப்பட்டு ஆச்சரியம்! ஆச்சரியம்! நமது பணங்களை எடுத்துக்கொண்டு மோசம் செய்துவிட்டாளே, இவளை விட்டுவிடக்கூடாது என்று தீர்மானித்து, மறுநாள் இரவு கட்டிலுடன் இவளைத் தூக்கிப்போக தீர்மானித்துவிட்டார்கள்.

சந்திரலேகையும் மறுநாள் காலமே பெட்டிகள் போயிருக்கக் கண்டு, திருடர்கள் வந்து போயிருப்பதாகத் தெரிந்துகொண்டாள். இனி நாமும் சாக்கிரதையாக இருக்கவேண்டும் என்று நினைத்து தன் முதுகில் மயானத்தில் காயம்பண்ணின கன்னக்கோலால் ஒரு கூர்மையான கத்திபண்ணி அதை இடுப்பில் வைத்துக்கொண்டாள். இருநூறு வீசை மிளகாய் வற்றல் வாங்கி பொடி செய்து ஒரு பெரிய சாக்குப் பையிலடைத்து வைத்தாள். வழக்கம்போல் தனது கட்டிலின்பேரி லுட்கார்ந்து தாம்பூலம் போட்டுக்கொண்டு பிறகு உறங்கு றவள்போல் மேல்துணியால் மூடிக்கொண்டு படுத்திருந்தாள். நடு ாத்திரி வேளையில் அந்த எட்டுத்திருடர்களும் அவளறைக்குள் குந்து கட்டிலை செங்குத்தாகப் பக்கத்திற்கு இரண்டு பெயராகத் ாக்கிக்கொண்டார்கள். பட்டணத்தை விட்டுக் கடந்து தங்கள் ண்டிபவனத்தில் நுழைந்தார்கள். கட்டில் தலையில் ஏறிவிடவே ந்திரலேகை தங்கள் கைவசப்பட்டதாக எண்ணிக்கொண்டார்கள். ந்தச் சிறுபெண் நம்மை இவ்வளவு மோசம் செய்தாளே இவளைக் ட்டில் சகிதம் ஒரு பாறையில் போட்டு அலற அடிக்கவேண்டும் ன்று தீர்மானித்துக்கொண்டார்கள். இவர்கள் இப்படி நினைத்தி க்கத் தெய்வம் ஒன்று நினைத்திருந்தது. மேலிருந்த சந்திரலேகை

காட்டுவழியிலிருபக்கங்களிலும் மாமரம் தழைத்து காயும் பிஞ்சுமாக தொங்கக் கண்டு பாரம் குறைந்ததாக தெரியாமலிருக்க மாங்குலை களைப் பறித்துப் பறித்துக் கட்டிலின்பேரில் வைத்துவிட்டுத் தான் ஒரு மாமரத்தின் மீது ஏறிக்கொண்டாள். திருடர்கள் சந்திரலேகை தலையிலிருப்பதாகவே எண்ணிக்கொண்டு வெகு சந்தோஷமாய் வழி நடந்தார்கள்.

மரத்தின்பேரில் சந்திரலேகை சூரிய உதயமாகும் வரையில் காத்திருந்தாள். வெளிச்சம் ஆனவுடனே தான் தொத்தியிருந்த மரத்திற்கு அடுத்த மரத்தின்கீழ் பெரும்புதர் ஒன்று அடர்ந்திருக்கக் கண்டாள் அந்த க்ஷணமே தானிருந்த மரத்தின் வழியாகவே அடுத்த மரத்திற்குத் தொத்தி அதின் வழியாய்க் கீழே புதருக்குள் இறங்கிவிட்டாள் இப்படி இவள் இங்கிருக்க, அந்த எட்டுத் திருடர்களும் கட்டிலை சகிதம் தங்கள் பாறைமுன் வந்து நின்று அதன்பேரில் தொப்பென்று கட்டிலைப் போட்டார்கள். மாங்காயும், மாம்பிஞ்சும் விழுந்ததே யன்றி // சந்திரலேகையைக் காணோம். உடனே அவர்களுக்கு பெரும் சந்தேகம் உண்டாயிற்று. இவள் மானிட ஸ்திரீயா அல்லது துர்த்தேவதையா என்று சந்தேகித்தார்கள். அதற்கு ஒருவன் அவ பெண்தான். தேவதையுமில்லை ஒன்றுமில்லை. அவளைக் கண்டுபிடிக் கிறது என்றான். எல்லாரும் அவளைக் காடுமுடிய தேட ஆரம்பித் தார்கள். மாம்பிஞ்சுகளையும், காய்களையும் பறித்து வைத்திருந்தபடி யால் இவள் மாமரத்தின்மீது தானிருக்கவேண்டுமென்று ஒருவன் நினைத்து மரங்களின்மீது ஏறிப்பார்த்துக்கொண்டே அஸ்தமிக்க இரண்டு நாழிகைப் பொழுதுக்கெல்லாம் இவளிருந்த மரத்தின்மேல் வந்துவிட்டான். கீழ்கண்ணை விரித்து பார்த்தபொழுது சந்திரலேகை அங்கு புதரி லுட்கார்ந்திருக்கக் கண்டான். இப்படி ஆள் தன்னைக் கண்டுவிடவே, இனி நாம் பேசாமலிருந்தால் சரிப்படாதென் றெண்ணி அவனுக்குச் சந்திரலேகை சைகை காட்டி நீயே என குப் புருஷன், நானே உனக்குப் பெண்சாதி. நான் இங்கிருப்பது அவர்களுக்குத் தெரியவேண்டாம். நீமாத்திரம் இறங்கிவா, நாம் சு மாக இருப்போம் என்றாள். இதைக் கேட்டதும் மரத்தின்மேலிருந் திருடன் மனம் களித்தது. சந்திரலேகை தன் பெண்சாதி என் நினைத்து நினைத்து மனமகிழ்ந்து தான் கண்டதை ஒருவருடன் சொல் லாமற் புதரில் குதித்துவிட்டான். அவன் அங்கு வந்ததும் அவ அவனுக்கு வெற்றிலை பாக்குக் கொடுத்து போட்டுக்கொள்ளச் சொ ளள். தானும் போட்டுக்கொண்டாள். என் நாக்கு நன்றாய்ப் பற் யிருக்கிறது. உன் நாக்கு என்னமாயிருக்கிறது பார்ப்போம் என் திருடனை அன்புடன் வேண்டிக்கொண்டாள். அவன் மனம் பூரித் நாக்கை நீட்டினன். உடனே தன் இடுப்பிலிருந்த கத்தியை எடுத்

அடிநாக்குமட்டும் அறுத்து கண் காதுகளை நோண்டி புதருக்கு வெளியில் தள்ளிவிட்டாள். உடனே இருட்டாய்விட்டது. இனி இங்கிருக்கக்கூடாதென்று மெதுவாய் வெளியேவந்து தன் வீட்டைநோக்கி ஓடிவிட்டாள்.

பாக்கி எழு திருடர்களும் தேடாத இடமெல்லாந் தேடி தங்கள் குகையில் இரவைக் கழிக்க வந்து சேர்ந்தார்கள். எட்டாவது திருடன்மட்டில் வந்து சேரவில்லை. இவன் அந்தப் பெண்ணைக் கண்டு பிடித்து தானே தனிமையில் அவளை எங்கேயோ அழைத்துப் போய் விட்டாற்போலிருக்கிறது. ஆயினும் நாளை பார்ப்போம் என்று அன்று இராப்பொழுதைக் கழித்தார்கள். பொழுது விடிந்தது. மறுபடியும் காடுமுடிய தேடும்பொழுது எட்டாம் திருடன் நாக்கு மூக்குப்போய் இறந்துகிடக்கக் கண்டார்கள். உடனே யோசித்து இந்தப் பெண்தானிப்படி செய்திருக்கவேண்டும், இவளை எப்படியாவது பிடித்துக் கொண்டுவந்து கண்டங்கண்டமாய் வெட்டவேண்டுமென்று தீர்மானித்திருந்தார்கள். சந்திரலேகையோ நாம் நேற்று ஒரு திருடனைக் கொன்று வந்திருக்கிறோம். மற்றவர்கள் நம்மை நாடி வருவார்கள். நாம் சாக்கிரதையா யிருக்கவேண்டுமென்று எண்ணி இருப்புப் பட்டையத்தால் ஒரு அறை கட்டிக்கொண்டு அதிலுட்கார்ந்தாள் திருடர்கள் பொழுது போனதும் சந்திரலேகை வீடு நாடி வந்தார்க . அவளோ கையில் கன்னக்கோலாற் செய்யப்பட்ட கத்தியும் ம ாகாய்த் தூளும்மட்டில் வைத்திருந்தாள். திருடர்கள் இவள் இரு பறையி லிருக்கிறதைக் கண்டு, சிரமப்பட்டுக் கன்னம்வைத்து ஒவ் ாருவராகப் புகுவோமென்று கருதி முதல் முதலில் ஒருவன் தன் த லைய கன்னவாசற்குள் விட்டான். உள்ளில் இவர்கள் வரவை எத் பார்த்திருந்த சந்திரலேகை தன்னிடமிருந்த கன்னக்கோல் சூரியா இவன் மூக்கை அறுத்து மிளகாய்த்தூளை யப்பினள். அவன் "ந ந, ந, ந," என்று சொல்லிக்கொண்டு வெளியில் வந்தான். ஆ ா அவ்வளவு தைரியமா அவளுக்கு. நான் போகிறேன் என்று மற் ொருவன் புகுந்தான். அவனும் மூக்கறுபட்டு "ந, ந, ந, ந," எ ் வெளியில் வந்தான். இம்மாதிரி இவ் வேழுபெயர்களும் மூக்கு ாய் மிளகாய் வற்றல் எரிச்சலுடன் அங்கிருந்தால் மானம் கெட் போகும் என்று அப்பொழுதே தங்கள் குகைக்கு ஓடிவிட்டார்கள். ங்கு சௌக்கியமாக பத்து இருபது நாள்வெளிப்புறப்படாமல் க ்தை ஆற்றிக்கொண்டிருந்தார்கள்.

இந்தத் திருடர்களால் அட கவல்ய நகரத்தில் நடந்த கொள்ளைகள் கணக்கேயில்லை. இவர்க பார் பிடித்துக்கொடுக்கிறார்களோ அவர்களுக்கு நல்ல கிராமங்கள் மானியம் விடுகிறதாக அந்த ஊர் அரசன் சொல்லியிருந்தான். தி ்களும் மூக்குகாயம் ஆறிவிடவே,

இவளை லேசில் விடக்கூடாது, நமது குகைக்குத் தந்திரமாக அழைத்துப்போய்க் கொன்றுவிடவேண்டும் என்று நினைத்து, என்ன உபாயம் அதற்கு என்று யோசித்தார்கள். ஒருவன் சதிர் வைக்கிறது. ஒரு நிமிஷ ஆட்டத்திற்கு நூறு வராகன் என்று அவளை அழைத்துவந்து கொன்றுவிடுகிறது என்றான். சரி என்று ஒப்புக்கொண்டு எல்லாரும் அவளிடம் சென்று காட்டில் சதிர் வைக்கிறதாகவும், அதில் அவள் வந்து ஆடினால் நிமிஷ ஆட்டத்திற்கு நூறு வராகன் கொடுப்பதாகவும் சொன்னார்கள். அவள் அப்படியே செய்ய ஒப்புக்கொண்டு நாளையும் குறிப்பிட்டு அவர்களை யனுப்பிவிட்டாள்.

பின்பு அரசனை [illegible]ரவ[illegible]த்து தான் அந்தத் திருடர்களைப் பிடித்துத் தருவதாகவும், கொஞ்சமேனும் தாக்ஷணியப்படாமல் அவர்களைக் கொன்றுவிட வேண்டுமென்றும் அரசனிடம் தெரிவித்தாள். அரசன் அப்படியே ஒப்புக்கொண்டான். பின்பு தான் போகும் இடத்தைக் குறிப்பிட்டு என்னுடன் மத்தளமடிக்க தாளம்போட போர்வீரர்களே மத்தளக்காரன் தாளக்காரன்போல வரவேண்டும். நான் ஆட ஆரம்பிக்கும்பொழுது அவர்கள் பிரமித்து நிற்பார்கள். உடனே அவர்களைப் பிடித்துக் கட்டிக்கொண்டு வந்துவிடவேண்டுமென்றாள். அரசன் அப்படியே சம்மதித்து தானே வாத்தியக்காரனாகி தனது சிப்பாய்களில் தேர்ந்தவர்களில் இருபது பெய[illegible]களைத் [illegible]தன்னுடன் சிற்று வாத்தியக்காரர்களாக சேர்த்துக்கொண்[illegible]டான். எல்லாரும் குறித்த தினத்தில் காட்டில் சதிர்வைக்க சந்தி[illegible]லேகையை அழைத்துக்கொண்டு வந்து சேர்ந்தார்கள். வழியெல்ல[illegible]ம் சந்திரலேகை தான் திருடர்களிடம் அகப்பட்டுக்கொண்டு படும்[illegible]ஷ்டங்களையும், தான் செய்த தந்திரங்களையும் சொல்லிக்கொண்[illegible] போனாள். அரசன் அவைகளை எல்லாம் கேட்டு வியப்புற்று இ[illegible]படியும் ஒரு ஸ்திரீ [illegible] குலத்தில் பிறந்தது உண்டா என்று ஆன[illegible]மடைந்தான். இப்படி பேசிக்கொண்டே காடுவந்து சேர்ந்து சதி[illegible] பந்தலில் புகுந்தார்கள். இவளாட்டத்தைப் பார்க்க திருடர்கள் [illegible]க்கறுபட்டவர்கள் ஏழு பெயர்களும் பந்தலில் ஒரு பக்கத்தில் [illegible]ட்கார்ந்திருந்தார்கள். சந்திரலேகை தன் பரிவாரங்களுடன் [illegible]வர்கள் முன்வந்து நின்று வணங்கி தன் நாட்டியத்தை ஆரம்பித்[illegible].

எப்படியும் இவளைக் கொன்று[illegible]ப்போகிறோம், இவள் ஆட்டத்தை முற்றிலும் பார்த்தே கொ[illegible]ாம் என்று திருடர்கள் விழிகளை விரள விரள விழித்துக்கொ[illegible]ட்கார்ந்திருந்தார்கள். தா, தை, தோம் என்ற தாளங்கள் விழவே[illegible]வைகளே சமிக்கையாதலால், எல்லோரும் தாளமேளங்களை [illegible]துவிட்டு ஏழு திருடர்களையும் திடீர் என்று கட்டிக்கொண்டா[illegible] அவர்களும் தங்கள் தங்கள் ஆயு

நங்களை எடுத்துக்கொள்ள அசந்தர்ப்பமாகவே போய்விட்டது. கொடிய கள்ளர்கள் இம்மாதிரி பிடிபட்டுவிடவே, இனி அரை நாழிகை கூட இவர்களை வைத்திருக்கலாகாதென்று அங்கேயே கைவல்ய நகரத்தரசன் அவர்களைக் கழுவிலேற்றிவிட்டார்.

சந்திரலேகையின் புத்தி, குணம், தைரியம் இவைகளைக் கண்டு அரசன் மனம்பூரித்து அவள் தாசிகுலத்தில் பிறந்திருந்தபோதிலும். உத்தமியாயிருந்தபடியால் தன் பிள்ளையாகிய ராஜகுமாரனுக்கே விவாகம் செய்வித்தார். இவளும் ராஜகுமாரனும் ஒரே பள்ளிக்கூடத்தில் படித்து பாலியம்முதல் சினேகிதர்களாக இருந்தபடியால் பிறகு ஈசுவரன் கொடுத்த கிரஹஸ்தாசிரமத்தி[illegible] புருஷன் பெண்சாதிகளாக வெகு அன்னியோன்னியமா[illegible] நெடுங்காலம் வாழ்ந்திருந்தார்கள்.

ஆறாவது,
அதிரூபன் கதை.

இராமநாதபுரம் சீமையில் ஸத்தியவாக் என்ற ஒரு பிரஸித்த ஜோஸியரிருந்தார். அவர் பெயரும் கீர்த்தியும் தவறாது ஜாதகங் கணிக்கப்பட்டவர் என்றும், பிசகாது ஆரூடம் சொல்லப்பட்டவர் என்றும், நாடெங்கும் பரவியிருந்தன. எழுகடல்சூழ்ந்த தேசங்களிலிருந்தும் ஆயிரக்கணக்காய் தினந்தோறும் ஜனங்கள் அவரை ஜோஸியம் கேட்க எடுபட்டுவருவது வழக்கம். ஸத்தியவாக்கோ யார்வந்து கேட்டபோதிலும் சலிக்காமல் ஜோஸியஞ் சொல்லிவருவார். அவர் வழக்கம் எப்படி என்றால்:—

காலமே எழுந்திருந்து ஸ்நானஞ்செய்து நித்தியக் கடன்களை முடித்துக்கொண்டு ஸூர்யோதயத்துக்கெல்லாம் தெருத்திண்ணையில் வந்துட்காருவார். யார்வந்து கேட்டாலும், பணக்காரன் ஏழை என்பதைப் பார்க்காமலும், உயர்ந்தஜாதி தாழ்ந்தஜாதி என்பதைப் பாராட்டாமலும் எல்லாருக்கும் ஒரே மாதிரியாய் ஜோஸியஞ் சொல்லுவார். ஒருவனிடமிருந்தாவது ஒரு தூசுகூட வெகுமதிகவாவது, தான் சொல்லுவதற்கு கூலியாகவாவது வாங்கவேமாட்டார். இம்மாதிரி 10 நாழிகை வரையில் ஜோஸியஞ் சொல்லிவிட்டு புறம் ஒரு செம்பை கையிலெடுத்துக்கொண்டு பத்துவீடு பிச்சை வார். கிடைத்ததைக் கொண்டுவந்து தன் மனையாளிடங் கொடுப்

பார். அதை அந்த அம்மணி சமையல்செய்து தன் புருஷனுக்கு முந்தி அமுதளித்து மிகுந்ததைத் தான் ஸந்தோஷமாய்ப் புசிப்பாள். மத்தியானமும் வந்தவர்களுக்குக் காலமே எப்படியோ அப்படியே ஜோஷியஞ் சொல்லுவார். இரவானவுடன் பத்துவீடு தர்மபிட்சை எடுத்துவருவார். அதைத் தானும் தன் மனைவியுமாய்ப் புசிப்பார்கள். இவருடைய வித்தையையும் இவருடைய ஸாது குணத்தையும் கண்டு எல்லாரும் ஆச்சரியப்படுவார்கள். பணத்தை திரணமாக் பாவித்திருந்தார். சுற்றி பதின்காதவழிவரையில் சத்தியவாக் என்றால் அரசன்கூட கைகட்டி நின்று வணங்கிப்போவான். அப்படியாய் தோட்டிமுதல் தொண்டமான்வரையில் இராமநாதபுரம் ஜோஷியரைக் கண்டு மரியாதை செய்தார்கள். இவருக்கோ இந்த உலகத்தில் ஒரே பந்து. அது யார் என்றால் துளசி என்ற அவர் மனைவி. அவள் மகா பதிவிரதை. புருஷன்மனங் கோணமல் ஒவ்வொரு விதத்திலும் நடப்பாள். படித்தவளுமாம். அழகுக்கோ குறைவில்லை. பொறுமை, அடக்கம் இவைகள் அவளிடம் குடிகொண்டிருந்தன. எந்த சமயத்தில் தன் புருஷன் எவ்விதமாய் கட்டளையிடுவாரோ, அவ்விதமாய் நடந்துவருவாள். ஒரு நாளாவது அவள் முகங்கோண ஸத்தியவாக் கண்டதேயில்லை.

இம்மாதிரி ஸத்தியவாக்கும் துளசியும் பார்க்கிறவர்களுக்கு எவ்வளவு ஏழைகளாக இருந்தபோதிலும், வெகு ஆனந்தமாகவும், வெகு அந்நியோந்நியமாகவும் இராமநாதபுரத்தில் வசித்துவந்தார்கள். அவர்களுடைய ஆஸ்தி எல்லாம் அவ்வூரில் ஒரு பழையகாலத்திய வீடு. அதில் 4, 5 அறைகளில் சோதிடசாஸ்திர மடங்கிய அநேக ஏட்டுப் புஸ்தகங்களிருந்தன. இப்படி இவர்கள் வெகுநாள் அந்த ஊரில் வசித்துக்கொண்டிருக்கையில் ஒருநாள் ஸத்தியவாக்கின் மனைவியான துளசி பின்வருமாறு தனக்குள்ளேயே ஆலோசிக்கலானாள்:—"நமது பிராணநாதரோ ஏழையானாலும், பணக்காரனானாலும் ஏகரூபமாக விரும்பி நாடத்தக்க ஒரு சாஸ்திரத்துக்கு அவதாரபுருஷர்போல் வெகுகாலமாய் விளங்கிவருகிறார். இந்நகரத்து அரசனான சேதுபதி முதல் அதிக ஏழைவரையில் எல்லா சனங்களும் நமது நாதனை தினந்தோறும் நாடிவந்து ஜோஷியம் கேட்டுப் போகிறார்கள். நமது நாதன் பெயர் கேட்டமாத்திரத்தில் எல்லாரும் கை கட்டி வணங்குகிறார்கள். ஆனால் யாரிடமாவது அவர்கள் தங்களுக்குத் தானாகவே கொடுத்தாலும் ஒரு தூசுகூட வாங்காமல் ஸத்தியவாக்கோ திரிமிரண்டுவேளை பிச்சை எடுத்து வருகிறார். அதைக்கொண்டு ந காலட்சேபம் செய்யவேண்டியிருக்கிறது. இதன்காரணம் எ இவர்மட்டில் வாயை யசைத்தால் வீடெல்லாம் பணமாகக் கு விடாதா? உலகத்தார்களைப்போலே நமது ஸம்ஸாரமும் ஒரு

யும் ஒரு புருஷனுமுள்ளதாக ஆயிற்றே. நமக்கும் ஸௌ என் கூடாது. நல்லது இப்பொழுது சம்பாதிக்காமல் எப்பொ சம்பாதிக்கப்போகிருர். மனிததேகம் எப்பொழுதும் ஒரேமாதி யிருக்கப்பட்டதல்லவே. நாளை உடம்பு சரியில்லை என்று உட் கார்ந்தால் ஒரு கவளமன்னம் நமக்கு யார்கொண்டுவந்து கொடுக்கப் போகிருர்கள். நாடுமுடிய ஜோஸியம் சொல்லும் நமது நாதனுக்கு இந்த யோசனையில்லாமலிருக்குமா? இருக்கத்தான்வேண்டும். இருந் தபோதிலும் இவர் செய்யுங் காரியத்துக்கும் ஏதோ காரணமு மிருக் கத்தான்வேண்டும். அதை நாம் இன்று கேட்டறிவோம்.''

என்றிவ்வாறு துளசி தனக்குள்ளேயே தீர்மானித்துக்கொண் டாள். ஒழிந்தபொழுது இராப்பொழுது. அப்பொழுதுதான் கேட்க நல்ல தருணம் என்றும் நிச்சயித்திருந்தாள். அன்று பகலும் முடிந்தது. வழக்கப்படி இராக்கால சாப்பாடுமானபிறகு எப்போதும்போல் தனது புருஷன் ஸமீபத்தில் துளசி வந்து உட்கார்ந்தாள். எந்த நிமிஷத்தி லிவள் மனதில் தான் தன் புருஷனைச் சில கேள்விகள் கேட்கவேண்டுமென்ற எண்ணம் தோன்றிற்ருே, அப்பொழுதே இவள் முகத்தில் எப்பொழுதும் காணப்படும் சந்தோஷம் ஓடிப் போய்விட்டது. அதிபுத்திமானுன ஸத்தியவாக்குக்கு அது புலப் படாமலிருக்குமா? தான் ஒருபொழுதாவது தன் அருமை நாயகியை மனவருத்தமுண்டாகும்படி செய்ததில்லையே. எப்பொழுதும் என் னிடம் அதி விசுவாசமுள்ள இவளின்றிரவு ஏனிப்படி யிருக்கிருள் என்று ஜோஸியரும் தனக்குள்ளேயே ஆலோசித்துப் பார்த்தார். அவ ருக்கு ஒன்றுந் தெரியவில்லை. உடனே அவளையே கேட்கத் தீர்மா னித்து அவளைப் பார்த்து,

''என் உயிருக்குயிரான பெண்மணியே! இன்றிரவு உன் முகம் வாடியிருக்கிற காரணம் என்ன? நாம் வசிக்கும் பரிசுத்தமான வாஸ மோ நம்மைக் கண்டு தெய்வங்கூட அஞ்சி நடக்கவேண்டும். அப் படியிருக்க, நம்மை ஒரு மானிடனும் அவமதித்திருக்கமாட்டான். இது என் நிச்சயம். இது பொய்யாய் உன்னை யாராவது அவமதித்தி ருந்தால் அதை வெளிப்படுத்து, அவன் யாராயினும் சரி, இந்த நிமி ஷத்துடன் அவன் வாழ்வு அற்றது. நாம் எவ்வளவு ஏழைகளாக இருந்தபோதிலும், நமது செல்வாக்கும், கீர்த்தியும் எங்கு போயின'' என்ருர்.

இம்மாதிரி ஸத்தியவாக் ரோஷத்துடனும் கோபத்துடனும் சொன்னதைக் கேட்ட அவர் பத்தினி, அவனை அன்றிரவு அம்மாதிரிப் பேசும்படி தான் தனது புத்தியின்மையாலே செய்ததற்கு வெட்கி, இனி நினைத்ததை உள்ளபடி சொல்லாவிடில் நமது பிராணநாதன்

ரம் கோபிப்பார் என்பதை நன்றாகக் கண்டுகொண்டு, அவரைப் பார்த்து "மகா பிரபுவே! நான் தங்களுடைய தர்மபத்தினியாயிருக்கும் பாக்கியத்தை யடைந்திருக்கையில், என்னை தேவன் கூடக் கண்ணெடுத்துப் பார்ப்பானா? தங்கள் நற்குணம் என்னைக் காக்கும் தேவதையாயிருக்கும்போது, யார் என்னை நேராக நின்று பார்க்க முடியும்? உங்கள் பெயரைச் சொல்லிக்கொண்டு பேய் பூதங்கள் நிறைந்த பிரேத பூமிகளைக்கூட நிர்ப்பயமாக நான் வலம்வருவேன். நெருப்பு மென்னைத் தீண்டாது. அவ்வளவு மகிமை தங்களிட மிருக்கிறதென்பது எனக்கே நன்றாய்த் தெரியும். ஆனாலின்று என் மனதில் ஒரு சிறு சந்தேகமுதித்தது. நீதியிலும், குணத்திலும், வித்தையிலும், பரிசுத்தத்திலும், எவ்வளவு மேன்மையை தாங்களடைந்து விளங்குகிறீர்களோ அதற்குமேல் பணத்திலும் விளங்கலாமே. தாங்கள் மனதுமட்டும் வைத்தால், அரசனுக்குமேல் நாமும் மாளிகை கட்டி வசிக்கலாமே. அதல்லாது நாம் நித்திய தரித்திரர்களாய் வாழ்வது யாதுகாரணத்தாலோ? அதிகமாய் வேண்டாம் என்றாலும், நித்தியம் பிச்சை புகுவதையாவது நிறுத்தக்கூடாதா? இதே சந்தேகம் என் மனதிலின்றுதான் தோன்றி என் சுமுகத்தை மாற்றிற்று. இதற்குக் காரணம்மட்டில் கிருபைசெய்து என் மனதின் சந்தேகத்தை நிவர்த்திபண்ணவேண்டும்'' என்றாள்.

இவள் சொல்லி வாய் மூடினதும், தனது பெண்சாதியின் பேதமைத்தனத்துக்கு கொல் என்று ஸத்தியவாக் சிரித்து பின் வருமாறு சொல்லலானார்:—

"கேள் என் சிநேக ஸாரமே! கடைசியாய் நீயும் உலகத்துப் பெண்களுக்குள் ஒருத்தியானாயே என்பதுதான் என் வருத்தம். நானுன்னை இதுவரையில் வெகு ஞானி என்று எண்ணியிருந்தேன். 'பேதமை என்பது மாதர்க் கணிகலம்' என்பது உனக்கும் ஒரு அணிகலமாகத்தா னிருக்கிறது. ஜோஸியத்தில் பிறந்ததுமுதல் இது வரையில் உழைத்து நம்முடைய சொந்த ஜாதகங்களை நான் கணிக்கவில்லை என்று ஆலோசித்துவிட்டாயா, என்ன நீ? பணம் சம்பாதிப்பதாலும், அதைச் சேர்த்துவைப்பதாலும் நமக்கு ஏதாவது சுகம் உண்டென்பதைமட்டில் நானறிந்திருந்தால் எவ்வளவோ இதற்குள் சேர்த்திருக்கமாட்டேனா? நான் என்ன மூடனா? பணம் என்பது கடைசியாய் என்ன? ஒரு நிமிஷங்கூட ஒருவனிடமும் நிலைத்து நிற்கா நீர்க்குமிழி. கொஞ்சம் கையில் வந்தால் இன்னும் வரவேண்டும், இன்னும் வரவேண்டும் என்ற ஆசைப் பிசாசு ஆளை மூடிக்கொள்ளும். ஏழையாயிருக்கிறவன் சில வேளை நன்றாய் வயிறு நிரம்பவாவது சாப்பிடுவான். பணம் ஏற ஏற,

அதிகப் பணம் சேர்க்க ஆசையு மேற ஏற, பணக்காரனுக்கு வ
யிரம்ப சாப்பிடும் தாராளங்கூடப் போய்விடும். பணத்தாசை பிடி
த்தோ, மற்ற குணங்கள் எல்லாம் ஓடிவிடும். பந்துக்களைக் கண்
டால்கூடத் துரத்துவான். எவ்விதத்திலாவது பணம்வந்தாற் போது
மென்று பணத்தாசைகொண்டவன் பாவங்கள் செய்வான். பொய்,
கொலை முதலிய துஷ்ட கிருத்தியங்களுக் கஞ்சான். பணத்தாசை
யால் சிசுக்களை எத்தனை பெயர்கள் கழுத்தைத் திருகிவிடுகிறார்கள்.
பணத்தாசையால் எத்தனை பொய்ப்பத்திரங்கள், பொய்ச்சாட்சிக
ளுண்டாகின்றன. அக்கினிக்கு எத்தனை கட்டைபோட்டாலும்
எப்படி திருப்தியில்லையோ அதுபோலவே பணப்பேய்ப் பிடித்தவ
னுக்கு எவ்வளவு பொருள் வந்தாலும் திருப்தியில்லை. ஐயோ
இன்னும் பணம் சேரவில்லையே என்று ஸதா அழுதுகொண்டே
யிருப்பான். பணத்தாசையால் சேரும் பாவங்களைக் கழுவ கங்கை
ஜலத்தாலும் முடியாது. சமுத்திர ஸ்நானத்தாலும் முடியாது. என்ன
பரிசுத்தனாகத்தானிருந்தாலும், பணம் தேடுகிறது என்ற எண்ணம்
வந்துவிட்டால் ஏதாவது ஒருவித பாபம் செய்யாமல் முடியவே
முடியாது. இம்மாதிரி பாபம் செய்து ஏற்கனவே நொந்திருக்கும்
ஜன்மத்தை இன்னும் நோகடிக்க வேண்டாமென்றுதான் நானிம்
மாதிரி காலட்சேபம் செய்கிறதும். இதைக்கண்டுதான் நீயுமின்று
சாதாரண பெண்பிள்ளையாய்விட்டாய். ஏற்கனவே நொந்த ஜன்மம்
நமது என்று சொன்னேனே. என்? நமது ஜாதகரீதியாய் நமக்கு புத்
திர ஸந்தானம் கிடையாது. அதற்ற நமக்கு ஜன்மம் கடைத்தேற என்ன
இருக்கிறது. பணம் சம்பாதிக்க எத்தனித்தால் இன்னும் நமது
ஜன்மத்தை நாம் வீண்பண்ணிக்கொள்ளவேண்டும். புத்திர ஸந்தான
மில்லை என்பதைக் கேட்டு நீ பெண்பாலாகையால் வருத்தப்பட
வேண்டாம். நமக்கு குழந்தையே இல்லை என்பதல்ல என் சொற்
களினருத்தம். நமக்கு 50-வது வயதில் ஒரு குழந்தையுண்டு. ஆனால்
அக்குழந்தையால் நமக்கு பிரயோஜனமில்லை. குழந்தையில்லாததற்
குச் சமானந்தான். இந்த விஷயத்தைப்பற்றிமாத்திரம் நீ அதிக
மாக என்னைக் கேட்கவே கேட்காதே. இப்பொழுது உனக்குத்
தெரிந்ததா நான் பணந்தேடாமல் பிச்சைபுகுந்துகொண் டிருப்பதின்
காரணம்."

இம்மாதிரி ஸத்தியவாக் சொல்லி முடித்ததும், அவர் மனைவி
அவர் சொன்ன அவ்வளவையும் வெகு ஜாக்கிரதையாகக் கேட்டு
தனக்குள்தானே அநியாயமா யிதுவரையில் நம்மிடத்தில் நமது
நாதன் வைத்திருந்த மரியாதையை குறைத்துக்கொண்டு மற்ற பெண்டு
களுக்குச் சமானமானோமே என்று எண்ணிக்கொண்டாள். இப்
பொழுது தனது புருஷன் பார்ப்பவர்களுக்கு அவ்வளவு கேவல

நடந்துவந்ததின் காரணம் நன்ரு யவளுக்குத் தெரியவந்தது. குழந்தையுண்டாயும் குழந்தை யில்லாததற்குச் சமானம் என்று தனது புருஷன் சொன்னதின் அருத்தத்தை நன்ருய் விவரித்துக் கேட்க வேண்டுமென்ற எண்ணம் இவளுக்கு வெகு அதிகமாயிருந்தபோதிலும் அந்த விஷயத்தைப்பற்றி அவர் கேட்கவே கேட்காதே என்று கட்டளை யிட்டுவிட்டபடியால் தன் வாயை மூடிக்கொண்டாள். ஸூர்யபகவானைக் கண்டு தாமரைமொட்டு மலர்வதுபோல ஒரு நொடியில் அன்று இரவு வாடியிருந்த இவள் முகமும் மலர்ந்தது. ஏதோ தெரியாத்தனத்தாலும், பெண்பாலின் குணம் மேலிட்டிருந்தபடியாலும் அன்று அவரை இம்மாதிரி கேட்டு மனதை சஞ்சலப்படுத்தியதற்கு துளஸி மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டாள். அந்த நிமிஷத்திற்குப் பிறகு எப்பொழுதும்போலவள் தனது புருஷனுக்கு நடந்துகொண்டாள். தனது புருஷன் சொன்ன காரணங்களைக் கேட்டபிறகு நாளுக்குநாள் அவளன்பு அவரிடம் அதிகரித்ததேயல்லாமல் கொஞ்சமேனும் குறையவில்லை.

ஸத்தியவாக் குறித்தபடியே அவருடைய 50–வது வயதில் அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. இவ்வித பரிசுத்தமான தம்பதிக்குப் பிறந்த குழந்தையின் வடிவத்துக்குச் சொல்லவும் வேண்டுமோ? தகப்பனுரோ வித்தை, பொறுமை, சீலம், விநயம் இவைகளின் இருப்பிடம். தாயோ பதிவிரதா தேவதையின் அவதாரம். இவ்விருவர்களுடைய குழந்தை வெகு ரூபலாவண்ணியத்துடன் விளங்கியபடியால் இவனுக்கு அதிரூபன் என்று நாமகரணஞ் செய்தார்கள். குழந்தையை வெகு அன்பாயும் ஆசையாயும் வளர்த்துவந்தார்கள். அதிரூபனுக்கு 5 வயதானவுடனே ஸத்தியவாக் அவனுக்கு கிரமப்படி அக்ஷராப்பியாசம் செய்துவைத்து தானே வித்தை சொல்லிக்கொடுக்க ஆரம்பித்தார். முதல் முதலில் பிராமண ஜாதியின் வழக்கப்படி ஸம்ஸ்கிருத பாஷையை நன்ருய்க் கற்றுக் கொடுத்தார். அதிரூபனும் அவன் ரூபத்திலெப்படியோ அப்படியே புத்தியிலுமிருந்தபடியால் ஒரு நொடியில் தகப்பனுர் சொல்லிக்கொடுப்பதை எல்லாம் பிடித்துக்கொள்வான். 10 வயது ஆவதற்குள் இவன் அந்த தேவ பாஷையை நன்ருய்க் கற்றுக் கொண்டான் என்று அவன் தகப்பனுர் அறிந்துகொண்டார். அதன் மேல் தனது குலத்திற்கு ஸகஜமான சாஸ்திரம் ஜோஸியமாயிருந்தபடியால் அதைத் தன் பிள்ளைக்குக் கற்றுக்கொடுக்க ஆரம்பித்தார். "தாய் எட்டடி, பிள்ளை பதினுறடி" என்ற பழமொழி அதிரூபனிடத்தில் யதார்த்தமாயிருந்தது. எதெதை அன்புடன் தனது தகப்பனுர் கற்றுக்கொடுப்பாரோ அததை ஆவலுடன் அதிரூபன் கிரகித்துக்கொள்வான். தனிமையில் உட்கார்ந்துகொண்டு இடைவிடாது

படிப்பான். படித்தபின் நின்று அந்தந்த விஷயத்தை மனதில் யோசித்துப்பார்த்து பதித்துக்கொள்வான். இம்மாதிரி 6 வருஷம் ஒரே கவலையாய்ப் படித்துவந்தான். இதற்குள் இவன் கற்றுக் கொண்ட ஜோஸியமானது ஸத்தியவாக்கைவிட இரட்டிப்பாயிருக் கும் என்று ஸுமாராகச் சொல்லலாம். இப்படி தன் தகப்பனை விட மேலான வித்தையாகிய ஜோஸியத்தை அதிரூபன் அடைந்து விட்டான் என்பதை எல்லா ஜனங்களும் அறிந்துகொண்டார்கள். "பாலஜோஸியம், விருத்த வைத்தியம்" என்று பழமொழி. அதன் அருத்தம் என்னவெனில், ஜோஸியம் கற்றுக்கொண்ட புதிய ஸ்திதி யில் கணக்கு முதலியவைகள் கராராயிருக்குமாகையால் இளஞ் ஜோஸியர்கள் சொல்லுவது கிழ ஜோஸியர்களுடைய கணக்கைக் காட்டிலும் சரியாயிருக்கும் என்பது உலகத்தின் கொள்கை. அதற்கு நேர் விரோதமாக வைத்தியத்தில் அநேகம் பெயர்களுக்கு வைத் தியம் செய்து செய்து பழகின கிழ வைத்தியன், ஔஷதம் முதல் முதல் பழகும் இளவைத்தியனுடைய ஔஷதத்தைக்காட்டிலும் நன்றாக பலிக்கும் என்பதும் கொள்கை. இந்த அபிப்பிராயத்தைக் கொண்டேதான் "ஆயிரம்பெயரைக் கொன்றவன், அரை வைத்தி யன்" என்ற உலகச் சொல்லும் வழக்கத்தில் வந்திருக்கிறது. நிற்க, இம்மாதிரி 16 வயதில் அதிரூபனிவ்வளவு பிரபல தசையை சோதிட சாஸ்திரத்தி லடைந்துவிடவே, ஸத்தியவாக்கை அதுவரையில் தேடி வந்தவர்களெல்லாம் சின்ன ஐயர் எங்கே, அவர் வாயால் ஜாதக பலன் கேட்கவேண்டும் என்று பெரிய ஐயரை நிர்ப்பந்திக்க ஆரம் பித்தார்கள். ஸத்தியவாக்கும் தனது அருமை மகனிடம் ஜனங்கள் மோகங்கொண்டிருப்பதைக் கண்டுகொண்டு வெகு ஆனந்தமடைந் தார். தனக்கும் வயது மேலிட்டபடியால் இம்மாதிரி தனது குமாரன் தன் வேலையை வகிப்பதைப் பார்த்து, நம்மை சிரமம் கொஞ்சம் விட்டது என்று களித்தார்.

"தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது." [திருக்குறள்.]

உலகத்தில் தன்னைக்காட்டிலும் தன் பிள்ளைகள் அறிவுடையவர் கள் என்ற தன் மக்கள் கீர்த்தியைக் கேட்டு களிக்காத தகப்பனரே கிடையாது. அதிரூபன் அடைந்த யசஸைக் கண்டு ஸத்தியவாக்கும் ஏன் களிக்கார்.

ஆனல் தகப்பனும் மகனுமாக இவ்வளவு ஜகத்பிரஸித்தியை அடைந்திருந்தபோதிலும் ஸத்தியவாக்கைமட்டும் பழைய செம்பு இன்னும் விடவில்லை. அவர் வழக்கப்படி 10 நாழிகைக்கு 10 வீட் டுக்குப் பதிலாக, இப்பொழுது மூன்று உயிர்களை போஷிக்க

வேண்டியவராகையால் 15 வீடு புகுந்து பிட்சை கொண்டுவருவார். அவர் கொண்டுவந்ததை அவரும், அவர் மனைவியும், அதிரூபனுமாக புசிப்பார்கள். மற்ற வேலையெல்லாம் சாஸ்திரம் படிப்பதிலும், கேட்பவர்களுக்கு மறுமொழி சொல்வதிலும், தந்தையும் மகனும் காலங்கழிப்பார்கள். இம்மாதிரி அதிரூபனுக்கு 16 வயது ஆகும் வரையிலும் நடந்துவந்தது.

இப்படி இருக்கும்பொழுது ஒருநாள் தனது வழக்கப்படி ஸத்தியவாக் செம்பை எடுத்துக்கொண்டு 10 நாழிகைக்கெல்லாம் உபாதான மெடுத்துவர வெளியிற் சென்றார். துளசியம்மணியோ அவர் கொண்டுவருவதை சமையல் செய்யவேண்டியதற்காக வேண்டிய ஏற்பாடுகளை நடத்திக்கொண்டிருந்தாள். அதிரூபனும் தெருத்திண்ணையில் உட்கார்ந்துகொண்டு பிரகத் ஜாதகம் படித்துக்கொண்டிருந்தான். அந்த சமயத்தில் அந்நாட்டரசனான சேதுபதி அதிவேகமாக, தான் வரும் மரியாதைகளொன்றுமில்லாமல் சாதாரண ஆள்போல் ஓடிவந்து, "அப்பா! குழந்தாய்! உன் தகப்பனார் இருக்கிறாரா" என்றான். அதற்கு அதிரூபன், "இல்லை, மகாராஜாவே! இப்பொழுதுதான் உபாதானம் வாங்க வெளியிற் சென்றார். ஐயோ! தங்கள் முகக்குறிகளையும், கிரகங்களின் சாரத்தையும் பார்த்தால் ஏதோ ஒரு சத்துரு அரசன் நமது ராஜ்ஜியத்தைஇப்பொழுது படை எடுத்து வந்திருப்பதாகவும், அவனை எதிர்த்து யுத்தம்செய்தால் இப்பொழுது நமக்கு ஜெயம் கிடைக்குமா என்று எனது தகப்பனாரைத் தாங்கள் கேட்பதற்காக வந்ததாகவும் எனக்குத் தெரியவருகிறது. அதற்கு பதில் நான் என்ன சொல்லுவேன் என்றால், இப்பொழுது நமக்கு ஜெயம் ஒருநாளும் கிடைக்காது. உமது ஜாதகத்தி லிப்பொழுது அஷ்டமத்தில், அதாவது எட்டாவது வீட்டில் சனியிருக்கிறார். அவர் உமக்கு அநுகூலரல்ல. ஒருவரையும் கேட்காமல் குஞ்சு குழந்தைகளுடனும், பெண்டுகளுடனும் ஓடிப்போய் ஏதாவது ஒரு அரண்ணியத்தில் இப்பொழுது நீர் வசிக்கவேண்டும். அதுதான் க்ஷேமம். இன்று முதல் மூன்றாவது வருஷக் கடைசியில் நீர் பிரார்த்திக்காமலே, வலுவில் உமக்கு இந்த ராஜ்ஜியங் கிடைக்கும். அப்படித்தான் செய்யவேண்டும். வேறு வழியில்லை. காலதாமதம் வேண்டாம், சீக்கிரம் போம். ஐயோ! தாங்களிங்கு பேசிக்கொண்டிருக்கும்பொழுதே கீழ்வாசல் வழியாக சத்துரு கோட்டையில் புகுந்துவிட்டானே" என்றான்.

பையன் இப்படிச் சொல்லி வாய்மூடுமுன், ஒரு அரண்மனை சேவகன் வேக வேகமாக குடல்தெறிக்க ஓடிவந்து கண்ணுங் கண்ணீருமாக "மகாராஜாவே! நாம் என்னசெய்கிறது இனி, சத்துரு கீழ்

வாசல் வழியாக கோட்டைக்குள் புகுந்துவிட்டான், நமது ச, தியம் இனி செல்லாது. இவ்வளவு சீக்கிரத்தில் கீழ்வாசல் திறந்துவ மென்று நான் எண்ணவே இல்லை என்செய்வேன்'' என்றான்.

எடுத்தான் ஓட்டம் சேதுபதி. அவன் விரைந்தோடின அந்தட் சணமே ஸத்தியவாக்கும் உபாதானமெடுத்த அரிசியுடன் வீடுவந்து சேர்ந்தார். தகப்பனார் வந்ததும் அதிரூபன் அரசன் வந்ததையும், முதலில் தன் தகப்பனரை விசாரித்ததையும், அதற்கு தான் சொன்ன தையும், ஒன்றுவிடாமல் முற்றிலும் சொல்லி, ''என்ன அப்பா! நான் சொன்ன ஜோஸியம் எப்படி! சொல்லி வாய்மூடும்முன் கீழ்வாச லால் சத்துரு கோட்டையில் புகுந்த சமாசாரமும் வந்தது'' என்றான். இப்படி அதிரூபன் தற்புகழ்ச்சியாய் ஒருநாளும் சொல்லிக்கொண் டவனேயல்ல. சிறுபையனானதால் அவனுக்கு தனக்கே தெரியாம லன்று அப்படி சொல்லிவிடும்படி தோன்றிற்று.

இப்படி தன் அருமைமகன் சொன்ன சங்கதி யாவற்றையும் கேட்டு அதுவரையில் வெகு ஆனந்தத்துடனும் ஒழிவுடனுமிருந்த ஸத்தியவாக், அடியற்றமரம்போல் உபாதானச் செம்பை கீழே போட் டுக்கொண்டு விழுந்துவிட்டார். கோ என்று கதறத் தலைப்பட்டார். அன்றுவரையில் சுகமோ, துக்கமோ அவர் கண்ணிலிருந்து ஒரு சொட்டு ஜலம் வெளிவந்ததை அவ்வூரிலாவது அவ்வீட்டிலாவது ஒருவராவது கண்டதேயில்லை.

''ஏன் அப்பா! இம்மாதிரி அழுகிறீர்கள். ஏன் அப்பா! அழுகி றீர்கள்'' என்று அதிரூபன் கேட்டான். தகப்பனாரோ பதிலே சொல்லவில்லை. அழுகைமட்டும் நிற்காமல் சதறுகிறார். கண்ணீர் வடிக்கிறார். தான் கேட்டதற்கு வாய்திறவாமலிம்மாதிரி தன் தகப் பனர் அழுவதைப்பார்த்த அதிரூபனுக்கும் அழுகை வந்துவிட்டது. இப்படி இருவர்களழுவதைக்கேட்ட துளசியும் வெளியில் ஓடிவந் தாள். தனது அருமை மகனும் அன்புள்ள பர்த்தாவுமிருக்கும் நிலை மையைக் கண்டாள். ''ஏனடா! அப்பா! என்ன சங்கதி'' என்று பரபரப்புடன் தன் மகனைக் கேட்டாள். அவனோ வாய்திறக்கிறா னில்லை. புருஷனைக் கேட்க வாய் எழவில்லை. அவளும் விம்மி விம்மியழ ஆரம்பித்துவிட்டாள். இம்மாதிரி அன்றையதினம் ஸத்தி யவாக், அவர் மனைவி, அவர் மகன் ஆக மூன்றுபெயர்களும் அழுகை யில் மூழ்கியிருந்தார்கள். ஒருவர் அழுகிற காரணம் மற்றொரு வருக்குத் தெரியவேயில்லை. இவ்விதமாக கொஞ்சநாழிகை சென்றது. கடைசியாய் துளசியம்மணி தனது பிராணநாதனைப் பார்த்து ''ஸ்வாமி உலகத்துக்கெல்லாம் தைரியமுபதேசிக்கும் பரமாத்மாவாயிற்றே தாங் கள். இம்மாதிரி இன்று அழுகிறீர்களே! இதுவரையில் நிர்மலமான

ா முகத்திலிருந்து ஒரு சொட்டுத்தண்ணீர் கீழே விழுந்ததை ன் பார்த்ததில்லையே. நானும் எனக்கு நினைவு தெரிந்ததுமுதல் இடைவிடாது தங்களிடமே யிருக்கிறேனே. இத்தனைநாள் தைரிய மாயிருந்த பிரபு இன்று அழுவதற்குக் காரணம் என்ன? பலத்த காரணமாக இருக்கவேண்டுமே. அதைச் சொல்லிவிட்டு அழக் கூடாதா" என்று தன் மனதையே ஒருவாறு தைரியப்படுத்திக் கொண்டு புருஷனைக் கேட்டாள்.

அதற்கு அழுதுகொண்டே ஸத்தியவாக்கும் "அடியே! இன் றையவரையில் என் துக்கத்தை நானே விழுங்கிக்கொண்டு, ஏதோ வேதாந்த விசாரணை பண்ணிக்கொண்டு சகித்துவந்தேன். இப் பொழுது சகிக்க முடியாமல் போய்விட்டது. என்ன செய்யப்போ கிறேன். என் துக்கத்தை உனக்குத் தெரிவிக்காமலிருக்கவேண்டு மென்றுதான் கருதியிருந்தேன். என்றால் ஸகிக்க முடியவில்லையே. ஒரு 16 வயது பையனாவது! 16 வயதுக்குள் சகல சாஸ்திரங்களையும் சரிவரக் கற்றுக்கொண்டதாவது! அவனை அரசன் வந்து ஜோஸியம் கேட்கவாவது! அதற்கு அச்சமில்லாமல் அவன் சொன்னதாவது! சொன்னபடி நடந்ததாவது! இவைகளை வெளியிற் சொல்லிக்கொண் டால் கேட்பவர்கள் நம்பமாட்டார்களே. ஆனாலவ்வளவும் நமது அதிரூபனிடத்தில் உண்மையாயிருக்கிறதே. இவனுக்கு பூரணாயு ளிருந்தா லிப்படி இந்த சிறுவயதி லிவன் மேன்மை பெறுவானா? அடியே! கொஞ்சநாளைக்குமுன் நான் உன்னிடத்தில் நமக்கு ஒரு குழந்தை உண்டென்றும், ஆனால் அதனால் நமக்கு பிரயோஜன மில்லை என்றும் சொன்னதை மனதில் வைத்திருக்கிறாயா? அந்தக் குழந்தைதான் அதிரூபன். ஐயோ! இவன் அல்ப ஆயுளுள்ளவன்! இவனுக்கு வயது 18 தான்! இன்னும் 2 வருஷத்தில் நமது தலையில் மண்ணைவாரிப் போட்டுவிட்டு இவன் கண்ணை மூடிக்கொண்டு போகப்போகிறான்! இவ்வளவு புத்தியும், ரூபமும் இவனுக்கு அல்பாயுள் என்றே ஈசுவரன் கொடுத்திருக்கிறான். இந்தக் குழந்தை யை நமக்குக் கொடுத்து, இவ்வளவு புத்தியையு மவனுக்கு அளித்து அப்புறம் அவனை எடுத்துப்போவதில் என்ன லாபம் ஈசுவரனுக்கு? அது எனக்குத் தெரியவில்லை. இதைத்தான் என் மனதிற்குள்ளே யே நானிதுவரையில் வைத்துக்கொண்டு குமுறிக்கொண்டிருந்தேன். இன்று 'அப்பா! என் சோஸியம் எப்படி' என்று குழந்தையே என் னைக் கேட்கும்போது என் துக்கம் எனக்கு அடக்க முடியவில்லை. தெய்வமே உனக்குக் கண்ணில்லையா! கிழவயதில் எங்களிருவர்க ளையும் பரிதபிக்கவிட்டு, நீ அளித்த கிளியை பிடுங்கிப்போவதில் உனக்கு என்ன லாபம்" என்று பெரியவர் பரிதபித்தார், புரண்டார், முகத்தை கைகளால் மூடிக்கொண்டார்.

இதைக் கேட்ட பெண்பால் என்செய்வாள்? ஒன்றுந் தோன்ற வில்லை. ஸத்தியவாக் ஒவ்வொன்றாக சொல்லச் சொல்ல அவளுக்கு கொஞ்சங் கொஞ்சமாக புத்தி போய்விட்டது. உயிரற்ற பிணம் போல் தரையில் பொத்தென்று விழுந்தாள். இவர்களிருவர்களு டைய ஸ்திதியையும் அதிரூபன் கண்டான். அப்பொழுது தான் நம்மைப்பற்றியா நமது தாய் தந்தையர்க ளிவ்வாறு அவஸ்தைப்படு வது என்பதை உணர்ந்தான். இதுவரையில் தன் ஜாதகத்தை தான் அநேகந்தடவைகளில் கேட்டிருந்தபோதிலும், தன் தகப்பனார் சாக்குப்போக்கு சொல்லி தனக்குக் காட்டாததற்குக் காரணத்தையும் ஒரு நொடியில், மனதிலறிந்துகொண்டான். வெகு புத்திமான். தாய் தந்தையர்களிடம் தேவதா விசுவாசம். வெகுவித உபாயங்களால் சிறுகச் சிறுக அவர்களிருவர்களையும் சாந்தப்படுத்தி நல்ல வார்த்தை சொல்லி துக்கத்தை தற்காலம் மறக்கும்படி செய்தான். தனது தந்தையைப் பார்த்து தனது ஜாதகம் எங்கிருக்கிறது என்று மெதுவாகக் கேட்டான். அவர் அது வைத்திருந்த இடத்தைச் சொன்னவுடன் அதை எடுத்துவந்தான். அதைப் பார்த்தவுடன் தனது தகப்பனுரை நோக்கி: "எனக்கு இவ்வளவு வித்தையையுமளித்த என் தெய்வமே! தங்களுக்கே தெரியவில்லையா இந்த ஜாதகத்தின் கோளாறு. இது லக்கின சந்தியில் உண்டான ஜாதகமே. விருஷப லக்கினம் போட் டிருக்கிறதே, அது எப்படி, சுத்த பிசகு. மேஷ லக்கினத்திலல்லவோ நான் ஜனித்திருக்கவேண்டும். அந்த லக்கினத்துக்குப் பதிலாக விரு ஷப லக்கினம் போட்டு தப்புர்தவறுமாக என் ஜாதகத்தைக் கணித்து எனக்கு 18 வயதில் சாவு என்று வீண்விசாரப்பட்டு வந்தீர்களே" என்று வெகு சரியாய்ச் சொல்லுகிறவன்போல் ஒரு நிமிஷத்தில் தன் ஜாதகத்தை அதிரூபன் பொய்யாகக் காண்பித்தான். "தாங்கள் வருத்தப்படுகிறதெல்லாம் என் லக்கினம் விருஷப லக்கினமாக இருந்தால் உண்மை. அப்பொழுது 18 வயதில் நான் மாண்டுபோக வேண்டியவன். ஆனல் என் லக்கினமோ மேஷ லக்கினம். அப்படி யாயிருக்கும்போது எனக்கு நூறுவயதில் ஒருநாள்கூட குறை வில்லை" என்று நிரூபித்தான்.

இவன் தன் கட்சிக்கு கொண்டுவந்த ஆதாரங்கள் அவ்வளவும் ஸத்தியவாக்குக்கு உண்மையாகவேபட்டது. ஓகோ நாம் பிசகாகத் தானிந்த ஜாதகத்தைக் கணித்துவிட்டோம். பையன் கெட்டிக்காரன், அவன் சொல்லுகிறது சரி என்று மயங்கி தன் மகனுக்கு ஆயுள் நூறு வயது என்று நம்பினர். "அப்படி சொல்லடா என் கண்மணியே" என்று தாயும் மகனை கட்டிக்கொண்டு கண்ணீர்வடித்தாள். ஒரு நாழிகைக்குமுன் அழுகை மழைபொழிந்த அவ்வீட்டில் உடனே ஆனந்த மழையும் பொழிந்தது. கிழவனும் கிழவியும் நமது அருமை

மகனைப்பற்றி நாம் பயப்படவேண்டியதில்லை. இதுவரையில் நாம் பயப்பட்டது காரணமற்ற பயம் என்றெண்ணிவிட்டார்கள்.

ஆனால் இப்படி அதிரூபன் சொன்னதெல்லாம் உண்மைதானா, அம்மாதிரி தப்பு ஜாதகத்தை எழுதிவைத்துக்கொண்டா ஸத்தியவாக் வீண்துயர மடைந்துகொண்டிருந்தார், என்ற கேள்விகள் பிறக்கலாம். அப்படியல்ல. இவைகளெல்லாம் அதிரூபன் போட்ட மாயப் பொடி. தன்னைப்பற்றி தன் அருமை தாய்தந்தையர்கள் விசலப் படுகிறார்கள் என்பதாக அவன் கண்டுகொண்டவுடன் எவ்விதத்தினா லாவது அவர்கள் துக்கத்தை மாற்றி அவர்களுக்கு தைரியமுண் டாக்க வேண்டுமென்று எண்ணிவிட்டான். அவர்களன்று பட்ட அவஸ்தையைப் பார்க்கும்போது தான் இரண்டுவருஷங்களுக்குப் பின் மாண்டுபோவதற்கு வெகு முன்னமே, அதாவது அன்றைய தினமே தன் தாய்தந்தையர்கள் தங்கள் மகனுக்கு வரப்போகிற விபத்தை நினைத்து நினைத்து மாண்டுவிடுவார்கள் என்பது அவனுக்கு நிச்சயமாய்ப்பட்டது. எப்படியாவது, பொய்சொன்னாலும், தன் தாய்தந்தைகளுடைய உயிரைக் காப்பாற்ற பொய் சொன்னதற்காக ஈசுவரன் தன்னை மன்னிப்பார் என்று அதிரூபன் பலமாக பொய் யைச் சொல்லி கிழவன் கிழவிகளைக் காப்பாற்றினான். ஸத்தியவாக் கணிக்கும் ஜாதகமா பொய்யாய் முடியும்! எந்த நிமிஷத்தில் தன் ஜாதகத்தை தான் நேரில் பார்த்தானோ அந்த நிமிஷத்திலேயே தனக்கு சரியாய் 18—வது வயதில் மரணம் என்பது உள்ளங்கை நெல்லிக் கனிபோல் அதிரூபனுக்கு தென்பட்டுவிட்டது. அதைக் கண்டு தானுமதை யநுசரித்து அதைரியஞ் சொன்னால் கிழவன் கிழவிகள் அப்பொழுதே மாண்டிருப்பார்கள். ஆகையால் லக்கின ஸந்தி என்று ஒரு ஜாலம் செய்து தன் தகப்பனுரை மயக்கிவிட்டான். கிழ வருக்கு தனது குமாரன் பூரண ஆயுளுள்ளவனாக இருக்கவேண்டும் என்ற எண்ணம் எப்பொழுதும் மேலிட்டிருந்தபடியாலும், அதி ரூபன் தன்னைவிட சோதிடத்தில் வல்லவன் என்ற நம்பிக்கை யிருந்தபடியாலும் அவன் சொன்னதெல்லாம் வெகு சரியாய் அந்த சமயத்துக்கு அவருக்குத் தோன்றிற்று. அறுபது வயதிற்கப்பால் அறிவும் தடுமாறும். என்னவோ நாம்தான் ஜாதகம் என் தப்பாய் கணித்திருக்கக்கூடாது, எப்படியாவது நமது குழந்தை 100 வயது இருந்தால் சரி என்றெண்ணிவிட்டார். அப்படி அவர் மயங்கி யிருக்கக்கூடாதே என்றால் என்னமாய் மயங்கியிருக்காமல் முடி யும். அதிரூபனோ அப்பொழுதுதான் சகல சாஸ்திரமும் கற்றவன். தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்று எடுத்ததற்கெல்லாம் தான் கற்றவித்தையின் பலத்தால் ஆதாரம் கிடுகிடு என்று ஒப்பிக் கிறான். கிரகங்களை பந்துகள்போல் கையாடி, அது பிழை, அதற்குக்

காரணம் அது; இதுசரி, இதற்குக் காரணம் இது, என்று வாயாலடிக்கிறன். இவைகளை எல்லாம் கேட்டு தான் கணித்த ஜாதகம் முற்றிலும் பிசகு என்றும் எப்படி நாம் தப்புசெய்தோம் என்றும் ஸத்தியவாக் தன்னையேதான் இகழ்ந்துகொண்டார்.

இம்மாதிரி தனது சாகசத்தால் அதிரூபன் தன் தாய் தந்தைகளை தனது ஆயுளுக்கு 100 வருஷங்களுக்குக் குறைவில்லை என்று என்ன தான் வாயாலடித்து நிரூபித்தபோதிலும் அவன் மனதில்மட்டும், நமக்கு 18-வது வயதில் முடிவு என்பதற்கு ஆக்ஷேபமில்லை, என்று நிச்சயமாய்த் தோன்றிவிட்டது. தகப்பனர் இவனை எவ்வளவு கெட்டிக்காரன் என்று நினைத்திருந்தாரோ அதற்குமேல் அவரிடம் அதிரூபனுக்கு நம்பிக்கை. அப்பா ஜாதகம் கணித்தால் அதுவும் தவறுமா? ஏதோ தப்பும் தவறுமாகச்சொல்லி அவரைத் தற்காலம் சாந்தம்பண்ணி வைத்தோம். நமக்கு மரணகாலம் இன்னும் இரண்டு வருஷந்தானிருக்கிறது என்று நிச்சயமாக அதிரூபன் நினைத்துக் கொண்டான். வெகு புத்திமான், படிப்பில் கரைகண்டவன். இம்மாதிரி தனக்கு உலகத்தில் வாழ்வுநாள் வெகு குறைவே என்பதற்கு அவன் கொஞ்சமேனும் வருத்தப்படவேயில்லை. அவனுக்கு வருத்தமென்பது என்னவிஷயமா யிருந்ததென்றல், ஐயோ! நாம் நமது தாய் தந்தையர்கள் கண்முன் மாண்டால் நமது வியோகத்தை இவர்கள் எப்படி சகிப்பார்கள் என்பதேதான். இந்த எண்ணம் வரும் போதெல்லாம் கண்ணீர் வடிப்பான். வெகு அன்பு பெற்றோர்களிடம் வைத்தவனுகையால், நம்மை யடைந்து இவ்வளவு வருத்தமுடன் வளர்த்தெடுத்து வித்தை யூட்டின தாய் தந்தையர்களுக்கு நாம் செய்யவேண்டிய கடனை நிறைவேற்றவிட்டால் நமது ஜன்மத்தால் என்ன லாபம் என்றெண்ணிவிட்டான். அக்கடனுவது என்ன? பிதாவின் ருணம், மாதாவின் ருணமேயாம். ஒருவன் தன் தாய்தந்தையர்களுக்கு அவர்களுடைய பிற்காலத்தில் செய்யவேண்டிய சடங்குகள். அதிரூபனே அவன் தாய் தந்தையர்களுக்கு முந்தியே மாண்டுபோகிறவனுயிருந்தானே. அவன் எப்படி அவர்களுக்குப் பிற்காலத்தில் சடங்குகளைச் செய்ய முடியும். நன்றாய் யோசித்துப் பார்த்து தான் உயிருடன் இருக்கும்போதே, காசி, பிரயாகை முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களுக்குச் சென்றல் அங்கு தன் தாய்தந்தையர்களுக்கு அவர்களும் உயிருடனிருக்கும்போதே செய்யவேண்டிய சடங்குகளை ஒன்றுவிடாமல் செய்யலாம் என்று அதிரூபன் அறிந்துகொண்டான். அப்புறம், அவன் எண்ணினதாவது:—

"இதுதான் நல்ல யுக்தி. அநேகவிஷயமாய் யோசிக்க யோசிக்க நல்ல எற்பாடாகத் தோற்றுகிறது. நாம் இங்கு இராமநாதபுரத்திலி

ருந்தாலோ இந்த கிழங்களுடைய கண்முன்னே பிராணனை விட வேண்டும். நான் போனபிறகு இவர்களும் தங்கள் பிராணனை என் விசனம் பொறுக்காமல் விட்டுவிடுவார்கள். எல்லாரும் ஏக காலத்திலிப்படி போவதுடன், நானிவர்களுக்குப் பிள்ளையாகப் பிறந்ததற்கு இவர்களுக்கு ஒருவித சடங்கும் செய்யாமல் இவர்கள் ஜன்மத்தையும் என் ஜன்மத்தையும் வீணாய்ப்பண்ணிக்கொண்டு பிராணனை விடவேண்டும். அப்படியில்லாதபடி கொஞ்சநாளிங்கிருந்துவிட்டு அப்புறம் ஓடிவிட்டாலோ இவர்கள் பையன் தேசசஞ்சாரம் பண்ணப்போயிருக்கிறான் சீக்கிரம் வந்து சேருவான் என்ற நம்பிக்கையின்பேரில் என் வரவை எதிர்பார்த்தவர்களாய் பிராணனை வைத்துக்கொண்டிருப்பார்கள். முதலில் நான் இவர்களை விட்டுப் பிரிந்துபோனதற்கு கொஞ்சம் விசனப்படுவார்கள் என்பதற்கு ஆக்ஷேபமில்லை. ஆயினும் அதையும் எப்படி தடுக்க முடியும். நானோ திரும்பி ஒருபொழுதும் வரமாட்டேன். 18 வயதில் நான் மாண்டு விடுவேன். அதற்குள் காசி, பிரயாகை இவ்விரண்டு ஸ்தலங்களுக்கும் சென்று, நானிவர்களுக்குச் செய்யவேண்டிய கருமங்களை செய்து முடிப்பேன். நான் இறந்தபின்னும் நமது பிள்ளை சொன்னபடி அவன் ஆயுள் வயது 100 இதோ வருவான், நாளை வருவான் என்று எதிர்பார்த்திருந்து அவர்கள் தங்கள் தங்கள் காலக்கிரமத்தில் மாண்டுவிடுவார்கள். இப்படி செய்வது நலமா. அல்லது இங்கேயே இருந்து இவர்கள் கண்முண் என் பிராணனை விடுவது நலமா?"

என்று பலவாறு யோசித்து இராமநாதபுரத்தைவிட்டு காசியைப் பார்க்க ஓடிவிடுவதே நலம் என்று அதிரூபன் தீர்மானித்துக்கொண்டான். இன்னும் இரண்டு வருஷமிருக்கிறது. கிடைத்தமட்டும் லாபம், தகப்பனார் தாயார் இவர்கள் கையால் அன்னம் புசித்த மட்டும் க்ஷேமம் என்ற எண்ணத்தாலும், உடனே ஓடிவிட்டால் இவர்கள் ஒருக்கால் சந்தேகித்தாலும் சந்தேகிப்பார்கள் என்ற பயத்தாலும் ஒரு ஆறுமாதகாலம் இராமநாதபுரத்திலேயே அதிரூபன் காலங்கழித்தான். இந்தச் சமயத்தில் இவன் தன் தகப்பனார் தாயார் இவர்களுக்குச் செய்த பணிவிடையையும், இவன் ஸத்தியவாக்கினிடம் வேக வேகமாய் கற்றுக்கொண்ட வித்தையையும் நாமிங்கு எழுத முடியாது. அவ்வளவு ஆவலுடனும், போனால் வராதென்ற நோக்கத்துடனும், எவ்விதமாயெல்லாம்தன்னைப்பெற்றவர்களை ஆனந்தப்படுத்தவேண்டுமோ அவைகளவ்வளவையும் செய்தான். இந்த 6 மாதக் காலத்துக்குள் பலதடவை தன் ஆயுள் நூறு வருஷகாலம் என்றும் ஆனால் தனக்கு தேச சஞ்சாரம் கொஞ்சம் உண்டு என்பதையும் வேண்டுமென்றே சொல்லாததுபோல் ஸந்தர்ப்பங்கள்

நரிடும்போதெல்லாம் சந்தேகஜாடையாய் எடுத்தெடுத்துக் காட்டியிருந்தான். இப்படியாய் ஆறுமாத காலமும் கழிந்தது.

இனி ஊரில் தாமதித்தால் நாம் மனதில் கருதிய கருமம் நிறைவேருதென்று நினைத்து, ஐயோ இன்னும் இருப்பது $1\frac{1}{2}$ வருஷந் தானே சீக்கிரம் ஓடிவிடவேண்டும் என்று அதிரூபன் நிச்சயித்தான். கரும்பு தின்னத் தின்ன உருசி அதிகம். எத்தனைநாள் வசித்தாலும் பெற்றவர்களிடம் வசிப்பது அலுக்குமா? நமக்கோ நாள் கிட்டுகிறதே என்று அவன் 6 மாதம் கழிந்தவுடனே ஒருநாள் பஞ்சாங்கத்தைப் பார்த்தெடுத்து அன்று அர்த்தராத்திரியில் ஓடிப்போகக் கருதிவிட்டான். அப்படி தான் குறித்தநாளில் ஒரு நிமிஷங்கூட தனது பெற்ரோர்களை விட்டுப் பிரியாமல் அவர்களுடனிருந்து தேனொழுகப் பேசி, வெகு உத்ஸாகமாகத் தானிருப்பதாக ஒவ்வொரு விதத்தாலும் காட்டிக்கொண்டான். வழக்கப்படி இராத்திரி தனது தந்தையை ஜாமநேரத்துக்கெல்லாம் படுத்துக்கொண்டு நித்திரை செய்யவிடாமல் அன்றிரவு அவரிடம் அதிகமாகப் பேசிக்கொண்டே இருந்தான். எத்தனை நாழிகைதான் அவர் அதிகமாக விழித்திருப்பார்? 10, 11 நாழிகைக்கெல்லாம் உறங்கச் சென்ருர். நாழிகை கழித்து நித்திரைசெய்யப் போனவராகையால் மெய்மறந்து தூங்கிவிட்டார். அவர் சென்றதும் தலைசியம்மணியும் தன் கணவன் சமீபத்தில் சயனித்துக்கொண்டு நித்திரைபோய்விட்டாள். அதிரூபனும் தனது வழக்கப்படி தனக்கு ஏற்பட்டிருந்த இடத்தில் படுத்துறங்குவதுபோல் காண்பித்தான். அன்றிரவு இவனுக்கு உறக்கமேது, ஓடிவிட சமயம் இவன் குறித்திருப்பது அன்றிரவுதானே. தனது தாய்தந்தையர்கள் நன்ருய் உறங்கும் சமயம்பார்த்து, அதிரூபன் எழுந்திருந்து ஓடலாமா, வேண்டாமா என்று மறுபடியும் ஒரு நாழிகை படுக்கையில் உட்கார்ந்தபடியே யோசித்தான். ஒரு சமயத்தில் ஓடிவிடுவது நலம் என்று இவன் அந்தக்கரணம் சொல்லும்; மற்றொருசமயத்தில் ஐயோ! வேண்டாம் வீணுக் கிழவன் கிழவிகளை மோசஞ்செய்யாதே என்றும் சொல்லும். கடைசியாய் நாமிருந்தால் இவர்களுக்கு அதிகக் கஷ்டம். ஓடுவதே இவர்களுக்கு நாம் செய்யும் பெரும் உபகாரம் என்றெண்ணம் மேலிட்டுவிட்டது. என்ன நாம் இப்படி புசலில் பரிதவிக்கும் மரக்கலம் மாதிரி பரிதபிக்கிருேம். என்ன புத்தியின்மை என்று அதிரூபன் தன்னையே தான் தைரியப்படுத்திக் கொண்டு தூங்கும் தன் தாய்தந்தையர்களை கண்ணுங் கண்ணீருமாக வலம்வந்து, அவர்கள் பாதங்களை முத்தமிட்டு தன் தலையில் அணைத்துவிட்டு ஓட நிச்சயித்தான். தனது புஸ்தகங்கள் வைத்திருந்த அறைக்குட் சென்று அவைகள்முன் ஒரு நமஸ்காரஞ்செய்து என் உயிர்த்தோழர்களே! உங்களை நான் என்று பார்ப்பேன் என்று

தூக்கித்தான். ஒன்று மெடுத்துக்கொள்ளாமல் இரண்டாம் வேஷ்டி யுடன் நடுராத்திரியில் தனது வீட்டைவிட்டு அதிரூபன் வெளிக்கிளம்பினான். கும்மிருட்டு, இரண்டடி நடந்தான். பின்பு பயந்து மறுபடி வீட்டில் நுழைந்தான். மற்றொருதடவை உறங்கும் தன் தாய்தந்தையர்கள் முகத்தை விளக்கை அதிசமாக தூண்டாமலே உற்றுப்பார்த்தான். அப்பா நான் போய்வருகிறேன். அம்மா நான் போய்வருகிறேன் என்று சொல்லிக்கொள்வதுபோல் மெதுவாய்ச் சொன்னான். தங்களை அதிரூபன் இம்மாதிரி வஞ்சிக்கக் காத்திருக்கிறான் என்ற சந்தேகமேயில்லாமல் கிழவனும் கிழவியும் தூங்கினார்கள். அவர்களுக்கு இந்த உலக ஸ்மரணையே இல்லை. என்ன லாபம் நிற்பதில் என்று அதிரூபன் தன் மனதை நன்றாகத் தேற்றிக்கொண்டு, தன் தாய், தந்தை, புஸ்தகங்கள், வீடு, வாசல் எல்லாவற்றையும் மறந்து, ஒரு நொடியில் தைரியத்தையடைந்து காசி போய் தனது பெற்றோர்களை கரையேற்றவேண்டும் என்ற எண்ணம் மேலிட்டு, திசி என்று பாராமல் தெய்வத்தின்மேல் பாரத்தைப் போட்டு இராமநாதபுரத்தை விட்டு ஓடினான். முதல் முதலில் வீட்டைவிட எவ்வளவு அதைரிய மிவனுக்கு இருந்ததோ அவ்வளவுக் கவ்வளவு தைரியம் வெளிக்கிளம்பியபிறகு வந்துவிட்டது. அப்படித்தான் ஒவ்வொரு விஷயத்திலும். முதல் ஆரம்பம் கஷ்டம் அப்புறம் எல்லாம் சுலபம். பொழுது விடியும்முன் மனோவேகத்தால் இருகாதவழி நடந்து நின்றான். இரண்டொரு அயல் கிராமங்களி லவன் போகும்போது தன் தகப்பனாருக்குச் சமாசாரம் சொல்லியனுப்பினான். தான் கொஞ்சகாலம் தேசசஞ்சாரம் போய் வருவதாகவும், தன்னைப்பற்றி ஒருவித விசாரமும் படவேண்டாமென்றும் தெரிவித்தான். உடனே தெரிவித்தால் எங்கு அவர்கள் தன்னை தொடர்ந்து வந்துவிடுவார்களோ என்று பயந்து, தான் புறப்பட்ட ஒருவாரம் அல்லது 10 நாட்களுக்குப் பிறகு அவர்களிடம் சமாசாரம் எட்ட ஏற்பாடும் செய்தான்.

இவ்வளவு ஜாக்கிரதையாய் அதிரூபன் நடந்துகொண்டான். அவனை நமது நண்பர்கள் துஷ்டனாக எண்ணவே கூடாது. என்னவிதமாய் தன்னையே ஆதரவாக அடைந்திருந்த இரண்டு கிழங்களை இவன் மோசஞ்செய்யத் துணிந்தான் என்று அவன்மேல் குற்றஞ்சாறறவும் கூடாது. இவன் ஓடின காரணமோ தன் தந்தை தாய்களைக் காப்பாற்ற என்று அவனை சிலாகிக்கவேவேண்டும். திற்க, கண்டவிடங்களில் உபாதானம் வாங்கிப் புசிப்பதும், கால் வலித்தபோதெல்லாம் உட்கார்ந்து சிரமத்தை ஆற்றிக்கொள்வதும், மற்ற காலங்களில் நடப்பதுமாக நடந்துகொண்டே காசிப்பட்டணம் எங்கே எங்கே என்று ஒரே கருத்துடன் அதிரூபன் பிரயாணம்செய்தான். காலால்

நடக்கப்பட்டவனுக்கு காசி ஸமீபமா? குறைந்தபட்சம் .
தியப் பயணமல்லவா? பிரயாணியோ அதிபாலியம். 16, ..
துள்ளவன். சில நாட்களில் அதிக சிரமத்தால் ஒரேயிடத்தில் ..
டொருநாள் துவண்டுபோய் தங்கிவிடுவான்.

இப்படியாய் தமிழ்நாடு கடந்து தமிழ் மாறி தெலுங்கு ஆரம்ப கும் சந்திரகிரி தேசத்துக்கு தான் ஊரைவிட்டுப் புறப்பட்ட 4-வது மாதம் அதிரூபன் வந்து சேர்ந்தான். இவனோ தமிழன். தமிழ், ஸம்ஸ்கிருதம் இந்த பாஷைகளைத் தவிர வேறொன்றும் தெரியாது. தெலுங்குதேசத்தில் கால் வைத்ததுமுத லிவனுக்கு யாத்திரை வெகு கஷ்டமாகத் தோன்றிற்று. இவன் பேசுவது அந்நாட்டார்களுக்கு புலப்படவில்லை. அவர்கள் சொல்வது மிவனுக்கு அர்த்தமாகவில்லை. இவன் தென்தேசத்தான் என்று ஒருவனு மிவனுக்கு உபாதானங் கொடுப்பதுகூட கஷ்டமாய்விட்டது. இவைகளை எல்லாம் கண்டு அதிரூபன், என்ன செய்யப்போகிறேன் ஈசுவரா! தமிழ் நாட்டைக் கடந்ததும் நமது கஷ்டமிவ்வளவாயிற்றே. இனி போகப்போக எப்படியிருக்குமோ தெரியவில்லையே. என்னமாய் எல்லா நாடு களையும் கடந்து கையில் ஒருநாள் செலவுக்குக்கூட காசில்லாமல் நாம் தேசசஞ்சாரம் பண்ணப்போகிறோம் என்று பயந்துவிட்டான். வெகு சிரமப்பட்டு இரண்டு மூன்றுநாள் வழிகடந்து ஒருநாள் சாயந்தரம் சந்திரகிரி என்னும் பிரதான நகரத்திற்கே வந்து சேர்ந் தான். அன்று இவன்பட்ட சிரமம் இவ்வளவவ்வளவல்ல. காலை முதல் ஒரு பிடி யன்னம் இவனுக்கு கிடைத்தபாடில்லை. கை கால்களோ மரணவலி, கடுநடையாலும் பசியாலும் வலித்தன. கிரா மங்கள் வழியாய் வந்தபோதாவது ஒவ்வொரு சமயத்தில் இவனுக்கு புசிக்க ஏதாவது கிடைத்திருக்கும். பட்டணத்தில் முதல் முதல் புகுந்தால் யார் உபாதானம் கொடுப்பார்கள். எந்த வீட்டில் புகுந்தாலும் போ! போ! என்கிறார்கள். என்ன செய்வான் குழந்தை. அங்குமிங்கும் தடுமாறி ஒன்றுங் கிடைக்காமல் பட்டணத்தின் மத்தியில் பசியால் வருந்தி அதிரூபன் பரிதபிக்கையில், அவன் கண் களின்முன் ஒரு பெரிய பந்தல் தென்பட்டது. அது என்னவென்று பாதி தமிழிலும் பாதி ஸம்ஸ்கிருதத்திலும் இரண்டொரு தெலுங்கு பதங்கள், தான் புதிதாய் கற்றுக்கொண்டவைகளைக்கொண்டு மிவன் கேட்கையில் அது பிராமண போஜனம் நடக்கும் இடம் என்று கண்டுகொண்டான். அதை நோக்கி விரைவாக, அங்கு நமக்கு புசிக்கு ஏதாவது கிடைக்காதா என்று சென்றான். அது உண்மை யாக பிராமண போஜனம் நடக்கும் இடந்தான்.

சந்திரகிரி மந்திரி குமாரனுக்கு சந்திரகிரி அரசன் தன் பெண்ணை இரண்டு நாளைக்கெல்லாம் கலியாணஞ்செய்து கொடுக்கப்போகிறார்

அந்த சுபத்தின் நிமித்தம் மந்திரியானவன் வந்த பிராமணர் களெல்லாம் அன்னம் போடுகிறார் என்றும், அவ்விதமாய் அன்னம்பாட கட்டப்பட்ட பந்தல் தான் உத்தேசித்து நடப்பது என்றும், அதிரூபன் வெகு புத்திமானுகையால் தனக்குத் தெரிந்த பதலுங்கின் சகாயத்தால் ஜனங்கள் பேசிக்கொள்வதிலிருந்து கண்டு கொண்டான். அவ்விடம் சென்று பார்த்ததும், எல்லாம் முடிந்து ஜனங்கள் சாப்பிட உட்கார 4, 5 நாழிகையாவது செல்லும் என்று தெரியவந்தது. அதுவரையில் அங்கு நிற்பதைக்காட்டிலும் எங்கேயாவது உட்காருவோம் என்று பந்தலைவிட்டு வெளியே வந்தான். பந்தலின் எதிரில் ஒரு பெரிய மாளிகை தென்பட்டது. அதன் திண்ணையின்மேல் ஏறி, நடந்த சிரமமும் உடம்பு வலியும் பொறுக்கமாட்டாமல் கொஞ்சம் சிரமபரிகாரம் பண்ணுவோம் என்று படுத்தான். தனது இரண்டாந்துணியால் இரவு கொஞ்சம் குளிராயிருந்தபடியால் நன்றாய் முகத்தையும் மூடிப் போர்த்துக் கொண்டான். வெகு சிறுவன், அலுப்பு வெகு ஜாஸ்தி. தன்னை யறியாமல் சுகமாக நித்திரை செய்துவிட்டான்.

இம்மாதிரி தான் சுகமாயிருந்த வீட்டைவிட்டு தன் அருமைத் தாய்தந்தையர்களையும் விட்டு அலைந்து அவஸ்தைப்பட்டு படாதபாடு பட்டு ஊரைவிட்டு புறப்பட்ட 4 மாதங்களுக்குப்பின் அதிரூபன் சந்திரகிரி வந்தான். இதுவரையில் இவன் பிரயாணத்தை நடுவில் நிறுத்த மனமில்லாமல், இவனை ஒரு நல்ல ஸ்திதியில் வைக்க உத்தேசித்தே இவன் தாய் தந்தையர்களைப்பற்றி நாம் ஒன்றும் பேசாமலிருந்துவிட்டோம். இப்பொழுதோ நமது நேசன் ஸுகமாக நித்திரைசெய்கிறான். இனி அவனுக்கு எவ்விதத்திலாவது குறைவு முண்டோ? எந்த நிமிஷத்தி லவன் சந்திரகிரி வந்தானோ அந்த நிமிஷம்முதல் அவன் சந்திரசேகரன் அருள்பெற்றான். ஆகையால் இவனை இங்கு கொஞ்சநாழிகை உறங்கவிடுவோம். சத்திய வாக்கைப்பற்றி, சுருக்கமாக விசாரிப்போம்.

அதிகமாக என்ன சொல்ல இருக்கிறது. தனது மகனை முதல் நாளிரவு படுத்தவிடத்தில் காணமல் காலமே எழுந்ததும், பெரியவர் எங்கே போயிருப்பான் குழந்தை ஏரிக்குப் போயிருப்பானோ என்று ஒருவித விசாரமும் அதிகமாக இல்லாமலிருந்தார்; நாழியாகவாக ஆளைக் காணவே காணோம். விசாரப்பட்டு தேடித்தேடிப்பார்த்தார். ஒருவித சமாசாரமும் தெரியவில்லை. ஆருடம் பார்த்தார். பயப்படவேண்டாம், உங்கள் மகனுக்கு ஒருவிதக் குறைவுமில்லை என்று புலப்பட்டது. என்னவிருந்தாலும் மனது கேட்குமா, பெற்ற மனமாயிற்றே. “பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்”

என்பது பழமொழி. அதிரூபன்தான் அவ்வளவு தைரியமாக ஓடினான். கிழவர் அவ்வளவு தைரியமாக இருக்க முடியவேயில்லை. பையனைக் காணமலிவர் படுந்துயரத்தைக் கண்டு ஓராயிரம் பெயர்கள் கைகட்டி என்னசெய்யச் சொல்லுகிறீர்களோ அதைச் செய்யக் காத்திருக்கிறோம் என்றார்கள். நான்கு திக்குகளிலும் ஓடி தேடச் சொன்னார். அதிரூபன் வெகு புத்திமானாகையால் ஒருவருக்காவது தான் போனவழி காட்டாதபடி எந்தெந்த விடங்களில் தனது தகப்பனார் தன்னை தேட முடியுமோ அவைகளவ்வளவையும் தவிர்த்தே பிரயாணஞ்செய்திருந்தான். இவர்களெல்லாம் 7, 8 நாள் தேடாத விடமெல்லாம் தேடிவிட்டு முகத்தை தொங்கவிட்டுக் கொண்டு வந்து சேர்ந்தார்கள். இதற்குள் அதிரூபன் அனுப்பின சேதியும் அதாகவே ஸத்தியவாக்குக்குக் கிடைத்தது. அதைக் கேட்டதும், சத்தியவாக் தனது மனையாளைப் பார்த்து "நான் அப்போதே உனக்குச் சொல்லவில்லையா, நாம் பாபிகள் நமது பிள்ளையால் நமக்கு பிரயோசனமில்லை என்றும், அவன் அல்ப ஆயுளுடையவன் என்றும் நான் எண்ணி ஜாதகம் கணித்திருந்தேன். அதல்லவென்று அவன் நிரூபித்தான். இப்பொழுது அதற்குப் பதிலாக தேசாடனம் பண்ணுகிறான்; இரண்டொரு சமயத்தி லிப்பொழுதுதான் எனக்குப் புலப்படுகிறது. தான் சீக்கிரம் தேசாடனம்செய்யப் போவதாகவும், அவன் குறிகள்காட்டி பேசியிருக்கிறான். என்னமானால் என்ன? நாம் உயிருடனிருக்கும்போது என்னப்பா நீ திரும்பிவருவாயா" என்று அலறினார், கதறினார், வெகு துயரப்பட்டார். அப்படியே துளசிக் கிழவியும் என்னசெய்தால்தான் அதிரூபன் திரும்புவான். கொஞ்சங்கொஞ்சமாக அவன் துக்கத்தை மறந்தார்கள். தினமாயிரந் தடவை ஜோஸியம் தனது குமாரனைப்பற்றி ஸத்தியவாக் பார்ப்பார். அவருக்கு இதுவே பிரமைபாய்ப் போய்விட்டது. ஒவ்வொரு சமயத்திலும் பயப்படவேண்டாம். குழந்தை க்ஷேமமாய் இரண்டொரு வருஷத்தில் திரும்பிவருவானென்று கிரகங்கள் பேசும். எப்படியாவது க்ஷேமமாய் வந்தால்சரி, குருடன் கண்ணைத்தானே வேண்டுகிறான் என்று ஒருவிதமாய்த் தன்னைத்தானே திடப்படுத்திக் கொண்டு தனது மனைவியையும் திடப்படுத்தி அதிரூபனை இழந்த துக்கத்தை, அவன் வருவான் சீக்கிரத்தில் என்று எதிர்பார்ப்பதில் சகித்துவந்தார்.

அதிரூபனும் இப்பொழுது 5, 6 நாழிகை பரியந்தம் தூங்கியிருப்பான். இனி யவன் சங்கதியை விசாரிக்க சந்திரகிரிக்குத் திரும்புவோம். அவனை எழுப்புமுன் அந்நகரத்தில் இரண்டுநாளைக்குப் பிறகு நடக்கப்போகிற மந்திரிகுமாரன் கலியாணத்தைப்பற்றிக் கொஞ்சம் பேசுவோம்.

நமது நேசன் அதிரூபன் யாத்திரைபண்ணுங்காலத்தில் சந்திரகிரி என்பது ஒரு பெரிய ராஜ்ஜியம். அந்த தேசத்தரசனுக்குத்தான் மற்ற தேசத்தரசர்களெல்லாம் கப்பங்கட்டிவந்தார்கள். சந்திரகிரி அரசனுடைய பெயர் சந்திரசூடன். அவனுக்கு ஒரு அருமை மகள் உண்டு. அவள் பெயர் கமலாம்பாள். அவளோ அரசனுடைய ஒரே அருமை மகள். வெகு ரூபலாவண்ணியமுள்ளவள். படிப்பில் ஸரஸ்வதி என்றே சொல்லலாம். ஸம்ஸ்கிருதத்தில் வெகு கெட்டிக்காரி. தனது ஒரே அருமை மகளை தனது வாழ்நாட்குள் அவளுக்குத் தகுந்த அழகும் வித்தையுமுள்ள ஒரு ராஜகுமாரனுக்கு மணம்புரிவிக்கவேண்டுமென்ற ஆசை அரசனுக்கு வெகு ஜாஸ்தியாயிருந்தது. இதை யடிக்கடி தன் மந்திரியிடம் சந்திரசூடன் சொல்லுவான். மந்திரியின் பெயர் குரங்குமூக்கன். இவன் ஒரு பெரிய பாதகன். தினந்தோறும் யாரையாவது கெடுக்காமல்போனு லிவனுக்குத் தூக்கம் வராது. அவ்வளவு சாது. ஆனல் பேசுவதோ, மொழிக்குமொழி பகவத்கீதை வாக்கியங்கள்தான். எல்லா மந்த பரமாத்மாவுக்குத்தான் தெரியும் என்று பாசாங்குபண்ணுவான். இவன் கீதாவாக்கியத்தால் சந்திரசூடன் மயங்கி இவனை யதார்த்தமாக வெகு யோக்கியனென்றே எண்ணிவிட்டான். அரசன் தன் பெண்ணுக்கு தகுந்த வரம் எங்கிருந்து கிடைக்கப்போகிறது என்று குரங்குமூக்கனிடம் யோசிக்கையில் அவன் "மகாராஜாவே, தாங்கள் பயப்படவேண்டாம், நானிருக்கிறவரையில் தங்களுக்குக் கவலை என்னத்திற்கு? எனக்கு 6 மாதம் விடைகொடுங்கள்" என்பான். அப்படி அரசன் செய்ய குரங்குமூக்கன் எங்கேயாவது தன்னிஷ்டப்படி தூங்கிவிட்டு 15, 20 படங்களை எழுதிக்கொண்டு சந்திரசூடனிடம் வந்து நிற்பான். "என்ன மந்திரி யாராவது நல்ல பையனைப் பார்த்தாயா" என்றால், "ஸ்வாமி ஒருவனு 20 பெயர்களைப் பார்த்துவந்தேன். உங்களுக்கு இவர்களுள் யார் பிடித்திருக்கிறது" என்று சொல்லி தான் கொண்டுவந்த படங்களை அரசன்முன் வைப்பான். சந்திரசூடன் ஒரு படத்தை எடுத்துப் பார்த்தால், "இவன் பாண்டியதேசத்து ராஜகுமாரன். அழகில் சந்திரன். பணத்தில் குபேரன்" என்பான். அதற்கு அரசன் "அதெல்லாம் சரி மந்திரி. இவனுக்கு ஒரு கை ஊனம் போலிருக்கிறதே. இவன் வேண்டாம்" என்று மற்றொரு படம் எடுப்பார். "இவன் சோழதேசக் குட்டி. எந்த தேசத்தில் காவேரி பிரவாகித்து நாடெங்கும் வேதம் விளங்குகிறதோ அந்த தேசத்து இளவரசு. இவன் பெயர் இராஜமார்த்தாண்டன்". என்பான். "அது சரி மந்திரி, இவன் வலது கண்ணில் ஒரு பூப்பட்டிருக்கிறதே" என்று அரசன் ஆக்ஷேபித்தால் "அதற்கென்ன யானைவேட்டை யாடும்போது ஒரு நாணல் பூ பட்டு கண்ணில் பூ விழுந்தது. பாதகமில்லை இவ

னுக்கு கமலாவைக் கொடுக்கலாம்" என்பான். &
சொல்வதை அரசன் ஒப்புக்கொள்ளாமல் அந்த படத்
போட்டு விடுவார்.

இப்படியாய் 20 படங்களும் ஒவ்வொன்றாய்ப் பார்ப்பார். மூக்கன் வேண்டுமென்றே ஒவ்வொரு படத்திலும் எல்லா உருவ நன்றாக எழுதி கடைசியில் கையிலாவது கண்ணிலாவது எங் யாவது ஒரு ஊனமும் கூடவே வைத்திருப்பான்; அரசனுக்கு ஒன்றும் பிடிக்காது. குரங்கு மூக்கன் மறுபடி 6 மாதம் போய்வருவான். போகவாவது வரவாவது அவ்வளவும் மோசம். மறுபடி 20, 30 படங்கள் கொண்டுவந்து இது அங்கதேசத்தின் ராஜகுமாரனுடைய படம், இது மைசூர் அரசன் படம் என்று மனதுக்குத் தோன்றியபடியெல்லாம் மந்திரியாகிய போக்கிரி கதைபேசுவான். இவன் செய்துவந்த ஜாலங்களவ்வளவையும் அரசர் உண்மையாகவே எண்ணினர். சந்திரசூடன் பைத்தியக்காரரல்ல. அவ்வளவு யதார்த்தமாய் குரங்குமூக்கனை அவர் நம்பிவிட்டபடியால் அவன் சொல்வதெல்லாம் நிஜமென்றெண்ணிவிட்டார்.

நல்லது இம்மாதிரி குரங்குமூக்கன் தப்புந் தவறுமாக படமெழுதி வருவானேன்? சோழியன் சிண்டுமட்டும் சும்மா ஆடாது. சந்திரசூடனுக்கு ஆண் சந்ததி யில்லை. ஒரே பெண்ணிருந்ததல்லவா? அவளைக் கலியாணம் பண்ணிக்கொள்ளுகிறவன் சந்திரகிரி அரசனாய் விடுவானல்லவா? குரங்குமூக்கனுக்கு ஒரு அருமை மகனுண்டு; அவன் வெகு லட்சணமுள்ளவன். ஆனல் படிப்பில்மட்டில் கமலா காலில் ஒட்டின தூசுக்குக்கூடச் சமானமாகமாட்டான். எப்படியாவது தனது குமாரனுக்கு ராஜகுமாரத்தியைக் கலியாணம்பண்ணி வைத்துவிடவேண்டுமென்ற எண்ணம் குரங்குமூக்கனுக்கு வெகு ஊர்ச்சிதமாக விருந்தது. அதை முதலில் தெரிவித்தால் எங்கு அரசன் தட்டிவிடுவாரோ என்னமோ என்ற சந்தேகத்தால் முதல் முதலில் அவருக்கு தான் வெகு சிரமப்பட்டு தேசங்கள்தோறும் சென்று பிள்ளைகள் பார்த்துவருவதுபோல் குரங்குமூக்கன் அபிநயித்தான். ஒரு ஆயிரம் படங்களை வெகு சிரமப்பட்டு எழுதிவந்து காட்டினன். இவன் அவ்வளவு ராஜகுமாரர்களை நேராகப் பார்த்து வந்ததாக சந்திரசூடனும் எண்ணிவிட்டார். கடைசியாய் ஒரு 20, 30 படங்களை ஒருநாள் குரங்குமூக்கன் கொண்டுவந்து அவைகளை அரசனுக்குக் காட்டும்போது அவைகளில் ஒன்றை அரசன் பார்த்து மனமகிழ்ந்து "அப்பா மந்திரி இன்றையதினந்தான் சுதினம். நீ இத்தனைநாள் பட்ட சிரமம் பலித்தது. இந்தப் படத்தில் எழுதப்பட்டிருக்கும் இராஜகுமாரன் யார்? சொல், இவனிடம் எல்லா லட்ச

ருந்தியிருக்கின்றன" என்றார். அதற்கு குரங்கு ல்முதலில் படத்தை நன்றாய் பரிசோதித்துப் பார்த்துக் .ள். அப்புறம் படம் மனதுக்கு பிடித்தா லிவன் குலம் ம சொல்லுகிறேன்" என, அதற்கு அரசன் "எனக்கு எல்லா ததிலும் இந்தப் படம் ஒன்றுதான் பிடித்திருக்கிறது, இவன் சொல்" என்று ஆத்திரம் பொறுக்காமல் உரக்கக் கேட்டார். அதற்கும் இன்னுமிவர் ஆவலை பொங்கச்செய்யக் கருதி "ஆம் நான் சொன்னபிறகு இவனுக்கு தாங்கள் தங்கள் பெண்ணைக் கொடுப் பீர்களோ மாட்டீர்களோ" என, அதற்கு சந்திரசூடன் "இவன் யாரா யிருந்தாலும் சரி, குலங்கோத்திரம் மட்டும் நன்றாகவிருந்தா லிவ னுக்கே கமலாவைக் கொடுக்கிறேன்" என்றார்.

அரசனிவ்வளவு சொன்னபின் குரங்குமூச்சன், "இவன் என் குமாரன்" எனவே, சந்திரசூடன் தனது மந்திரியைப் பார்த்து "குரங்கு மூக்கா! உன்னைவிட பைத்தியக்காரன் இவ்வுலகத்தில் வேறொருவனு முண்டோ? கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க் கழுதவன் கதைபோலாயிற்று உன் சிரமம். இவ்வளவழகுள்ள மகன் உனக்கொருவனிருக்கிறான் என்று நீ முன்னமேயே எனக்குச் சொல் லியிருந்தால் அப்பொழுதே நான் அவனுக்குக் கமலாவைக் கலியா ணஞ்செய்து கொடுத்திருப்பேனே. என் 2 வருஷமாக உன் கால் வெடிக்க நீ அலைந்திருக்கவேண்டும்? நல்லது அதிகமாக இனி கால ஹரணம் செய்வதில் ஒரு லாபமுமில்லை. இன்று 15-ம் நாள் சுக் கிரவாரம் முகூர்த்தம். பதில் பேசாதே. ஒரு நிமிஷங்கூட நான் தாமதிக்கமாட்டேன். அன்று எந்த சங்கதி எப்படியிருந்தாலும் சரி, கலியாணம் நடந்தே தீரவேண்டும்" என்றார். உடனே அதற்கு வேண் டிய ஏற்பாடவ்வளவும் செய்ய எல்லாருக்கும் சட்டளையிட்டுவிட்டார்.

நமது நேசன் அதிரூபன் சந்திரகிரி வந்த இரண்டுநாளைக்குப் பிறகு நடக்கப்போகிறதாக நாம் சொன்ன கலியாணம் இம்மாதிரி ஏற்பாடான மந்திரிகுமாரனுடைய கலியாணந்தான். அரசன் மகளை மந்திரிமகன் மணம்புரியப்போகிறான் என்றும் ஊர் எல்லாம் ஒரே பேச்சாக விருக்கிறது. அரசன் வீடுமுதல் மந்திரி வீடுவரையில் ஒரே பந்தல் போடப்பட்டிருக்கிறது. வந்த பிராமணர்கள் புசித்துப்போக மந்திரி வீட்டின் முன்பாக ஒரு பெரிய பந்தல் போட்டு ஏகமாய் அன்னமும் வியஞ்சனங்களும் தயாராய்க் கொண்டிருந்தன. இரவு 10 நாழிகைக்கெல்லாம் வரப்பட்ட பிராமணர்களெல்லாம் சாப்பிட வரலாம் என்று கூப்பிட்டாய்விட்டது. எல்லரும் வயிறு நிரம்ப உண்டு களித்துக்கொண்டிருந்தார்கள். ஊர் மூடிய அரசனுக்கு மந்திரி சம்பந்தியாகப்போகிறார் என்று ஒரே ஆனந்தமாயிருக்கிறது.

இவ்வளவு களித்துக்கொண்டும் ஆனந்தித்துக்கொண்டும் எல்லாரு மிருக்கும்போது அந்நகரத்தில் ஒருவன்மட்டில் வெகு துக்கத்தில் முழுகியிருந்தான். அவன் யார் என்றால் குரங்குமூக்கன்தான். இந்த கெட்ட துஷ்டனுக்கு சுகம் என்பதும் உண்டோ?

இதென்ன ஆச்சரியம்! இவன் செய்த போக்கிரித்தனம் பலித்தி ருக்க, இவன் மகனுக்கே ராஜகுமாரத்தியை கலியாணம்பண்ணிக் கொடுப்பதாக நிச்சயமும் நடந்திருக்க இவன் துக்கப்படக் காரணம் என்ன? எல்லாரையும்விட இவன் ஆனந்திக்கவேண்டுமே என்று இதைப் படிப்பவர்கள் யோசிக்கலாம். ஆம், தன் மகனுக்கு ராஜகுமா ரத்தி வாழ்க்கைப்படுவதையும் அதன் மூலமாய் அந்த ராஜ்ஜியமே சந் திரசூடனுக்கு பிற்காலம் தனது வம்சத்தில் நிற்கவேண்டியதையுங் கண்டு ஆனந்திக்கவேண்டியவன் இவனே. இவன் செய்துவந்த சூதெல்லாம் ராஜ்ஜியத்தை கைப்பற்றிக்கொள்ளவே. அரசனோ பிள் ளையற்றவன், எப்படியாவது இவன் மகளை நமது மருமகளாக்கிவிட் டால் ராஜ்ஜியம் நம்முடையது என்ற கெட்ட எண்ணத்துடன் இவ னிந்திரஜாலம் மகேந்திரஜாலங்கள் செய்து ஆரம்பித்த காரியம் கொஞ் சமேனுங் குறைவுபடாமல் அநேகமாய்க் கைகூடும் சமயமாயிருந்தா லுங்கூட அடுத்த சுக்கிரவாரம் கலியாணம் சரியாய் எப்படி நடந்து ராஜ்ஜியம் நமக்குக் கிடைக்கும், நாம் எப்படி இனி நமது எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ளப்போகிறோம் என்ற விசாரம் இவனுக்கு வெ குவாய் மேலிட்டிருந்தது. ஏது, ஒருநாளும் முடியாது. வெள்ளிக் கிழமை நமது சூது வெளியாய் நாம் தண்டனை யடையப்போகி றோம். அன்றையதினத்துடன் நமது பெயர் குலைந்தது என்று விசா ரக்கடலில் இவன் முழுகிவிட்டான். எல்லாரும் சந்திரகிரியில் உல் லாசமா யிருக்கும்போது இவன்மட்டில் ஒன்றுந் தோன்றாதவனாக சித்தபிரமை கொண்டவன்போல் விசாரத்தில் மூழ்கி தனது மாளி கையில் உட்கார்ந்திருந்தான். சிலநேரம் உட்காருவான், சிலவேளை ஒன்றுந் தோன்றாமல் எழுந்திருந்து நிற்பான். ஆகாசத்தைப் பார்த்து பெருமூச்சு விடுவான். வெள்ளிக்கிழமை நல்ல கிழமையாய்ப் போகாதா என்று நினைப்பான். எப்படி நல்லநாளாய் அன்று முடியும்? ஒருநாளும் முடியாதே. என்செய்வேன் என்று திகைப்பான். இம்மா திரி இவன் திகைத்து பிரமித்து ஒன்றுந் தோன்றாமல் விழிக்கையில் பிராமணர்கள் சாப்பிட்டுவிட்டு கையலம்பும் சத்தம் இவன் காதில் விழுந்தது. ஒன்றுந் தோன்றாது அந்த சத்தத்தைக் கேட்டு வெளி யே வந்தான். அங்கு தெருத்திண்ணையில் இவன் இவ்வளவு விசாரப் பட்டுக்கொண்டிருக்க ஒருவன் குறட்டைவிட்டுக்கொண்டு தூங்கு கிற சத்தத்தைக் கேட்டான். நமது சேவகன் நமது வீட்டுத் திண்ணை யிலேயே இவ்வளவு நிர்ப்பயமாக தூங்குகிறானா? அவன் யார் பார்ப்

போம் என்று அந்த இடத்துக்குச் சென்றான். அங்கு தூங்குகிற வன் சேவகனு? அல்ல. நமது நண்பன் அதிரூபனல்லவா? அவன் அலுப்பால் தூக்கம் மேலிட்டு சாப்பாட்டையு மிழந்தானே. அவ னிடம் குரங்குமூக்கன் அணுகி முகத்தை மூடியிருந்த துணியை எடுத்துப் பார்த்ததும் அவன் கண் கூசிற்று. அவ்வளவு அழகான ரூபம் அவன் பார்த்ததே இல்லை. தப்புந் தவறுமாய் அநேக படங்கள் முன்னொருகாலத்தில் தான் எழுதியகாலத்திலேயும் இம்மாதிரி ஒரு ரூபம் நன்றாய் எழுதி, அதற்கு ஒரு ஊனத்தை வைத்திருந்தால் அர சன் அதையும் தள்ளியிருப்பான் என்று தோன்றவுமில்லை. அவ்வ ளவு அழகான அதிரூபன் உருவத்தைக் கண்டதினாலோ என்னவோ குரங்குமூக்கன் முகம் மலர்ந்தது. அதுவரையில் அவன்பட்ட விசாரம் ஒருவாறு நீங்கிற்று. ✗

யாராயிருக்கலா மிவன்? இவனைப் பார்த்தால் நமது தேசத்தான் போலில்லை. என்னைக் காப்பாற்ற ஈசுவரன் இவனை இங்கு கொண் டுவந்துவிட்டாரோ என்னவோ? இருக்கட்டும் இவனை எழுப்பிக் கேட்போம் என்று மந்திரி யோசித்து அவனைத் தட்டி எழுப்பினான். அதிரூபன் எழுந்திருந்ததும் "யார் நீ" என்று தெலுங்கில் கேட்டான். அந்த பாஷை தனக்கு நன்றாகத் தெரியாதென்று அதிரூபன் சொல்லி சாப்பிடப்போக எழுந்திருந்துட்கார்ந்தான். ஸம்ஸ்கிருதம் தெரியுமா என்றான். தெரியுமெனவே, குரங்குமூக்கன் அதிரூபனை அப்பாஷை யில் கேட்க ஆரம்பித்தான். சரசரவென்று இரண்டொரு கேள்வி கேட்டதில் அதிரூபன் தென்தேசத்தான் என்றும், காசிக்கு யாத்திரை போகிறான் என்றும் எண்ணிக்கொண்டான். கும்பிடப்போன தெய் வம் எதிர்வந்ததுபோலும், தான் பட்ட துயரத்தை நீக்கி தனக்கு தெய் வமே ஒரு ஊன்றுகோல் கொடுத்ததுபோலும் குரங்குமூக்கன் எண் ணினான். நம்மைவிட பாக்கியசாலி இவ்வுலகத்தில் உண்டோ? நமது பையனுக்கு இனி கமலாவை நாளையினன்று கலியாணஞ் செய் துவைப்பதிலும் சந்திரகிரி ராஜ்ஜியம் நமது வசமாவதிலும் என்ன ஆக்ஷேபமிருக்கிறது என்று களித்தான். சரேலென்று அதிரூபனை "நீ என் வீட்டுக்குள் வா, பயப்படாதே. நானிந்த தேசத்து மந்திரி. உனக்கு நல்ல உணவளிக்கிறேன், பணந்தருகிறேன்" என்று சொல்லி குரங்குமூக்கன் அழைத்துச் சென்றான். நமது நண்பனோ இராமநாத புரம் விட்டதுமுதல் இவ்வளவு காதுக்கினிய சொற்கள் கேட்டதே யில்லை. ஸம்ஸ்கிருதத்தில் தன்னிடம்சம்பாஷித்தவன் வித்வானென்று எண்ணினான். மந்திரி என்று சொல்லி, பயப்படாதே, எனவே அதி ரூபன் நமது கஷ்டம் இன்றுமுதல் நீங்கிற்று என்பதில் சந்தேகமும் உண்டோ என்று நம்பிவிட்டான். உட்சென்றான். நல்ல காய்ந்த தண்ணீரில் அவன் உடம்புவலி வாங்க அவனை ஸ்நானஞ்செய்வித்து

ஷட்ரஸங்களுடன் கூடிய அமுதளித்து மந்திரி அதிரூபனைத் தன்னறைக்குள் அழைத்துச் சென்றான்.

என்ன இதுவரையில் கொஞ்சநாழியாக நமக்குக் கதையின் போக்கு தெரியவில்லையே என்று இதை வாசிப்பவர்கள் எண்ணலாம். ஏன் மந்திரி தன் குமாரன் கலியாணம் 2 நாளைக்குள் நடப்பதைப்பற்றி அவ்வளவு விசாரப்பட்டு அதிரூபனைக் கண்டதும் அந்த விசாரத்தை விட்டு நீங்கவேண்டும்? இவ்விஷயங்களை இனி விளங்கச் சொல்லுவோம்.

சந்திரசூடன் மந்திரி மகனுடைய படத்தைப் பார்த்ததும் அவன் அழகைக் கண்டு பூரித்து அன்று 15-ம் நாள் வெள்ளிக்கிழமை முகூர்த்தம் வைத்துவிட்டது எல்லாருக்கும் தெரிந்தவிஷயம். மந்திரியின் மகனும் அவ்வளவு அழகுள்ளவன். அதிரூபனுக்கு ஒருவாறு சமானமாக குறிக்கத் தகுந்தவன் என்றும் சொல்லலாம். அந்த ஸங்கதியில் குரங்குமூக்கன் தன் மகனைத் தப்பாக அரசனுக்குக் காட்டி மோசஞ்செய்யவேயில்லை. ஆனால் மந்திரி மகனுக்கு காக்காய்வலி என்ற கொடிய நோய் ஒன்றுண்டு. அது ஒன்று விட்டு ஒருநாள் தப்பாமலவனைப் பாதிக்கும். சூரியோதயம் ஆவது தப்பினாலும் தப்பும். அந்த வலி குறித்தபடி ஒன்றுவிட்டு ஒரு நாள் வருவது தப்பவே தப்பாது. இது வெகுநாளாயுண்டு; ஆனால் ஒருத்தருக்கும் தெரியாதவண்ணம் மந்திரி தன் மகனைக் காத்துவந்தான். வலிவரும் நாளில் தன் மகனை தனது அறையில் பூட்டிவைத்து செய்யவேண்டிய ஔஷதங்கள் செய்து வலிவிடும்போது கதவைத் திறப்பான். ஒருவித வியாதியுமில்லாதவன்போல மந்திரி மகனும் வெளியில் வந்து தானும் ஒரு மனிதனாக வெகு கௌரவமாயிருப்பான். இப்படி இவனுக்கு வலி இருப்பது இவன் தாய்தந்தையர்களல்லாது மூன்றாவது மனிதனுக்குத் தெரியாது. அவ்வளவு ரகஸ்யமாக குரங்குமூக்கன் அதை வைத்திருந்தான். அவனுக்கு வரும் வலியோ இலேசானதல்ல. காலை 2 நாழிகைக்கெல்லாம் வந்துவிடும். மாலை 2 நாழிகை யிருக்கையில் நீங்கும். மற்ற 26 நாழிகையும் வதைத்துவிடும். முகூர்த்தம் வைத்திருக்கிற சுக்கிரவாரம் வலி வருகிற முறை. காலமே 2 நாழிகைக்கு முகூர்த்தம். அதேநிமிஷந் தான் மந்திரி குமாரனுக்கு வலி ஆரம்பிப்பதும். என்ன பண்ணுவான் குரங்குமூக்கன்! அத்தனைநாள் சிரமப்பட்டு செய்யாத ஜாலங்களெல்லாம் செய்து தன் மகனுக்கே கமலாம்பாளை கலியாணஞ் செய்துவைக்க முடித்துவிட்டு அரசன் இன்று 15-ம் நாள் முகூர்த்தம். மறுத்துப்பேசாதே என்று சொல்லும்போது, மந்திரி எவ்விதமாய் அன்று வேண்டாம் மறுநாள் என்று சொல்லக்கூடும்? அப்புறமாவது

தந்திரமாய் ஏதாவது யுக்திசெய்து மாற்ற எத்தனித்தாலோ, அரசன் ஸந்தேகப்பட்டால் என்னசெய்கிறது என்ற வருத்தம் இவனைப் பீடித்தது. ஐயோ! இவ்வளவு பிரயத்தனமும் செய்து நமக்கு அரசன் மகள் மருமகளாகக் கிட்டாததுடன் நமது மோசமெல்லாம் அன்று வெளியாய்விடுமே. என்னசெய்வேன்? அப்புறம் என் கதி என்ன என்று குரங்குமூக்கன் ஏங்கிவிட்டான்.

அதிரூபனைக் கண்டதும் இவனுடைய அவ்வளவு துக்கங்களும் ஒரு நொடியில் பறந்துபோயின. நமக்கு வேண்டியது ஒரு அழகான பையன். அவனை நன்றாய்க் கால்முதல் தலைவரையில் புஷ்பங்களாலும் ஆபரணங்களாலும் உடுப்புகளாலும் வேஷம்போட்டு நமது மகனுக்குத் தகுந்த அழகுள்ள முகத்தைமட்டும் கொஞ்சங் காட்டி தாலியைமட்டில் முகூர்த்தத்தில் கட்டிவிட்டால் அப்புறம் மறுநாள் நமது மகனே மனையில் உட்காரலாம். தாலிமட்டில் கட்டினால் என்ன தோஷம் என்று கருதினான் குரங்குமூக்கன். இவன் உட்கொண்ட கருத்தை நிறைவேற்ற ஈசுவரனே அவனிட மனுப்பினதுபோல அதிரூபனும் யதேச்சையாய் அங்கு வந்து சேர்ந்தான். அவனைக் கண்டதும் மந்திரியானவன், இவன் நமது மகனுக்கு ஒப்பான சௌந்தரியமுள்ள உத்தமன். அதேவயது, அதே உயரம், கிட்டத்தட்ட அதே சாடை. இவனை நமது மகன்போல் வேஷம்போட்டு முகூர்த்தத்தை நடத்திவிடுவோம்; பிறகு சாயங்காலத்தில் இவனுக்கு விடைகொடுத்தனுப்பிவிட்டு நமது மகனுக்கு அப்பொழுது காக்காய்வலி நீங்கிவிடுமாகையா லவனை அரண்மனை அழைத்துப்போவோம் என்று நிச்சயித்துவிட்டான்.

இதேவிஷயமாகப் பேசத்தான் அதிரூபனைத் தனிமையில் அழைத்துக்கொண்டு குரங்குமூக்கன் தன்னுடைய அறையில் புகுந்தது. ரகஸ்யமாகக் கதவைத் தாளிட்டு அதிரூபனைத் தனது சமீபத்தில் அதிக அன்புடனும் ஆதரவுடனும் சரிசமானமாக உட்காரவைத்து முதல்முதலில் அநேக ஆசைவார்த்தைகள் பேசி அவன் குணத்தையும் வித்தையையுங் கண்டு வெகுவாய் மகிழ்ந்தவன்போல் அபிநயித்தான். அதிரூபனோ முன்னிரவு முடிய திண்ணையில் படுத்து நன்றாய்த் தூங்கினவன்: அப்புறம் ஸ்நானஞ்செய்து ஒருநாளும் சாப்பிடாத ஆகாரம் சாப்பிட்டு களித்தவன்; துக்கமேயில்லை. மந்திரிக்குத் தன்னால் வேறுவித காரியங்கள் ஆகவேண்டியிருக்கும் என்று ஒருபொழுதும் ஊகிக்கக் கூடாதவன். அவன், மந்திரி உண்மையாகத் தன் வித்தையையும், பரிதாப நிலைமையையுங் கண்டு ஆனந்தித்திருக்கிறான் என்று யதார்த்தமாக எண்ணி, இவர் மகா நல்லவர் என்று நினைத்துக்கொண்டான்.

இம்மாதிரி கொஞ்சநாழிகை குரங்குமூக்கன் மாயப்பொடி போட்டு அதிரூபனை மயக்கி, பிறகு தனது எண்ணங்களை வெகு சாது

போலவும் வெகு நேர்த்தியாகவும் கொஞ்சங்கொஞ்சமா லானுன். "அப்பா அதிரூபா! நாம் கொஞ்சநாழிகை கினபோதிலும் ஏதோ உன்னைப் பார்த்தால் என் மகனிடம் விசுவாஸம் எவ்விதமாக இருக்குமோ அவ்விதமாக இருக்க நீயோ காசியாத்திரை போகிருய். எவ்வளவு கஷ்டங்கள் வழி லனுபவித்தாயோ? இனி எவ்வளவு அனுபவிக்கப்போகிருயோ. ஏன்? எல்லாம் கையில் இரண்டு காசு இல்லாதபடியாலல்லவா? இனி விசாரப்படவேவேண்டாம். இலட்சம் விராகன் உனக்கு வழிச் செலவுக்கு நான் தருகிறேன். உன்னை என் மகளுக பாவித்துவிட் டேன். அன்றியும் கஷ்டமில்லாமல் யாத்திரை செய்து முடிக்க ஏற் பாடும் செய்கிறேன். எனக்கு உன்னுல் ஒரு சிறு உபகார மாக வேண்டி இருக்கிறது. அதில் உனக்கு ஒருவித சிரமமும் இல்லை. ஒருவித அவமானமுமில்லை. ஒரு பகல் நீ மாப்பிள்ளைவேஷம் போட்டுக்கொள்ளவேண்டும். என் மகனுக உன்னை பாவித்தேன் என்றேனல்லவா; எனது சொந்த மகனுக்கு அடுத்த வெள்ளிக்கிழமை அதாவது நாளையினன்று கலியாணம். அவனுக்கு உடம்பு ஸரிப்பட வில்லை. கலியாணப்பெண்ணே இந்நகரத்து அரசன்மகள். கலியாண மாப்பிள்ளைக்கு உடம்பு சரியாயில்லை என்று அரசன் சமுகத்தில் நான் எப்படி சொல்லுகிறது. அப்படி ஒருக்கால் சொல்லி முகூர்த் தம் நிற்பதுடன் அரசன் மனதே மாறிவிட்டாலோ எனக்குக் கிடை த்த லட்சுமி என்னைவிட்டு ஒதுங்கினதற்குச் சமானம். ஆகையாலப் படி சொல்லுவதற்கு எனக்கு தைரியம் வரவில்லை. உன்னை அவன் மாதிரி வேஷம்போட்டு தாலியைக் கட்டிவிட உத்தேசித்திருக்கி றேன். அவ்வளவுதான் உன்னதிகாரம். கலியாணச் சடங்குகள் முடிந்ததும் நீ வந்துவிட்டால் அப்புறம் மாப்பிள்ளைக்கு அதாவது என் மகனுக்கு உடம்பு சரிப்பட்டால் அவனை யனுப்புகிறேன். இல் லாவிட்டால் உடம்பு சரிப்படவில்லை என்று சொன்னுலும் கட் டின தாலி என் மகன் கட்டினதாக ஏற்படுமாகையால் மாறமாட் டாது. எவ்வளவோ ஔஷதங்கள் கொடுத்துவருகிறேன். சுவாமி அனுகூலஞ்செய்வார். அப்படியில்லையானுல் அன்றை ஒருபொழுது உன்னை நம்பியிருக்கிறேன். அதற்காக ஒரு இலட்சம் விராகன் உனக்குத் தருவேன். என்ன சொல்லுகிருய் யோசித்துப்பார்" என் ருன்.

அதிரூபனே கபடமற்றவன். அவனுக்கு வெளுத்ததெல்லாம் பால். ஒருவித கெட்ட எண்ணத்துடன் மந்திரி தன் மகன் நோயை ஒளித்துப் பேசுகிருன் என்று எண்ண என்ன இடமிருந்தது? இவ் ளவு அன்பாய் கண்டவுடன் உபசரித்துப் பேசும் வித்துவான் துஷ் ன் என்று அவன் எவ்விதமாய் நினைக்கக்கூடும்? அன்றியும் அதி

தாய்தந்தையர்களுக்கு செய்யவேண்டிய கடனை எப் மனதில் கணக்கிட்டுக்கொண்டே எவ்விதமாய் காசி அக்கடன்களை சரிவர செய்து முடிக்கப்போகிறேம் என் ணி எண்ணி விசாரப்படுகிறவனுக இருந்தான். யாத்திரைக்கும் ம் வேண்டும், தீர்த்த சிரார்த்தம் முதலிய சடங்குகளுக்கும் பணம் வேண்டும். இவனிடமோ ஒரு சிறு காசுகூட கிடையாது. வீட்டை விட்டு இரண்டாம் வஸ்திரத்துடன் புறப்பட்டவன். பணம் என்ற சத்தம் காதில் விழுந்ததும் இவனுக்கு ஆசை வந்துவிட்டது. இதல்லா மல் வேறு ஒரு பெரிய காரணம் ஒன்று இவன் மனதை மந்திரி சொன்னதைக் கேட்டுக் களிக்கச்செய்தது. அது என்னவெனில் அநேக சிரார்த்தங்கள் பிர்மசாரிகள் செய்யக்கூடாதென்று விலக்கப் பட்டிருக்கின்றன. அதிரூபனே கலியாணமாகாதவன். ஆகையால் தான் பிர்மசாரியாயிருந்துகொண்டு தன் தாய்தந்தையர்களுக்கு செய்து முடிக்கவேண்டிய சடங்குகளை முற்றிலும் எவ்விதமாய் இவன் செய்து முடிக்கக்கூடும்? மந்திரி சொன்ன ஏற்பாட்டைக் கேட்டதும் ஒகோ! இது நமது பிர்மசாரி ஆசிரமம் நீங்கி கிரகஸ்தாசிரமம் கைக் கொள்ள ஒரு வழியாயிருக்கிறது என்று களித்து இது ஈசன் மாயை யோ, நமது தாய்தந்தையர்களுக்கு நாம் சரிவர சடங்குகளை நிறை வேற்ற தெய்வம் செய்யும் ஏற்பாடோ? பணமும் கிடைக்கிறது. பிர்மசாரி ஆசிரமமும் போகிறது. நாமோ இன்னும் ஒருவருஷம் ஒரு மாதம்தான் பிழைத்திருக்கவேண்டியவன். அதற்குள் பணத்தின் ஒத் தாசையால் பிரயாணத்தை சடுதியில் முடித்து சடங்குகளையும் சரி வரச் செய்யலாம். அல்பாயுள் உள்ள நம்மை மணந்து ஒருவள் கெட்டுப்போவானேன்? அவள் வாழட்டுமே என்று யோசித்தான். எவ்விதமாய்ப் பார்த்தபோதிலும் மந்திரி தனக்கு உபகாரியாகத் தோன் றியதேயல்லாமல் வேறுவிதமாய்ச் சந்தேகிக்க முடியாமல்போயிற்று. அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டுவிட்டான். அதைக் கேட் டதும் ஒரு பெருமூச்சுவிட்டு மந்திரியும் ஆனந்த பரவசனுனன். அன்றிரவு நன்றாய்த் தூங்கினுன். அதிரூபனும் தன் யாத்திரை இருக்கவே இருக்கிறது. இரண்டுநாள் தங்கி நமது பிர்மசாரி ஆசிர மத்தை மாற்றிப்போவோம் என்று தனக்குக் கிடைத்த எதிர்பாராத பாக்கியத்தைக் கண்டு களித்துக்கொண்டே கண்ணயர்ந்து கலியாணக் கனவு கண்டுகொண்டே தூங்கினுன்.

சுக்கிரவாரம் வந்துவிட்டது. அரசன் பெண்ணை மந்திரி குமார னுக்கு விவாகம் செய்துகொடுக்கும் அந்த ஊரில் நடந்த சிங்காரத்தை நாமிங்கு வருணிக்கவும் வேண்டுமா? ஊர்முடிய கலியாணப்பந்தல். எல்லாருக்கும் அரண்மனை சாப்பாடு. ஜனங்கள் குதித்துக்கொ டும் களித்துக்கொண்டு மிருந்தார்கள். சூர்யோதயமான 2 நாழிகை

கெல்லாம் மங்களவாத்தியங்களுடன் மாப்பிள்ளையை அரண் மனைக்கு அழைத்துப்போனார்கள். அதற்கு முன்னமேயே குரங்கு மூக்கன் அதிரூபனை அநேகவித தந்திரங்களால் தன் மகன்போல் சிங்காரித்து வைத்திருந்தான். ஆகையால் அரண்மனைக்குப் போன கலியாணமாப்பிள்ளை அதிரூபன், அவ்விடம் சேர்ந்ததும் கமலாம்பா ளுடன் மணையிலுட்கார்ந்து சகல சடங்குகளையும் நடத்தினான். அரசன் வீட்டுக் கலியாணங்களில் முக்கிய பந்துக்களைத்தவிர வேறு ஒருவரும் விவாக சடங்குகள் நடக்குமிடத்தி லிருக்கக்கூடாது. ஆகையால் அங்கு அரசன் அரசன் மனைவி, மந்திரி மந்திரி மனைவி, இன்னும் இரண்டொரு அம்மான், அத்தான்முறையான பந்துக்களே தான். விவாக சடங்குகள் வெகு காலதாமதமாய் நடக்கும். குழந்தை களுக்கு என்ன சிரமமாயிருந்தாலும் நடத்தியேதான் விவாகம் முடிய வேண்டும். தர்மசாஸ்திரப்படி நடந்தே தீரவேண்டுமல்லவா? அன்று நடக்கிற ஒருநாள் சடங்கல்லவா ஒரு பெண்ணை ஒரு புருஷ னுக்கு ஆயுளுள்ளவரையில் உறவாய்ச் செய்கிறது. என்ன செய்யலாம், தாமதமாய் சடங்குகள் நடந்துவந்தன. சூர்யாஸ்தமன மாக இரண்டு மூன்று நாழிகைதானிருக்கும், திடுதிடு திடுதிடு என்று ஒரே கொட்டாய் மேளம் கொட்ட அதிரூபனும் கமலாம்பாள் கழுத் தில், நாமிருவரும் இவ்வுலகத்தில் உயிரோடிருக்கும்வரையில் அபி மானமு மன்பும் நீங்காத பரமபந்துக்கள் என்ற வேதவாக்கியங்களை கணீர் என்று சொல்லிக்கொண்டு தாலியைக் கட்டினான். தங்கள் மக ளுக்கு இவ்விதமான புருஷன் கிடைத்ததற்கும் அன்று அவள் ஜன்மம் சாபல்யமானதற்கும் அரசனும், அரசன் மனைவியும் ஆனந்தக்கண் ணீர் வடித்தார்கள். மந்திரியோ என்ன வைதீக சாந்தசம், எத்தனை நாழி என்று அடிக்கடி சடங்குகளை செய்துவைக்கும் புரோகிதர் மேல் கடுகடு என்று இருந்தான். இவனுக்குச் சடுதியில் எல்லாம் முடித்துக்கொண்டு அதிரூபனை தன் வீடு அழைத்துப்போய் அவனை மாற்றி வலி நீங்கிவிட்டிருக்குமாகையால் தன் பிள்ளையைக் கொண்டு வந்துவிடவேண்டுமென்ற எண்ணம் மேலாகவிருந்தது. தெய்வா தீனம் தன் சூதை கண்டுபிடிக்காமல் காரியங்கள் எல்லாம் நடந்து தாலியுங் கட்டியாய்விட்டது என்று களித்தான். ஆனால் அதிரூபனை அப்புறப்படுத்தும்வரையில் விசாரமட்டி லவனை விடவில்லை. தாலி கட்டுவதுடன் அன்று சடங்கு முடிந்தபாடில்லை. அப்புறமும் இர ண்டுநாழிகை மந்திரங்கள் நடக்கவேண்டும். ஜலுதி ஜலுதி நடக் கட்டும் ஓமம். நாழியாய்விட்டது. குழந்தைகள் காலமேமுதல் பட்டினி என்று வாத்தியாரை குரங்குமூக்கன் ஓட்டினான். சந்திர சூடன் இன்று ஒருநாள் வாத்தியார்கள் அரசனென்றாவது மந்திரி என்றாவது பயப்படமாட்டார்கள். மந்திரங்களும் ஓமங்களும் நமக்

கஞ்சுமா என்றார். என்ன சொன்னபோதிலும் வாத்தியாரும் மந்திரிக்கு பயந்து வேகமாகத்தான் காரியங்களை நடத்திவந்தார். இதற்குள் தான் கண்ட காட்சியை—அதாவது வித்தையிலும், குணத்திலும் வயதிலும் உருவத்திலும் சமமான ஒரு ராஜஸ்திரீ ஒரு புருஷராஜனை மணந்தாள் என்ற சமாசாரத்தை தேவலோகத்தில் ஓடிப்போய் தெரிவிக்க சடுதியில் சூரியபகவானும் மலைவாயில் விழுந்தார்.

அவ்வளவுதான். கையில் ஆரத்தி ஏந்தி மங்களம் மங்களம் என்ற பாட்டுகளைப் பாடிக்கொண்டு ராணியானவள் முன் நடக்க, ஒரு நூறு பெண்டுகள் தாங்களும் கையில் புஷ்பங்களையும் ஆரத்தியையும் எடுத்துக்கொண்டு கலியாண மண்டபம் வந்து நின்றார்கள். இவர்களைக் கண்டதும் மந்திரம் முடிந்ததோ முடியவில்லையோ, புரோகிதர் மற்ற ஜனங்கள் எல்லாரும் அவ்விடத்தைவிட்டு விலகிவிட்டார்கள். இது அரசர்கள் கலியாணங்களில் கட்டுப்பாடு. அரசன் மனைவி அவ்வாறு வரக்கண்டால் ஒரு புருஷன்கூட கலியாணக்கூடத்தில் நிற்கக்கூடாது. நின்றால் கண்ணைப் பிடுங்கிவிடுவார்கள். அவ்வளவு கண்டிப்பு. தீராது ஆகையால் சம்மந்தி புருஷன்மட்டில் நிற்கலாம். அவனும் இப்பெண்டுகளிடம் ஒரு பேச்சு பேசக்கூடாது. அஸ்தமித்தபிறகு கலியாண சடங்குகளின் அதிகாரி ராணி. அதற்கு முன்னமேயே கலியாணப்பெண்ணும் மாப்பிள்ளையும் சயனித்து நித்திரை செய்யப் பள்ளியறை சிங்காரித்து அதில் அவர்கள் புசிப்புக்கு வேண்டிய 100 வித பட்சணங்கள், கனி வர்க்கங்கள், பால், தேன், வாசனைதிரவியம், தாம்பூலம் முதலிய சகல வஸ்துக்களையும் ஏற்பாடுசெய்து வைத்துவிட்டு ஆரத்தியுடன் குழந்தைகளை அழைத்துப்போய் அறையிடம் விட்டுவிடுவார்கள். கதவைச் சாத்திப் பூட்டி சாவியை ராணி, அதாவது கலியாணப்பெண்ணின் தாய், வைத்துக்கொள்வாள். விடிய 4 நாழிகைக்கு வந்து திறந்து தன் பெண்ணை 2—வது நாள் கலியாணத்திற்கு மங்களஸ்நானம் செய்து வைக்க அழைத்துப்போவாள். அப்பொழுதுதான் பிள்ளையையும் பிள்ளையின் தகப்பனார் வந்து அழைத்துப்போகவேண்டும். இந்த வழக்கம் ஒன்றும் மந்திரிக்குத் தெரியாது. ஏதோ ஓமம் முடிந்ததும் ஒரு நொடியில் அதிரூபனை இட்டுக்கொண்டுபோய் தன் மகனை அவனுக்குப் பதிலாகக் கொண்டுவந்து விடலாம் என்று எண்ணியிருந்தான்.

தானொன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைத்ததே. வாயைத் திறக்க முடியுமா அந்த அவஸரத்தில். ராணி பாடி ஆரத்தி எடுத்தாள். மற்றப் பெண்டுகள் புஷ்பங்கள் போட்டுப் பாடி ஆரத்தி செய்தார்கள். மங்களம் பாடிக்கொண்டு பெண்டுகள் சூழ்ந்து செல்லக் குழந்தைக

ளிருவரும் பள்ளியறை சேர்ந்தார்கள். அதிரூபன் மட்டும் திரும்பிப் பார்த்து "என்பேரில் பிசகில்லை, நான் என்ன செய்வேன்? என் நிலைமையில் நான் எப்படித் திரும்பித் தங்கள் உத்தரவுப்படி வந்துவிடு கிறது" என்று மௌனமாகத் தெரிவிப்பதுபோல் மந்திரியிடம் தன்னை மன்னிக்கக் கேட்டுக்கொள்வதுபோல் தலையசைத்தான். மந்திரியும் என்ன செய்வான்? ஒரு பார்வை பார்த்தான். அது அதிரூபன் மனதில் "தாலிகட்டமட்டும் உனக்கு அதிகாரம் கொடுத்தேன். ஜாக்கிரதையாய் நட" என்பதுபோல் தோன்றிற்று. எது எப்படி யிருந்தாலென்ன? அதிரூபனும் கமலாம்பாளும் அன்று தர்மசாஸ்திரபிரகாரம் கலியாணச் சடங்குகளைச் செய்து முடித்து மன்மதனும் ரதியும் போல பள்ளியறை சேர்ந்தார்கள். அறையைப் பூட்டிச் சாவியைத் தன் மடியில் வைத்துக்கொண்டு ராணியும் மற்றப் பெண்டுகளும் மனோரஞ்சிதமான ராகங்களிலே குயில் கூவுவதுபோலப் பாடத் தொடங்கினார்கள். மந்திரியும் வெடிய ஜாமத்துக்குக் குழந்தையை அழைக்க வருவதாகச் சொல்லிவிட்டு விசனத்துடன் வீட்டைப் பார்க்கத் திரும்பினான். இவன் போனால் போகட்டும்.

நாம் அதிரூபனைப்பற்றி விசாரிப்போம். அவன் அறையில் புகுந்ததும் கதவு தாளிட்டதை யறிந்து அப்பாடா இனியாவது சிரமம் நீங்கக் காலம் வந்ததென்று தன்மேல் போடப்பட்டிருந்த ஒரு வண்டி ஆபரணங்களையும் புஷ்பங்களையும் துணிகளையும் பிடுங்கி வீசி எறிந்தான். அலுப்பால் தனது சொந்தமான தினம் உடுத்திக்கொள்ளும் இலேசான உடுப்பில் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தான். கமலாம்பாளும் படித்தவளாகையால் தன் புருஷன் இவ்வளவு சிரமப்பட்டதைக் கண்டு அவர் களைப்பு நீக்க அநேகவித பழங்களையும் பட்சணங்களையும் அவர்முன் கொண்டுவந்து வைத்து அவர் ஒன்றாவது சாப்பிடாரா என்று எதிர்பார்த்து ஒதுங்கி மரியாதையாய் நின்றாள். அதுவரையில் வெட்கத்தால் பாராத தனது பர்த்தாவுடைய மேனியை மறைந்துநின்று கண்களை விசாலமாக்கிக்கொண்டு இமை கொட்டாது பார்த்து ஆனந்தக் கடலில் முழுகினாள். அதிரூபன் பசிபொறுக்காமல் கொஞ்சங் கொஞ்சம் புசித்தான்; இவன் பசி அடங்கவில்லை. உடனே ஒரு சுலோகம் ஸம்ஸ்கிருத பாஷையில் சொன்னான். கிளி கொஞ்சுவதுபோல இனிய சொற்களில் இவன் சொன்ன பாட்டானது ஏற்கனவே இவன் உருவத்தைக் கண்டு களித்துநின்ற கமலாம்பாளை மயக்கிவிட்டது. இவ்வளவு படித்தவரா நமது பர்த்தா என்று செருக்கடைந்தாள்; இவள் வெகு கற்றவள், ஆனாலிவர் சொன்ன சுலோகத்தின் அருத்தம் புலப்படவில்லை. புருஷனுடன் பேச வெகு ஸங்கோசப்பட்டிருந்தாள். சந்தர்ப்பம் நேரிட்டதென்று எண்ணி "அந்த சுலோகத்தை இன்னொரு தடவை தயவுசெய்யவேண்டும்" என்று

கேட்டுக்கொண்டாள். இன்னொரு தடவை அதிரூபன் சொன்னான். அப்பொழுதும் அவ்வளவு படித்த அவளுக்கு அதின் அருத்தம் புரியவில்லை. "என்ன அருத்தம்" என்றாள். அதன் அருத்தம் "அழகுள்ளவள் என்று ஒரு பெண்ணைச் சொல்லி யழைக்க அவளிடம் பதிவிரதா தருமம் எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் சாப்பாடு என்று சொல்லுவதற்கு அன்னமும்" என்றான்.

இதைக் கேட்டமாத்திரத்தில் கமலாம்பாள் தன் புருஷன் அபிப்பிராயத்தை ஒரு நொடியிலறிந்துகொண்டு எழுந்திருந்தாள். அவ்விடத்தில் இரண்டு மூன்று கிண்ணங்களில் சந்தனம், பன்னீர் முதலிய வாசனை வஸ்துக்கள் வைக்கப்பட்டிருந்தன. அவைகளை ஒரு பக்கத்தில் ஊற்றிக் கிண்ணங்களைக் கவிழ்த்தாள். கலியாணத்தில் உபயோகப்பட்ட மங்களாக்ஷதை, ஒரு ஆழாக்கு அரிசி, மஞ்சளிலும் குங்குமத்திலும் கலந்து ஒரு தங்கத் தாம்பாளத்திலிருந்தது. அதில் கால் படிப் பாலை ஊற்றி நன்றாய்க் களைந்து துய்ய வெள்ளையரிசி யாக்கினாள். அவ்விதமாய் எடுத்த அரிசியைப் பால் செம்பில் அரைப்படி பால் வைத்து அதில் போட்டு பூமியில் கவிழ்த்திருந்த மூன்று கிண்ணங்களின்பேரில் ஏற்றி சந்தனக்கட்டை ஊதுவத்தி முதலிய அந்த சமயத்தில் கிடைக்கக்கூடிய விறகுகளால் அடுப்புமூட்டி 10 நிமிஷத்தில் பாலன்னம்பண்ணி ஒரு தங்கத் தாம்பாளத்தில் கொட்டித் தன் புருஷன்முன் வைத்து "என் பிராணநாதரே! இதைச் சாப்பிட்டுத் தங்கள் பசியை யாற்றிக்கொள்ளுங்கள்" என்றாள்.

இதைப் பார்த்தான் அதிரூபன். இவள்தான் பதிவிரதை. நமக்கு ஒருநாளைக்காவது இவள் சமையல்செய்து போட்டாளே. நமது பாக்கியமே பாக்கியம் என்று களித்தான். கமலாம்பாள் தன் புருஷன் சொன்ன சுலோகத்தால் இவ்வளவு பட்சணங்களும் கனிவர்க்கங்களு மிருந்தும் என் பசியாறவில்லை, அவ்வளவு அன்னமில்லையே என்று சொன்னதாக ஒரு நொடியில் அறிந்துசெய்தவேலை இது. வேறு எந்தப் பெண் அவ்வளவு சூக்ஷ்மபுத்தியாய்த் தன் புருஷன் நோக்கத்தை யறிவாள். ஆனந்த பரவசனாய்விட்டான் அதிரூபன். "நீயும் காலமே முதல் ஒரு கவளங்கூட புசிக்காதவளல்லவா? வயிறென்றால் எல்லாருக்கும் ஒன்றுதானே, உட்காரு; சேர்ந்து சாப்படுவோம்" என்றான். அவளா அந்த சமயத்தை விட்டுக்கொடுப்பாள்; பதிவிரதா சிரோமணியாயிற்றே. தனது புருஷன் மனங்கோணாமல் குதூகலமாய் தன் பார்த்தாவின் சமீபத்தில் உட்கார்ந்தாள். அந்த சமயத்துக்கு அந்த பால் பொங்கல் அமிர்தமாயிருந்தது. கனிகளையும் பட்சணங்களையுங்கூட வைத்துக்கொண்டு தம்பதிகள் இருவரும் ஆனந்தபோஜனம் செய்தார்கள். இவர்கள் ஆனந்தம் இவ்வளவுதானா? இரண்டு பெரிய ஸம்ஸ்கிருத வித்

வான்கள் ஒருவரையொருவர் கண்டு பேசவேண்டுமென்றிருந்தவர்கள், ஒருவர்மேல் ஒருவர் கௌரவம் பாராட்டியவர்கள் ஸந்தித்தால் அவர்கள் ஸல்லாபம் எவ்வளவு ஆனந்தமாயிருக்கும்! அதிரூபன் தன் மனைவி கற்ற சாஸ்திரங்களை விசாரித்து ஒரு நொடியில் அவளை அது படித்திருக்கிறாயா, இது படித்திருக்கிறாயா என்று கேட்க, அவளும் ஜவாப் கொடுக்க, இவள் நமக்குமேல் படித்தவள், இவ்வித மனைவியல்லவோ வேண்டும் என்று மனம் பூரித்துப்போனான். கமலாம்பாள் தன் புருஷன் படித்திருந்த சாஸ்திரங்களைக் கேட்டு "எற்றே இவர்க்கு நாம் என்று" தன் வித்தையை ஒன்றுமில்லை என்று எண்ணிவிட்டாள். முதல்முதல் இவர் சொன்ன சுலோகத்தை நினைத்து நினைத்து சொற்சுவையும் பொருட்சுவையும் இதைவிட உள்ள சுலோகமும் உண்டோ என்று எண்ணி அதை மறுபடி சொல்லி அதன் அருத்தத்தையும் மறுபடி கேட்கும்படியான பாக்கியத்தைத் தனக்களிக்கவேண்டும் என்று அவள் பிரார்த்தித்தாள். அதிரூபனப்படியே அவள் கருத்திற்கிசைய அவள் தன் புருஷன் சொல்லும்போதே அந்த சுலோகத்தையும் அதன் கருத்தையும் தனது சிறு புஸ்தகம் ஒன்றில் எழுதி வைத்துக்கொண்டாள். எவ்வளவு பேசினாலும் பேச்சை நிறுத்தி நித்திரைசெய்ய இவர்களுக்கு மனம் வரவேயில்லை. ஒவ்வொருவர் வித்தையில் மற்றொருவர் மோகித்திருந்தார்கள். பேசவேண்டிய சாஸ்திரங்களை இன்று இரவே பேசி முடித்துவிடவேண்டும், பொழுதுவிடியும் முன் மந்திரி வந்து நம்மை யிட்டுக்கொண்டு போய்விடுவான். அப்புறம் நாமிவளை எங்கு பார்க்கப்போகிறோம் என்று அன்றிரவு அதிரூபன் தன் வித்தியாபாக்கிய மவ்வளவையும் அவளுக்குக் காட்டி விட்டான். பகல் பட்ட சங்கடங்களின் சிரமமும் இரவு ஸல்லாப சிரமமும் மேலிடவே பாதி இரவுக்குமேல் ஆய்விட்டது. விடியற்காலம் மங்களஸ்நானஞ் செய்யப் போகவேண்டுமே என்று கமலாம்பாள் எச்சரிக்க, "ஆம் கொஞ்சநாழிகையாவது நித்திரை செய்வோ"மென்று இவ்விரு சிரோமணிகளும் உறங்கச் சென்றார்கள். இவ்விரு ரத்தனங்களைவிட மேலான ஸ்திரீ புருஷாள் இவ்வுலகத்திலுண்டா? ஆனாலவர்கள் பாக்கியம் அன்றிரவுமட்டுந்தானே, அது யாருக்குத் தெரியும். அதிரூபன் ஒருவன் மனதிற்குத்தான் தெரியும். கொஞ்சநாழிகையாவது இவர்கள் தூங்கட்டும். நாம் மந்திரி என்னமானான் என்பதை விசாரிப்போம்.

அவனன்றிரவு வீடு போகும்போது, நாம்தான் என்னசெய்யலாம்? அவன்தான் என்னசெய்வான்? நடந்தது நம்முடைய வசமில்லாமல் நடந்துபோயிற்று. நல்லது நாளைப்பொழுது நம்முடைய மகனுடையது என்பதற்கு ஆக்ஷேபமில்லையே. நமக்கு வேண்டியது ராஜ்ஜியம்தானே. ஒருக்கால் தன் நிஜவரலாற்றை அதிரூபன் ராஜகுமா

ரியிடஞ் சொல்லிவிடுவானே? எல்லாவற்றிற்கும் காலை மங்கள ஸ்நானத்திற்கு நான்தானே அழைத்துவரவேண்டும் என்று யோசித்து யோசித்து அன்றிரவு தூங்கவேயில்லை. விடிய ஜாமத்திற்கு பிள்ளையை யழைக்க பல்லக்கு சகிதம் வந்துவிட்டான். இவன் வந்தால்மட்டும் எப்படி முடியும்? இராணி வந்தல்லவோ கதவு திறக்கப்படவேண்டும். அவள் குறித்தபடி வர மனமில்லாதவளாயிருந்தாள். குழந்தைகளை இவ்வளவு சீக்கிரம் எழுப்பவேண்டாம்; பகலெல்லாம் குழந்தைகள் வெகு சிரமப்பட்டவர்கள், தூங்கட்டும். ஸ்நானம் ஒருநொடிநேரத்தில் செய்து வைக்கலாம், என்றிருந்துவிட்டாள். ஆனல் அதிரூபன் தன் நிஜ சங்கதியை சொன்னானே என்று நமது நண்பர்கள் கேட்கலாம். இல்லவேயில்லை. அவன் மகா ஸத்தியவானாயிற்றே. அவன் கருத்தெல்லாம் தனது தாய்தந்தையர்களுக்கு தான் செய்யவேண்டிய சடங்குகளை சரிவரசெய்து முடிக்க பணமும், அதன்நிமித்தம் தனது பிரமசாரி ஆசிரமம் நீங்கவேண்டியதுந்தான். அவைகளில் ஒன்றை முடித்துக்கொண்டான். மற்றொன்றையும் கைப்பற்றிக்கொண்டு வடக்கே போகவேண்டியவன். அவ்வளவு உண்மையான விசுவாசம்வைத்த வித்தியாரத்னமான கமலாவை வஞ்சிக்கலாமா? இது பாபமல்லவா என்று எண்ணக்கூடாது. ஏன் எனில், இவன் தனது ஆயுள் வெகு அல்பம். அதைத் தடுக்க முடியாது. ஆகையால் உண்மையைச் சொல்லி நமக்கு ஆக வேண்டியதென்ன? நடக்கிறது நடக்கட்டும் என்றிருந்துவிட்டான். ஆனல் கமலாம்பாள் வெகு கெட்டிக்காரி. இவனைத் தனிமையில் தனது அறையில் கண்டு இவன் வித்தையை யறிந்ததுமுதல், இவன் மந்திரி குமாரனல்ல வேறு ஆள். நாம் ஆராதித்த தெய்வங்கள் நம்மிடம் கொண்டுவந்து சேர்த்த ரத்தினம் என்று கண்டுகொண்டாள். அநேக சாஸ்திர சல்லாபத்துடனும் இரண்டொரு கேள்விகள் கேட்டு அவைகளுக்கு வந்த மறுமொழிகளா லிவர் காசிக்குப் போகிறார் என்று அறிந்துங்கொண்டாள். ஆனல் அவ்வளவு சீக்கிரத்தில் அதாவது இரண்டாம்நாள் கலியாணத்திற்கு மணையில் உட்காரும் முன்னமேயே இவர் போய் விடுவார் என்று எண்ண இடமேயில்லை. யார்தானப்படி சந்தேகிப்பார்கள். காக்கை கற்றிவிட்டது. உடனே பரபரப்பாய் இராணியும் வந்து கதவைத் திறந்தாள். அதற்கு அரைநாழிகைக்கு முன்னமேயே தம்பதிகளும் விழித்துக்கொண்டு சாஸ்திர ஸல்லாபஞ் செய்துகொண்டிருந்தார்கள்.

கதவைத் திறந்ததும் இராணி தன் மகளை வாத்தியத்துடன் மங்கள ஸ்நானத்திற்கு அழைத்துச் சென்றாள். மந்திரியும் வாத்தியத்துடன் தன் மகனாக பாவித்த அதிரூபனை அழைத்துச் சென்றான். வீடு புகுந்ததும் அதிரூபனை தனது அறைக்குத் தனிமையாய் குரங்கு

மூக்க னழைத்துப்போய் "அடே அற்பப்பதரே, உன்னை நான் தாலி கட்டமட்டும் நிச்சயித்திருந்தேன். அதற்குமேலும் நடந்துவிட்டது. ஆனாலது உன் குற்றமில்லை. ஒரு சமயத்தில் உன்னை வெட்டிப்போடலாம் என்றெண்ணியிருந்தேன். என் மகனை ஒரு நாளாவது நானுன்னை பாவித்தபடியால் அப்படி செய்ய மனம் வரவில்லை. நீ வந்த பல்லக்கில் ஏறி உட்காரு. உனக்கு நான் கொடுப்பதாகச் சொன்னது ஒரு லட்சம் விராகன். அதற்கு இரட்டிப்பாய் பல்லக்கில் வைத்திருக்கிறேன். ஒருவரிடமும் வாயைத் திறவாதே. வாயைத் திறந்தால் உன் தலை போய்விடும். உன்னை இந்த ராச்சியத்திற்கப்பால் என் ஆட்கள் அங்கங்கு மாறிக்கொண்டு போய் விடுவார்கள்; சுகமாய் நீ ஓடிப்போய்விடு. உனது ஆயுள் நாட்குள் இந்தப் பக்கம் திரும்பிப் பார்க்காதே. தென்திசையையே நோக்காதே; திரும்பினாயோ உயிருடன் நீ இருக்க காணமாட்டாய்; ஓடு" என்றான். அதிரூபன் அவன் கோபத்தை கொஞ்சமேனும் தப்பாக அருத்தம்பண்ணாமல், "தாங்கள் கோபிக்கவேண்டியதற்கு நியாயமிருக்கிறது. ஆயினும் என் மனப்பூர்வமாக தங்களுக்கு நான் வஞ்சனை செய்யவில்லை. அது ஒன்று என் மனச்சாட்சிக்குத் தெரியும். நான் தங்களுத்தரவுப்படி போய்வருகிறேன்" என, உடனே மந்திரி ஏதோ நினைத்துக்கொண்டவன்போல் படபடப்பாய் "நீ உன் நிஜவரலாற்றை இராஜகுமாரியிடம் சொன்னாயோ" என்றான். "இல்லவேயில்லை. அப்படி சொல்லியிருப்பதாக தெரிந்தால் என்னை நீங்கள் சிட்சிக்கலாம்" என்றான். குரங்குமூக்கன் "ஓடு, ஒரு நிமிஷம் நிற்காதே" என, அதிரூபனும் தனது தாய் தந்தையர்களை மோசம்பண்ணாமல் தன்னை உயிருடன் விட்டதற்கு, ஸந்தோஷப்பட்டு பல்லக்கிலேறிவிட்டான். அதில் சொன்னபடி மந்திரி பணம் வைத்திருந்தான். பல்லக்கும் வடக்கைப் பார்க்க நடந்துவிட்டது.

சனிக்கிழமை வலிவரும் முறையல்ல. குரங்குமூக்கனும் தன் மகனை நேற்று அதிரூபனை சிங்காரித்ததுபோல் சிங்காரித்து இரண்டாம்நாள் கலியாணத்துக்கு அழைத்துவந்தான். பகல் முடிய இரவாயிராமல் போயிற்றே. நமது நாதனை மங்களஸ்நானத்திற்கு விட்டுப் பிரியவேண்டுமே. எப்படி மணையிலுட்காரும் வரையில் அவர் முகத்தை மறந்திருப்பேன்? வாத்தியம் சப்திக்கிறது. அவர் ஒரு நொடியில் வந்துவிடுவார் என்று கமலாம்பாளும் இரண்டாம்நாள், முதல்நாளிரவு பழகிவிட்டபடியால், தன் பர்த்தாவின் முகத்தை ஸூரியவெளிச்சத்தில் பார்க்க ஆவல்கொண்டவளாகக் காத்திருந்தாள்.

பல்லக்கு கலியாண மண்டபத்தில் வந்திறங்கிற்று. மாப்பிள்ளையும் எழுந்திருந்து மணையில் உட்கார்ந்தார். தூரநின்று ஆவலுடன்

கமலாம்பாள் பார்த்தாள். பகீர் என்றது அவள் வயிறு. அதேநகை, அதே உடை, அதேவேஷம்தான் அவள் கண்டதும்; ஆனல் அதே வித்தைக்களஞ்சியமான முகத்தைமட்டில் பார்க்கவில்லை. வேறு முகம் என்று ஒரு விஞடியி லறிந்துகொண்டாள். அந்த சபையில் என்ன செய்வாள் அவள்? ஏதாவது வாயைத் திறந்தால் ராஜகுலத் துக்கே அவமானம். அதல்லாமல் தன்னுடைய நிஜமான பிராண நாதன் உயிருக்கும் ஏதாவது மோசம்வந்தாலும் வருமோ என்று அவள் வெகு சாதுர்யமாய் எண்ணிவிட்டாள். ஆகையால், நடக்கிறது நடக் கட்டும் ஆண்டவனிருக்கிறூர் என்றெண்ணி, ஒரு நிமிஷத்தில் வாடின தன் முகத்தை கமலா பிரஸந்நம் பண்ணிக்கொண்டு சரே லென்று மணையில் வந்து உட்கார்ந்தாள். இன்ன செய்கிறோம் என் பது தெரியாமல் பிரமித்து சடங்குகள் நடப்பதைக்கூட கவனியாத வளாயிருந்தாள். ஆனல் இவள் செய்யவேண்டிய சடங்குகளை ஒருவித வித்தியாஸத்தையும் உணராதவள்போல் செய்தாள். நமது மோசம் ஒருவருக்கும் தெரியவில்லை என்று மந்திரியும் தனக் குள்ளேயே களித்துக்கொண்டான்.

சடங்குகளை கமலா செய்தது, தன் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் மந்திரி குமாரனை உத்தேசித்தா? அல்ல. மனதால்கூட மற்றொருவனை எண்ணேன்; என்னை நேற்று தொட்டு தாலிகட்டின மகா புருஷன் தான் என் நாதன்; அவனை ஈசன் காப்பாற்றி என்னிடம் கொண்டு வந்து சேர்க்கவேண்டும் என்ற மந்திரங்களை மனதில் சொல்லிக் கொண்டு சடங்குகளை அவள் செய்தாளேயல்லாமல் வேறல்ல. சபையில் மணையைவிட்டு எழுந்திருந்தால் குலதர்மத்திற்கு விரோதம் என்று உட்கார்ந்துமிருந்தாள். இரண்டாம்நாள் கலியாணம் அநேக மாய் முடிந்தது. முதல்நாள் சாயந்தரம் நடந்ததுபோல இரண்டா நாள் சாயந்தரமும் இராணியும் மற்ற பெண்டுகளும் ஆரத்தியுடன் வந்து கமலாவையும் மந்திரி குமாரனையும் பள்ளியறை யனுப்பினூர் கள். இராணியும் கதவை சாத்திப் பூட்டி திறவுகோலை மடியில் வைத் துக்கொண்டாள். என்னமாகிறது பார்ப்போம் என்று மந்திரி இர ண்டுநிமிஷம் காத்திருந்தான்.

இதென்ன புதுமை! கமலா எவ்வாறு இப்படி மந்திரி குமாரனுடன் பள்ளியறையில் சென்றூள்? அதிரூபனை மறந்தாளா என்று ஒரு வரும் சந்தேகிக்கவேண்டாம். இவள் வெகு புத்திசாலி. உட் சென்றவுடன் தன் பின்வரும் புருஷனைப் பார்த்து, "நில்லும் கத வுக்குச் சமீபத்தில், எனது பரிசுத்தமான பள்ளிஅறையை கெடுத்து விட ஒரு அடிகூட எடுத்துவைக்கவேண்டாம். நீர் கதவைவிட்டு நக ராமல் நில்லும். நீர் யார்? உள்ளதை உள்ளபடி சொல்லும். அன்னி

யர்கள் மோசத்துக்குட்பட்டு ஒருவித பாவமும் உம்மிடமில்லாமலி ருந்தால் உம்மை நான் மன்னித்து உயிரைவாங்காமல் விட்டுவிடு வேன். உண்மையைப் பேசும்'' என்றாள்.

மந்திரிகுமாரன், "நான் உன் புருஷன்'' என, இதைக் கேட்டதும், "ஆகா அப்படியா உண்மையைச் சொல்லமாட்டீரா'' என்று சொல்லி தன் படுக்கையில் வைத்திருந்த சுறையை எடுத்து ஒரு பெரிய பட்டாக்கத்தியை அதினின்று கமலா உருவினாள். அதுவும் விளக்கு வெளிச்சத்தில் பளபள என்று மின்னிற்று. அவ்வளவுதான். அதைக் கண்டமாத்திரத்தில் மறுநாள் வரவேண்டிய காக்காய்வலி அன்று இரவே அவனுக்கு வந்துவிட்டது. நெருப்பு, நீர், ஆயுதம் இவைகளைக் கண்டு பயந்தால் இந்த நோயுள்ளவர்களுக்கு உடனே வலியும் வருமென்பது கொள்கை. இப்படி வலி வந்ததும் கத்தியை தூரமறைத்து கமலா கதவை படபடவென்று தட்டினாள். இவ் வலி கதவுதாளிட்ட இரண்டு நிமிஷத்திற்குள் வந்துவிட்டது. இன் னும் பெண்கள் மங்களப்பாட்டு பாடக்கூட ஆரம்பிக்கவில்லை. மந்திரியும் போகவில்லை. கதவை இப்படித் தட்டின சத்தம் கேட் கவே, என்னவோ ஏதோ என்று ஒன்றுந்தோணுமல் ராணி கதவைத் திறந்தாள். அங்கு மந்திரிகுமாரன் வலியால் கால்கைகளை உதைத் துக்கொண்டு உட்புகுந்த வேஷத்துடன் கதவினிடமிருப்பதைக் கண்டார்கள். படுக்கையிடம் நின்றுகொண்டு கமலாளும், "அதோ மாப்பிள்ளை கீழே கால்கைகளை உதைத்துக்கொண்டு காக்காய்வலி வந்துகிடக்கிறார்; அவரை சீக்கிரம் எடுத்துப்போங்கள்'' என்று கையைச் சுட்டிக் காட்டினாள். இம்மாதிரி வலியுண்டென்பது மந்திரி ஒருவனுக்குத்தவிர வேறு ஒருவருக்கும் தெரியாதாகையால் எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள். மந்திரிமட்டும் ஐயோ இரண்டு நாள் சிரமம் குழந்தைக்குத் தாளவில்லை என்று சொல்லிவிட்டு சரே லென்று தன் மகனைத்தூக்கி பல்லக்கில் போட்டுக்கொண்டு "பாழுந் தெய்வமே நாளைமுறை இன்று இரவே வரும்படி செய்தாயே'' என்று மனதுக்குள் நொந்துகொண்டு வீடுபோய்ச் சேர்ந்தான்.

இராணிமட்டும் பள்ளியறை சேர்ந்து கமலாவைப் பார்த்து "என் கண்மணியே! என்ன சங்கதி'' என்று விசாரிக்க, அதற்கு கமலாவும்: "அம்மா! உங்களுக்குத் தெரிந்ததைவிட எனக்கு ஒன்றும் தெரியாது! நேற்றிரவு சரியாய்த்தானிருந்தார். இன்று அவர் உட்புகுந்ததும் கதவின் சமீபத்திலேயே அவருக்கு காக்காய்வலி வந்துவிட்டது. அவருடம்பை ஜாக்கிரதையாகப் பார். என் தலைவிதி, என்னை யதிக மாக விசாரிக்காதே. என்னை ஏதாவது கேட்டால் என் பிராணனை விட்டுவிடுவேன்'' என்றாள். இராணியும் வருத்தப்பட்டு வெளியில் வந்தாள். கமலா தன் தாயார் வெளியிற்போனதும் தனது பள்ளி

யறையைத் தாளிட்டு தனிமையில் தன் நிஜமான நாதனை நினைத்து நினைத்து விசாரப்படலானாள். "ஐயோ! இரண்டாம் நாளிலேயே என் பாக்கிய மிப்படியாயிற்றே. கோபம் யாருக்கும் சத்துரு. பகல் முடிய அந்தப் பாதகனுடன் மணையிலுட்கார்ந்தது, இரவு அவன் மூலமாய் நமது சொந்தநாயகன் என்னமானார் என்றறியவல்லவோ கருதினேன்? அப்படி நான் கொண்டகருத்தை நிறைவேற்றாமல் கத்தியை கோபத்தில் உறுவினேனே. மந்திரிமகன் வலிகண்டு விழுந்தான். இந்நோயாளியா என் அன்பான வித்தியாக்களஞ்சியத்திற்கு நிகராவான்? பதறக்கூடாது நாளை மூன்றுநாள் கலியாணம் நடக்கவேண்டும். அதற்காவது வலிப்பு நீங்கி மந்திரிகுமாரன் வருவானா? என் உயிரை விலைக்கு வாங்கி என்னைத்தொட்டு தாலிகட்டினவருக்காக மறுபடி இந்த நோயாளியுடன் மணையில் உட்காருவேன், நாளை இரவு இந்த நோயாளி இந்த அறைக்குள் வருவானா? வந்தால் அவனை கதவண்டை நிறுத்தி என் ஹிருதயேசனைப்பற்றி இரண்டொரு சமாசாரம் கேட்டுக்கொண்டு மந்திரிமகனை ஓட்டிவிடுவேன்" என்று பலவாறு யோசித்தாள், வருத்தப்பட்டாள். இவள் நிர்மலமான பரிசுத்தத்தின் அவதாரமாகையால் இவள் விசனப்படும்போதெல்லாம் இவளது இடதுகண் துடிக்கும். நல்ல சகுனமாகிறது நமது பிராணநாதர் நம்மிடம் வந்து சேருவார் என்றெண்ணிக்கொள்வாள்.

மந்திரி வலியுடன் அவஸ்தைப்பட்ட தன் மகனை எடுத்துப்போன பிறகு அரண்மனை முடிய மாப்பிள்ளைக்கு காக்காய் வலியாம் என்ற சமாசாரம் பரவிவிட்டது. எல்லாரும் மனவருத்தத்தில் முழுகிக்கிடந்தார்கள். எந்தசங்கதி எப்படி இருந்தாலும்நடக்கவேண்டியதை நிறுத்த முடியாதல்லவா? மூன்றாம்நாள் கலியாணம் வந்துவிட்டது. அன்று வரவேண்டிய வலி முன்னிரவே வந்துவிட்டபடியால் சாக்குச் சொல்லவேண்டிய கஷ்டமில்லாமல் மந்திரி, மாப்பிள்ளையாகிற தன் மகனை அழைத்துவந்தான். கமலாள் எவ்வளவு மனவருத்த மிருந்தபோதிலும் அவைகளை ஒருவாறு அடக்கிக்கொண்டு வெகு சந்தோஷத்துடன் வருகிறவள்போல் வந்து மணையிலுட்கார்ந்து மூன்றாம்நாள் சடங்குகள் முடிந்ததைக் கண்டாள். அஸ்தமனமானதும் கமலாள் வெகு சந்தோஷமாய் படுக்கையறை சேர்ந்தாள். மந்திரி இம்மாதிரி தன் மருமகளிருப்பதைப் பார்த்து இவள் வழிக்கு வந்துவிட்டாள், நமது மோசம் பலித்தது, ஆயினும் கொஞ்சநாழிகை வெளியிற் காத்திருப்போம் என்று தயங்கி நின்றான். மந்திரிகுமாரனும் அறைக்குட் சென்றான். கதவு தாளிட்டு இராணியும் இன்றிரவாவது வலிவராமலிருக்குமா என்று பூட்டினாள்.

மாப்பிள்ளையாகிற மந்திரிமகன் உட்புகுந்ததும் கமலாள் தூர நின்றுகொண்டே கையைக்காட்டி "அவ்விடமேநில்மானிடப்பதரே!

நேற்று கத்தியைக் கண்டு பயந்தாயல்லவா! உன்னை இன்று வதிக்கப் போகிறதாக எண்ணாதே! உன்னை என் புருஷனாக பாவித்து உள்ளே விட்டதாக ஒரு நிமிஷங்கூட நினைக்காதே! இரண்டொரு கேள்வி உன்னை நான் கேட்கப்போகிறேன். சரியாய் பதில் சொன்னால் நான் உன் வழிக்கு வரமாட்டேன். நீ உன்னிஷ்டப்படி பிழைத்திருக்கலாம். ஏதாவது ஒளித்தால் போயிற்று உன் உயிரும் உன் தகப்பனார் உயிரும்'' என்று எச்சரித்தாள். பிறகு ''முதல்நாள் வந்தவர் யார்? அவர் பெயர், ஊர், என்ன'' என்று கேட்க, அதற்கு மந்திரி மகன் ''அவர் யாரோ எனக்குத் தெரியாது. எனக்கு முகூர்த்தத்தினன்று வலி வரும் முறையாதலால் அக்காலத்துக்கு வேண்டி ஒரு பிராமண பையன் காசிக்குப் போய்க்கொண்டிருந்தவனை என் தகப்பனார் அழைத்துவந்து எனக்குப் பதிலாக வேஷம்போட்டனுப்பினார்'' என்றான்.

''அவர் இப்போது உயிரோடிருக்கிறாரா, எங்கே யிருக்கிறார்?''

அவர் உயிருக்கு ஒருவித மோசமும் இல்லை; நேற்று காலமே அவர் செலவுக்கு இலட்ச விராகன் கொடுத்து என் தகப்பனார் அவனைக் காசிக்கு அனுப்பிவிட்டார்.

இவ்வளவு கேட்டமட்டில் போன தனது பிராணன் திரும்பி வந்ததாக கமலா எண்ணினாள். தெய்வாதீனம், இனி பயமில்லை. எத்தனை நாளானால்தானென்ன? நமது நாதன் நம்மிடம் வராமலிருக்கமாட்டார் என்று கமலா மனதுக்குள்ளேயே களித்தாள். தன் புருஷனுக்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு இருந்தே தீரவேண்டுமென்றும், ஒருநாளும் ஒருவித குறைவு வரமாட்டாதென்றும்; அவனைவிட்டுத் தற்காலம் பிரிந்திருக்க தனக்குமட்டுந்தான் குறைவந்ததென்றும் கருதினாள். உடனே மந்திரிமகனைப் பார்த்து கமலாள், ''அடே மானிடப்பதரே! நீயும் உன் அப்பனும் உயிருடன் வாழ வேண்டுமென்றால் நான் சொல்லப்போகிறதைக் கேள். இனிமேல் ஒருபொழுதாவது இந்த அறைக்குள் உன் காலை வைத்துவிடாதே. என் நாதன் செருப்பில் ஒட்டிய தூள்வில நீ பெறமாட்டாய். உன்னிடம் நான் பேசின சங்கதியை ஒருவரிடமும் சொல்லாதே. நீயே அரண்மனை மாப்பிள்ளை என்ற பெயர் வைத்துக்கொள். என்னைமட்டில் உன் பெண்சாதி என்று கனவிலும் நினையாதே. அரசன் மாப்பிள்ளைக்கு விருந்து என்றால் வந்து புசித்துப்போ. மோதிரப் பணம் போட்டால் வாங்கிப்போ. என் முகத்தை கண்ணெடுத்துமட்டும் பார்த்துவிடாதே. உன் கண்களை அந்த நிமிஷமே வாங்கிப்போடுவேன். மாப்பிள்ளை மரியாதையைமட்டும் பெற்றுக்கொள். கதவைத் தட்டு. ஓடு வெளியில். சடுதி'' என்றாள்.

இவ்வளவுடன் மறுபடி சுறையைவிட்டு கத்தியை உருவாமல் விட்டாளே, இவளே நல்லவள் என்று மந்திரி மகன் கருதி, தானுகவே கதவைத் தட்டினுன். நேற்றுவந்த வலிபோலிருக்கிறது என்று இராணி கதவை உடனே திறக்க, மந்திரி விசாரத்துடன் பார்க்க, மந்திரிகுமாரன் அவ்வித வலி ஒன்றுமில்லாமல் உட்புகுந்த வேஷங் கலையாமல் சரேலென்று வெளியே வந்து "பல்லக் கெங்கே வீடுபோகவேண்டும்" என்ருன். அப்படியே தகப்பன் பிள்ளை இருவர்களும் வீடுபோய்விட்டார்கள். மந்திரி போகும் போதே பள்ளியறையில் என்ன நடந்ததென்று தன்மகனை கேட்க, அதற்கு அவன் ஒன்றுமில்லை, எனக்கு அவளைக் கண்டால் பயமாகவிருக்கிறது என்று ஒளித்துவிட்டான். என்ன கேட்டும் உண்மை வெளியில் வரவேயில்லை. மந்திரி மகனுக்கு பயம் என்பது நிச்சயமே. கமலா கண்டிப்பாய் சொன்ன சொற்கள் இவன் மனதில் பதிந்து இதற்கு விரோதமாய் நடந்தால் நமக்கு நாசம் என்பதில் ஆக்ஷேபமில்லை என்று அவன் வெகுவாய் நடுங்கிவிட்டான். அன்றிரவு அம்மாதிரி கமலாள் அரண்மனை மாப்பிள்ளையை அனுப்பிவிட்டபிறகு அவளை அவள் தாய்தந்தையர்கள் கண்டு வெகுவாய்க் கேட்டார்கள். அவர்களுக்கு கமலா ஒன்றும் பதில் சொல்லாமல் ஒரே மொழியாய் "நான் அதிர்ஷ்டமற்றவள். இன்றுமுதல் என் புருஷனுக்காக தவம் செய்யப்போகிறேன். என்னை ஒருவித கேள்வியுங் கேட்கக்கூடாது" என்று சொல்லிவிட்டாள். இதை அவர்கள் காக்காய்வலி நீங்க மந்திரி மகனுக்காக இவள் செய்யுந் தவம் என்றெண்ணிஞர்கள். அப்படி அம்மாதிரி அவள் உறுதியைக் கண்டு மெச்சினுர்கள். ஆம் பானையா சட்டியா மாற்ற. தான்கொண்ட புருஷன் நோயாளியானுல் நோய்நீங்க மனைவி விரதம் எடுப்பது நியாயம் என்று எண்ணிவிட்டார்கள், ஊர் முடிய இந்த சமாசாரம் பரவிவிட்டது. தெய்வாதீனம் நமது மோசம் ஒருவரும் கண்டுபிடிக்காமல் போனுர்களே என்று மந்திரி தன்னை புகழ்ந்துகொண்டான். இராஜ்ஜியம் நம்மை எங்குவிட்டது? என்னவென்ருலும் நமது மகன் அரசன் மருகன்தானே என்று உறுதி செய்துகொண்டான்.

ஆனுல் இப்பதனையா குறித்து கமலா தவம் புரிந்தது? தனது பிராணநாதனை அதிரூபனை உத்தேசித்தல்லவோ? மூன்ரும்நாள் இரவு வரக் காத்திருந்து, தனது சொந்த புருஷன் சமாசாரத்தை ரகஸியமாய் கேட்டறிந்தது முதல் அவன் தன்னிடம் க்ஷேமமாய் திரும்பிவர அந்த நிமிஷம் துடங்கி கமலா தவம் செய்ய நிச்சயித்தாள். தான் வேருெருவனை நினைத்து தவம்பண்ணுவது மந்திரி முதலியவர்களுக்குத் தெரிந்தால் எங்கு தன் சொந்த புருஷனுக்கு இவர்கள் ஆபத்தை

விளைவிப்பார்களோ என்று அவ்வளவு ரகஸ்யமாய் வைத்துக்கொண்டாள். சொல்லும் சொல்லில் பாவமில்லாதபடி என் புருஷன் க்ஷேமத்தை உத்தேசித்தே தவம் செய்கிறேன் என்று சொன்னாள். அரசனும் இராணியும் மந்திரியும் மற்றவர்களும் இவள் மந்திரி மகன் வலி நீங்க தவம்புரிவதாக எண்ணினார்கள். ஆனால் இவள் சொந்த புருஷன் அதிரூபனல்லவா? அவனை உத்தேசித்துத்தா னிவள் நிஷ்டையிலிருந்ததும். தனது அழகான ஆடையாபரணங்களை எல்லாம் துறந்தாள். காஷாய வேஷம் பூண்டாள். ஒரு இரவாவது பஞ்சு மெத்தையில்லாமல் தூங்கினவளல்ல. ஆனால் தவம்புரிய ஆரம்பித்தது முதல் வெறுந் தரையில் சயனித்தாள். கைமூலந்தான் இவளுக்குத் தலையணை, பஞ்சாக்கினி மத்தியில் உட்காருவாள், ஸதா நிஷ்டையிலிருப்பாள். எல்லாம் அந்த பள்ளியறைக்குள் நடந்தது ஒருவருக்கும் தெரியாது. சாப்பாட்டு வேளையில் வெளியில் வந்து பாலும் பழமும் புசிப்பாள். மகா பரிசுத்தமுள்ளவள். எல்லாரும் இவளைக் கண்டு நடுங்கினார்கள். மகாராஜாகூட "ஏனிப்படி அவஸ்தைப் படுகிறாய்" என்று விவரித்து தன் மகளைக் கேட்க தைரியமில்லாதவராயிருந்தார். நல்ல வழியில் நடக்கிறவளை யார்தான் தடைசெய்யக்கூடும்? நமது அருமை மகள் தன் நாதனுக்காகத்தானே தவம் செய்கிறாள் என்று இருந்துவிட்டார். இம்மாதிரி தவத்தில் கமலா ஒருநாள் குறைய ஒரு வருஷகால மிருந்தாள். இவள் செய்த தவமோ இருஷிகள்கூட இவளைப்பார்த்து வெட்கிக்கவேண்டிய தவமாகவிருந்தது. முழுமையும் ஒரு வருஷமானவுடன் அதாவது இவள் தவம்புரிய ஆரம்பித்த 365–வது நாள், பார்வதி, பரமசிவன், ரிஷபாரூடர்களாக இவளுக்கு பிரத்தியக்ஷமானார்கள். அவர்களைக் கண்டதும் ஆனந்தத்தாண்டாவமாடி கமலா தலைவணங்கி நின்றாள். ஈசனிவள் உண்மையான பக்தியைக் கண்டு ஆச்சரியமடைந்து "அம்மா உனதுபரிசுத்தமான மனதும், குற்றமற்ற வாழ்க்கையும், உண்மையான பக்தியும், இடைவிடாத நிஷ்டையும் என்னை கைலாயத்தைவிட்டுப் புறப்பட்டு உன்னை வந்து கண்டுபோகும்படி துரத்தின. உனக்கு என்னவேண்டும்" என்று வெகு கருணையுடன் கேட்டார். அதற்கு கமலாம்பாளும் "என் உயிருக்குயிரான தெய்வமே, உங்களுடைய கருணையால் நான் ஸர்வ ஸம்பத்தையு மிந்த உலகத்தில் அடைந்தேன். எனது தகப்பனாரோ ஏக சக்ராதிபதி. அவருக்கோ நான் ஒரே பெண். உங்கள் கருணையால் நற்குணமும் வித்தையும் சீலமும் பெற்றேன். எனக்கு ஒருவித குறைவுமில்லை. இருந்தாலும் உங்கள் தர்சனமாத்திரத்தில் நீங்கிவிட்டன. இதோ என் கழுத்தில் காணப்படுகிறதே எனது மாங்கல்யம், அதைத் தொட்டுக் கட்டின என் பிராண நாதன் என்னைவிட்டுப் பிரிந்திருக்கிறார். அவரா என்னி

டம் வந்து சேரச்செய்யவேண்டும், அது ஒன்றேதான் என்குறை'' என்றாள். இதைக் கேட்டதும், மகேசன் "அளித்தேன், பயப் படாதே'' என்று சொல்லி மறைந்தார். கம்லாவும் தனது நிஷ் டையின் லாபத்தை அந்த க்ஷணம்முதல் அடைந்ததாக எண்ணங் கொண்டாள்.

உடனே தனது தகப்பனருக்கு அவள் சொல்லியனுப்ப அவரும் வந்து தன் னருமைமகளைக் கண்டு அம்மா "இந்த சிறுவயதில் எத்தனை நாளிப்படி ஆண்டிச்சி வேஷம்பூண்டு நீ வருத்தப்படுவாய்? என்றைய தினம் உலகத்துப் பெண்கள்போல் உன் புருஷனும் நீயுமாக வாழ் வாய்? எனக்கோ நீ ஒருத்தியே கதி, என்றையதினம் என்னை சந் தோஷிப்பாய்'' என்றார். அதற்கு கமலாவும் "என் அப்பனே! பயப் படவேண்டாம். இன்னுங் கொஞ்சகாலந்தான்; மாதக்கணக்கில் தானிருக்கிறது. நான் தங்களுக்கு ஒரே மகள்தானே, என் விஷய மாய் பணஞ் செலவுசெய்ய ஏதாவது தடையுண்டா? நான் புரிகிற தவம் அநேகமாய் பலித்துவிட்டது. என் தவம் முடிய இன்னுங் கொஞ்சம் பாக்கி. என் குருவை நான் பார்த்துக் களிக்கவேண்டும். அதற்கு உபாயம் சில சத்திரங்கள் கட்டி வரப்பட்ட பிராமணர்களுக் கெல்லாம் அன்னம் போடவேண்டும். அந்த விஷயமாய் என் உத்தரவு களை நிறைவேற்ற 2, 3 குமாஸ்தாக்கள் வெகு நம்பிக்கையுள்ளவர்க ளாக எனக்கு வேண்டும். என் சொற்படி அவர்கள் நடக்கவேண்டும். நான் கேட்கிறபடி பணம் கொடுக்கவேண்டும்'' என்றாள்.

சந்திரசூட னிவ ளிப்படி சொன்னதைக் கேட்டதும் "அம்மா, உன்னைவிட எனக்கு ஆஸ்தி வேறு வேண்டுமா? என் கஜானசாவி இந்தா. உனக்கு என்னவேண்டுமோ அதை எடுத்துக்கொள். போதா விடில் அயல்தேசங்களுக்கு சீட்டனுப்பி அவ்விடத்திய கஜானக்களை யும் உன் வசமாக்குகிறேன். உன்னிஷ்டப்படி நடக்க நம்பிக் கையுள்ளவர்களை ஒரு நொடியிலனுப்புகிறேன். நீ எப்படியா வது உன் குருவைக் கண்டு அப்புறம் உன் புருஷனுடன் வாழ்ந் தால் சரி. நீயோ தவம்புரிவதெல்லாம் உன் புருஷன் சௌக்கியத் திற்கு'' என்று மெச்சிப்போனர்; உடனே ஆள்களையும் அனுப்பினர். அவர்கள் வந்ததும் கமலா, சந்திரகிரிமுதல் 10 நாழிகை வழிக்கு ஒரு சத்திரமாக காசிவரையில் எவ்வளவு சத்திரங்கள் கட்டவேண்டு மோ, அவ்வளவு சத்திரங்கள் ஒருவாரத்துக்குள் கட்டியாகவேண்டு மென்றும் அவைகளில் வந்த பிராமணர்களுக்கு அன்னம் போட வேண்டுமென்றும் கட்டளை செய்துவிட்டாள். பிறகு சத்திரங்களுக்கு விசாரணைக்காரர்களாக நியமிக்கப்பட்டவர்களை எல்லாம் வரவழைத்து அவர்கள் கையில் ஒரு ஏடு எழுதிக்கொடுத்து சத்திரத்தில் சாப்பிட்டுப்

போகும் பிராமணர்களுக்கு அந்த எட்டைக் காட்டி அதில் என்ன எழுதப்பட்டிருக்கிறது, அதன் கருத்தைச் சொல்லவேண்டுமென்று கேட்க வேண்டுமென்றும், எந்த பிராமண பிரபு அதன் கருத்தை விவரிக்க ஒப்புக்கொள்ளுகிறாரோ அவரை வெகு மரியாதையுடன் தன்னிட மழைத்துவர வேண்டுமென்றும், அம்மாதிரி ஒருவர் வருவதை தனக்கு அவர் வரும் இரண்டுநாளைக்கு முந்தியே தெரியப்படுத்த வேண்டு மென்றும் திட்டஞ் செய்துவிட்டாள். இம்மாதிரியாய் சத்திரங்கள் கட்டப்பட்டு அவைகளில் அன்னதானமும் நடந்துகொண்டுவந்தது. மந்திரிகுமாரனுக்கு காக்காய்வலி இன்னும் நீங்கினபாடில்லை; ஆனால் லவன் அரசன் மாப்பிள்ளை என்று எல்லாரும் சொல்லிக்கொண்டுவந்தார்கள். அந்தப்படியே அவன் தீபாவளி வேஷ்டி, போகிபண்டிகை யினும், தேரடிப்பணம், நல்லநாள் பெரியநாட்களில் அரசனுடன் சாப்பாடு இவைகளில் ஒன்றுங் குறைவில்லாமல் விளங்கி வருமானத்தையும் பெற்றுவந்தான்.

இங்கு இவ்வளவு விவரமாய் பேசின நாம் நமது அதிரூபனை இவ்வளவு காலமாக மறக்கலாமா? அவனோ சந்திரிகிரியை விட்டுப் போய் ஒருவருஷத்திற்கு மேலாய்விட்டதே. அவன் உயிருடனிருக்கிறானா இல்லையா என்பதை விசாரிக்கவே யில்லையே. சத்தியவாக்கு குறித்த சாதகமும் பொய்யாமா? அவனையும் நாம் உயிருடன் பார்க்கப் போகிறோமா, விசாரிப்போம். அவன் மந்திரியிடம் இரண்டாம் நாள் கலியாணத் தன்றையதினமே உயிருக்குப் பயந்து பல்லக்கிலேறி ஓடினதை நாம் கண்டிருக்கிறோம். அந்த நிமிஷம்முதல் அவன் கமலாவை மறந்தேவிட்டான். தனது தாய்தந்தையர்களுக்கு தனது பதினெட்டாவது வயது நிரம்புமுன் சடங்குகளை நிறைவேற்றவேண்டிய ஆவலை வெகு அதிகமாகவும் ஒரே கருத்தாகவும் கொண்டிருந்தான். சந்திரகிரி வரும்வரையி லவனுக்கு வருத்தம் யாத்திரையிலிருந்ததுபோல் அப்புறம் ஏனிருக்கும்? கையிலோ யதேச்சையாக பணம் கிடைத்துவிட்டது. அவனை பல்லக்குக்காரர்கள் சந்திரகிரி சமஸ்தானத்துக்கு அப்பால் விட்டுவிட்ட உடனே அவன் தன் கைப்பொருளைக்கொண்டு வண்டியிலும் குதிரையிலுமாக அதிவேகமாக ஒரு மாதத்திற்குள் காசி சேர்ந்து அங்கு 5, 6 மாதகாலம் வசித்து, தனது தாய்தந்தையர்களுக்குத் தான் நடத்தவேண்டிய சடங்குகளை குறைவற ஒருவித விக்கினமுமில்லாமல் நிறைவேற்றி வைத்தான். இன்னும் அவன் தகப்பனார் குறித்த கணக்கின்படி அவன் ஆயுள் 5, 6 மாதகாலந்தானிருந்தது. பிரயாகைக்குச் சென்றான். அங்கு ஒரு கிழவியைக் கண்டான். அவள் மாதிரி வெகு சிலாக்கியமாக இவனுக்குத் தோன்றிற்று. அவளிடம் தன் கைப்பொருள் யாவற்றையுங் கொடுத்து "அம்மா, நான் கேட்கும்போது என் தீர்த்த சிரார்த்தம்

முதலியவைகளுக்கு வேண்டியதைக் கொடு. பசி என்று கேட்கும் போது அன்னமளி. என்னை உனது மகனாக எண்ணிக்கொள்'' என்றான். அம்மாதும் அப்படியே நடத்திவந்தாள். பிரயாகையில் அதிரூபன் தான் செய்யவேண்டிய தீர்த்த சிரார்த்தம் முதலியவைகளை சரிவர நடத்தி முடித்தான். வீண்பொழுது மற்ற வேலைகளில் போக்காமல் ஒரு பெரிய ஜோஸியன் என்று பிரகடனம் பண்ணிக்கொண்டான். வெகு ஜனங்களிவனிடம் வந்து தங்கள் ஜாதகங்களை கணித்துக்கொண்டு இவன் அற்புத படிப்பைக் கண்டு மெச்சினார்கள். இவ்விதமாய் இவனுக்குக் கிடைத்த பொருள் லாபத்தையும் கிழவியிடமே கொடுத்தான். அவள் இவனை தனது மகனுக்கு மேலாக நடத்திவந்தாள் என்று சொல்லவும் வேண்டுமோ? இம்மாதிரி 5, 6 மாதமும் நடந்தேறின. பிறகு அதிரூபனுக்கு காலம் கிட்டிவிட்டதென்ற எண்ணம் தோன்றிற்று. தனது 18–வது வயது நிரம்ப ஒரு வாரந்தான் பாக்கி நின்றது. எந்த சமயத்தில் எவ்விதமாய் நமக்கு மரணம் சம்பவிக்குமோ, நம்மால் அக்காலத்தில்கூட ஒருவருக்கும் ஒருவகை உபத்திரவமும் உண்டாகக் கூடாதென்று கருதி தான் தினந்தோறும் கங்கைக்கு ஸ்நானம் செய்யப்போகும் வழியை விட்டு ஒருவரும் போகாத வழியாய் நதிக்குப் போய்வர ஆரம்பித்தான்.

இம்மாதிரி 6, 7நாள் நடந்து வந்துகொண்டிருக்கையில் 18-வது வயதின் கடைசிநாள் அதிரூபன் தான் ஸ்நானஞ் செய்து திரும்பி வந்துகொண்டிருக்கையில் ஒரு தோப்பில் சிறுவரம்பு ஒன்றை தாண்டுங்காலத்தில் கால் சறுக்கி கீழே உட்காருவதுபோல் விழுந்தான். அவ்வளவுதான்! இவனது ஆத்மாவும் இவன் கூட்டைவிட்டு நீங்கிவிட்டது! சத்தியவாக்கு குறித்த ஜாதகம் பொய்யாமா! அதிரூபன் 18–வது வயதில் மாண்டான். அவன் படித்த வித்தைகள் என்ன, அவன் குணமென்ன, அவன்மேல் அன்புவைத்தவர்கள் கதி என்ன, ஒன்றும் அவனை இரட்சிக்க முடியாமற்போயிற்று. இவன் விழுந்து மாண்ட இடமும் ஒருவரும் அதிகமாக அணுகாத தோப்பு. இவன் சவத்தைக்கூட எடுப்பாரில்லை.

யாருக்கு இப்பொழுது துக்கம்! பிரயாகைக் கிழவிக்கே! வழக்கப்படி சாப்பிடப்பட்ட காலத்தில் அதிரூபன் வராமலிருந்ததைக் கண்டு அவள் ஊரெங்கும் தேடினாள், ஓடினாள், அலறினாள், கதறினாள். ஐயோ! தினம் திண்ணையி லுட்கார்ந்தபடியே பணத்தை படியாலளந்து கொட்டுவானே. எங்கேயப்பா! போய்விட்டாய், என்னிடம் சொல்லக்கூடாதா? உன்னை நான் என் பிள்ளைக்கு மேலாக எண்ணியிருந்தேனே; என்னை மறந்தாயே. ''தங்கை பிள்ளையும் தன் பிள்ளையாமா'' என்ற பழமொழியும் உண்மைதானா? நீ உயிருடனிருக்

கிருயா என்று பலவாறு புலம்பி அதிரூபன் 2, 3 நாளாக காணட டாமலிருக்கவே அவள் பைத்தியம் பிடித்தவள்போ லாய்விட்டாள்.

இவ்விதமாய் பிரயாகையிலிருந்தகாலத்தில் தான் சந்திரகிரியில் கமலாம்பாளுக்கு பரமசிவன் பிரத்யக்ஷமானதும். என்றையதினம் அதிரூபன் மாண்டானே எந்த நிமிஷத்தில் அவனது ஆத்மா அவன் கூட்டைவிட்டு விலகிற்றோ அதேநிமிஷத்தில்தான் பரமசிவன் கம லாவுக்கு மாங்கல்ய பிச்சை கொடுத்ததும். இம்மாதிரி அந்தபதிவிரதை யை அநுக்கிரகம் பண்ணிவிட்டு சிவபெருமான் கைலாயம் போய்ச் சேர்ந்ததும்; அங்கு அவர் தரிசனத்திற்காக நாரதமகாமுனி காத்திருந் தார். அவர் சிவபெருமானைக் கண்டபிறகு பூலோகத்தில் என்ன விசேஷம் என்று விசாரிக்க, சிவபெருமானும் சந்திரகிரியில் சந்திர சூடன் அருமை மகள் புரிந்த தவத்தையும் தான் அவளிடம் கிருபை கூர்ந்து அளித்த வரத்தையும் கூறி, அவள் பக்தியை சொல்லி மெச்சி ஞர். இதைக் கேட்டு நாரதர்நகைத்து "ஒரு சிறு விண்ணப்பம். அங்கு கமலாவுக்கு எந்த நிமிஷம் வரமளித்தீர்களோ அதேநிமிஷத் தில் அதிரூபன் என்ற பெயருள்ள அவள் புருஷன் காலஞ்சென்று விட்டபடியால் கங்கைக்கரையில் மாண்டுகிடக்கிறான்" என்று உள்ள சங்கதியைத் தெரிவித்தார். சிவபிரானும் தனக்குத் தெரியாததை எடுத்துக்காட்டுவதுபோல நாரதர் சொன்னதைக் கேட்டு நகைத்து "அவன் ஆயுள் அவ்வளவுதான் என்றபோதிலும்அவன் மணந்த கம லாவின் பதிவிரதா குணத்திற்காக அதிரூபன் அவனிறந்த 3-ம் நாள் பிழைக்கட்டும். இம்மாதிரி பிழைத்தான் என்பது அவனுக்கே புலப்படாமலிருக்கவேண்டும். அவன் நிர்ப்பாக்யன். ஆனால் அவன் மனைவி புண்ணியமானது, அவனை பிழைத்திருக்கச் செய் கிறது" என்று சொல்லி அதிரூபன் ஆயுளை திரும்பி கைலையிலி ருந்தே கொடுத்துவிட்டார்.

அதேபிரகாரம் தான் விழுந்த 3-ம் நாள் அதிரூபன் நல்ல நித்திரை யிலிருந்து எழுந்திருக்கிறவன்போல் எழுந்துட்கார்ந்தான். மேலெல் லாம் தூசுபடிந்து, அதன்மேல் புள்ளி புள்ளியாக கொஞ்சம் மழைத்துளிகளும் விழுந்திருக்கக் கண்டான். தான் விழுந்து எழுந் திருந்தது ஒருநாளல்ல என்பதுமட்டும் அவனுக்கு நிச்சயமாகத் தெரிந்தது. ஆனால் எத்தனைநாள் அப்படி இருந்திருக்கலாம்; இப்படி யும் உண்டோ? போன உயிர் எப்படி திரும்பிவந்தது? நிஜமாகத் தான் இறந்து மறுபடி பிழைத்தானு அல்லது இறக்கவேயில்லையா? இவைகள் ஒன்றும் அவனுக்குப் புலப்படவில்லை. தான் ஏகாதசி செவ்வாய்க்கிழமை காலமே நதிக்கு வீட்டைவிட்டுப் புறப்பட்டது என்பது அவனுக்கு நன்றாக ஞாபகமிருந்தது. என்றையதினம் தான்

மயக்கம் நீங்கி எழுந்திருந்தானே அன்றையதினம் இன்னநாள் இன்ன திதி என்பது அவனுக்குத் தெரியவில்லை. அவன் பிழைத்து உட்கார்ந்ததும் கொஞ்சநேரம் யோசித்து பின்வருமாறு தனக்குத்தானே சொல்லிக்கொண்டான். "நாம் நமது தேகத்தைப் பார்த்தால் ஒரு நாள்தா னிங்கு விழுந்திருந்ததாகத் தோன்றவில்லை. பலநாளாய் இருக்கவேண்டும். தலையிலும் தேகத்திலும் ஒருவண்டி தூசு ஏறியிருக்கிறது. இத்தனைநாள் விழுந்திருந்தோம், இன்ன காரணத்தால் எழுந்திருந்தோம், உண்மையாகவே மாண்டோமா? அப்புறம் தெய்வமே நமது தாய்தந்தையர்கள்மேல் மனமிறங்கி நம்மை ஜீவிக்கச் செய்தாரா? அல்லது நாமிறக்கவே யில்லையா? மயக்கமா? மயக்கமானால் பல நாளு மிப்படி யிருக்குமோ" என்று பலவாறு யோசித்தான். "நல்லது நாள் என்ன? நட்சத்திரமென்ன? திதி என்ன என்று சொல்லிக்கொண்டு வெளிக் கிளம்புவோம். மமை பார்த்தவர்கள் நாள் நட்சத்திரம் திதி முதலியவைகளைச் சொல்லுவார்கள். நாம் ஸ்நானம் பண்ண வந்த தினம் செவ்வாய்க்கிழமை, ஏகாதசி திதி; அன்று நட்சத்திரம் சித்திரை. இன்று நாள் நட்சத்திரம் திதி தெரிந்தால் ஒருவாறு இவ்வளவுநாள் நாம் மயக்கத்திலோ அல்லது மாண்டோ இருந்தோமென்பது வெளியாகும்" என்று உத்தேசித்து பைத்தியகாரன் போல் வேஷம் பூண்டு "நாள் என்ன? நட்சத்திரம் என்ன? திதி என்ன" என்று சொல்லிக்கொண்டு அத்தோப்பை விட்டு வெளிக் கிளம்பினான். இவன் ஊர் புகுந்ததும் இவன் வரவைக் கண்டு களித்தது அவ்வூர் கிழவியே. "அப்பா அதிரூபா, இந்தக் கிழத்தை எப்படி மறந்தாய் நீ? இத்தனைநாள் எங்கு போனாய்? எங்கு புசித்தாய்" என்று வெகு பரிதாபத்துடன் கேட்க, அதற்குப் பதிலாக அதிரூபன், "நாள் என்ன? நட்சத்திரமென்ன? திதி என்ன" என்றான். "கிழவி இன்று வெள்ளிக்கிழமை அப்பா" என்றதும், நாள் என்ன என்பதை விட்டு நட்சத்திரமென்ன திதி என்ன என்றான். உடனே சமீபத்திலிருந்த ஒரு சாஸ்திரி இன்று அனுஷம் என்றார். "திதி என்ன" என்று அதிரூபன் புலம்ப, "இன்று அமாவாசை" என்றார். இம்மாதிரி அன்று நாள் நட்சத்திரம் திதி இவைகளை அதிரூபன் அறிந்துகொண்டதும் தான் மூன்றுநாள் மயக்கத்திலோ அல்லது எவ்விதமாகவோ தனது ஸ்வாதீனமற்றிருந்ததாக அறிந்துகொண்டான். செவ்வாய் தான் ஸ்நானத்திற்குப் போனதாயும் அன்று எழுந்திருந்தது வெள்ளி என்றும் தெரியவந்தது. ஏதோ சாவோ மயக்கமோ அதன் பெயர் என்னவோ, என்னமாயிருந்தாலு மிருக்கட்டும் தனக்கு 18—வது வயது முடிவில் ஒரு கண்டம் வந்து நீங்கிற்று என்பது நிச்சயமாய் விட்டது. ஆனாலிம்மாதிரி வரப்பட்ட ஆபத்து நீங்கி தான் மறுபடி பிழைப்பான் என்றுமட்டும் அவன் ஒருநாளும் எண்ணவேயில்லை.

அதற்குக் காரணம் அவனுக்குத் தெரிந்தமட்டிலும் ஆ
சாஸ்திரம் இடங்கொடுத்தமட்டு மவனுக்கு புலப்பட
எப்படி புலப்படும்? இவன் மாண்டவன் மாண்டவனே.
வின் தபோமகிமையால் பிழைத்தவன் என்பதும், ஈசுவர
ரூபனுக்கு தானிம்மாதிரி பிழைத்தான் என்றவிதம் தெரியாமல
வேண்டுமென்று சொன்னதும் நமக்குமட்டும் தெரியும். அவனு
தெரிய வழியில்லையே.

இம்மாதிரி நமது நண்பன் பிழைத்ததும் ஆபத்து தன்னை விட்டு நீங்கி விட்டதென்பதை அறிந்துகொண்டான். முதல் முதலில் தன்னை பிரயாகையில் ரட்சித்த கிழவியினிடம் ஒரு வாரம் வசித்து அப்புறம் தனது வயதுசென்ற தாய்தந்தையர்கள் ஞாபகம் வந்து விட்டபடியால் இராமநாதபுரத்தில் கவலை அவ்வளவையும் வைத்து விட்டான். தனக்கு 18-வது வயதில் மரணம் நிச்சயம்; தன் தாய் தந்தையர்கள்முன் தன் ஜீவனைவிட்டால் அவர்கள் சகிக்கார்கள் என்ற எண்ணத்துடனும், தான் தனக்கு அந்தியகாலம் வருமுன் அவர்க ளுக்கு நடத்தவேண்டிய சடங்குகளை ஸரிவர நடத்தினால்தான் அவர் கள் தன்னை மகனாக அடைந்ததற்கும் தான் அவர்களுக்கு மகனாகப் பிறந்ததற்கும் பிரயோஜனம் என்றும் நினைத்து, அதிரூபன் தன்னைப் பெற்றவர்களை விட்டுப் பிரிந்தானேயல்லாமல், வேறல்ல. இவ்வித இரண்டு எண்ணங்களு மவனுக்கு இல்லாவிடில் ஒருநாளும் ஸத்திய வாக்கையும் துளஸியம்மணியையும் விட்டு ஓடியிருக்கமாட்டான்.

இப்பொழுதோ அதிரூபனுக்கு இவ்விரு கவலைகளும் நீங்கிவிட் டன. தனக்கு 18-வது வயதில் மரணம் என்ற குறி தப்பிவிட்டது. அந்தகாலத்தில் தனது தகப்பனார் கணித்தபடி வந்தது மரணமோ என்னவோ காலம் கடந்துவிட்டது. தானும் செய்யவேண்டிய சடங் குகள் தன் பெற்றோர்களுக்குச் செய்தாய்விட்டது. இனிமேல் இவனுக்கு இராமநாதபுரத்தின் ஞாபகம் எப்படி வராமலிருக்கும்? ஒரு நிமிஷமாவது வீண்காலம் போக்காமல் தான் தனது ஜன்மதேசம் போய்தனது தாய்தந்தையர்களைக் கண்டு அவர்களைச் சந்தோஷிப்பிக் கவேண்டும் என்று எண்ணிவிட்டான். அக்கருத்தை பிரயாகை கிழ வியிடம் சொல்ல அவள் தன் கதி என்ன? தன்னையு மழைத்துப்போக வேண்டும் என்றாள். அதற்கு அதிரூபன் அவளுக்கு அநேகவித உபசாரங்கள் சொல்லி அவளை கைவிடாமல் தான் சிலகாலத்திற்குள் வந்து அழைத்துப்போவதாகவும், தற்காலம் தன் தாய்தந்தையர்களைப் போய் அவசியம் பார்த்து பிறகு தான் கிழவியை அழைத்துக் கொள்ளவேண்டுமென்றுஞ் சொல்லி கிழவியிடம் தன் பொருள் அவ்வளவையும் கொடுத்து தன் செலவுக்கு எவ்வளவு வேண்டுமோ

டில் எடுத்துக்கொண்டு வெளிக் கிளம்பிவிட்டான். ய விட்டு காசி வந்து அங்கு கொஞ்சநாளிருந்து தென் ாவடியுடன் திரும்பினன்.

வளவுதானு அதிரூபனுடைய குணம். கொஞ்சகாலம்தான் த்த கிழவி இடம் அவ்வளவு அன்புகாட்டியவன் தான் தொட்டு விகட்டின பெண்களின் ரத்தினமும் வித்தையின் களஞ்சியமுமா கிய கமலாவை மறந்தானே. அவளைப்பற்றி கொஞ்சங்கூட நினைக் காத பாவியானுனே. கடைசியாய் இவன் பிழைத்ததெல்லாம் அவ ளால் என்று நமக்குத் தெரியுமே. அவளைப்பற்றி ஏன் அவன் இவ் வளவு மறதியாக இருந்தான் என்று நமது நண்பர்கள் கேட்கலாம். அப்படி அவர்கள் கேட்கவேண்டியதும் நியாயந்தான். ஆனுலிது அதிரூபன்மேல் ஒரு குற்றமாகமட்டும் எண்ணிவிடக்கூடாது. சந் திரகிரி பக்கம் திரும்பினுல் உன் தலை போய்விடும் என்று குரங்கு மூக்கன் கட்டளையிட்டதையும், அந்த மந்திரியின்முன் நமது நண் பன் அதிரூபன் எவ்வளவு என்பதையும் நாம் கவனிக்கவேண்டும். இரண்டாம்நாள் கலியாணம்முதல் மந்திரிகுமாரன் மாப்பிள்ளையாயி ருப்பான். இவ்வளவு தந்திரமுள்ள மந்திரி தன் காரியத்தை சரிவர முடித்துக்கொள்ளாமல் விடுவானு என்று அதிரூபன் எந்தநிமிஷம் பல்லக்குடன் சந்திரகிரியை விட்டு மந்திரியிடம் பணமும் விடையும் பெற்று புறப்பட்டானே அந்த நிமிஷமே கமலா நமக்கு ஒருநாள் மனைவி, இனி அவளைப்பற்றி நினைப்பதில் பிரயோஜனமேயில்லை என்று வாஸ்தவமாகவே அவளை மறந்தேவிட்டான்.

ஆனுலிவன் காசியை விட்டு காவடியுடன் புறப்பட்டு முதல் மஜிலியில் இறங்கினதும் அந்த மஜிலிசத்திரத்து ஸம்பிரதி அதிரூப னுக்கு ஆசார உபசாரம்பண்ணி விருந்தளித்து அவன் மறுபடி அங்கு விட்டுப்போகுமுன் ஒரு ஏட்டை அவன் கையில் கொடுத்து "இதில் ஏதோ ஒரு சுலோகம் எழுதி இருக்கிறது, இதன் கருத்து தாங் கள் சொல்ல முடியுமா? இந்த சத்திரம் கட்டிவைத்த எங்கள் எஜமானி காசியிலிருந்து வரும் ஒவ்வொரு யாத்திரைக்காரரிடமும் இந்த சுலோகத்தைக் காட்டி அருத்தங்கேட்கச் சொல்லியிருக்கிறுள். இது வரையில் ஒரு ஆயிரம்பெயர்கள் வரையிலிந்த ஏட்டைப் பார்த்து தங்களுக்குத் தெரியாதென்று சொல்லிப் போயிருக்கிறுர்கள். தாங் களும் அப்படித்தான் சொல்லப்போகிறீர்களா என்ன" என்றுன். பார்த்தான் ஏட்டை அதிரூபன். பாய்ந்தன அவன் எண்ணங்கள் அவ்வளவும் கமலாவிடம். மனதிலோ தாங்கப்படாத துக்கம் வந்து இவனை மூடிக்கொண்டது. அதை வெளிக்காட்டினுல் சத்திரத்து யஜமான் தன்னை பைத்தியக்காரனுக எண்ணுவானே என்று ஆனமட்

டும் அடக்கிப்பார்த்தான். எப்படி அடக்க முடியும்? கரகரவென்று இவனிரு கண்களிலும் நீர் பிரவாகமாக ஓட ஆரம்பித்தது. இதை ஸம்பிரதி கண்டதும் என்ன சமாசாரம், இந்த சுலோகத்தின் கருத்து தங்களுக்குத் தெரியுமா என்ன என்றான். "நன்றாகத் தெரியும்" என்று அதிரூபன் சொன்னமாத்திரத்தில், ஒரு பல்லக்கும் அதைத் தூக்க ஆட்களும் தயாராக வந்து நின்றுவிட்டார்கள். இதைக் கண்டு அதிரூப னாச்சரியமடைந்து இது என்ன என்று விசாரிக்க, அதற்கு ஸம்பிரதி: "எங்கள் யஜமானியின் உத்தரவு இது. யார் இந்த சுலோகத்தின் கருத்து தெரியும் என்று சொல்லுகிறார்களோ அவரை பல்லக்கிலேற்றி என்னிடம் ஒருவருக்கும் தெரியாமல் கொண்டுவந்து சேர்க்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறாள்" என்றான். உங்கள் யஜமானி யார் என்று அதிரூபன் கேட்க, அதற்கு சத்திரத்தின் அதிகாரி "அவள் சந்திரகிரி மகா ராஜா சந்திரசூடனுடைய ஒரே மகள் கமலா. பெரிய தவம்பண்ணி ஈசுவர கடாக்ஷம்பெற்ற புண்ணிய ஸ்திரீ" என்றான்.

உடனே தன் துக்கத்தை வெளியில் காட்டாமல் பல்லக்கிலுட்கார்ந்தான் அதிரூபன். அவன் காவடியும் மற்றொரு பல்லக்கில் ஏற்றினார்கள். கமலா உத்தரவிட்டிருந்தபடி ஒரு ஆளும் வெகு விரைவாக ஓடி பல்லக்கு சந்திரகிரி சேர ஒருவார மிருக்கும்பொழுதே சுலோகத்தின் கருத்தைச் சொல்லத்தெரிந்த காசியாத்திரை செய்துதிரும்பிவரும் ஒரு பிராமணர் கிடைத்தார் என்று தெரிவிக்கச் சென்றான். அதிரூபன் பல்லக்கி லுட்கார்ந்ததும் தனது பத்தினி தன்னை மறக்கவில்லை; அவளை தான் இழக்கவேயில்லை என்பதை முற்றிலும் உணர்ந்தான். இவ்வளவு வித்தியாக் களஞ்சியம் நம்மைவிட்டு மற்றொருவனைக் கருதுவாளா என்பதை தான் யோசிக்காமல் தான் அவளை மறந்ததற்கு வெகு வருத்தமடைந்தான். அங்கங்கு பல்லக்கு நின்றுபோகும்போது கமலா தவம்புரிந்ததையும் சிறுகச் சிறுகக் கேட்டு ஓகோ! இவள் மகா பதிவிரதை நமக்காகத்தான் இவ்வளவு சிரமம் இவள் பட்டிருக்கிறாள். எத்தனை சத்திரங்கள் கட்டி எவ்வளவு பணங்கள் செலவுசெய்திருக்கிறாள். ஒவ்வொன்றிலும் நமது சுலோகத்தை எழுதி வைத்திருக்கிறாள். இவள் பதிவிரதாதர்மத்தால்தான் நாம் பிழைத்தோமோ என்னவோ தெரியவில்லையே என்று சந்தேகிக்கவும் சந்தேகித்தான். வெகு புத்திமானாயிற்றே, எனிந்த சந்தேக மிவனுக்கு இருக்கமாட்டாது. முக்கியமாய் ஸ்நானபானம் அனுஷ்டானம் இவைகளுக்குமாத்திரம் பல்லக்கு நின்றதேயல்லாமல் ஒரு நிமிஷங்கூட வழியில் வீண்காலம் போக்க பல்லக்கு நிற்கவேயில்லை. இரவுமுடிய பல்லக்கு ஆள்கள் மாறிமாறி நடந்துகொண்டேயிருக்கும். அதிரூபன் பல்லக்கில் தனது அன்புள்ள கமலாவை நினைத்து நினைத்து எந்த நிமிஷ மவளைக் காண்போம். அவள் அன்பு பரிபூரண

மாய் நமக்கிருக்கும்வரையில் குரங்குமூக்கனுக்கு பயமா என்று நினைத்துத் தூங்குவான்.

தனது நாதன் வருகிறார் என்ற சமாசாரம் கமலா பல்லக்கு வந்து சேர ஒரு வாரமிருக்கும் முன்னமே கேட்டுவிட்டாள். அந்த நிமிஷம்முதல் அவள் முகம் மலர்ந்து ஆனந்தக்கடலில் முற்றிலும் முழுகிவிட்டது. உடனே தனது தகப்பனுருக்குச் சொல்லியனுப்பினாள். சந்திரசூடனுக்கு தனது பெண்பேரில் விசுவாஸம் வெகு அதிகம். அவர் வந்து "என் குழந்தாய், நான் உனக்கு என்னசெய்யவேண்டும்? உன்னை யின்று பார்க்க எனக்கு வெகு சந்தோஷமாயிருக்கிறது. எப்பொழுதும் கொஞ்சநாளாக உன்னைப் பார்க்கும்போதெல்லாம் உன் முகம் வாடி விசாரத்தில் ஆழ்ந்திருக்கும். இன்றைக்கோ ஆனந்த பரிபூரணம்போ லுன் முகம் விளங்குகிறது. இதே நற்சகுனமாக இருக்கவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கிறேன். என்ன விசேஷம்" என்றார். அதற்குக் கமலா "என் அருமைத் தந்தையே, எனது தவம் முடிந்து நற்காலம் வந்துவிட்டது. இன்னும் 5, 6 நாளைக்குள் நான் என் புருஷனுடன் கூடி வாழ்வேன். தாங்கள் என்னைப்பற்றி விசாரப்படவேண்டாம். ஆனுலிந்த சங்கதி தங்கள் மனதிலேயே இருக்கட்டும். காசியிலிருந்து ஒரு பெரியவர் காவடியுடன் வந்து கொண்டிருக்கிறார். அவரை தாங்கள் வெகு மரியாதையுடன் முன் சென்றழைத்துவந்து அவரை அவர் காவடியுடன் நமது மண்டபத்தில் இறக்கவேண்டும். அவர் பூஜைசெய்து முடித்தவுடன் நான் என் நாதனுடன் சேர்ந்து வாழ்வேன். தாங்கள் உடனே புறப்பட்டு அதிக பரிவாரமில்லாமல் அவரை முன்சென்று வெகு மரியாதையாக அழைத்துவரவேண்டும்" என்றாள்.

இம்மாதிரி தன் மகள் சொன்னதைக் கேட்டு சந்திரசூடன் வெகு சந்தோஷமடைந்தார். இன்னும் ஒரு வாரத்திற்குள் கமலா தனது நாதனோடு சேர்ந்து வாழப்போகிறாள் என்று கேட்டதும் ஆனந்தபாஷ்பம் வடித்தார். "அம்மா! குருடன் கண்ணைத்தானே வேண்டுகிறான். எப்படியாவது நீ உலகப் பெண்களைப்போல் புருஷனுடன் கூடி வாழ்ந்தால் போதும். இதோ நான் எதிர்சென்று உன் பெரியவரை அழைத்துவருகிறேன்" என்று சொல்லி தன் மகளிடம் விடைபெற்று புறப்பட்டுவிட்டார்.

எதிர்கொண்டழைக்கப்போன இரண்டாம்நாள் அதிரூபன் பல்லக்கு வந்துவிட்டது. உடனே அரசன் தன்மகள் உத்தரவுப்படி முன்கொண்டுவந்து அவரை அழைத்துப்போக தான் வந்ததாக அதிரூபனுக்குச் சொல்லியனுப்பினார். அதிரூபனும் தன் பல்லக்கை விட்டு கீழே இறங்கி அரசனைக் காணவந்தான். மாமனரும் மாப்

பிள்ளையும் சந்தித்தார்கள். ஆனல் அரசனுக்கு அதிரூபன் தன் மாப்பிள்ளை என்பது தெரியவே தெரியாது. அவன் உருவத்தைக் கண்டு இவ்வளவழகுள்ள ஒருவன் இவ்வுலகத்திலுண்டோ? எவ்விதமாய் இவருக்கும் நமது பெண்ணுக்கும் பரிச்சயமாயிற்று? இவர் மகா யோகிபோலிருக்கிறதே. இவ்வளவு இளமைப்பருவத்தில் எப்படி இவர் யோகியானர் என்று அரசன் ஆச்சரியப்பட்டார். அதிரூபன் தன் மாமனை நேரில் பார்த்து அவருடைய கம்பீரத்தையும் குணத்தையுங் கண்டு மனதிற்குள் கமலாவுக்கு தகுந்த தகப்பனர், "வினையொன்று போட்டால் சுரையொன்று முளைக்குமா" என்று மனதிற்குள் எண்ணினனே யல்லாது வெளியிற் காட்டிக்கொள்ளவில்லை. அரசன் அதிரூபனை ஒரு பெரிய மகான் என்றும் ஏதோ காரணத்தால் தனது மகளுக்கு குருவென்றும் அந்தக் குருவின் உத்தரவு பெற்றதின்மேல் தன் மகள் தனது புருஷனகிய மந்திரி குமாரனிடஞ் சேர்ந்து வாழப்போகிறள் என்றும் நினைத்திருந்தார். அதிரூபனுக்கு தனது காரியங்கள் அதாவது எவ்வித உத்தேசங்களுடன் காசியாத்திரைக்கு புறப்பட்டானே அவைகளவ்வளவும் சரிவர முடிகிற வரையில் தீட்சையாதலால், அவன் தாடியும் மீசையுமாக ஒரு யோகி போலவே காணப்பட்டானேயல்லாது வேறுவிதமாக காணப்படவில்லை. அநேகவித ஆனந்த சம்பாஷணையுடன் பல்லக்குகள் சந்திரகிரிக்குள் வந்து புகுந்தன. நேரில் தன் நாதன் அதிரூபனைக் காணும் வரையில் கமலாவுக்குச் சந்தேகம் சந்தேகந்தான். வேறு யாராவது சுலோகத்தின் அருத்தந்தெரிந்து வந்திருக்கக்கூடாதா என்று பல்லக்கு தன் அரண்மனை வாசல் வந்து அதிலிருந்து ஆள் இறங்குகிற வரையில் ஆவலுடன் மேல்நின்று பார்த்திருந்தாள். என்னதான் தாடியும் மீசையும் வளர்ந்து முகம் வேறுபட்டபோதிலும், இவள் மனதை முற்றிலும் கவர்ந்த தனது ரமணன் முகக்குறிகளை இவள் மறப்பாளா? அதிரூபன் பல்லக்கைவிட்டு கீழே வந்ததும் ஒரு விநாடியில் தன்னைத் தொட்டு தாலிகட்டி தன் மனதை ஒரு நாழிகை சம்பாஷணையில் கவர்ந்த தனது ஹிருதயேசன் திரும்பி தன்னிடம் வந்து சேர்ந்தான். இனி நமக்கென்ன குறைவு? இனிமேலு மவரைவிட்டுப் பிரிவேனே? இந்தட்சணமே அவரை நானே எதிர்நின்று வன் அழைக்கக்கூடாது? அவசரப்படவேண்டாம். கொஞ்சநாழிகை பொறுப்போம் என்று எண்ணினள். பல்லக்கு வந்து காவடி சகி இறங்கிவிட்டது என்று அரசன் தன் மகளிடம் வந்து தெரிவிக்கதார்.

அதற்குள் கமலா தனது மலினமான வஸ்திரத்தை விழுத்து ஸ்நா செய்து உயர்ந்த ஆடையாபரணங்கள் பூண்டு, விசேஷமாய் து மேனியை நகைகளாலும் புஷ்பங்களாலும் அலங்காரம் பண

ணிக்கொண்டு வெகு குதூகலத்துடன் தன் தந்தையின் வரவை எதிர்பார்த்திருந்தாள். அவர் தன் மகளைக் கண்டதும் தானே ஆச்சரியப்பட்டு, இத்தனைநாள் ஏனிப்படி இராமல் கஷ்டப்பட்டாய் என்று ஆனந்த பாஷ்பம் வடித்து "உன் கட்டளைப்படி உன் பெரியவனை அழைத்துவந்தேன். என்னு லினி என்ன இன்னுமாகவேண்டும்? எப்பொழுது உன் புருஷனுடன் நீ சேர்ந்து வாழ்வாய்" என்றார். அதற்குக் கமலா இன்னும் இரண்டொரு நாழிகைக்குள், தாங்கள் எந்த இடத்தில் எனக்குக் கலியாண முகூர்த்தம் நடத்தினீர்களோ அதேயிடத்தில் இன்று காவடிபூஜை நடக்கவேண்டும். கங்கை தீர்த்தம் பெற்றுக்கொள்ள இந்த நகரத்து மகாஜனங்கள் எல்லோரும் வந்திருக்கவேண்டும். மந்திரியும் மந்திரிகுமாரரும் தப்பாமல் வரவேண்டும். நானே வந்து அந்த இடத்தில் கோலம் முதலான சிங்காரங்கள் செய்துவைக்கிறேன் என்றாள். அரசன் அப்படியே ஏற்பாடு செய்து தன்னுடைய தேசத்து மகாஜனங்கள் எல்லாரும் அன்று 10 நாழிகைக்கெல்லாம் தனது வீட்டு கலியாணசாலைக்கு வந்து சேர உத்தரவனுப்பினார். தன் மகள் தவம் நிறைவேற்றி முடித்தாள், தன் புருஷனுடன் அன்றுமுதல் கூடி வாழப்போகிறாள் என்று தன் சம்மந்தியாகிய மந்திரிக்கு சொல்லியனுப்பினார். அவனும் எத்தனை நாள் ஒரு சிறுபெண் தன் புருஷனை விட்டு வாழும். ஒரு வருஷத்திற்குமேல் பார்த்தாள்; சாத்தியப்படவில்லை. காக்காய்வலியுள்ளவனாக இருந்தால் என்னவென்று நமது மகனோடு இன்றுமுதல் சேர்ந்து வாழப்போகிறாள் என்று கருதி, தன் மகனை விசேஷமாக அலங்காரம்பண்ணி, தெய்வாதீனமாக அன்று அவனுக்கு வலிவரும் முறை இல்லையாகையா லவனை அழைத்துவந்து சேர்ந்தான்.

இதற்குமுன் கமலா, கலியாண மண்டபத்திற்கு ஜனங்கள் கூடும் முன்னமே சென்று எந்தவிடத்தில் காவடிபூஜை நடக்கவேண்டுமோ அவ்விடத்தில் விதம்விதமாக கோலங்கள் போட்டு சிங்காரித்து வைத்திருந்தாள். அன்று அவள் அழகையும் சந்தோஷத்தையும், அவள் செய்துவந்த காரியங்களையும் கண்டு எல்லாரும் ஆச்சரியப்பட்டு நேற்றைக்கும் இன்றைக்கும் இவ்வளவு வித்தியாசம் இவளிடம் தென்படுவதற்குக் காரணம் என்ன? காசியிலிருந்து வந்த குருவின் மகிமைதானு என்று வியப்படைந்தார்கள். அதுதான் என்று நாம் சொல்லுவதற்கு ஆக்ஷேபமும் உண்டோ?

குறித்த காலமாகிய 10 நாழிகைக்குள் அவ்வூர் மகாஜனங் எல்லாரும் அரண்மனை கலியாணமண்டபம் வந்து சேர்ந்தார். மந்திரிமகன் அரண்மனை மாப்பிள்ளையாதலால் பூஜை நடக்கும் இடத்துக்கு அருகாமையில் ஒரு பெரிய ரத்தின கம்பளத்தின் மத்தி

மணைபோட்டு சாய்ந்துகொண்டு வெகு உல்லாசமாய் உட்கார்ந்திரு தான். அவன் சமீபத்தில் சம்மந்தி குரங்குமூக்கனும் வீற்றிருந்தான். காவடிபூஜை வெகு மும்மரமாக நடந்தது. யோகியின் தாடியையும் மீசையையும் கண்டவர்கள் அவர் யதார்த்த யோகியென்றே எண்ணி ஞர்கள். தன் மருமகள் தன் மகனுடன் சேர்ந்து அன்றுமுதல் வாழப்போகிருள் என்ற ஆனந்தத்தில் குரங்குமூக்கன்கூட தாடியா லும் மீசையாலும் மறைக்கப்பட்ட முகம் தான் ஒரு வருஷத்திற்கு முந்தி கண்டு வேஷம்போட்டு தன் மகனுக்குப் பதிலாக அனுப்பிய முகம் என்று கண்டறியக் கூடவில்லை. காவடிபூஜை முடிந்ததும் கங்கை இருக்கும் குடத்தை யுடைத்து பூஜைக்குவந்த ஜனங்களுக்கு பிரஸாதம் கொடுப்பது வழக்கம். அந்த வழக்கப்படி அதிரூபன் குடத்தை உடைத்து கையிலேந்தி ஒரு உத்தரணியால் கங்கையை எல்லாருக்கும் எடுத்துக் கொடுக்க புறப்பட்டான்.

அதேசமயத்தில் "என் பிராணநாதா, நான் உயிருடனிருக்க குடத்தை நீங்கள் தூக்கவேண்டுமா" என்று ஒரு மிகவும் கருணை யான சத்தம் உண்டாயிற்று. அதற்கு ஒரு விஞடிக்கெல்லாம் கண் ணுங் கண்ணீருமாக சர்வாபரண பூஷிதையாக கமலாள் அதிரூபன் இடதுபக்கத்தில் வந்துநின்று அவர் கையிலிருந்த குடத்தையும் வாங் கிக்கொண்டாள். யோகிக்கு இது ஒன்றும் புதுமையாக தோற்ற வில்லை. தன்னை உத்தேசித்தே இவ்வளவும் கமலாள் நடத்துகிருள் என்பது அவருக்கு நன்ருகத் தெரிந்த விஷயம். தன் சொந்த சம்சா ரத்தினிடம் கொடுப்பதுபோல் குடத்தை புன்னகையுடன் கொடுத்து விட்டார். யாரோ ஒரு காசி பிராமணனை தன் நாதன் என்ருள் என்று எல்லோரும் ஆ ஆ என்ருர்கள். அதைக்கேட்டு "கமலாள், சபை யோர்களே! மந்திரியையும் மந்திரிகுமாரனையும் பத்திரப்படுத்துங் கள். என் புருஷன் காக்காய்வலியால் வருந்தும் மந்திரிமக னல்ல; சர்வ குணங்களோடும், சர்வ லட்சணங்களோடும் கூடி வித்தியாரத்தினமாக விளங்கும் இவர் என்று நான் நிரூபிக்கிறேன். அன்றியு‍ என்னைத் தொட்டு தாலிகட்டினவர் இந்த மகான்; அர் தப் ப[illegible] ல. இவருக்காகத்தான் நானிதுவரையில் தவம்புரிந்தே[illegible]
[illegible] நளா லிவரைத் திரும்பப் பெற்றேன். குரங்குமூ[illegible]
மே[illegible] ரிக்காமல் போய்விட்டது" என்ருள். அரசன் உ[illegible]
[illegible] இதைக் கேட்டு ஆச்சரியப்பட்டார்கள். இதற்கு
[illegible]திரி குமாரனையும் சபையார்கள் உத்தரவுப்படி
[illegible]திரப்படுத்திஞர்கள்.

[illegible]தழப்பம் ஒருவாறு அடங்கவே கமலாவி[illegible]
[illegible] உத்தரவுப்படி அவள் கைப்பெட்டி

யின் மத்தியில் கொண்டுவந்து வைத்தாள். அதை கமலா திறந்து, அதினின்று கறிதுலக்காத மூன்று வெள்ளிக்கிண்ணங்கள், பற்றுத் துலக்காத ஒரு தங்கத் தாம்பாளம் இவைகளை எடுத்து சபை முன் வைத்து தான் அதற்குமுன் அதிரூபனை தனது கலியாண அறையில் சந்தித்ததையும், அங்கு அவருக்கு அன்னம் செய்து போட்டதையும் அவர் வாயாலேயே சபையாருக்கு சொல்லச்சொன்னாள். அதற்காகவே, எல்லாருக்கும் நிரூபிக்க அன்றுவரையில் அக்கிண்ணங்களையும் தாம்பாளத்தையும் தடையங்களாக வைத்திருந்ததாகவுஞ் சொன்னாள். திரும்பி கதையை முற்றிலும் இங்கு மறுபடி சொல்லுவானேன்? எல்லாவிஷயத்தையும் ஆதியோடந்தமாக சபையாருக்கு விளங்கக் காட்டினாள். மந்திரியும் தான் செய்த மோசங்களை ஒப்புக்கொண்டான். அந்த நிமிஷத்தில்தான் கமலாள் செய்த அவ்வளவு தவமும் அதிரூபனை உத்தேசித்து என்பது எல்லாருக்கும் வெளியாயிற்று. அதே தினத்தில் அதே முகூர்த்தத்தில் மறுபடி அதிரூபன் கமலாவை மாலையிட்டான். மந்திரியை அரசன் சிட்சிக்காமல் அதிரூபனை வதைசெய்யாமல் நீ அனுப்பினையே அது ஒன்றே பெரும் நன்மை என்று சொல்லி அவனை அதிகாரத்தைவிட்டு நீக்கினான்.

இம்மாதிரி மறுபடி கமலாவின் தபோபலத்தால் அதிரூபன் திரும்பி பிழைத்ததுமல்லாமல் அவளையும் அடைந்து, அவளால் சந்திரகிரி ராஜ்யத்துக்கும் இளவரசனானான். தனது சரித்திர முழுமையும் கமலாளுக்குத் தெரிவிக்க அவளுக்கு அந்தட்சணமே இராமநாதபுரஞ் சென்று தனது மாமனார் மாமியாரை ஸேவிக்கவேண்டும் என்ற ஆவல் வந்துவிட்டது. அரசன் அனுமதியின்பேரில் தங்களுக்கு வேண்டிய சேனைகளுடன் அதிரூபனும் அவன் மனைவி ரத்னமும் இராமநாதபுரம் சென்றார்கள். அங்கு ஸத்யவாக்கும் தன்னுடைய மனக்கவலையால் உருமாறி அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்தார். அவரை அதிரூபன் கண்டு தன் மனையாளையும் தன் தாயாருக்குக் காட்டி தனது சரித்திரத்தை முற்றிலும் அவர்களுக்குச் சொன்னான். அவர்களுடைய கதையையும் முற்றிலும் கேட்டான். எல்லா[illegible] ஆனந்
[illegible]ின்மேல் ஆனந்தமாகவிருந்தது. கிழவன் கிழவிகள் [illegible] மக
[illegible] வந்த சம்பத்தைக் கண்டு களித்து ஆனந்தக்கடல[illegible] ழ்கி
கமலா வித்தியாக்களஞ்சியமாகையால் தன[illegible] றார்
சா[illegible]ரண நிலைமைக்கும் கீழாக வறுமையில[illegible]
[illegible]ளுடைய மேலான வித்தையையும் யோக[illegible]
[illegible]ண்டு அவர்களை வெகு மேலான உத்தமர்[illegible]
[illegible]ன் ஒரு பதர் [illegible]றும் நடந்துகொண்ட[illegible]
[illegible]னது ஜன்ம பூமியில் வசித்தான்.

கதை முற்றிலும் முடிந்தது. ஆனால் இன்னம் ஒரு சங்கதி. அதிரூபன் தனது 16-வது வயதில் சேதுபதிக்குச் செ. ஜோஸியம் நமது நண்பர்களுக்கு ஞாபகமிருக்கிறதா? அதெ. வென்றால் மூன்று வருஷத்திற்கப்பால் அவன் பிரயத்தனமன்றி இராமநாதபுர ராஜ்ஜிய மவனுக்குக் கிடைக்குமென்றல்லவோ? அப்படியே நடந்ததா இல்லையா! அதிரூபன் ஜோஸியமும் தப்புமா? சந்திரகிரி ராஜ்ஜியத்திற்குத்தான் இராமநாதபுரம்சீமைக் கப்பங் கட்டுவது. சந்திரகிரிக்கோ அதிரூபனதிபன்; ஆகையால் அதிரூபன் தானே சேதுபதியை வரவழைத்து அவனுக்கு அவன் நாட்டை திரும்ப அதிரூபனளித்தார். ஆனால் ஜோஸியம் சொல்லும்போது தானே சேதுபதிக்கு ராஜ்ஜியத்தைக் கொடுக்கப்போகிறோம் என்ற எண்ணம்மட்டும் அதிரூபனுக்கு இல்லை. அதிரூபன் இம்மாதிரி சேதுபதிக்கு தன் ராஜ்ஜியத்தைக் கொடுத்துவிட்டு தன் தாய் தந்தையர்களுடன் தனது பிராண நாயகியான கமலாம்பாள் அதிர்ஷ்டத்தால் மறுபடி சந்திரகிரி வந்து சேர்ந்து வெகுநாள் அவ்விடம் ராஜ்ஜிய பரிபாலனம் செய்துவந்தான். பிரயாகைக்கு ஆளனுப்பி கிழவியையும் வரவழைத்துக்கொண்டான்.

ஏழாவது,

விதியை மதியால் வென்ற கதை.

தக்ஷிணதேசத்தில் தென்காசி என்ற ஒரு ஊர் உண்டு. அதில் வெகுநாளைக்குமுன் சிறு பையன் இக்கலியுகத்தின் புதுமைபோல் பிறந்து 10, 12 வயதுக்குள் சகல சாஸ்திரங்களிலும் கரைகண்டவனானான். அநேகர் அவனை ஸ்ரீ சங்கராசாரியாரின் அவதாரந்தானோ என்று எண்ணினார்கள். அதே 10, 12 வயதில் சில சிறுவர்கள் ஹரி என்ற அக்ஷரமே ஆரம்பிக்காததையும் நாம் கண்டிருக்கிறோம். ஆனாலிச் சிறுவனோ ஒரு பெரும்புதுமை. அவ்வளவு சிறு பிராயத்திலேயே வேதாந்தம் முதலான பெரிய கிரந்தங்களைக் கற்று கரைகண்டுவிட்டான். அவனுடன் வாதிக்க ஒருவராலும் முடியாது. இவ்வளவு கற்றும் அவனுக்கு கர்வம் என்பதே இல்லாமல் அவன் ஒரு பெரிய வேதாந்தியாகவிருந்தான். உலகம் முடிய ஒரு பெரும் மித்தியை, எல்லாம் ஈசுவரம், ஒன்றும் உண்மையல்ல என்பதான ஸித்தாந்தங்கள் அவனிடம் மேலிட்டுநின்றன. வேதாந்தத்தை இன்னும் படிக்க வேண்டும் நன்றாய் அறிந்து நமக்கு உபதேசிப்பவர்கள் இல்லையே

பிம்மிவிம்மி அழுவான். ஆம் இவனுக்கு யார் வேதாந்தம் சொல்லுவார்கள். இவன் தான் எல்லாருக்கும் வேதாந்தம் சொல் யோக்கியதை யடைந்திருந்தானேயல்லாம லிவனைவிடத் தெரிந்தவர்களாவது இவனுக்கு பாடஞ்சொல்லும் திறமையுள்ளவர்களாவது ஒருவரு மில்லவேயில்லை.

நாடெங்கும் தேடி ஏங்கி கடைசியாய் இச்சிறுவன், ஒருவரும் அகப்படாமல் போனபடியால், காட்டில் சஞ்சரிப்போம்; மகா நதிகளைச் சோதிப்போம். அவைகளின் கரையில் யாராவது பெரியவர்கள் காட்டிலிருக்கலாம். அவர்களால் உபதேசம் பெறுவோம் என்று தீர்மானித்துவிட்டான். இவ்வெண்ணத்தை வெளியிட்டால் வெகு பெயர்கள் வருந்துவார்களே என்று யோசித்து, ஒருவரிடமும் தெரிவிக்காமல் தன் தாய்தந்தையர்களிடம்மாத்திரம் தானின்னும் அதிக வித்தை கற்க அயல்நாடு போவதாக ஊகிக்கும்படியாக இரண்டொரு சொற்கள் சொல்லிவிட்டு, ஒருகாலையில் ஊரைவிட்டு ஓடி விட்டான். ஊர்கண்ட இடங்களில் பிச்சைஎடுத்து புசித்துக்கொண்டு வெகுநாள் நடந்து தண்டகாரண்ணியத்தில் பிரவேசித்தான். அதோ நாடல்ல. என்ன செய்வான் இச்சிறுவன் கண்ட கனிவர்க்கங்களையும் கிழங்குகளையும் இலைகளையும் புசித்துக்கொண்டு, கரடி, புலிகளுக்கு இரையாகாமல் வெகு ஜாக்கிரதையாக பிராணனை ரட்சித்துக்கொண்டு வெகுநாள் சிரமப்பட்டு அலைந்துகொண்டு கோதாவரி நதிக்கரையைச் சேர்ந்தான். எங்குபார்த்தாலும் ஒரே காடு. தேர்வடம்போல் மலைப்பாம்புகளும் சிறு குன்றுகள்போல கஜங்களும் பார்த்தவிடங்களிலெல்லாம் இவன் கண்களுக்கு தென்பட்டனவேயன்றி மனிதப்பூண்டு ஒன்றுகூடக் காணோம். நல்லது அதைரியப்படக்கூடாது, இவ்வளவு பெரிய மகா நதிக்கரையில் ஒரு பெரியவராவது நமது கண்களுக்கு தென்படமாட்டாரா என்று நம்பிக்கையைமட்டும் பலமாகப் பிடித்துக்கொண்டு கோதாவரி யோரமாக நடக்கையில், ஒரு சிறு பர்ணசாலை (இலைகளால் மேயப்பட்ட குடிசை) இவன் கண்ணுக்குத் தென்பட்டது. இவனோ முத்தின வேதாந்தி; நமது கண்முன் புலப்படுவது நிஜமான பர்ணசாலைதானா அல்லது பொய்யா என்று தர்க்கித்துக்கொண்டான். வேகமாய் நடந்தான், இத்தனைநாளிவனை அலைக்கழித்த ஈச்வரனே தயைகூர்ந்ததுபோல அது யதார்த்தமான பர்ணசாலையாக விருக்கக்கண்டு மனங்களித்தான். அதிக ஆவலுடன் அதின் அருகாமையாய் வரும்போது அங்கு ஒரு பெரிய கிழவர், 60, 70 வயதிருக்கலாம், இச்சிறுவனை "வா! அப்பா! உட்காரு" என்று உபசரிக்கக் கண்டான்.

இச்சிறுவனைப் பார்த்ததும் அந்தக் கிழவர் "அடியே! யாரோ ஒரு சிறு குழந்தை வழிதப்பி வனத்தில் அவஸ்தைப்பட்டு வந்துகொண்

டிருக்கிறது. நல்ல பசுவின்மோர் ஒரு பாத்திரத்தில் கொண்டுவா, குடலையில் நேற்று நல்ல சீத்தாப்பழம் பூசைக்கு புஷ்பம் எடுத்து வரும்போது கொண்டுவந்தேன். அவைகளில் ஒன்று நன்று யின்று கனிந்திருக்கும் அதையும் கொண்டுவா" என்று சொல்லி இருந்தார்.

அவர் கட்டளைப்படியே இச்சிறுவன் குடிசையண்டை வந்ததும் ஒரு கிழவி, சுமங்கலி, மூங்கிற் தொன்னை யொன்றில் மோரும் ஒரு பழமும் கொண்டுவந்து வைத்து கிழவருக்கு அருகாமையில் வெகு வியப்புடன் இச்சிறுவனைப் பார்த்து நின்றாள். உடனே கிழவர்,

அப்பா! குழந்தாய்,! அப்புறம் உன்னைப்பற்றி விசாரிப்போம். உன்னைப்பார்த்தால் வெகுநாள் அவஸ்தைப்பட்டு வருந்தி பசியாலும் தாகத்தாலும் தவிக்கிறவன்போல் காண்கிறது. உன் கால்கைகளை அதோ குடத்திலிருக்கும் நீரால் சுத்தம்பண்ணிக்கொண்டு இக்கனி யைப் புசித்து அந்த நீர்மோரையும் குடித்து களைப்பை முதல்முத லாற்றிக்கொள்ளு. அப்புறம் எல்லாம் ஆகட்டும் என்றார்.

இச்சிறுவனுக்கோ பார்வதி, பரமேச்வரர்களைப்போன்ற இவ்விரு வர்களையும் கண்டவுடனேயே தனது களைப்பு அவ்வளவும் போய் விட்டது என்றாலும், பெரியோர் சொற்கேள் என்ற ஆக்ஞையைத் தவறாத உத்தமனுகையாலும், பெரியவர் சொன்ன சொல்லின் அன்பாலேயே கவரப்பட்டவனுய்விட்டபடியாலும் அவர் உத்தரவுப் படி நடந்து அவ்விருவர்களையும் நமஸ்காரம்பண்ணி நின்றான். "உட்காரு குழந்தாய், பயப்படாதே; கிட்டே வந்து உட்கார்ந்து சிரமத்தை கொஞ்சம் ஆற்றிக்கொள்ளு" என்று பெரியவர் சொன்னார். தங்கள் தர்சனத்தாலேயே என் வருத்தங்கள் யாவத்தும் தீர்ந்துபோய் விட்டன வென்று சிறுவன் சொல்ல, பெரியவர் நகைத்து "அப்பா! நீ யார்? வயதோ மிகக் குறைந்த வயதாக இருக்கிறது. 12, 13க்கு மேலிருக்காது. முகத்திலோ இதற்குள் வித்தியா லட்சுமி விளங்கு கிறாள். உன் தேசம் எது? என்னத்திற்கு இந்த காடாந்தகாரமான அரண்ணியத்தில் வந்து புகுந்தாய்? எத்தனைநாள் கஷ்டப்பட்டாய்? இவ்வருமைக் குழந்தையை விட்டுப்பிரிந்த உனது தாய்தந்தைகள் என்ன வருத்தப்படமாட்டார்கள்" என்றார். அதற்கச் சிறுவன்:—

"என் பெயர் சுப்பிரமணியன்; நான் தக்ஷிணதேசம். வேதாந்தத்தில் சங்கரபாஷ்யம் பாதி படித்திருக்கிறேன். இன்னம் நன்றாகப் படிக்க பெரியவர்களை நாடிக்கொண்டு இவ்விடம் வந்தேன்" என்று சுருக்கிச் சொன்னான்.

இதைக் கேட்டதும் அப்பெரியவருக்கு வந்த ஆச்சரியத்திற்கு அளவேயில்லை. "இந்தச் சிறு பையனுவது சங்கரபாஷியம் படித் திருக்கவாவது! எல்லா தர்மங்களும் நசித்துப்போகிற இந்த கலி

யுகத்தில் வேதாந்த விசாரணையும் இன்றுமிருக்கிறதா! இருக்கிறதாகவே வைத்துக்கொண்டு பேசுவோம். இச்சிறுவன் இவ்வளவு இளம்வயதில் எப்படி இவ்வளவு கற்றுவிட்டான்? இப்பொழுது தான் நமது ஜன்மமும் பிரயோஜனமாயிற்று. நமக்குத் தெரிந்த வித்தையைக் கற்றுக்கொடுக்க தகுந்த ஒரு சிஷ்யனும் நமக்குக் கிடைத்தான்'' என்று பலவாறு யோசித்து அப்பெரியவர் திகைத்தார், களித்தார்; பையனை பரிட்சிப்பதுபோல் இரண்டொரு சிறு கேள்விகளைக் கேட்டார். அவைகளுக்கு வந்த உத்தரங்களை ஆலோசித்துப் பார்த்தார். பையன் அதி புத்திமான் ஸரஸ்வதியின் அவதாரம் என்பதற்கு ஆக்ஷேபமில்லை என்பதை ஒரு நொடியில் தெரிந்துகொண்டார்.

இம்மாதிரியாக நாம் நமது சிறுவனை சுப்பிரமணியனை வித்தையினுடைய ஆவலின்நிமித்தம் அவன் அகத்தைவிட்டு ஓடச்செய்து அவஸ்தைப்படப் பார்த்து கடைசியாய் கோதாவரி நதிக்கரையில் ஒரு காடாந்தகாரமான காட்டில் ஒரு பெரியவரிடமும் அவர் பத்தினியிடமும்கொண்டுவந்து க்ஷேமமாகச்சேர்த்துவிட்டோம். இனி அவனைப்பற்றி விசாரமேயில்லை. இப்பொழுது நமது சுப்பிரமணியன் தங்கின பர்ணசாலையிலிருக்கிற இவ்விருவர்களும் யார் என்பதைச் சற்று விசாரிப்போம். நாமிவரைப்பற்றி சொல்லுவதற்கு முன்னமேயே நமது நண்பர்கள் இவரைப்பற்றி நல்ல அபிப்பிராயங் கொண்டிருக்கலாம். இவர் ஒரு படித்தவர் என்றும், தயைதாக்ஷிணியம் உள்ளவர் என்றும், அந்தக் கிழவி இவர் பத்தினி என்றும் இவ்வளவு மட்டும் இதற்குள் தெரிந்திருக்கலாம். இன்னும் இவர்களைப்பற்றி சற்று விஸ்தாரமாய் தெரிவிப்போம்.

கலியுகம் எவ்வளவு கெட்ட யுகமாக இருந்தபோதிலும் இந்த யுகத்தில்கூட அபூர்வமாக இரண்டொரு பெரியவர்கள் உண்டு; அவர்களும் நம்மைப்போல மனிதர்கள்தான். எல்லா சாஸ்திரங்களைப் படித்து கரைகண்டவர்கள். உலக வழக்கப்படி நகரங்களிலும் கிராமங்களிலும் மற்றவர்களைப்போல் வசித்து பிறகு தங்கள் பெண்டுகள் சகிதம் காட்டுக்குச் சென்று வசிக்கப்பட்டவர்கள். நாட்டில் நாலு விதமாய் மனது கலைந்துவிடும். காட்டிலோ அப்படியில்லாமல் ஒரே சித்தமா யிருக்கக்கூடும் என்ற கருத்துடன் போகப்பட்டவர்கள். இவர்களுக்கு வானப்பிரஸ்தர்கள் என்று பெயர். இவ்வித வானப்பிரஸ்தர்களில் நமது சுப்பிரமணியன் கண்ட பெரியவரும் ஒருவர்; இவர் பெயரோ ஞானநிதி. இவர் வெகுநாளைக்கு முன்னமே இக்கோதாவரி பிரவகிக்கும் காட்டைச் சேர்ந்து அவ்விடத்தில் ஒரு பர்ணசாலை கட்டிக்கொண்டு தானும் தனது மனைவியுமாக அதிவி

ருந்துகொண்டு கடவுளைப்பற்றி தியானித்துக்கொண்டு தங்கள் காலத்தைக் கழித்துவந்தார்கள். வயது அதிகமென்றாலும், இவ்விருவர்களும் ஒருவித குற்றங் குறையின்றியும், சன்மார்க்கமாகவும் தங்களிளம்பருவத்தைக் கழித்தவர்களாகையால் 60, 70 வயதாயும், 30, 35 வயதுதானனவர்கள்போ லிருந்தார்கள். இவர்களுக்குக் கவலையேது, விசாரம் ஏது. காட்டில் ஒருவருடைய நிர்ப்பந்தமில்லாமலே, தானே உழைத்து பயிரிடாமலும், இவர்களுக்கு யதேச்சையாய் அநேகவித கனிவர்க்கங்களும் கிழங்குகளும் புசிக்கக் கிடைத்துவந்தன. தீர்த்தமோ திவ்விய தீர்த்தம், உட்கொள்ள நிர்மலமான மிகவும் பரிசுத்தமுள்ள ஆகாயம்; காட்சியோ ரமணீயக் காட்சி. பார்த்தவிடங்களெல்லாம் பச்சைப் பசேல் என்று மலைகளும், குன்றுகளும், புற்றரைகளும், மரங்களும், கொடிகளும் தென்படும். அவைகளின் மேல் அநேகவிதமான மிருகங்களும் பட்சிகளும் உல்லாசமாய் ஓடி ஆடிக்கொண்டிருக்கும். கத், கத், கத் என்று ஓரிடத்தில் கோதாவரி ஜலம் ஓடும் சத்தம் கேட்கும். பகலில் வெய்யில்காலத்தில் கோதாவரியோரம் நிற்கும் மரங்களில் யானைகள் தங்கள் தினவைப் போக்க உரைந்துகொள்ளுங்காலத்தில் அம்மரங்கள் நதிதேவியை அருச்சனை செய்வதுபோ லவைகளிலிருந்து உதிரும் புஷ்பங்கள் கம் என்று வாலிக்கும். உரைந்ததால் உண்டாகும் மட்டிப்பால் வாசனை வனத்தையே கம் என்று பரிமளிக்கச்செய்யும். இவ்வித காட்சியின் மத்தியில் வசித்த ஞானநிதிக்கு என்ன வருத்தம். இவர் சிந்தை சதா கடவுளிடங் குடிகொண்டிருந்தது.

இந்த ஞானநிதியைத்தான் நமது சுப்பரமணியனும் தனக்கு வேதாந்த பாடஞ்சொல்ல குருவாக அடைந்ததும். முதல்முதல் அவனை இரண்டொரு கேள்விகள் கேட்டு அவைகளுக்கு வந்த உத்தரங்களாலேயே அவனுடைய புத்தி சாதுர்யத்தை யறிந்த ஞானநிதி அவனந்த கலியுகத்தில் வேதாந்த விசாரணைக்காக தன்னிடம் வந்ததைக் கண்டு களித்தார். தனக்குத் தெரிந்த அவ்வளவு விஷயங்களும் வியர்த்தமாகாதபடி கடவுள்தானிவனை தன்னிட மனுப்பினரோ என்று ஆனந்தித்தார். இவ்வளவு புத்திமான்களான குருவும் சிஷ்யனும் சந்தித்தபிறகு இவர்களுடைய அபிமானத்திற்கு அளவுமுண்டோ? காணுதுகண்ட சந்தோஷம் சுப்பிரமணியனுக்கும் தகுந்த சிஷ்யனைக்கண்ட குதூஹலம் ஞானநிதிக்கும் வந்துவிட்டது. ஸ்நானம், ஜபம் முதலிய காலங்கள்போக மற்ற வேளைகளிலெல்லாம் ஞானநிதி சுப்பிரமணியனுக்கு வேதாந்தபாடம் சொல்லுவார். அவன் கிரஹித்த மாதிரியைக் கண்டு இன்னும் இரண்டுநாழிகை மற்ற தொழில்களை நிறுத்தியாவது இவனுக்குப் பாடஞ்சொல்ல அவருக்கு வாஞ்சையிருக்கும்; சுப்பிரமணியனே சிறுவயதிலேயே எல்லா

வற்றையும் வேதாந்த விசாரத்துக்காகத் துறந்தவன். எத்தனை நாழிகை குரு பாடஞ் சொன்னபோதிலும் ஆவல் குறைவில்லாமல் கவனிப்பான். அவனை தன் குருவாகவும் தன் தகப்பனாராகவும் பாவித்து அநேகவிதத்தில் அவருக்கு வெகு உபயோகமாயிருந்தான். பூசைக்கு புஷ்பங்கள் கொண்டுவருவான். தன் குரு, குருபத்தினி இவர்களுடைய துணிகளைத் துவைத்துவைப்பான்; வீட்டுக்கு வேண்டிய ஜலம் நிரப்புவான். அநேக நாட்களில் சமையலும் செய்வான். காட்டுக்குப் போய் கனிவர்க்கங்கள் கிழங்குகள் கொண்டுவருவான். அவர்களுக்கு இவன்மேலும் இவனுக்கு அவர்கள்மேலுமிருந்த அன்புக்கும் அபிமானத்திற்கும் கங்குகரையேயில்லை. இப்படியாய் 3, 4 வருஷ காலம் வேதாந்தபாடம் நடந்தது.

இப்படி நடந்துவருகையில் ஞானநிதியின் மனைவி கர்ப்பமானாள். மாதம் 8 ஆய்விட்டது. வானப்பிரஸ்தர்கள் வயதானவர்கள் என்றாலும் வெகு பரிசுத்தர்களாகையால் காட்டில் முதிர்ந்த வயதில் அவர்களுக்கு பிள்ளைகள் பிறப்பது சகஜம். இந்த வழக்கப்படியே ஞானநிதியின் மனைவி கர்ப்பிணியாயிருக்கும்போது அவள் புருஷன் சுப்பிரமணியனைக் கூப்பிட்டு, "குழந்தாய், உன் அம்மா கர்ப்பமாயிருக்கிறாள். நான் தீர்த்தயாத்திரை இரண்டொருமாதம் செய்துவரவேண்டும். நீ அகத்தை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள். இங்கிருந்து 2 நாழிகைவழி தூரத்தில் இன்னமொரு வானப்பிரஸ்தரிருக்கிறார். உன் அம்மாளுக்கு பிரஸவகாலம் வரும்போது அங்கு போய் அந்த வீட்டு கிழவியை துணைக்கழைத்துவை. நான் போய் வருகிறேன்" என்று சொல்லி புறப்பட்டுப் போய்விட்டார். இவர் போன இரண்டு மாதத்திற்கெல்லாம் இவர் மனைவிக்கு பிரஸவகாலம் சமீபித்தது. உடனே குருவின் உத்தரவுப்படி சுப்பிரமணியன் அடுத்த பர்ணசாலைக்குச் சென்று அங்கிருந்து ஒரு கிழவியை அழைத்துவந்தான். வெகு சமீபத்தில் பிரஸவமாகுங்காலம் நெருங்கிவிட்டது. சுப்பிரமணியன் வெளியில் உட்கார்ந்துகொண்டு, அம்மா க்ஷேமமாய் பிழைத்து எழுந்திருக்கவேண்டுமே. என் குரு என்னிடம் ஒப்பித்த விஷயத்தை நானவருக்கு சரிவர நடத்திக்கொடுக்க வேண்டுமே! என்செய்வேன் ஜகதீசா! நல்ல பொழுதா யிருக்கவேண்டுமே என்று விசாரப்படுகையிலேயே ஒரு பெரியவர், வெகு சாந்தமான முகத்துடன் வெகு பரபரப்பாய் வெளியில் உட்கார்ந்திருக்கும் சுப்பிரமணியனைக்கூட இலட்சியம்பண்ணாமல் உட்புக ஆரம்பித்தார். அதைப் பார்த்ததும் சுப்பிரமணியன். என்ன துற்குணம், மானம் வெட்கம் என்பதுகூட இல்லாமல் இவர் பிரஸவம் நடக்கும் வீட்டுக்குள் புகுகிறாரே; இவர் என்ன மனிதர்? பார்த்தால் பெரியவர்போல் காண்கிறார் என்று மனதில் யோசித்து வெகு கோபத்து

ல்லும், இந்த வீட்டுக்கு இப்போது காவல் நானல்லவா பற்றுக் கொள்ளாமல் எப்படி நீர் உட்புகலாம் ஒரு குங்காலத்தில் எப்படி நீர் உட்செல்லலாம்'' என்றார். ந்தவர்: அப்பா, நீ மகாக்ஞானி. வேதாந்தியாகவே யால் உன் கண்களுக்கு நான் தென்பட்டேன். என் நிமிஷமும் பிரஸவமாகிற விடங்கள்தோறும் செல்லு ான் பிரம்மா என்றார். பிரம்மா என்ற சொல் சுப்பிர ட்டதும், சாஷ்டாங்கமாக அவர் முன்னம் தண்டன் தெரியாத்தனத்தால் தான் ஏதாவது அவமரியாதையாகச் ந்தபோதிலும் அதைப் பொறுத்துக்கொள்ளவேண்டும் டுக்கொண்டு, பிரஸவம் நடக்கிறபடியால் உள்ளே போகக் றும் தெரிவித்தான். அதற்கு பிரமன் "அப்பா உன்னால் சல்லுவதை தடைசெய்ய முடியாது. எந்த வீட்டில் குழந் க்கின்றனவோ அந்த வீடுகள்தோறும் நான் சென்று குழந் ந்தவுடன் அவைகள் தலைகளில் அவைகளுடைய அதிர்ஷ் ழுதிவருவது வழக்கம். அதற்காகத்தான் நானுமிங்கு வந் தது. என்னை இதுவரையில் ஒருவராவது கண்டு நிறுத்தினவனல்ல. உனக்கு குரு ஞானநிதியாகையாலும் நீயும் ஒரு பெரிய வேதாந் தியாகையாலும் என்னை எளிதில் நீ கண்டுகொண்டாய். உன் குருபக் திக்குத் தக்கபடி என்னைத் தடைசெய்தாய். இனி நானின்னார் என்று தெரிந்தபிறகு என்னை உள்ளே அனுப்புவதில் உனக்கு என்ன தாமதம்? விடு, நாழிகையாய்விட்டது, குழந்தை பிறந்துவிட்டது'' என் றார். அப்பொழுது சுப்பிரமணியன் "நல்லது, ஆனால் என்ன அந்தக் குழந்தையின் தலையில் எழுதப்போகிறீர்கள். அதைத் தெரி விக்கவேண்டும்'' என்று கேட்க, அதற்கு பிரமன் "அப்பா! எனக்கே அது தெரியாது. நான் போய் என் கையிலிருக்கும் எழுத்தாணியை சிசுவின் தலையில் வைப்பேன். அது கிடுகிடு என்று எழுதிவிடும். அக்குழந்தையின் பூர்வஜன்மத்திய பூஜாபலன்கள்எப்படியோ அப்படி எழுதி முடிக்கும். அது இன்னது எழுதும் என்பது எனக்கே தெரி யாது'' என்றார். அதற்கு சுப்பிரமணியன், "நல்லது அப்படியா னால் இன்னம் ஒரு சிறு விண்ணப்பம், எழுதினபிறகு உங்களுக்கு சிசுவின் தலையில் இன்னது எழுதப்பட்டது என்பது தெரியுமல்லவா? அது இவ்வண்ணம் என்பதை எனக்கு தெரிவிப்பதாக ஒப்புக்கொண் டால் நீங்கள் உட்செல்லலாம்'' என்றான். என்செய்வார் பிரமன். இவனோ அம்மாதிரி அவர் செய்வதாக ஒப்புக்கொண்டாலொழிய உட்செல்லக்கூடாதென்கிறான். அவருக்கோ காலமாய்விட்டது. நல்லது அப்படியே ஆகட்டும் என்றார். சுப்பிரமணியனும் நீங் கள் உட்சென்று வரலாம் என்று விட்டான்.

உடனே பிரமனும் பர்ணசாலேக்குள் புகுந்தார். களாகிய இரண்டு பெண்டுகளும் சிஷ்யனைப்பே. ளல்ல. அவர்கள் கண்ணுக்கு பிரமன் வந்ததும் போ தெரியவே தெரியாது. அவர் தன் காரியம் என்னமோ துவிட்டு உடனே திரும்பிவிட்டார். அவர் வரவை யுடன் எதிர்பார்த்தவனாய் நமது குருவின் குழந்தைக்கு டம் தலேயில் எழுதப்பட்டதான சந்தோஷ சமாசாரம் டுமே என்று சுப்பிரமணியன் வெளியில் உட்கார்ந்த தான். "மகா பிரபோ! என்ன சங்கதி" என்று வினவ, "அப்பா! அதை நீ ஏன் கேட்கிறாய். வெகு மோசம். நாஙு சொல்லுவதாக முன்னமேயே ஒப்புக்கொண்டிருக்கிறே வும் போகிறேன். ஆனாலதை வேறு யாரிடமாவது சொ உன் தலே 100 துண்டுகளாக வெடித்துப்போகும்" என்ற சுப்பிரமணியன் "நான்மட்டில் அறிந்துகொள்ளுகிறேன் ருவரிடமும் சொல்லேன்" என, உடனே பிரமன்: "அ பிறந் தது புருஷக்குழந்தை. அதன் ஆயுளுக்கோ குறைவில்லை துலை தற்கு வித்தை என்பது வரமாட்டாது. அதன் ஜீவனம் வெகு கஷ்ட ஜீவனம். இந்த உலகத்தில் அவன் ஆஸ்தியெல்லாம் ஒரு கோணிப் பை நெல்லும் ஒரு எருமைக்கடாவுந்தான். அதற்கு உயர்ந்த ஆஸ்தி அவன் தலேயில் எழுதவில்லேயே என் எழுத்தாணி. வெகு கஷ்டப் படுவான், இரண்டு மூன்று குழந்தைகளுண்டு. தினம் எருமைக்கடா வைக்கொண்டு மண்ணோ கல்லோ சுமந்து, 2, 3 பணம் சம்பாதிப் பான். கோணியிலிருக்கும் நெல்லே இவன் மனைவி குத்தித்தான் சமையலாகவேண்டும். வேறு பொருள் கிடைக்காது. ஜாஸ்தியாய் மிகுந்ததேயானால் ஒரு கோணி நிரம்ப நெல் அவ்வளவும், ஒரு எரு மையுந்தா னிவனுக்கு ஜீவனம்" என்று சொல்லி "நல்லது நாழிகை யாய்விட்டது. எனக்கு எவ்வளவோ வேலே, எனக்கு விடை கொடு" என்று விடைபெற்றுப் போய்விட்டார்.

இவர் போனதும் சுப்பிரமணியன் பலவாறு தன் குருவினு டைய குழந்தையைப்பற்றி சிந்திக்கலானான். "அடடா!! என்ன துக்கம், ஆகா என்ன ஆச்சரியம்!!! இவ்வளவு மகாத்மா ஞானநிதி; கேவலம் ஈச்வராவதாரம். ஒரு பிராணிக்குக்கூட மனதாலும் தீங்கு நினைக்காத புண்ணியபுருஷன். இவர் வயிற்றில் பிறந்த குழந்தைக்கு இவ்வளவுதானா யோக்கியதை. பிறந்த இடத்தில் என்ன இருக்கிறது. அவன் அவன் பூர்வ கருமானுசாரம்" என்று நினைத்து கொஞ்சம் துக்கிப்பான், கொஞ்சம் வேதாந்தத்தால் தேர்ச்சி செய்துகொள்வான். இப்படி யிருந்துவிட்டு அப்புறம் எல்லா துக்கங்களேயும் மறந்து தனது தாயாராகிய குருபத்தினிக்கு தான் செய்யவேண்டிய ஸருவ

சிச்ருஷைகளையும் செய்தான். தாயாருடைய க்ஷேமத்துக்கும், குழந்தை க்ஷேமத்திற்கும், குறைவுவராதபடி நடந்துகொண்டான். பிரஸவமான இரண்டுமாதங்களுக்கெல்லாம் ஞானநிதியும் தன் தீர்த்தயாத்திரையிலிருந்து திரும்பிவந்தார். அவரிடம் வணங்கி குழந்தையையும் அவர் மனைவியையும் க்ஷேமமாக தான் பாதுகாத்துக் கொடுத்தான். அவரும் சுப்பிரமணியன் தனக்குச் செய்த உபகாரத்தை மறவாமல் முன்னிலும் அதிக பிரீதியாய் நடந்துவந்தார். 4, 5 மாதகாலம் நின்றிருந்த வேதாந்தபாடம் மறுபடியும் ஆரம்பித்தது. இன்னும் தான் கேட்டறியவேண்டிய விஷயங்களை நன்றாக கேட்டறிந்துகொண்டான். இம்மாதிரி 3 வருஷகாலம் கடந்து மறுபடி ஞானநிதியின் மனைவி கர்ப்பமானாள். மறுபடியும் ஞானநிதி தன் பெண்சாதியையும் குழந்தையையும் ஜாக்கிரதையாய் பாதுகாக்க சுப்பிரமணியனிடம் சொல்லி, அடுத்த காட்டிலிருந்து ஒரு கிழவியையும் பிரஸவம் முதலிய காரியங்களுக்கு சகாயமாக வீட்டில் வைத்துவிட்டு தீர்த்தயாத்திரைக்குப் புறப்பட்டுவிட்டார். இந்தத்தடவையும் பிரமன் பிரஸவகாலத்தில் வந்து சேர்ந்தார். முன்னமே பரிச்சயமாய் விட்டபடியால் அவருக்கு தலைவணங்கி சுப்பிரமணியன் முன்போலவே இந்தத்தடவையிலும் தன்னிடம் பிறந்த சிசுவின் தலையில் எழுதப்படும் விஷயத்தை சொல்லிப்போகும்படி கேட்டுக்கொண்டான். "அதற்கு என்ன ஆக்ஷேபம்? ஆனால், அதையும் நீ வெளியிடக்கூடாதென்று" சொல்லி பிரமன் உட்சென்றான். உடனே திரும்பிவந்து சிஷ்யனைப் பார்த்து:

"அப்பா! சுப்பிரமணியா! இந்தத்தடவை உன் குருவுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்திருக்கிறது. அதனுடைய தலை எழுத்தோ வெகு மோசமாயிருக்கிறது. அது பாலிய பருவம் துடங்கி அதற்குப் பிழைப்பு வியபசாரமேயாம். இதுதான் அதன் தலையில் எழுதப்பட்டது" என்று சொல்லி வேகமாய் ஓடிவிட்டார். ஏனெனில் பிரமனுக்கே சுப்பிரமணியனைக் கண்டால் பயம். "பூர்வ ஜன்ம கருமத்தின்பிரகாரம் எழுத்தாணி எழுதிவிட்டது என்றாலும் நீ ஏன் அதை அழித்து எழுதக்கூடாது என்று ஒருக்கால் நம்மை இவன் ஏன் புடைக்கக்கூடாது" என்பதாக பிரமன் போய்விட்டார்.

ஆனால் சுப்பிரமணியனுக்கு பிரமன் போனதே தெரியாது. பிறந்த பெண்குழந்தைக்கு வெட்கமான தொழிலால் ஜீவனம் என்ற சப்தம் இவன் காதில் விழுந்ததும் இவன் மூர்ச்சையடைந்துவிட்டான். இவனுக்கு தன் குருவின்மேல் அவ்வளவு பக்தி. அப்பெயர்ப்பட்ட மகானுடைய பெண்ணுக்கு இதுதானா தலைவிதி என்று மயங்கி மூர்ச்சை யடைந்துவிட்டான். கொஞ்ச நாழிகைக்கெல்

லாம் மூர்ச்சை தெளிந்து கண்ணைத் திறக்கும்போது பிரமனைக் காணோம். "ஐயோ! என்ன செய்வேன், வெளியில் யாரிடமாவது சொல்லிக்கொண்டு என் துக்கத்தை யாற்றக்கூட வழி இல்லையே. வாயைத் திறந்தால் தலை 100 துண்டுகளாக சிதறிவிடும். அப்படித் தான் நமது பிராணனை விட்டுவிடுவோம் என்றாலும் அதனால் இந்தக் குழந்தைகள் அடையும் லாபம் இன்னதென்று தெரியவில்லையே. இப்பேர்ப்பட்ட மகா புருஷன் வயிற்றில் பிறந்த ஒரு பிள்ளை கூலித்தொழிலும் ஒரு பெண் வெகு அவமானமான தொழிலும் செய்து ஜீவிக்கிறதென்றால் இதைவிட எனக்கு வருத்தம் என்ன இனி யுண்டாகப்போகிறது? நல்லது இவர்களை சீர்திருத்த வழியில் லையா? ஈச்வரன் கிருபைசெய்யாரா" என்று இதே யோசனையாயி ருந்தான்.

முன்போல ஞானநிதியும் பிரஸவமான இரண்டு மூன்று மாதங் களுக்கெல்லாம் திரும்பி வந்தார். இந்தத்தடவை அவருடைய இரு குழந்தைகளையும் மனையாளையும் அவரிடம் க்ஷேமமாக ஒப்பு வித்தான். ஞானநிதி நமது நண்பனாகிய சுப்பிரமணியனை தனது மூத்தகுழந்தையாக பாவித்தாரேயன்றி வேறல்ல. ஆதலால் அவனை வெகு அன்பாய் நடத்திவந்தார். அப்புறம் அவரிடம் 4, 5 வரு ஷகாலம் வித்தை கற்றுக்கொண்டான். அவன் தன் குருவிட மும் குருபத்தினியிடமும் அவர்கள் குழந்தைகளிடமும் வைத்து விட்ட அபிமானத்திற்கு அங்கேயேயிருந்து தனது வாழ்நாட்களை முடிய கோதாவரி நதிக்கரையில் கழித்திருப்பான். ஆனாலப்படி செய்யவோ அவனுக்கு மனது கசந்துவிட்டது. முக்கியமாய் தனது குருவின் குழந்தைகளை பார்க்கும்போதெல்லாம் அவர்களுடைய பிற்கால நிலைமை இவன் ஞாபகத்தில் வந்துவிடும். இரண்டு குழந்தைகளும் இவனை இடைவிடாது போகிறவிடங்களெல்லாம் தொடரும். தோளிலும் தலையிலும் இடுப்பிலும் தூக்கி கொஞ்சமே னும் பேதமன்னியில் அலைந்து திரிவான். ஆனால் பெண்குழந்தைக்கு நாலு ஐந்து வயது ஆய்விட்டவுடன், அதைக் கண்டால் இவன் கண் களில் நீர் வந்துவிடும். ஐயோ பாவமற்ற ஜென்மம், சிசுக்களுடைய ஜென்மம். ஈச்வர ஸ்வரூபம் சிசுவென்பது, இவ்வளவு நிர்மலமான ஜென்மம் எப்பொழுதும் மனிதனுக்கு ஏனிருக்கக்கூடாது. கப டம், சூது, வாது முதலிய ஒருவித துர்க்குணங்களும் நாம் சிசுவாயி ருக்கும்போது நமக்குக் கிடையாதே; இதே பரிசுத்தமல்லவா? இதே பரிசுத்தத்துடன் நாம் ஏன் ஆயுள் நாள்முடிய செலவிட்டு பிராண னைப் போக்கக்கூடாது. நமது தங்கையான இச்சிறுமிக்கு தனக்கு பின்னால் நேரிடப்போகிற துக்கம் தெரியுமா? ஐயோ பையனைப் பற்றி நான் துக்கப்படவேயில்லை. கூலி வேலை செய்தால் என்ன?

மானபங்கம் ஒன்றுமில்லை. என்ன கஷ்ட மிருந்தபோதிலும் சகஷ்டம்மட்டுந்தானே. மானம் போகமாட்டாதே. அப்படியல்லவே இப்பெண்ணினுடைய கதி. ஒருவள் அவள் பருவகாலத்தில் நல்லவழியில் வாழாமல் கெட்டவழியி லிருக்கப்போகிறாள் என்றால் யாருக்குத்தான் கேட்கத் துக்கமாக இருக்காது? இனி இக்குழந்தைகளைப் பார்த்துக்கொண்டு அவர்களுக்கு வரப்போகிற கதியையும் ஒருவரிடமும் தெரிவித்து எச்சரிக்க வழியில்லாமல் இங்கு இருப்பதைவிட இங்குவிட்டு வேறிடம் போவது நலம் என்று சுப்பிரமணியன் கருதினான்.

இந்த எண்ணம் மனதில் உதித்த இரண்டு மூன்று நாளைக்கப்பால் ஒருநாள் காலமே சுப்பிரமணியன் தனது குருவுக்குச் செய்ய வேண்டிய சிச்ருஷைகளனைத்தும் செய்துமுடித்து அவரை வணங்கி "எனக்கு இவ்வளவு வித்தையையு மன்புடன் அளித்த என் உயிரே, தங்களிடம் நான் விண்ணப்பம் பண்ணிக்கொள்ள வேண்டியதொன்றிருக்கிறது. தங்கள் கருணையின் கீழ் நான் வந்து பத்துவருஷகாலமாயிற்று. எவ்வளவோ கற்றுக்கொண்டுவிட்டேன். கல்விக்கோ அளவில்லை. எத்தனைநாளிருந்தாலும் எனக்கு உபதேசிக்க தங்கள் பரிபூரண கிருபை முற்றிலுமிருக்கிறது. எனக்கும் கற்க ஆவல் உண்டென்பது உங்களுக்குத் தெரிந்தவிஷயம். ஆனால் நான் புண்ணிய தீர்த்தங்கள் ஒன்றும் போய்ப் பார்த்ததில்லை. காலில் பலமிருக்கும்போதுதா னிவ்வித மனோரதங்களை நான் நிறைவேற்றிக் கொள்ளவேண்டும். ஆகையா லந்தப்படி செய்ய எனக்கு விடைகொடுத்தால் நான் கொஞ்சநாள் தங்களையும் குழந்தைகளையும் விட்டுப் பிரிந்திருந்து மறுபடி தங்களிடம் வந்து சேருவேன். அம்மாதிரி அனுக்கிரகிக்கவேண்டும்" என்றான்.

அதற்கு ஞானநிதி வெகு ஸந்தோஷத்துடன், "அப்பா! என் குழந்தாய்! நீ என் சிஷ்யனாயிருந்தபோதிலும், உனது புத்தி, வணக்கம், யுக்தி முதலியவைகளால் நான் உன்னை ஒரு பெரிய சித்தனாக எண்ணியிருக்கிறேன். எப்பொழுது என்னை விட்டுப்போக உன் மனதில் எண்ணமுண்டானதோ அப்போதே நான் ஒருபொழுதும் உன்னைத் தடுக்கக்கூடாது. நீ புறப்பட்டுப் போவது உனக்கும் எனக்கும் க்ஷேமத்திற்காகவேயன்றி வேறல்ல. நீ எப்பொழுதாவது இந்தப் பக்கம் வருவாயேயானால் அகத்தியம் என்னைப் பார். உன் சிச்ருஷையும், பக்தியும், விசுவாசமும் நான் உனக்கு எவ்வளவு சிரமப்பட்டு வித்தையளித்தேனோ அதற்கு மேலேயே ஒழிய வேறல்ல. நீ சிறுவனாயினும் ஒரு மகான்" என்று விடைகொடுத்து பலவிதமாய் அவனைச் சிலாகித்தார். ஞானநிதியின் மனைவி பெண்பாலாகையால்

சுப்பிரமணியன் தங்களைவிட்டுப் போகப்போகிறான் என்றதைக் கேட்டதும் வெகு துக்கம்வந்து கண்ணீர் தன்னையறியாமல் வடிக்க ஆரம்பித்தாள். அத்தனைநாள் தனது மூத்தகுமாரன்போல வளர்ந்து எல்லாவிதத்திலும் தலைப்பிள்ளைபோல் நடந்துவந்தவனை விட்டுப் பிரிய அவளுக்கு எப்படி மனம்வரும். அவளுடைய மற்ற இரு குழந்தைகளும் சிறியவைகள். ஒன்றுக்கு 7 வயது, மற்றொன்றுக்கு 4, 5 வயதிருக்கும். இவைகள் பெரியவர்களான பிறகல்லவோ அந்த அம்மணிக்கு தன் குழந்தைகளால் உபகாரமுண்டு. அப்பொழுது அக்குழந்தைகளுக்கு இவள்தான் சிசுருஷை செய்யவேண்டியதாக இருந்ததேயொழிய வேறல்ல. என்ன இருந்தபோதிலும் ஞானநிதியின் மனைவி, புருஷன் ஸந்தோஷத்துடன் விடை எப்பொழுது கொடுத்துவிட்டாரோ அப்பொழுது நாம் ஒன்றும் சொல்லக்கூடாதென்று மனதை தைரியப்படுத்திக்கொண்டு "அப்பா, மணியா! நமக்கு நீரும் நிழலும் பிரிந்ததா! என் கண்ணே நீ போனபிறகு நான் எப்படி தனியாய் இருப்பேனடா! என் தங்கமே, உன்னைப்போல் ஒரு பிள்ளை நானிதுவரையில் பார்த்ததில்லையடா! எள்ளு என்பதற்குள்ளே எண்ணெயாய் நின்றவன் நீ ஒருவன்தான். நீ சுகமாய் தீர்த்த யாத்திரை பண்ணிவா. உனக்கு ஒருகுறைவும் வராது, நான் சுமங்கலி என் பேச்சு பொய்யாகாது. உனக்கு போகிறவிடமெல்லாம் கீர்த்தி. உனக்கு ஒருகுறைவும் வரமாட்டாது" என்றாள். அப்புறம் தன் குழந்தைகளைக் கொண்டுவந்து சுப்பிரமணியனிடம் நிறுத்தி "அண்ணா ஊருக்குப் போகிறார்; க்ஷேமமாய்ப் போய்வாருங்கள் என்று சொல்லுங்கள்" என்றாள். அவர்களும் தங்க ளிளஞ்சொல்லி லப்படிச் சொல்லவே சுப்பிரமணிய னதைக் கேட்டவுடன் துக்கத்தையடக்க முடியாமல் கதறிவிட்டான். அவ னப்பொழுது அழுத அழுகையைக் கண்டு அவனுடைய அபிமானத் தாய்தந்தையர்கள் திகைத்தார்கள். ஞானநிதியானவர் இவனோ மகா வேதாந்தி இக்குழந்தைகளை விட்டுப் பிரிய ஏன் இவ்வளவு துக்கப்படுகிறான் என்று பலவாறு யோசித்து கடைசியாய் "அடே சுப்பிரமணியா, நீயும் உலகத்தாரில் ஒருவன்தானா உனக்கு ஞானம் இன்னும் வரவில்லையா" என்று சொல்லி இவன் துயரத்தை யாற்றினார். இவன் விசனப்பட்டது இவன் மனதிற்குத்தான் தெரியுமேயல்லாது, அவர்களுக்குத் தெரியுமா? குழந்தைகளை விட்டுப் பிரிவதற்காகவா இவன் துயரப்பட்டது? அவர்கள் கதியை உத்தேசித்தும் அதற்கு ஒருவித ஏற்பாடும் பண்ணாமல், தான் போவதைப்பற்றியுமல்லவா? பிறகு அன்று சுப்பிரமணியன் போகிறான் என்பதற்காக அவனை இடைவிடாமல் ஞானநிதியும் அவர் மனைவியும் தங்களிடம் உட்கார வைத்து அநேகவித புத்திமதிகள் சொல்லி, கையில் அநேக மருந்து

களும் மூலிகைகளும் கொடுத்து, வழிக்கு 4, 5 நாளைக்குக் காணும் படியாக தினமாவும் தேனும் தங்கள் காட்டில் கிடைக்கும் கனி வர்க்கங்களும் கொடுத்து கொஞ்சதூரம் கூடவந்து போகவேண்டிய வழியையும், பார்க்கவேண்டிய ஸ்தலங்களையும், தங்கவேண்டிய தாவு களையும் எச்சரித்து அனுப்பினார்கள்.

சுப்பிரமணியனும் இம்மாதிரி தனக்கு வித்தையளித்த தாய் தந்தையர்களிடம் விடைபெற்றுப் பிரிந்து கொஞ்சநாள்வரையில் அவர்கள்மேல் எண்ணமாகவேயிருந்து விசாரப்பட்டு, தன் சகாய மில்லாமல் அவர்கள் என்செய்வார்கள் என்று கவலையுற்று, சஞ் சரித்து, பிறகு நாளாக நாளாக அவர்களை மறந்து அநேக புண்ணிய பிரதேசங்கள் சஞ்சரித்தான். விந்திய பர்வதத்தில் இரண்டு வருஷம் வாஸம்பண்ணினான். அவ்விடத்தில் அநேக மகான்களுடைய தரி சன மிவனுக்குக் கிடைத்தது. அப்புறம் கோகுலம் காசி முதலிய விடங்கள் போய் அங்கு அபூர்வ சாஸ்திரங்கள் வேதாந்தத்தில் பலவை யப்பியசித்தான். அதன்பிறகு ஹிமாலயம், காச்மீரம், நேபாளம் முதலிய விடங்களில் வெகுநாள் வஸித்தான். மானஸ ஸரோவரத் தில் மூன்றுவருஷம் தங்கினான். இம்மாதிரி இவன் பல விடங்களி லிருந்து 12 வருஷகாலம் போக்கினான். தன்னைவிட வேதாந்தத் தின் கரைகண்டவன் ஒருவனுமில்லை என்ற தைரியம் தனக்கு எப் பொழுது வந்ததோ அப்பொழுதே தனக்கு முதல் முதலில் வேதாந்த வித்தையை ஆதரவாய்க் கற்றுக்கொடுத்த ஞானநிதியின் ஞாபகம் அவனுக்கு வந்துவிட்டது. அவரைப்பற்றியும் அவர் மனைவியைப் பற்றியும் அவர்கள் குழந்தைகளைப்பற்றியும் தான் அதுவரையில் நினைக்காமல் வித்தையின் மோகத்தால் மறந்திருந்ததைப்பற்றி தன் னையே நொந்துகொண்டான். அவ்வளவுதான். தன் குருவின் குழந் தைகள் என்னமா யிருக்கின்றனவோ வென்ற கவலை இவனுக்கு வந்துவிடவே கோதாவரி தீரத்தை நினைத்துக்கொண்டு புறப்பட்டு விட்டான். இவன் மனோவேகம் எவ்வளவு அதிகமாக இருந்த போதிலும் காலால் நடந்துதானே ஆகவேண்டும். ஹிமாலயத்தி லிருந்து திரும்பி மறுபடி ஞானநிதியின் பர்ணசாலை கட்டப்பட் டிருந்த காடுவந்து சேர சரியாக ஒரு வருஷகாலஞ் சென்றது.

அங்குவந்து பார்த்தான். பர்ணசாலை என்பதையே காணோம். அந்தக் காடுதானா தான் முன்னால் வசித்த இடம் அல்லது வேறா என்று சுப்பிரமணியனுக்கே ஸந்தேகம் வந்துவிட்டது. தான் அவ்வி டம் விட்டுப் புறப்படும்போது அடர்ந்திருந்த காடுகளெல்லாம் அவன் திரும்பி அங்கு வந்தபொழுது அழிந்திருந்தன. தான் போகும் போது சிறு தோப்பாயிருந்த விடமெல்லாம் அடர்ந்த காடாய் விளங்

கின. முற்றிலும் வேறு வனம்போல் தென்படினும் தான் முன்னிருந்த காலத்திலிருந்த குன்றுகளும் மலைகளு மந்தந்த விடங்களிலேயே அசையாமலும் மாறாமலு மிருந்தபடியால் அதேவனம் இது என்ற நிச்சயம் சுப்பிரமணியனுக்கு உண்டாயிற்று. குடிசை நின்ற இடத்தைப் பார்த்தால் தரையோடு தரையாயிருந்தது. அடுத்த காட்டில் போய் விசாரிக்கையில் அக்காலத்திற்கு 2 வருஷத்திற்குமுன் ஞான நிதியும் அவர் மனைவியும் ஒரேநாளில் பரமபத மடைந்ததாகவும், அவர்கள் குழந்தைகளை அழைத்துக்கொண்டு அக்காட்டுக்குச் சமீபத்திலிருந்த ஒரு பட்டணத்திற்கு ஒரு சிஷ்யன் போனதாகவும் சொன்னார்கள். தனது குருவும் குருவின் மனைவியும் தான் திரும்பிவரும்முன்னே போய்விட்டதற்கு வெகுவாக சுப்பிரமணியன் துக்கப்பட்டு அவர்கள் குழந்தைகளைத் தேடிக் கண்டுபிடிக்கவேண்டும் என்ற ஆவலின் வேகத்தால் அவர்கள் போனதாக கேள்விப்பட்ட நகரம் வந்துசேர்ந்தான். அந்த நகரமோ ஒரு பெரியநகரம். அவ்விடத்தில் எப்படி தனது குருவினுடைய குழந்தைகளைத் தேடுகிறது, ஒன்றும் தெரியாமல் தெருத்தெருவாக இரண்டு மூன்றுநாள் அலைந்து திரிந்து முடியாத காரியம் என்று நினைத்துவிட்டான்.

இப்படி இவன் திகைத்து நிற்கையில் தன் முன் ஒரு மனிதன் ஒரு எருமைக்கடாவின்பேரில் செங்கல் ஏற்றி ஓட்டிக்கொண்டு வரக் கண்டான். அவனைக் கண்டதும் சுப்பிரமணியன் புத்தி மயங்கிற்று. நிச்சயந்தானா! இவன் கபாலியாக விருப்பானா! சாடையெல்லாம் அப்படியே யிருக்கிறது! ஆனால் அடையாளம் நிச்சயப்படவில்லை. நாம் இவனை விட்டுப் போகும்போது இவன் 7 வயது குழந்தையாயிருந்தான். இப்போது இவன் வயது 21, 22 இருக்கலாம். இவன் ஓட்டி வரும் எருமையும் இவன் தலையில் பிரமன் எழுதின எழுத்தோ! நல்லது எல்லாவற்றிற்கும் இவன் பெயரைச் சொல்லிக் கூப்பிடுவோம் என்று சுப்பிரமணியன் அந்த ஆள் தனக்குச் சமீபம் வந்தவுடன், "ஐயா! கபாலி! என்னை மறந்தீரா" என்றான். கபாலி என்ற சத்தம் கேட்டதும் அந்த ஆள் திகைத்து, தன் பெயர் சொல்லி அழைத்தவனை உற்றுப்பார்த்து, "தாங்கள் யார்? எனக்குத் தெரியவில்லையே" என்றான். உடனே சுப்பிரமணியன், "இவன்தான் நமது குருபுத்திரன். தெய்வாதீனம், இவனை இந்த பெரிய நகரத்தில் கண்டுபிடித்தோம். ஐயோ! பிரமன் விதி சரியாயிற்றே" என்று மனதில் எண்ணிக்கொண்டு, "ஐயா! நீர் ஞான நிதியின் குமாரரல்லவா?" என்றான். அதற்கு கபாலியும் "ஆம் ஸ்வாமி! என்ன யோசித்துப் பார்த்தும் தாங்கள் இன்னார் என்பது எனக்குத் தெரியவில்லையே" என்றான். உடனே சுப்பிரமணியன் "ஆம், உங்களுக்கு நான் இன்னான் என்பது தெரிந்திருக்க

இடமில்லை. நீங்கள் 7, 8 வயதாயிருக்கும்போது நான் உங்களை விட்டுப் பிரிந்தேன். என் பெயர் சுப்பிரமணியன். நான் தங்கள் தகப்பனுரிடம் 10 வருஷகாலம் வேதாந்த பாடம் படித்தவன். நீங்கள் குழந்தையாயிருக்கும்போது உங்களைத் தூக்கித் தூக்கி என் தோள் காய்த்திருக்கிறது. நல்லது வாருங்கள், உங்களிருப்பிடம் போவோம்" என்றான். இம்மாதிரி இவர் சொன்னவுடன் கபாலிக்கு சுப்பிரமணியன்மேல் வெகு அபிமானம் வந்துவிட்டது. அவனுக்கு இவனை நேரில் தெரிய ஸந்தர்ப்பமில்லாவிடினும் அவன் தாய் தந்தையர்கள் தாங்கள் காலம்சென்று போகும்வரையிலும் சுப்பிரமணியனை சிலாகிக்காத நாளில்லவேயில்லை யாகையால் அதைக்கொண்டு கபாலிக்கு இவன் நமது தகப்பனுருக்கு மிக்க வேண்டியவன் என்று ஒரு நிமிஷத்தில் இவன் பெயர் சொன்னமாத்திரத்தில் புலப்பட்டு விட்டது. அன்றியும் வேதாந்தக் களஞ்சியமாகிய சுப்பிரமணியனுடைய ஆகிருதி யார் மனதைத்தான் கவராது. அகன்ற நெற்றி, மேலெடுத்த கபாலம், விசாலமான கண்கள், பரிசுத்தமான நோக்கம், சாந்தமான குணம், பொன் உதிரும் வார்த்தை, ஞானியாகையால் அதற்கங்கமான தீக்ஷை, அதாவது தாடியும் மீசையும் எல்லாரையும் ஸமமாகப் பாவித்தல், இவைகள் அவ்வளவும் கபாலியின் மனதை ஒரு நொடியில் கவர்ந்தது. "வாரும் வீட்டுக்குப் போவோம்" என்று சுப்பிரமணியன் சொன்னமாத்திரத்தில் அவன் அடிமை போல் மாட்டை ஓட்டிக்கொண்டு கபாலி நடந்தான். போகும் வழியெல்லாம் கபாலியை தனக்கு குருவின் அந்தியகாலத்தைப் பற்றியும் இன்னும் அநேகவிஷயங்களையும்பற்றியுங் கேட்டான். ஒவ்வொரு நிமிஷமும் தனது யஜமானனையும் யஜமானியையும் நினைத்து நினைத்து கண்ணீர்வடித்தான். இவன் பட்ட துயரத்தைக் கண்டு கபாலி இவர் நம்மினம் என்பதில் ஆக்ஷேபமில்லை; இவரை இன்று நமது பாக்கியத்தால் கண்டோம். நமக்கு க்ஷேமம் இன்று முதல் வந்துவிட்டது. நமது கஷ்டங்களின்றுமுதல் நீங்கிற்று என்று நிச்சயமாய் எண்ணிவிட்டான். இம்மாதிரியாய் பல சங்கதிகளைப்பற்றிப் பேசிக்கொண்டும் துக்கப்பட்டுக்கொண்டும், கண்ணீர் வடித்துக்கொண்டும் இவ்விருவர்களும் வீடுவந்து சேர்ந்தார்கள்.

கபாலி வீடு எங்கே! அவன் எங்கு இருக்கக்கூடும்! அவனோ வெகு ஏழை. பட்டணங்களிலோ குடிக்கூலி வெகு ஜாஸ்தி. வெகு நாற்றமுள்ள ஒரு பழைய சந்தில் ஒரு குடிசையில் அவன் வசித்தான். இடம் சந்து, வீடு குடிசை, என்ற வித்தியாஸமின்றி தன் சொந்த வீட்டில் புகுவதுபோல் சுப்பிரமணியன் அக்குடிசையில் நுழைந்தான். "தாழ்ந்த நிலை, கொஞ்சம் குனிந்துபோகவேண்டும்" என்று கபாலி எச்சரித்தான். அதற்கு முன்னமேயே அவ்வித ஜாக்கிரதை

யுடன் உட்சென்று அங்கு பார்த்தான். கூடத்தின் ஒரு மூலையில் பிரமன் எழுதியபடி ஒரு கோணியில் முக்கால் நிறைந்த நெல்லு வைக்கப்பட்டிருந்தது. அதில் இரண்டுபடி எடுத்து அப்பொழுது தான் ஒரு பெண்பிள்ளை குத்திக்கொண்டிருக்கிறாள். அவள் சமீபம் இரண்டு குழந்தைகள் பிறந்த வடிவமாய் அரைக்கு ஒரு முழத்துண்டு கூட இல்லாமல் "அம்மா ஏதாவது கொடு, வயிறு பசிக்கிறது, வயிறு பசிக்கிறது" என்று அழுதுகொண்டிருந்தன. சுப்பிரமணியனுக்கு எல்லாம் தெரிந்துவிட்டபோதிலும் கபாலியைப் பார்த்து, "இவர்கள் யார்" என்று கேட்டான். உடனே கபாலி "அடியே! இவர் மகான் நமஸ்காரம் செய்" என்று தன் மனைவியைப் பார்த்துச் சொல்லி "சுவாமி இவள் என் மனைவி, அவைகள் எங்கள் குழந்தைகள். தினம் நெல்லுக்குத்திதான் சமையலாக வேண்டியிருக்கிறது. என்னசெய்வேன்? பெரியவர் எங்களுக்கு விட்டுப்போன ஆஸ்தி உங்களுக்கே தெரியும். அவர் படிப்பில் ஸரஸ்வதி என்றாலும் எனக்கு நான் செய்த பூஜாபலம் ஒன்றும் வரவில்லை. அவாளிருக்கும் போதே எனக்கு கலியாணம் செய்துவைத்தார். குழந்தைகளும் இரண்டு பிறந்துவிட்டன. நான் வெளியில் கூலிவேலை செய்து 2, 3 பணம் கொண்டுவருவேன். அதில் அரிசி குறைச்சலாகையால் 2 பணத்திற்கு நெல் வாங்கி இந்த சாக்கில் கொட்டிவைப்பேன். ஒரு பணத்துக்கு மேல்சாமான்கள் வாங்கிவந்து கொடுப்பேன். அதன்மேல்தான் சமையல் 20, 25 நாழிகைக்கு, ஒரு வேளை சோறு கிடைப்பது துர்லபமாய் விடுகிறது சில நாட்களில். இன்று தங்களைக் கண்ட ஆனந்தத்தால் கொஞ்சநாழிகை பேசிக்கொண்டிருந்துவிட்டேன். இந்த செங்கலை நான் இறக்கினால் எனக்கு $1\frac{1}{2}$ பணம் கூலி வரும். இன்று இவ்வளவுதான்" என்றான்.

சுப்பிரமணியன் தான் கேட்டவைகளாலும் கண்டவைகளாலும் முதல்முதல் வெகு துக்கப்பட்டு "ஓகோ எப்படி பிரமன் எழுதினானோ ஆதியில், அந்தப்படி நடக்கிறதே" என்று வியப்படைந்து கபாலியைப் பார்த்து "ஐயா! நீர் பயப்படவேண்டாம், ஒன்றுக்கும் அஞ்சாதேயுங்கள். உங்கள் தகப்பனார் எனக்குப் பட்டிருக்கும் சிரமத்துக்கு நான் என் தேகத்தைத் தைத்து அவர் காலுக்கு செருப்பாகப் போடவேண்டியவன். உங்கள் கஷ்டத்தை ஒரு நொடியில் நிவர்த்திக்கிறேன். நான் சொல்லுகிற யுக்தியை கொஞ்சம் கேளுங்கள். அந்த எருமைக்கடா நமக்கென்னத்திற்கு? அந்தக் கோணி நெல்லும் நமக்கு வேண்டாம். இரண்டையும் எடுத்துக்கொண்டு கடைக்குச்சென்று விற்றுவருவோம் வாருங்கள்" என்றான்.

என்செய்வான் கபாலி? முதல்முதலில் தன் தகப்பனார் சிஷ்யர்களில் ஒருவன் என்று சொல்லிக்கொண்டுவந்த ஒரு மனிதனைக்

கண்டால் அவன், தன் மாட்டையும் நெல்லையும் விற்றுவிடு என்கிறான். இவன் சொல்லுகிறது இவனுக்கு எளிது. அவஸ்தைப்படுகிறது நானும் என் மனைவியும் குழந்தைகளுமல்லவா என்று யோசித்துப் பார்த்தான். சுப்பிரமணியனுடைய முகத்திலிருந்த அதிகாரமோ அவன் சொன்ன சொற்படி நடக்கும்படி கபாலியைக் கட்டாயப்படுத்திவிட்டது. அவன் செய்த கட்டளைப்படி கோணியை எடுத்து மாட்டின்மேல் வைத்துக்கொண்டு கடைத்தெருவை நோக்கிச் சென்றான். கூடவே நடந்தான் சுப்பிரமணியனும். “விற்றுவிடும் நெல்லை” என்று வேதாந்தி சொல்ல, அந்தப்படியே அதை ஒரு பொன்னுக்கு கபாலி ஒன்றுக்கு முக்காலாக விற்றான். “விற்றுவிடும் மாட்டையும்” என்று மறுபடியும் சுப்பிரமணியன் கட்டளையிட, அப்படியே முன்பின் யோசியாமல் விற்றுத் துலைத்தான் கபாலி. இதற்கு 15 பொன் வந்தது. உடனே சுப்பிரமணியன், “பார்த்தீரா பதினைந்தும் ஒன்றும் பதினாறு பொன், உமது ஜன்மத்தில் என்றைக்காவது நீர் ஒரேதடவையில் பார்த்திருப்பீரா. நானோ உமது தகப்பனாருடைய முக்கிய சீடன். ஒருநாளும் நீர் கெட்டுப்போக புத்தி சொல்லமாட்டேன். நானிப்பொழுது உம்மை செய்யச் சொன்னதெல்லாம் உமது க்ஷேமத்திற்கு, உம்மைப் பிடித்த சனி இன்றுடன் துலைந்தது. இந்த 16 பொன்னுக்கும் யதேஷ்டமாய் உமக்கு வேண்டியது வாங்கி இன்றையதினம் உமதிஷ்டப்படி யதேஷ்டமாய் நீர் சாப்பிட்டு உமது மனைவி குழந்தைகளையும் சாப்பிடச்செய்து இந்தப் பணம் இடங்கொடுத்தமட்டும் பிராமணர்களுக்கும் மற்ற ஏழைகளுக்கும் அன்னமளியும். நாளைச் செலவுக்கென்று ஒரு காசுகூட கையில் வைத்துக்கொள்ளாதேயும். உமக்கு இன்று முத லொருகுறைவுமில்லை” என்று உபதேசித்தான். தானாகவே அந்தத் தொகைக்கு எவ்வளவு அரிசி, பருப்பு, உப்பு, புளி முதலியவைகளும் அவசியமாய் வேண்டிய சில பாத்திரங்களும் வாங்க வேண்டுமோ அவைகளை வாங்கி கபாலியுடன் வீடுவந்து சேர்ந்தான். அவ[illegible] ஒருநாளுமில்லாத ஆனந்தம் காபாலிவீட்டி லுண்டாயிற்று. ஒரு[illegible]டியில் அவன் மனைவி 100 பெயர்களுக்கு சமையல் தனக்குத்[illegible]யாமலே செய்தாள். யதேஷ்டமாய் ஏழை ஜனங்களுக்கு அ[illegible] போட்டு மிகுந்ததை கபாலியும் அவன் மனைவியும் குழந்தை[illegible]ம் சாப்பிட்டார்கள். வேதாந்திமட்டும் தன் கையில் தான் தை[illegible]ருந்த பணத்தைக்கொண்டு கொஞ்சம் பாலும் பழமும் வாங்கி ச[illegible]டார். அவர் உத்தரவுப்படி மறுநாளைக்கு என்று ஒரு கவளம் [illegible]ாவது ஒரு காசாவது கபாலி கையில் வைத்துக்கொள்ள [illegible] இவ்வேதாந்தியின் தைரியத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டு

இவனைப்பற்றி பிரமனிடம் சென்று கோட்சொல்லவேண்டும் என்ற அவாகொண்டதுபோல தினகரனும் அஸ்தமனமானன்.

எல்லாம் அன்றைப்பொழுது ஆனந்தமாகத்தான் சென்றது. பொழுதும் போய் இரவும் வந்துவிட்டது. நாளைக்கு குழந்தைகள் எழுந்திருந்தவுடன் தின்பதற்குக் கொண்டுவா என்று சொல்லுமே, என்செய்வேன் என்ருள் கபாலியின் மனைவி, தன் புருஷனிடம். அப்பொழுதுதான் அவனுக்கும் "நாளைப்பொழுதுக்கு என்செய்வேன் ஈசுவரா!" என்ற விசாரமும் தோன்றியது. உடனே தெருத் திண்ணையில் உட்கார்ந்திருந்த தன் தகப்பனர் சேஷனிடம் அவன் வந்து வணங்கி, "சுவாமி! தங்கள் உத்தரவுப்படி இன்று நடந்துவிட்டேன். நாளைப்பொழுதுக்கு குழந்தைகள் பசி என்று அழுதால் என்ன செய்கிறது என்பது தெரியவில்லையே" என்ருன். அதற்கு சுப்பிரமணியன் புன்னகைசெய்து, "நீர் ஒரு விசாரமும் படவேண்டாம். ஏதோ தாடியும் மீசையுமாக ஒரு பைத்தியக்காரன் சொன்னதைக் கேட்டு மோசம்போனேமே என்று எண்ணிவிடவேண்டாம். நாளைப்பொழுதுக்கு ஈசுவரன் படியளப்பார். அப்படி தவறினல் நானிருக்கிறேன்; இதோ பாரும் என்னிடம் பணமிருக்கிறது" என்ருன். தன்னிடுப்பிலிருந்த முடிப்பையும் காட்டினன்.

இவ்வளவு தைரிய மிவர் சொன்னதின்மேல் கபாலி ஒருவாறு தன்னைத்தானே தைரியம்பண்ணிக்கொண்டு உட்சென்று பாயில் படுத்தான். அவனுடைய மனைவியும் பெண்புத்தியாகையால் என்னமோ இன்று காலமே கண்ட ஒரு யோகி வார்த்தையைக் கேட்டுக் கொண்டு இப்படி செய்துவிட்டீர்களே. நாளைப்பொழுது நன்ருய் நமக்கு வெடியவேண்டுமே என்று விசாரப்பட்டாள். அதற்கு புருஷனும் பயப்படாதே சுவாமி வழிவிடுவார் என்ருன். கபாலி என்ன சொன்னபோதிலும் அவனுக்கு மனதிற்குள் உதைப்புத்தான். யாருக்குத் தானிருக்காது? எம்மாதிரி சுவாமி வழிவிடுவார்? அவனுக்கு ஒன்றும் தோன்றவுமில்லை. தூக்கம் பிடிக்கவுமில்லை. [illegible] கடி கதவைத் திறந்து யோகி இருக்கிருரா இல்லையா என்று பா[illegible] ன். அவர் நிர்விசாரமாக தெருத்திண்ணையில் தூங்கிக்கொண்[illegible] ார். அவர் ஓடிப்போகாமலிருந்ததும் அவர் தன்னிடமிருந்த முடி[illegible] டக் காட்டியதும்தான் கபாலிக்கு முக்கிய தைரியங்கள். அ[illegible] ும் நாளைச் செலவுக்கு வாங்கிக்கொள்ளலாம் என்று தைரியமாய் [illegible] து படுப்பான், எழுந்திருப்பான், மறுபடி கதவைத் திறந்து பா[illegible] ர். சிரமம்மேலிட்டபோது ஒரு நிமிஷம் உறங்குவான். இம்மா[illegible] பொழுது முக்காலே யரைக்காலும் கழிந்தது. வெடிய[illegible] கைக்கு இவன் தன் எருமைக்கடாவுக்கு புல் கொண்டு[illegible]

வது வழக்கம். இன்று எந்த எருமைக்கு புல் கொண்டுபோடுகிறது என்று அவன் அக்காலத்தில் சொல்ல, கொல்லேயில் ஒரு எருமை கத்தின சத்தம் காதில் விழுந்தது. இது என்ன ஸ்வப்னமா, நிஜமா? நமது எருமையைத்தான் நேற்று சுப்பிரமணிய யோகியின் பேச்சைக் கேட்டு விற்றுவிட்டோமே என்று இவன் யோசிக்கையிலேயே மற்றொரு தடவையும் எருமை கத்தின சத்தம் நன்ருக இவன் காதில் விழுந்தது. உடனே அவன் எழுந்திருந்து விளக்கை எடுத்துக்கொண்டு, தான் விற்ற மாடுதான் பழைய இடத்தை நினைத்துக்கொண்டு ஓடிவந்துவிட்டதோ என்று கொஞ்சம் மனம் கலங்கினவனுக கொல்லேயிற் சென்ருன். கொல்லேக் கதவைத் திறந்ததும் அங்கு ஒரு சாக்கு நெல்லு வைக்கப்பட்டிருந்தது. இது என்ன புதுமை என்று அவன் தியங்க, அதின் சமீபத்தில் ஒரு புது எருமைக் கடா கட்டியிருக்கக் கண்டான்!! அது தன்னுடைய பழைய மாடல்ல. வேறு ஒன்றும் தெரியாதவனுக, இது யார் செய்த மோசம்? இது என்னவென்று தியங்கிக்கொண்டே தெருக்கதவைத் திறந்தான். அங்கு அதேயிடத்தில் சுப்பிரமணிய யோகி தூங்கக்கண்டான். ஒருகுரல் மெதுவாகக் கூப்பிடும்முன் அவர் எழுந்து உட்கார்ந்து "என்ன விசேஷம்" என்ருர். "சுவாமி! நமது மாட்டையும், சாக்கு நெல்லேயும் நேற்று நாம் விற்றிருக்க, இன்றைகாலமே எனது வீட்டுப் புறக்கடையில் வேறு ஒரு மாடும் ஒரு சாக்கு நெல்லும் வந்திருக்கின்றனவே! இது யார்செய்த காரியமோ தெரியவில்லேயே! காலமே, ஊர்காப்பாளர் என்னேப் பிடித்துக்கொண்டால் என்செய்வேன்? நான் ஒரு பாவமும் அறியேனே என்று வெகு துக்கத்துடன் விண்ணப்பம் செய்துகொண்டான்.

உடனே சுப்பிரமணியன், தன் யுக்தி நன்ருய் பலித்தது என்பதை தன் மனதிற்குள்ளேயே எண்ணி ஆனந்தமடைந்து கபாலியைப் பார்த்து, "ஐயா! நான் உமது தந்தையின் முக்கிய சீடன்; உமது க்ஷேமத்திற்காக இங்கு வந்தேன். நீர் படும் கஷ்டத்தைப் பார்த்தேன். அதற்கு உபாயம் மாட்டையும் நெல்லேயும் விற்கச்செய்தேன். அந்த மாட்டுக்கும் நெல்லுக்கும் பதிலாக இப்பொழுது, அதாவது இன்றை செலவுக்கு வேறு மாடும் நெல்லும் உமக்கு வந்திருக்கிறது. ஊர்காப்பாளர் உம்மை ஒன்றும் செய்யார்கள். அதற்கு நான் ஜாமீன். ஆனல் அந்த மாடும் நெல்லும் உமக்கு வேண்டவேவேண்டாம். காலமே ஸ்நானம்செய்து அனுஷ்டானத்தை முடித்துக்கொண்டு மாட்டையும் நெல்லேயும் கொண்டுவாரும். கடைத்தெருவில் நேற்று விற்றதுபோல் விற்றுவருவோம். நேற்று எப்படி செலவுசெய்தீர்களோ அம்மாதிரி இன்றைக்கு விற்றுவரும் பொருளேயும் செலவிடுங்கள். உமக்கு ஒருநாளும் இனிமேல் கஷ்டமில்லே" என்ருர்.

அவர் இப்படி சொன்னதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு, என்ன வோ ஏதோ? இவரைப் பார்த்தாலோ மகா யோகிமாதிரி இருக்கிறது. இவர் கட்டளைப்படி நடப்பதே உசிதம் என்று தன்னை யறியாமலே கபாலி தீர்மானித்துவிட்டான். அன்று காலமேயே அன்று வந்திருந்த மாட்டையும் நெல்லையும் விற்று, 20 பொன் அடைந்து அதற்கு சா மான்கள் வாங்கி அதற்கு முதல்நாளில் நடத்தினதுபோல் நடத்தினார் கள். இரவுக்கு வேண்டிய ஆகாரம்மட்டும் வைத்துக்கொள்ளலாம் என்றும், இரவில் படுக்கப்போகும்போது, மறுநாளைக்கு என்று ஒரு பருக்கையாவது ஒரு காசாவது அன்று விற்றுவந்த பணத்தில் வைத்துக் கொள்ளக்கூடாதென்றும் கபாலிக்கு சுப்பிரமணிய யோகி திட்டஞ் செய்தார். அம்மாதிரி நடத்தினானு வென்று பரிசோதித்தும் பார்த்தார். அவ்வளவு கண்டிப்பாய் அவர் சொல்லும்போது எப்படி தப்பி நடப் பான் கபாலி? ஒவ்வொன்றும் அவர் கட்டளைப்படியே நிறைவேற் றினான். இம்மாதிரி இரண்டாம்நாள் பொழுதும் போயிற்று.

மறுபடி மூன்றாநாள் காலையிலும் கபாலி மற்றொரு மாடும் மற் றொரு மூட்டை நெல்லும் தன் வீட்டுத் தோட்டத்திலிருக்கக் கண் டான். அவைகளையும் யோகியின் கட்டளைப்படி அன்று செலவிட் டான். இப்படியாய் 15 நாள் நடந்துவந்ததை யோகி கண்டு தான் செய்த யுக்தி சரிவர நடந்துவருகிறது, இனிமேலும் நடக்காமலிருக் காது என்று நிச்சயங்கொண்டு கபாலியைக் கூப்பிட்டு, "ஐயா! இன்றையதினம் நான் தங்களைக் கண்டதுமுதல் 15 நாள் ஆய்விட்டது. இதுவரையில் பிரதிதினமும் தங்களுக்கு ஒரு எருமையும் ஒரு மூட்டை நெல்லும் எங்கிருந்தோ வந்துகொண்டிருக்கிறதா இல் லையா? இப்பொழுது நான் சொல்லுவதை வெகு கவனமாகக் கேட் கவேண்டும். அதுமட்டுமல்ல வெகு சரியாய் நடக்கவேண்டும். தங்களுக்கு இந்த பதினைந்துநாளும் தாங்கள் எவ்வளவு சுகமாக தாங்களும் வயிறுநிரம்ப குஞ்சு குழந்தைகளுடன் சாப்பிட்டு ஏழை கள் வயிறு குளிர அன்னமளித்தீர்களோ அம்மாதிரி யிருக்க இஷ் டமா? அல்லது நான் தங்களைக் கண்டபோது தாங்களிருந்த பிரகா ரம் நாள் ஒன்றுக்கு 2, 3 பணம் கூலி வேலையில் வாங்கி அவஸ் தைப்படவேண்டுமா? அவஸ்தைப்பட இஷ்டமிருந்தால் தாங்கள் நாளைக்கே அவஸ்தைப்படலாம். எப்படி என்றாலோ, இன்று மாட் டையும் மூட்டையையும் விற்றுவருகிற பொன்னில் ஒரு காசு நாளை செலவுக்கு என்று தாங்கள் மீத்துவைப்பீர்களேயாகில் தங்களுக்கு நாளைக் காலை மாடும் மூட்டையும் வருவது நின்றுவிடும். அன் றன்றைக்கும் புதிய மாட்டையும் புதிய மூட்டையையும் அன் றன்றைக்கே செலவிடுவீர்களேயாகில் மறுநாள் மாடும் மூட்டை யும் தப்பாமல் வரும். யார் கொண்டுவந்து கொடுக்கிறார்கள் எப்

படி என்று நீர் விசாரிக்கவேவேண்டாம். யார் கொண்டுவந்து கொடுத்தால்தான் நமக்கென்ன? விற்றுவரும் பணம் நம்முடையது. பதினைந்து நாள் நான் தங்களுக்கு தைரிய முண்டுபண்ணுவதற்காக கூடவிருந்தேன். இனி. எனக்கு அநேக வேலை யிருக்கிறபடியால் நான் தாமசிக்க முடியாது. உமக்கு சுகமாய் ஜீவிக்க வழியை நன்ருகக் காட்டிவிட்டேன். கொஞ்சநாளைக்குள் அநேக ஏழை களை இரட்சிக்கும் அன்னதாதா என்ற பெயரும் உமக்கு வந்துவிடும். இந்த வழியைமட்டும் விட்டுவிடாதேயுங்கள். கொஞ்சம் பிசகி ஞல் மறுபடியும் கஷ்டப்படுவீர்கள். நல்லது நான் போய்வரு கிறேன். இவ்வளவுமட்டில் உம்மை நல்ல ஸ்திதியில் கொண்டு வந்து வைத்தேன். இதற்காக என்னை நீங்கள் புகழவேவேண்டாம். இது நான் தங்கள் தகப்பஞருக்குச் செய்யவேண்டிய கடன். இப் பொழுது தங்கள் தங்கை கலியாணி எங்கிருக்கிருள். அவளிருப் பிடம் சொல்லுங்கள். அவளைப் பார்த்துப் போகவேண்டும்'' என்ருர்.

அவர் தான் போய்வருகிறேன் என்றதும் கபாலிக்கு துக்கம் வந் துவிட்டது. முன்பின்னறியாத ஒருவர், தன்னுடைய தகப்பஞர் ஸ்நேகத்தை நினைவுவைத்து நமக்கு இவ்வளவு சௌக்கியத்தை யுண் டாக்கிஞர். அவரைவிட்டு நாம் எப்படி விட்டு பிரிகிறது என்ற துக்கமும் தன் தங்கையைப்பற்றிக் கேட்டாரே அவளைப்பற்றி அவ ரிடம் எம்மாதிரி நாம் சொல்லுகிறது என்ற வெட்கமும் கபாலியை வருத்தின. ஆயினும் கேள்வி கேட்டவர் மகாஞகையால் உள்ளதை உள்ளபடி கபாலி சொன்ஞன். சொல்லும்போதே துக்கம் பொறுக் காமல் இவ்வளவு உத்தமமான என் தகப்பஞர் வயிற்றில் பிறந்த கலியாணி கதி இப்படியாய்விட்டதே என்றழுதான். அதற்கு சுப்பிரமணியன் "பயப்படவேண்டாம்! நானவளை நல்லவழியில் கொண்டுவந்து சேர்க்கிறேன்" எனவே, கபாலி முகமலர்ந்து ஓகோ இவர் மகான், அகத்தியம் செய்வார் என்று நிச்சயித்துவிட்டான். உடனே அவரை அழைத்துப்போய் அந்நகரத்து வடகிழக்கு மூலை யில் ஒரு நாட்டியப்பெண் தெருவில் ஒரு வீட்டைக் காண்பித்து அங்குதான் தன் தங்கை இருப்பதாகச் சொல்லி விடைபெற்றுப் போஞன். அவள் வீட்டுமுன் சுப்பிரமணியன் நின்று "ஆகா பிர மன் எழுத்தல்லவோ இம்மாதிரி இவளைச் செய்தது! ஞானநிதி யின் வயிற்றில் ஜெனித்த பெண்ணு இந்தத் தொழிலில் வந்து சேர்ந் தாள்!" என்று யோசித்துக் கதவைத் தட்டிஞர். உடனே கதவு திறக்கப்பட்டது; ஆஞல் கலியாணி தன் வீட்டை நாடிவரும் அநேக நாயகர்களில் ஒருவனைக் காணுவதற்குப் பதிலாக, அத்தியாச்சரிய மான நிஜமான தபோஸ்வரூபத்தை தன்முன் நிற்கக்கண்டு திகைத் தாள். அவள் திகைத்து நிற்கையிலேயே சுப்பிரமணியன் "அம்மா!

குழந்தாய்! நீ ஞானநிதியின் குமாரியல்லவா? உன் கதி இப்படியா ஆகவேண்டும்! அவர்கள் சுப்பிரமணியன் என்று சொல்லக் கேட்டிருக்கிருயா? அவன்தான் நான். என்னை உன் தகப்பனுராக பாவித்து உள்ளத்தை உள்ளபடி சொல். நான் உன்னை நல்ல வழிக்குக் கொண்டுவர உத்தேசித்துக் கேட்கிறேன். உன்னை நான் எடுத்து வளர்த்த வாஞ்சையாலிங்குவந்தேன்'' என்ருர். சுப்பிரமணியன் என்ற ஒரு சொல் கேட்டமாத்திரத்தில் தன் தாயார் அடிக்கடி அவனைப்பற்றி சொல்லியிருந்ததெல்லாம் அவள் ஞாபகத்தில் வந்துவிட்டது. என்னதான் கெட்டுப்போனவள் என்ருலும் தனது தாய் தந்தையர்கள் எல்லா நற்குணங்களும் பொருந்தியவனுகை நிமிஷத்திற்கு நிமிஷம் வருணித்துவந்த ஒரு மகான் அந்தஸ்திதியில் தன்னைப் பார்த்தாரே என்ற வெட்கம் வெகுவாக கலியாணியை பாதித்தது. உடனே அவள் "சுவாமி என் தாயார் இறந்துபோகும்போதுகூட தங்கள் பெயரைச் சொல்லியே இறந்தாள். நான் என்னசொல்லப் போகிறேன்? என் தலைவிதி பிழைக்க ஒரு வழியும் இல்லாதவளாக இந்த ஊர்வந்து இந்தத் தெருவில் ஒரு கிழவிவலையில் அகப்பட்டேன். அவள் போய்விட்டாள். தினம் 5, 6 பெயர்கள் என்னைப் பார்க்க வருவார்கள். அரை பணம் கால் பணம் கொடுத்துப்போவார்கள். இம்மாதிரி ஒரு நாளைக்கு 2 பணம் சேரும். அதைக்கொண்டு தான் அன்றன்று கஞ்சிகாய்ச்சி நான் குடிக்கவேண்டும். தொழில் வெகு வெட்கம். என் தகப்பனுர்மாதிரி கேட்டபடியால் சொன்னேன். வயிற்றின் கொடுமை. எனக்கு வேறுவிதமாயிருக்க வழியில்லையே. என்னசெய்வேன்'' என்று அலறிவிட்டாள்.

இதைப்பார்த்து ஒன்றுக்கும் அசையாத அந்த ஞானி மனதும் அசைந்துவிட்டது, சுப்பிரமணியனும் அலறினுன். "வயிற்றின் கொடுமையால் ஒரு ஸ்திரீ தனது உத்தமகுலத்தை விட்டு இவ்வளவு இழிவான தொழிலில் வந்து விழும்படி பிரமன் எழுதினபடியாலல்லவோ ஆயிற்று! நல்லது விட்டேனு பார்! என்னுல் கூடியமட்டும் இவளை இன்றுமுதல் நல்லவழியில் கொண்டுவருகிறேன்'' என்று அவளை குழந்தையாயிருக்கும்போது தூக்கிவளர்த்த அபிமானத்தாலும், தனது குருவின்பேரில் தான் வைத்திருந்த பக்தியாலும், சுப்பிரமணிய யோகி நிச்சயித்துவிட்டார். உடனே கலியாணியைப் பார்த்து "அம்மா, நீ பயப்படாதே, உன் தாயார் என் பெயரை பிராணன் போகும்போதுகூட சொன்னுள் என்கிருயே. அப்படிப்பட்ட நான் உனக்கு நல்லதைச் சொல்வேனு கெடுதலைச் சொல்வேனு? உன்னை ஐந்து வயதுவரையில் தூக்கி வளர்த்தவன் நான். நீ இந்த ஸ்திதியிலிருக்க என் மனம் என்னமாய் பதைக்காது? நான் சொல்லுவதைக் கேள். இன்றுமுதல் உன் கதவை மூடிக்கொள்.

யார்வந்து கதவைத் தட்டினாலும் திறக்காதே. என்ன கொண்டு வந்திருக்கிறாய் என்று கேள். அவர்கள் வழக்கப்படி கால் பணம் அல்லது அரை பணம் கொண்டுவந்து இருப்பதாகச் சொல்லுவார்கள். கதவை திறவாதே. இன்றிரவுமுதல் என் திட்டம் ஒரு படி நல்முத்து. ஒருபடி நல்முத்து இருந்தால் கதவைத் திறப்பேன் என்று சொல். ஒருவனாவது ஒருபடி நல்முத்து கொண்டுவரப் போகிறதில்லை. ஆனால் யாராவது ஒருவன், அவன் தேவகுமாரனோ, ராஜகுமாரனோ உனக்கு ஒருபடி நல்முத்து கொண்டுவந்திருக்கிறேன்; கதவைத் திற என்று சொல்லத்தான்வேண்டும். ஏனெனில் உனக்கு அந்தமாதிரி பணம் வந்தாலொழிய கஞ்சி காய்ச்சி குடிக்க வழியில்லை என்கிறாயல்லவா? உன் தலை எழுத்தும் அது என்று ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு இரவும் உனக்கு ஒருபடி நல்முத்து வந்தேதீரும். அவ்வண்ணம் ஒருநாள் ஒருபடி நல்முத்து கொண்டு வந்து கொடுக்கிறவன் தான் தினந்தோறும் ஒருபடி நல்முத்து உனக்கு கொண்டுவந்து கொடுப்பான். அப்பொழுது பல ஜனங்கள் உன்னை வந்து பார்ப்பதற்கு பதிலாக ஒருவனேதான் வந்து போவான். உன் ஜென்மம் கடைத்தேறும், நான் சொல்வதைக் கேள். பயப்படாதே. இன்று இரவு அம்மாதிரி உனக்கு ஒருபடி நல்முத்து வரத்தவறினால் நான் நாளைச் செலவுக்கு பணம் தருகிறேன். இதோபார் என் முடிப்பு. நான் ஓரிடமும் போகாமல் உன் வீட்டிற்கு எதிரில் இருக்கும் புளியமரத்தடியி லிருந்துகொண்டு உன்னை நல்ல ஸ்திதியில் கொண்டுவந்து வைத்து என்னிருப்பிடம் போகிறேன்'' என்றார்.

இவள் அவர் சொன்ன தவ்வளவையுங் கேட்டு வியப்புற்றாள். அவரிடமிருந்த நம்பிக்கையோ, அல்லது அவரதிகாரத்துடனும் வெகு சாந்தத்துடனிட்ட கட்டளையோ, அது என்ன மந்திரமோ, கலியாணியும் அப்படியே செய்ய நிச்சயித்தாள். அன்றிரவு வந்த ஒவ்வொருவனுக்கும் கதவைத் திறக்காமல் ஒருபடி நல்முத்து கொண்டுவந்தாலிந்த வாசற்படி தாண்டிவரலாம் என்றாள். அவர்கள் எல்லாரும் தனித்தனியே "போடி பைத்தியக்காரி" என்று சொல்லிப் போய்விட்டார்கள். இரவு முற்றிலும் அநேகமாய் போய் விட்டது. அருணோதயத்திற்கு அரைநாழிகைப் பொழுதிருக்கும். அப்பொழுது ஒருவன் வந்து கலியாணி வீட்டுக்கதவைத் தட்டினான். "யார் நீ" என்றாள். உன்னைப் பார்க்கவந்தவன் என்று மறுமொழி வந்தது. "ஒருபடி நல்முத்து இருக்கிறதா" என்றாள். கூட நான்கு ஐந்து முத்து மிருக்கலாம் என்ற பதில் கிடைத்தது உடனே கதவைத் திறந்தாள். மின்னற்கொடியைக் கண்டாற்போ(அவள் கண்கள் கூசின. வெகு ரூப லட்சணத்துடன் ஆஜாநுபா(

வாய் வெகுவித புருஷ லட்சணங்களுடன்கூட ஒரு சிறுவன் ஒரு படி நல்முத்துடன் உள் நுழைந்தான். ஒரு படியை எதிரில் கலியாணி வைக்க அதனுல் ஒருபடி நல்முத்தும் அளந்தும் வைத்தான். வந்தவன் அப்புறம் ஒருநாழிகை சாவகாசம் கலியாணியினிடம் பேசிக்கொண்டிருந்து தான் போய்விட்டு வருவதாகச் சொல்லி விடைபெற்று வெளியிற் சென்ருன். இவைகளவ்வளவையும் மரத்தின் கீழிருந்தபடியே சுப்பிரமணியன் பார்த்து களித்து, நமது யுக்தி நன்ருய் பலித்தது என்று களித்து ஆனந்தக் கண்ணீர்வடித்தார். வந்தவன் போனபிறகு யோகி கலியாணி வீட்டினருகே வந்து, "என்ன அம்மா ஒருபடி நல்முத்து நான் சொன்னபடி கிடைத்ததா" என்று கேட்கவே, அவள் புன்சிரிப்புடன், "தங்கள் தயவால்" என்ருள். அதற்கு அவர் "அம்மா அப்படிச் சொல்லாதே. அதன்மேல் ஆசையும் வைக்காதே. நல்லது அந்த முத்து கொண்டுவந்தவன் எப்படி யிருந்தான்" என்ருர். "சுவாமி என் ஜென்மத்தில் அவ்வ... குணமும் அவ்வித ஸௌந்தரியமும் நான் கனவில்கூட கண்... தில்லை" என்ருள். "நல்லது இவ்வளவு பெருமை தங்கிய ஒரே நாயகன் உனக்கு வேண்டுமோ? அல்லது கால் பணம் அரைக்கால் பணம் கொடுக்கும் பள்ளிகள் பல வேண்டுமா" என்ருர். இதைக் கேட்கவும் வேண்டுமோ! "நான் வயிற்றின் கொடுமையால் புத்தி மயங்கினேன், இனி தங்கள் உத்தரவுப்படி செய்கிறேன்" என்ருள். இதுதான் அவளுக்கு நற்புத்தி சொல்ல சமயம் என்று நினைத்து சுப்பிரமணியன், "அம்மணி! என் குழந்தை நீ; உன்னை ரட்சிக்கவந்தவன் நான். நான் சொன்னபடி உனக்கு ஒருபடி நல் முத்தும் கிடைத்தது. அந்த முத்துகள் அவ்வளவையும் நீ கோவில். குளம், சத்திரம், சாலை, ஏழைகள் இவர்களுக்கு உபயோகமாகும் படி விற்று பணத்தை யதேஷ்டமாக செலவிடு. உன்மட்டில் சா... பாட்டுக்கும் துணிக்கும் உபயோகப்படுத்திவா. மறுநாள் செலவுக்... என்று ஒரு தம்படி மிகுந்துபோகச்செய்தால் அந்த நாயகன் விடிய... காலந்தோறும் ஒருபடி நல்முத்துடன் உன்னைவந்து பார்ப்பதை நிறுத்திவிடுவான். அன்றன்றைக்குக் கிடைக்கும் முத்துகளை விற்று அன்றன்றைக்கே செலவுசெய்துவிடவேண்டும். ஒரு தூசுகூட மறுநாளைக்கு பாக்கி இருக்கக்கூடாது. இருந்தால் அந்த அழகான புருஷனும் முத்துகளும் வருவது நின்றுவிடும். உன் ஜென்மமும் முன்போலாய்விடும். அப்படியில்லாதபடி முத்துக்களை விற்று எளிய ஜனங்கள், கோவில், குளம், பாடசாலை முதலிய தர்மம் செய்து ...யும் சுகமாக சாப்பிட்டுவந்தால் உன் பெயர் மகா தர்மசாலி என்று ...ந்துவிடும். பழைய கெட்டபெயர் மாறிவிடும். இன்று காலைவந்த ...ருவனே உன் பிராணநாதன்" என்ருர். அவளும் தன் பிதாவின்

சொன்னபடி செய்தாள். இம்மாதிரி 15 நாள் தவறாமல் ப்படியே நடக்கிறதா இல்லையா என்பதை நமது யோகி ருந்தார்.

ரி கலியாணி வீட்டில் நடந்துவந்ததையும் சரிவரப் ரிமேலு மிம்மாதிரி நடக்கும் ஆக்ஷேபமில்லை என்று க்குத் தோன்றினபிறகு அவளிடம் விடைபெற்று யோகி மறுபடியும் கபாலியைக் கண்டு அங்கும் ந எருமையும் ஒரு சாக்கு நெல்லும் வருவதைக்கண்டு ன். தமையன் தங்கை இருவர்களையும் ஒரேயிடத்தில் கூப் மறுபடி சுப்பிரமணியன் சொன்ன நற்புத்தியாவது: — யா! கபாலி! அம்மா கலியாணி! நான் உங்களை தூக்கி வளர்த்த அபிமானத்தாலும் உங்கள் தகப்பனார் என்னைத் தலைப்பிள்ளையாக ளர்த்து வித்தையை சொல்லிக்கொடுத்த பக்தியாலும் நான் நீங்க ளிருவரும் கஷ்டப்படுவதைப் பார்த்து உங்கள் கஷ்டங்களை ஒரு வாறு நீக்கி நல்ல வழிக்கு கொண்டுவந்து விட்டேன். எதாவது ஒரு தினம் சூர்யோதயமாவது தப்பினாலும் தப்பும்; உங்களுக்கு வருமானம் தப்பாது. ஆனால் ஒருநாள் வருமானத்தை கொஞ்சம் மிகுந்து போகும்படி வைத்தீர்களேயானால் மறுபடி கஷ்டதசைக்கு வரவேண்டும். ஆகையால் என் பேச்சை வேதவாக்கியமாக எண்ணி அன்றன்றைக்கு வருகிறதை அன்றன்றைக்கு செலவிட்டுவாருங்கள். இந்த ஜென்மத்தில் இவ்வளவுதான் என்று எண்ணிக்கொள்ளுங்கள். நான்போய் வருகிறேன், என்றான். அவர்களும் இவ்விதம் மகானி டம் உபதேசம் பெற்றபிறகும், அவர் சொன்னபடியே எல்லாம் சரியாய் நடந்ததைப் பார்த்தபிறகும் தப்பி நடப்பார்களா! சுப்பிர மணியயோகியும் நமது குருவின் குழந்தைகளுக்கு நாம் செய்ய வேண்டியதை செய்தாய்விட்டது என்று அந்நகரத்தைவிட்டு புறப் பட்டுச் சென்றான்.

பிறகு தென் தேசங்களில் வெகு ஸ்தலங்களில் சுப்பிரமணிய யோகி சஞ்சரித்தார். தன் தாய் தந்தையர்களைக் கண்டு கொஞ்ச நாள் அவர்களுடன் வாசஞ்செய்தார். ஒரு இரவு அவர் இராமநாத பு காட்டு மார்க்கமாய் வழிநடந்துகொண்டிருக்கையில் நிர்மா னுஷ்யமான அந்தக் காட்டில் கொஞ்சதூரத்தில் ஒருவன் ஒரு மாட்டை ஓட்டிக்கொண்டு வரக்கண்டார். ஒகோ இவன் திருடனோ என்னவோ இக்காட்டில் நாம் இராத்திரி என் வழிநடக்கத் துணிந் தோம் என்று தியங்கி, தன் எதிர்வரும் ஆளைப் பார்த்து "யார் அப்பா அங்கே" என்றார். உடனே அந்த ஆள் சுப்பிரமணியயோகி குரல் கேட்டதும் தன் தலைமேலிருந்த நெற்சாக்கை கீழேபோட்டு

அவனை வெகு விநயத்துடன் கைப்பற்றி "அப்பா, கருணையில்லையா, நான்தான் பிரமன். நான் அவர் அப்படி எழுதியதற்கு பதிலாக நீ என் தலையிலிப்ப டாயே. தினந்தோறும் நான் ஒரு எருமையை பி ஏேரய்க் கட்டி ஒரு சாக்கு நெல்லும் கபாலி வீட்டில் தினம் ஒரு படி நல்முத்து சமுத்திரத்தில் முழுகி எ கலியாணிக்கு கொண்டுபோய் கொடுத்துவருகிறே தூக்கித் தூக்கி என் தலை வழுக்கை விழுந்துபோயிற். சமுத்திரத்தில் முழுகி முழுகி உப்புஜலத்தால் கண்கள் கப எறிகின்றன? என்செய்வேன்? நீ இப்படி என் தலையில் எ போகிறாய் என்ற எண்ணம் எனக்கு கொஞ்சமேனும் முத இல்லை. இருந்திருக்குமேயானால் நான் வேறுவிதமாய் நடந்திருப் பேன்" என்று பரிதபித்தார்.

அதற்கு சுப்பிரமணியயோகி, சாஷ்டாங்கமாக பிரமனை நமஸ் காரம்பண்ணி: "சிருஷ்டிக் கடவுளே! என் புண்ணியம் நான் மூன் றுந்தடவை தங்களை நேரில் பார்க்கும்படி கிடைத்தது. தாங்கள் தங்கள் கடமையைச் செய்தீர்கள். நான் என் குருவுக்கு செய்ய வேண்டிய கடமையைச் செய்தேன். என்ன பண்ணுகிறது? அவர் களுக்கும் எனக்கும் நல்லகதி கொடுக்கிறவரையில் தங்கள் கஷ்ட மிப்படியேதா னிருக்கவேண்டும்" என்று வெகு வணக்கத்துடன் சொன்னன். பிரமனும் இந்த மகா யோகியினுடைய குருபக்தியை யும் யுக்தியையும் கண்டு மெச்சி, இம்மூவர்களுக்கும் அவர்கள் குடும்பசகிதம் நல்லகதி அளித்து தன் சிரமத்தைவிட்டு ஒருவாறு நீங்கினர்.

இப்பொழுதுதான் நமது நண்பர்களுக்கு சுப்பிரமணியயோகி செய்த யுக்தி அருத்தமாகும். பிரமன் கபாலி தலையில் ஒரு எருமையும் ஒரு சாக்குநெல்லும் என்றும் எழுதிவிடவே, இவ்விதப் பொருள்கள் பிரமன் லிபிப்படி கபாலிக்கு இருந்தே தீரவேண்டு மென்று அன்றன்றைக்கு மாட்டையும் நெல்லையும் விற்று செல விடும்படி சுப்பிரமணியயோகி திட்டமிட்டான். மறுநாள் செல வுக்கு மீராமலிருக்க எச்சரித்தான். தான் எழுதின எழுத்து பொய் யாகாமலிருக்க பிரமன் எங்கிருந்தாவது தலைப்பொறுப்பாக மாடும் மூட்டையும் கொண்டுவந்து வைத்துப்போனர். கலியாணிக்கு வேசித்தொழிலால் ஜீவனம் என்று பிரமன் எழுத அதை மாற்றுவ தற்கு அவளை ஒரு படி நல்முத்து தன் நாயகர்களிடம் கேட்க சுப்பிரமணியயோகி திட்டமிட்டான். அவ்வளவு பொருள் உல கத்திலேயே கிடையாது. அந்த விஷயத்திலும் தன் லிபியை சரிப்

படுத்த பிரமன் ஒரு படி நல்முத்துடன் கலியாணி வீடு வரும் படியாக முடிந்தது. இவ்வித ஏற்பாடானபிறகு கலியாணி வீடு வந்து போனது பிரமன் ஒருவனைத்தவிர வேறொருவருமில்லை. இம்மாதிரி மதியால் சுப்பிரமணியயோகி விதியை வென்றார் என்று இச்சிறு கதை முடிகிறது. அப்படி நாமும் செய்ய சுப்பிர மணியயோகியைப்போல் அவ்வளவு பரிசுத்தர்களாக ஒவ்வொரு விதத்திலு மிருக்கவேண்டுமெல்லவா?

எட்டாவது,

பரம்பரை ஆண்டியோ பஞ்சத்துக் காண்டியோ.

மைசூர் ஸமஸ்தானத்தில் சாமுண்டன் என்றொரு அரசன் ஆண்டுவந்தான். அவருடைய அரண்மனை புரோகிதன் பெயர் குண்டப்பன். இவன் தன் வேலையில் வெகு கெட்டிக்காரன். எந்தெந்த சமயத்தில் ஸமித்து, தருப்பை, பலாசிலை முதலியவைகளுடன் சடங்குகளுக்குக் காத்திருக்கவேண்டுமோ அந்தந்த சமயத்தில் நிமிஷந்தவறுதபடி காத்திருந்து அரசனையும் அரண்மனையிலுள்ள மற்ற ஒவ்வொருவரையும் திருப்திபண்ணிவைப்பான். அவர்களிடமிருந்து கிடைக்கும் வருமானங்களை கொஞ்சமேனுங் குறையாமல் பெற்றுக்கொள்ளுவான். பாக்கு வெற்றிலை அரிசிமுதல் ஒன்றும் விடாமல் மூட்டை கட்டிப்போவான். அரண்மனை புரோகித வேலையில் குண்டப்பனுக்குச் சமானமாக ஒருவரையும் சொல்ல முடியாது. யார் யாருக்கு எம்மாதிரி தன் வைதீகத்தொழிலில் நடந்துகொள்ளவேண்டுமோ, அம்மாதிரி அவரவர்களிடம் நடந்துகொள்ளுவான்.

இப்படியிருக்கும் நாளில் ஒருநாள் குண்டப்பன் அமாவாசையன்றையதினம் அரசனுக்குத் தருப்பணம் முதலியவைகளுக்கு மந்திரங்களை சரிவர நடத்திவைத்து அப்புறம் தானும் புசித்து அரசன் பேட்டிக்கு வந்தான். அப்பொழுது அரசனும் தான் புசித்து உல்லாசமாக வெற்றிலை போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்த சமயமாக விருந்தது. அச்சமயத்தில் தன் பேட்டிக்குவந்த புரோகிதனை சாமுண்டன் பார்த்து "குருவே! தாங்களிதுவரையில் ஒவ்வொரு விஷயத்தில் உங்கள் காரியங்களை சரிவர நடத்தி வந்ததற்காக நான் வெகுசந்தோஷமாயிருக்கிறேன். என்றால் தங்களுக்கு ஏதாவது ஆக

வேண்டியதாக இருந்தால் அதை இப்போது கேட்கும்'' என்றான். அதற்கு குண்டப்பன் ''மகாராஜாவே, தங்கள் அரண்மனை புரோகிதத்தில் நான் எப்பொழுது அமர்ந்தேனோ அப்போதுமுதல் எனக்கு யாதொரு குறைவுமில்லை; ஆனால் வெகுநாளாக ஒரு ஆசைமட்டில் மனதிலிருந்துகொண்டிருக்கிறது. இந்த தாசில் தாசில் என்று பெயர் வைத்துக்கொண்டு சில உத்தியோகஸ்தர்கள் நாட்டை ஆளுகிறார்களே. அந்தமாதிரி நானும் என்றைக்காவது என் பிராணன் போகுமுன் ஒருநாளாவது தாசில்வேலை செய்துவிட்டு மரணமடைய வேண்டுமென்ற ஆசை முற்றிலுமிருக்கிறது. அந்தப்படி எப்போதாவது எனக்கு வரும்படி உத்தரவிட்டால் போதும்'' என்றான்.

இதைக் கேட்டதும் சாமுண்டன் நகைத்து, இதுதானா நமது அரண்மனை புரோகிதனுக்கு துர்லபம். இந்த க்ஷணம் இவனுக்கு எந்த தாசில்வேலை காலியாயிருந்தாலும் சரி, அதைக் கொடுப்போம் என்று கருதி, தனது மந்திரியைக் கூப்பிட்டு விசாரிக்க, அவனும் நஞ்சங்கோடு தாசில்வேலை அந்த காலத்தில் காலியாயிருந்ததாகச் சொன்னான். உடனே அந்த வேலையை குண்டப்பனுக்கு கொடுப்பதாகச் சொல்லி அப்படியே தாக்கீது அனுப்ப அரசன் மந்திரிக்குக் கட்டளையிட்டான். மந்திரியும் அப்படியே ஒப்புக்கொண்டு வெளியே சென்றான்.

தனது புரோகித காரியங்களி லிவ்வளவு சரிவர நடந்துகொண்ட குண்டப்பனுக்கு தாசில்வேலை சரியாய் நடத்தத் தெரியாதா வென்று சாமுண்டன் தான் நல்ல ஆசாமியை நியமித்ததாக மனதில் நினைத்துக்கொண்டான். ஆயினும் தன் மனிதனுனபடியால் அவனுக்கு இரண்டொரு புத்திமதிகள் சொல்லக்கருதி அவனைப்பார்த்து ''என்ன குருவே! அதிகாரத்தை சரிவர நடத்திவாரும். உத்தியோகத்தின் ரகஸ்யங்கள் இரண்டு மூன்று உண்டு. இவைகளை ஒருவன் சரியாய் ஞாபகத்தில் வைத்திருந்தால் அவனுக்கு தன் அதிகாரத்தில் ஒரு நாளும் குறைவுவராது. அவைகள் யாவை என்றால்,

(1) ஒருவன் தன் முகத்தை எப்பொழுதும் கறுப்பாய் வைத்துக்கொள்ளவேண்டும்.

(2) எல்லார் காதுகளையும் கடித்துப் பேசவேண்டும்.

(3) எல்லார் சிண்டும் நமது கையிலிருக்கவேண்டும்.

இவைகள்தான். இந்த மூன்று சங்கதிகளை ஒருவன் சரிவர மனதில் வைத்திருப்பானேயானால் அவனுக்கு யாதொரு குறைவும் வராது'' என்றான்.

குண்டப்பன் அரசனிடமிருந்துவந்த புத்திமதிகளை வெகு கவனமாய்க் கேட்டுக்கொண்டான். அவன் கவனித்தமாதிரியில் அவைகளின் சாராம்சத்தை தனது புரோகிதனும் முற்றிலும் மூணர்ந்ததாக அரசனுக்கும் தோன்றிவிட்டது. அரசன் புன்னகையுடன் குண்டப்பனுக்கு தாசில் வேலையில் ஸர்வாதிகாரஞ் செலுத்த தனது அதிகார பத்திரத்தையுங் கொடுத்தான். அதைப் பெற்றுக்கொண்டு இன்று விழித்த முகத்தில் என்றென்றைக்கும் விழிக்கவேண்டுமென்று குண்டப்பன் வெகு சந்தோஷமாக வீட்டுக்குத் திரும்பிவந்தான்.

இதற்குள் மந்திரியால் விடுக்கப்பட்ட தாக்கீது நஞ்சங்கோடு சேர்ந்து அவ்விடத்திய சிரஸ்ததார் மகா ஜனங்கள் எல்லாரும் புதிய தாசில்தார் எப்பொழுது வருவாரோ என்னவோ என்று எப்பொழுதுமவரை எதிர்பார்த்தவர்களாயிருந்தார்கள். அந்தக் கர்ணுடகதேசத்தில் புதிய தாசில்தார்கள் வரும்போதெல்லாம் மகா ஜனங்கள் பட்டணத்துக்கு வெளியே மேளதாளத்துடன் காத்திருந்து வாத்தியகோஷத்துடன் அவரை ஊருக்குள் அழைத்துவருவது வழக்கம். இந்த வழக்கப்படியே ஜனங்கள் மைசூரிலிருந்து நஞ்சங்கோட்டுக்கு வரும் சாலையில் காத்திருந்தார்கள்.

குண்டப்பன் வீட்டுக்கு வந்ததும் தன் மனைவியிடம் தனக்கு வந்த அதிர்ஷ்டத்தைச் சொன்னுன். அந்த அம்மணியும் அரசன் தயைமட்டும் வீண்போகாதென்று களித்தாள். உடனே குண்டப்பன் நஞ்சங்கோட்டுக்குப் போக ஏற்பாடு செய்து, தனது பட்டுமடி ஸஞ்சிகையில் தனது 12-6 வேஷ்டி அங்கவஸ்திரம் இரண்டு ஜோடிகளை அழகாய் மடித்துவைத்தான். மறுநாள் வெடிய ஜாமப்பொழுதுக்கெல்லாம் தனது மடிஸஞ்சிகையைத் தூக்கி தலையில் வைத்துக் கொண்டு நஞ்சங்கோட்டை நோக்கிப் புறப்பட்டான். ஜன்மம் எடுத்ததுமுதல் புரோகிதனுனபடியால் ரஸ்தா ஓரமாய் வாய்க்கால் கரையில் எங்கேயாவது நாணல் நடப்பட்டிருந்தால் நல்ல தருப்பை இருக்கிறது என்று எண்ணிக்கொண்டு கொஞ்சம் தருப்பை நுனி முறியாததாக கிள்ளிக்கொள்ளுவான். ஐயோ! அபிமானம். எப்பொழுதும் கிள்ளிக்கிள்ளி கை காய்த்துப்போயிருக்கும். தருப்பையை விட்டுவிட இவனுல் எப்படியாகும்? இச்சி, புரசு முதலிய விருக்ஷங்களை ரஸ்தாவில் கண்டால் நல்ல இலைகள் கொஞ்சம் தருவிக்கு வேண்டியிருக்கும் என்பதாக எடுத்துக்கொள்ளுவான். இம்மாதிரியாக தருவியும் தருப்பையும் ஒரு மூட்டைகட்டி கையில் பிடித்துக் கொண்டும் தலையில் ஸஞ்சிகையை வைத்துக்கொண்டும் குண்டப்பன் நஞ்சங்கோட்டுக் கருகாமையில் வந்துகொண்டிருந்தான். அப்பொழுது நாழிகை 20, 22 இருக்கும்.

நாம் முன்னமேயே தாசில்தார் வரவை எதிர்பார்த்து சில மகா ஜனங்களும் முக்கிய உத்தியோகஸ்தர்களும் பட்டணத்துக்கு வெளியில் வாத்தியத்துடன் காத்திருப்பது வழக்கம் என்று சொன்னோமே. அம்மாதிரி எந்தவேளையில் தாசில்தார் வந்துவிடுவாரோ என்னவோ என்று நாழிகை 20க்கு மேலாயும் சிலர் நஞ்சங்கோட்டுக்கு வெளியில் காத்திருந்தார்கள். அவர்கள் குண்டப்பன் கையில் சமித்தேந்தியும் தலையில் சஞ்சிகை வைத்தும் வருவதைக் கண்டு, ஓகோ இவர் யாரோ ஒரு புரோகிதர் மைசூரிலிருந்து வருகிறாற்போலிருக்கிறது, இவரைக் கேட்டால் நமது தாசில்தார் இன்று வருகிறார் அல்லது இல்லை என்பது வெளியாகும். ஒருக்கால் அகாலமாய்விட்டதென்று நடுவில் எங்கேயாவது இறங்கி சமயல் செய்து சாப்பிட்டுவிட்டு வருகிறாரோ என்னவோ, எல்லாத்திற்கு மிவரைக் கேட்போம், என்று ஆலோசித்து, வெகு சிரமத்துடன் வந்துகொண்டிருக்கும் குண்டப்பனைக் கூப்பிட்டு "சுவாமி! தாங்கள் என்ன மைசூரிலிருந்துதானா வருகிறீர்கள், நமது புதிதாய்வரும் யஜமான் நஞ்சங்கோட்டு தாசில்தாரவாளை நடுவழியில் எங்கேயாவது கண்டீர்களா? அவர் ஒருக்கால் நாழிகையாய் விட்டதென்று நடுவழியில் தங்கிவிட்டாரா என்ன" என்று கேட்க, அதற்கு குண்டப்பன் தானே தாசில்தாராக வந்திருக்க அதை அறியாமல் தன்னை இம்மாதிரி அவர்கள் கேட்டதற்கு தன் முகத்தை கடுந்துகொண்டு, தலையிலிருந்த ஸஞ்சிகையை கீழே வைத்து அவிழ்த்து, கையால் தொட்டால் மடிவேஷ்டி விழுப்பாய்விடுமென்ற சாக்கிரதையுடன் தன் கையிலிருந்த தருப்பைக்கட்டால் ஒரு லக்கோடாவை வெளியில் தள்ளி "பார் அதை உடைத்து, நான்தான் புது தாசில்தார்" என்றான்.

அதை உடைத்துப் பார்த்தவுடன், இந்த புரோகிதனா நமக்கு புது தாசில்தார் என்று சிலர் வியப்புற்றார்கள். சிலர் இவர் பக்கா ஆஸாமியாயிருக்கவேண்டும், நம்மை பரீட்சிக்க இம்மாதிரி வந்திருக்கிறார் என்று கருதினார்கள். எப்படி இருந்தாற்றானென்ன! அரசன் ஸ்ரீமுகம் வந்திருப்பதால் மரியாதைக்கு என்ன குறைவு? உடனே தாளமேளங்கள் கொட்ட ஆரம்பித்தார்கள், வெகு விமரிசையுடன் குண்டப்பாவானவன் நடந்து சிரஸ்ததார் வீடு சேர்ந்தான். புது தாசில்தாரானபடியால் அவர் பதவிக்கேற்றபடி ஊபாகமாக சிரஸ்ததார் வீட்டில் அன்று சமையல் நடந்திருந்தது. குண்டப்பாவோ வெடிய ஜாமத்துக்கு ஊரைவிட்டுப் புறப்பட்டு சாயந்தரம்வரையில் பட்டினியாக வழிநடந்தவன். வெகு களை, வெகு பசி, என்ன இருந்தபோதிலும் தான் உடனே சாப்பிட்டுவிட்டு 25, 26 நாழிகைக்கெல்லாம் கச்சேரி வந்துவிடுவதாகவும், அங்கு எல்லாரும் தங்கள் தங்கள் வேலையில் தயாராக விருக்கவேண்டும் என்றும் கட்டளை இட்டுவிட்டான். எல்

லாரும் சடுதியில் ஸ்நானஞ்செய்து புசித்து உத்தியோக ஸ்தலம்போக கலேந்துவிட்டார்கள். சிரஸ்ததார் மட்டில் தான் சீக்கிரம் வருவதாக சொல்லி மற்ற உத்தியோகஸ்தர்களை அனுப்பிவிட்டு புது தாசில்தாராகிய குண்டப்பாவின் சௌகரியங்களை சரிவர கிட்டேயிருந்து நடத்த தன் வீட்டில் கொஞ்சம் தாமதித்தார்.

புதிய தாசில்தாரானவர் தான் அன்றையதினம் 25, 26 நாழிகைக்கே கச்சேரி வருவதாகச் சொன்னதைக் கேட்ட உத்தியோகஸ்தர்கள் ஓகோ இவர் கபட வேஷத்துடன் இப்படி வந்திருக்கிறார், வெகு புத்திமான்போலிருக்கிறது என்று நடுங்கி, அவசர, அவசரமாக ஸ்நானஞ்செய்து, புசித்து கச்சேரிபோய் சேர்ந்தார்கள். சிரஸ்ததார் தான் கிட்டே இருந்து குண்டப்பாவுக்கு போஜனஞ் செய்வித்தார். குண்டப்பாவோ பரம்பரையாய் புரோகிதர். பிராமணார்த்தம் சாப்பிடுவதுபோல் நாக்கைத் தீட்டிக்கொண்டு இலையில் போடப்படும் ஒவ்வொரு பதார்த்தத்தையும் ஒரே விழுக்காய் விழுங்க ஆரம்பித்தார். சாமான்களின் விலை இவர் ஒருநாளு மறிந்தவரல்ல. மற்றவர்களுடைய அன்னத்தைச் சாப்பிட்டே இவர் தொந்தியும் பெருத்திருந்தது. இவரிப்படி சாப்பிடுவதைக் கண்டு சிரஸ்ததார் ஒருவாறு தனக்குள்ளேயே தான் என்னதான் புன்னகைகொண்ட போதிலும் அதை எப்படி வெளிப்படக் காட்டக்கூடும்? உத்தியோக தோரணை பெரியது. அன்றியும் அரசன் ஸ்ரீமுகம் பெற்று வந்த தாசில்தார். இப்படியாய் போஜனம் ஒருவிதமாய் முடிந்து குண்டப்பாவும் கையைக் கழுவி கூடத்தில் வந்து உட்கார்ந்தார். உடனே வெள்ளித்தட்டில் 4, 5 கவுளி வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, சாதிக்காய், லவங்கம் முதலிய வாசனைப் பொருள்கள் இவைகளெல்லாம் கொண்டுவந்து வைக்கப்பட்டன. இவைகளைக் கண்டதும் குண்டப்பா எப்பொழுதும் புரோகிதராக விருந்து தக்ஷிணையில்லாமல் தாம்பூலம் வாங்காதவராகையால் "தக்ஷிணை எங்கே" என்றார்.

சிரஸ்ததாருக்கு இந்த சப்தம் காதில் விழுந்ததும் இதன் அருத்தம் புலப்படவே இல்லை. இப்படி இவர் திகைக்கையிலேயே "தக்ஷிணை எங்கே" என்று மறுபடியும் புது தாசில்தார் கேட்டுவிட்டார். இதை சிரஸ்ததார், ஓகோ, இவர் இலஞ்சம் வாங்கப்பட்டவர்போ லிருக்கிறது என்று அருத்தம் தனக்குள்ளேயே செய்துகொண்டு தாசில்தாருக்கு தகுந்த தக்ஷிணையாக 500 ரூபாய்களடங்கிய பைகள் இரண்டு கொண்டுவந்து வைத்தார். குண்டப்பாவோ ஒரு போசனத்துடன் 1,000 ரூபா தக்ஷிணை அரண்மனையில்கூட ஒருபொழுதும் வாங்கினவரல்ல. தாசில்வேலை வெகு கௌரவந்தான். தக்ஷிணையிலேயே

தனக்கு இரண்டுபை பணம் கிடைத்ததே என்று பணத்தை ஒவ்வொன்ருக எண்ணி தனது ஸஞ்சிகையில் வைத்தான். பிறகு வெற்றிலே போட்டுக்கொள்ள ஆரம்பித்து ஒரே வாயில் 10, 15 பாக்கு போட்டுக்கொண்டான்! ஜாதிக்காய், கிராம்பு, வாசனே திரவியங்கள் என்னும் எண்ணமில்லாதவன்போல் அவ்வளவையும் வாயில் ஒரே கொட்டாய் கொட்டிக்கொண்டான்! இம்மாதிரி இவன் கிருத்தியங்களே பார்க்கப் பார்க்க சிரஸ்ததாருக்கு என்னதான் வியப்புண்டானபோதிலும், ராஜனுடைய ஆக்ஞாபத்திரம் தான் கண்டிருந்தமையா லதற்கு விரோதமாக எப்படி நடக்கிறது! குண்டப்பா செய்த தவ்வளவையும் பொறுத்துக்கொண்டார். இப்படியாய் வெற்றிலே போட்டுக்கொண்டு முடிந்தவுடன் புது தாசில்தார் சிரஸ்ததாரை நோக்கி: "நீர் வேண்டுமாஞல் உமது வண்டியை விட்டுவிட்டு கச்சேரிக்குப் போகலாம். நான் ஒரு நாழிகைக்குள் வந்து சேருகிறேன்" எனவே, சிரஸ்ததாரும் வெகு சந்தோஷமாக அப்படியே என்று ஒப்புக்கொண்டார். உடனே சிரஸ்ததார் தன் ஆள் ஒருவனேக் கூப்பிட்டு தாசில்தாரிடம் காத்திருக்கக் கட்டளேசெய்து வண்டியையும் தயாராக விட்டுவிட்டு தான் சீக்கிரமாக கச்சேரி போனுர். இம்மாதிரி தன்னைக் கொஞ்சம் முன்னமே போகச்சொன்னதில் சிரஸ்ததாருக்கு வெகு ஸந்தோஷம். என்னமோ ஏதோ, புது தாசில்தார்; அவர் வரும் அரைநாழிகை முன்னதாகவாவது தான் கச்சேரியிலிருந்து எல்லாவற்றையும் சீராக வைத்து அவர் வரவை எதிர்பார்த்திருந்தா லல்லவோ தான் விசாரப்படாமலிருக்கலாம்.

இப்படியாய் சிரஸ்ததாரை அனுப்பிவிட்டு புது தாசில்தார் அரசன் தான் புறப்படும் முன் தனக்கு போதித்த மூன்று புத்திமதிகளே நினைத்துக்கொண்டார். அவைகளில் முதலாவது, முகத்தை எப்பொழுதும் கறுப்பாக வைத்துக்கொள்ளவேண்டும், என்பது. இந்த புத்திமதியைச் சொன்ன அரசனுடைய தாத்பரியம், எல்லாரிடமும் வழ, வழ, கொழ, கொழ என்று பேசிக்கொண்டிருக்காமல் எப்பொழுதும் கடுகடுப்பா யிருக்கவேண்டும். அப்படியிருந்தால்தான் அதிகாரம் செல்லும். அப்படி யில்லாத பக்ஷத்தில் எளிதில் குடிகள் ஒருவனே ஏய்த்துவிடுவார்கள் என்பதாம். ஆனல் குண்டப்பாவுக்கு இந்த சூட்சமான அருத்தம் கொஞ்சமேனும் தெரியவில்லே. அவன் யதார்த்தமாக முகத்தை கறுப்பாகவே வைத்துக்கொள்ளவேண்டும் என்று எண்ணிவிட்டான்.

உடனே தன்னிடம் காத்திருந்த ஆளேக் கூப்பிட்டு வீட்டுக்குள்ளிருந்த பரிசாரகனேக் கூப்பிட்டுவரச்சொன்னுன். அவன் வந்ததும் ஒரு தேங்காயவ்வளவு அடுப்புக்கரி அரைத்துவர அவனேக்

கட்டளையிட்டான். பரிசாரகனோ என்னத்திற்கு என்று கேட்க அதிகாரமுள்ளவனல்ல. யஜமான் சொற்படி ஒரு உரியாத தேங்கா யவ்வளவு கரி அரைத்துக்கொண்டுவந்து வைத்தான். அதை குண் டப்பா எடுத்து ஒரு நிலைக்கண்ணாடி முன்னுட்கார்ந்து கண்கள், மூக் கோட்டை, வாய் துவாரம், செவியின் உட்துவாரம் நீங்கலாக, மற்ற இடங்கள் ஒன்றாவது விடாமல் தன் முகத்தில் பூசிக்கொண்டான். நன்றாய்க் காய்ந்தபிறகு நிலைக்கண்ணாடியில் மற்றொருதடவை தன் முகத்தை பார்த்துக்கொண்டான். வெகு கறுப்பாயிருந்தது. தன் முகத்தைப் பார்க்கத் தனக்கே பயங்கரமாகத் தோற்றிற்று. நல்லது இப்படி இருந்தாற்றான் குடிகளும் உத்தியோகஸ்தர்களும் நம்மைக் கண்டு பயப்படுவார்கள் என்று எண்ணிக்கொண்டு, தனது முகத்தை முற்றிலும் வெளியே காட்ட தனக்கே வெட்கமாக இருந்தபடியால் அங்கவஸ்திரத்தால் முக்காடிட்டுக்கொண்டு, குண்டப்பா வண்டி யேறி கச்சேரி வந்தான். சிரஸ்ததார் வெளியிலேயே காத்திருந்து புதிய தாசில்தாரை அழைத்துப்போய் அவர் ஆசனத்தில் உட்கார வைத்தார்.

குண்டப்பா இப்படியாய் தனது ஆசனத்திலுட்கார்ந்ததும் கொஞ்சம் கொஞ்சம் தனது முக்காட்டை நீக்கி உத்தியோகஸ்தர்கள் என்னவேலை செய்கிறார்கள் என்று பார்த்துவந்தான். சிரஸ்ததாரும் மற்ற உத்தியோகஸ்தர்களும் இவன் முகத்தை கண்டுகொண்டு இதென்ன ஆச்சரியம், இப்படியும் ஒருவன் உண்டோ என்று திகைத்துவிட்டார்கள். ஆயினும் அரசன் தானாகவே அனுப்பிய மனிதன். அதிகாரபத்திரம் பெற்றவன். நடக்க நடக்கப் பார்ப் போம் என்றிருந்து விட்டார்கள்.

இப்படியிருக்கையில் அஸ்தமனமாய்விட்டது. வெகு சடுதியில் போவதற்காக கையொப்பமாகவேண்டிய சில உத்தரவுகளை சிரஸ்த தார் எடுத்துக்கொண்டு புதிய தாசில்தாரிடம் வந்து தான் நிற்கவேண் டிய மரியாதையில் ஒதுங்கி நின்றார். "ஏன் ஒதுங்கி நிற்கிறீர். கிட்டே வாரும்" என்று தாசில்தார் சொல்ல, சிரஸ்ததார் கொஞ்சம் சமீபமாக வந்தார். "இன்னும் சமீபமாக வாரும், இன்னும் சமீப மாக வாரும்" என்று தாசில்தார் கட்டளையிட்டார். சிரஸ்ததாரும் அப்படியே செய்தார். ஆனாலிப்படி குண்டப்பா கேட்டுக்கொண்ட தற்கு என்னகாரணம் என்று நமது நண்பர்கள் கேட்கலாம்; இதை சொல்லுவோம்.

அரசன் தனது புரோகிதனை குண்டப்பாவுக்கு சொன்ன இரண் டாவது புத்திமதியை நமது நண்பர்கள் கவனிக்கவேண்டும்; அது என்னவென்றால்:—

எல்லார் காதுகளையும் கடித்துப் பேசவேண்டும்.

அப்படி சொன்னதில் சாமுண்டனுடைய அருத்த மென்ன வென்றால் ராஜ்ஜிய காரியங்களைப்பற்றி அதிகாரிகளிடம் பேசும் போது பகிரங்கமாகப் பேசாமல் இரகஸியமாகப் பேசவேண்டும் என்பதாம். அப்படித்தான் முன்பின் அதிகார தோரணையிலிருந்த வர்களிதை வாங்கிக்கொள்வார்கள். ஆனால் குண்டப்பாவுக்கோ இந்த அருத்தம் உண்டென்பதே தோன்றவில்லை. முதல் புத்திமதியைப்போல் இரண்டாவது புத்திமதியையும் ஒருவன் காதை நிஜமாகவே கடித்துப் பேசவேண்டும் என்று அருத்தம்பண்ணிக்கொண்டு விட்டான். சிரஸ்ததார் தனக்கு வெகு சமீபம் காகிதங்களுடன் நெருங்கினதும் அவன் காதில் இலட்சியம்வைத்து குண்டப்பா வேட்டைநாய்மாதிரி ஒரே தாவாய்த் தாவி "நமது குடிகளெல்லாம் நல்ல ஸ்திதியிலிருக்கிறார்களா" என்று அவன் காதை தன் வாயில் கடித்துக்கொண்டு குளறிக் கேட்டான். இதென்ன விபரீதம்! சிரஸ்ததார் தன் பிராணனுக்கே அபாயம் வந்ததாக நடுங்கினான். "எல்லாரும் நல்ல ஸ்திதியிலிருக்கிறார்கள் சுவாமி! என் காதை விட்டு விடுங்கள்" என்று கதறினான். இரண்டாம்தரம் "நல்ல ஸ்திதியிலிருக்கிறார்களா" என்று புது தாசில்தார் காதைக் கடித்தபடியே கேட்க, "ஐயோ! இருக்கிறார்கள், இருக்கிறார்கள்" என்று சிரஸ்ததார் கதறினான். விட்டானில்லை குண்டப்பன். மறுபடி மூன்றுந்தடவை "இருக்கிறார்களா" என்று தன் வாயை சிரஸ்ததார் காதைவிட்டு எடுக்காமலே குண்டப்பா கேட்க, அதற்கு அந்த கதியற்ற பிராணியும் "இருக்கிறார்கள், இருக்கிறார்கள்" என்று ஒருநூறுதடவை பதிலளித்தான். எப்படியாவது தன் காது புது தாசில்தார் பற்களில் கத்தரிக்கப்படாமல் உயிர் தப்பினால் போதும் என்று சிரஸ்ததாருக்கு தோன்றிவிட்டது. இம்மாதிரி மூன்றுதடவை காதைக் கடித்தபடியே தாசில்தார் கேட்க, அதற்கு தகுந்த பதில் வந்ததும் விட்டுவிட்டான் காதை குண்டப்பாவும். எடுத்தானோட்டம் உயிர் பிழைத்தால் போதும் என்று சிரஸ்ததாரும். தன் வீட்டுக்குக்கூடப் போகாமல் இவ்வதிசயமான தாசில்தாரை அனுப்பினதற்காக அரசனை நேராகக் காண ஓடிவிட்டான் சிரஸ்ததார் மைசூர் சாலையை நோக்கி.

இவைகளை எல்லாம் கண்டு நடுநடுங்கினார்கள் மற்ற உத்தியோகஸ்தர்கள். புதிய தாசில்தார் ஏதோ என்னவோ, புலி ஒன்று வந்திருக்கிறது என்று நினைத்தார்கள். உட்கார்ந்த இடத்தைவிட்டு ஒருவனாவது அசையவில்லை. சிரஸ்ததார்மட்டில் ஓடிவிட்டாரேயல்லாமல் மற்றவர்கள் தங்கள் தங்களிடத்திலிருந்தார்கள். தாசில்தார் தன் ஆசனத்தை விட்டு எழுந்திருந்தாலல்லவோ மற்றவர்களும் எழுந்திருப்பது

நியாயம். அவரோ கச்சேரி பண்ணிக்கொண்டேயிருந்தார். மற்றவர்கள் எப்படி தங்களிடத்தைவிட்டுப் போவார்கள். ஐயோ! இவர்களும் சிரஸ்ததாரைப்போல் ஓடியிருக்கக்கூடாதா என்பதுதான் நம்முடைய துக்கமும்.

இம்மாதிரி மூன்று புத்திமதிகளில் இரண்டை அன்றையதினமே சரிவர நிறைவேற்றினன் அதிபுத்திமானுன குண்டப்பன். இன்னும் பாக்கியிருந்ததெல்லாம் ஒன்றே ஒன்று. அதாவது:

எல்லார் சிண்டும் நமது கையிலிருக்கவேண்டும், என்பது.

இதை நிறைவேற்றுவதுதானு குண்டப்பனுக்குக் கஷ்டம்? இன்றையதினமே அதையும் நாம் நிறைவேற்றிவிடவேண்டுமென்று ஒரே அடியாய் கச்சேரி செய்துகொண்டு உட்கார்ந்திருந்தான். என் செய்வார்கள் உத்தியோகஸ்தர்கள்? எங்கும், விசேஷமாய் கர்னுடக ராஜ்ஜியத்தில், யஜமான் எழுந்திருந்தால் ஒழிய, மற்ற உத்தியோகஸ்தர்கள் தங்களிருப்பிடத்தை விட்டுக் கிளம்பார்கள். இரவு பத்து நாழிகையாயிற்று. தாசில்தார் எழுந்த பாட்டைக் காணும். ஆகவே அவனவன் தானிருந்த இடத்திலேயே களைத்துப்போய் நித்திரை மேலிட தூங்கிவிட்டான். இப்படி எல்லாரும் தூங்கவேண்டுமென்றேதான் குண்டப்பாவும் காத்திருந்தது. விழித்திருந்தால் எல்லாருடைய சிண்டும் இவன் கையிலெப்படி சிக்கிவிடும்? எல்லார் சிண்டும் கையிலிருக்கவேண்டும் என்று அரசன் சொன்னதின் தாத்பரியம் ஸர்வாதிகாரமும் நமது கைக்குள்ளேயே இருக்கவேண்டும் என்றபடி. ஆனல் குண்டப்பாவோ எல்லாருடைய குடுமிகளையும் தான் அறுத்து வைத்துக்கொள்ளவேண்டும் என்று தனது தாழ்ந்த புத்திக்குத் தக்கவாறு அருத்தம் பண்ணிக்கொண்டான். அனைவர்களும் தூங்கக்கண்டு அதேபிரகாரம் செய்ய கூர்மையான ஒரு கத்தரிக்கோலை கையிலெடுத்து, குண்டப்பா மெய்மறந்து உறங்கும் ஒவ்வொரு உத்தியோகஸ்தனிடமும் போய் அவனறியாமலே ஒவ்வொருவர் குடுமியையும் கத்தரித்து ஒரு மூட்டையாகக் கட்டிக் கொண்டான்.

தாசில் வேலையில் தான் நடந்துகொள்ள வேண்டியதற்காக அரசன் சொன்ன புத்திமதி மூன்றையும் ஒரு நாளிலேயே நிறைவேற்றியாய்விட்டது. இனி என்னபாக்கி நின்றது. அவ்வளவு சிண்டுகளையும் ஒரு மூட்டையாய்க் கட்டிக்கொண்டு சிரஸ்ததார் வீட்டுக்கு குண்டப்பா அர்த்தராத்திரியில் வந்து சேர்ந்தான். பகலைப்போல அங்கு சாப்பாடு தயாராக இருந்தது. வீட்டிலிருந்தவர்களுக்கு கச்சேரி சங்கதி என்ன தெரியும்? பெரிய யஜமான் முன்னதாக வந்தார், சிறிய

யஜமான் பின்னாலே வருவார் என்று குண்டப்பாவுக்கு முதலில் அமுதளித்தார்கள். அதை சாப்பிட்டுவிட்டு பகலில் தக்ஷிணைவந்த பணத்தை ஒரு மூட்டையாகவும், நடுராத்திரியில் தான் களைந்து வந்த குடுமிகளை மற்றொரு மூட்டையாகவும் கட்டிக்கொண்டு குண்டப்பா இவ்விரண்டு மூட்டைகளுடன் தனது மடி ஸஞ்சிகையையும் விடாமல் எடுத்துக்கொண்டு மைசூருக்கு புறப்பட்டுவிட்டான்.

ஒரேநாளில் அரசன் சொன்ன அவ்வளவையும் சரிவர நடத்தினதற்காக அவன் மனதிலிருந்த ஆனந்தத்தை கணக்கிட யாராலாகும்? அவன் நடந்த வேகத்தையுங் கணக்கிட யாரால் முடியும்? சூரியோதயமாகும்போது சரியாய் மைசூர் அரசன் அரண்மனை வந்து சேர்ந்துவிட்டான். அவனுக்கு கால்நாழிகைக்கு முந்தித்தான் சிரஸ்ததாரும்தன்னுடைய வீங்கியகர்துடன் அரண்மனைவாசல் வந்து சேர்ந்தது. அப்பொழுதுதான் தனது துயிலெழுந்து தந்தசுத்தி செய்ய மகாராஜாவும் அரண்மனை வெளியில் வந்து உட்கார்ந்த சமயம். அவர் முன் னிவ்விருவர்களும் போய் நின்றார்கள். சிரஸ்ததாருக்கோ, நான் கொஞ்சம் முன்னதாக வராமற் போனேமே தாசில்தாரை நேரில் வைத்துக்கொண்டு அவர்மேல் எப்படி நாம் குற்றஞ்சாட்டுகிறது என்ற பயம்மட்டும் மேலிட்டிருந்தது. ஆனால் குண்டப்பாவோ கொஞ்சமேனும் பயப்பட்டவனல்ல.

நிர்ப்பயமாக அரசனை நோக்கி குண்டப்பா, "ஓ மகா ராஜாவே! தாங்கள் எவ்வளவோ என்பேரில் கருணைகூர்ந்து நான் கேட்ட வாய் மூடும்முன்னம் எனக்கு நஞ்சங்கோடு தாசில்வேலை கொடுத்தீர்கள். ஒருக்கால் என்னை நியமிக்கும்போது, புரோகிதனாகிய எனக்கு அமல் செலுத்தத் தெரியுமோ தெரியாதோ என்று முக்கியமான புத்திமதிகள் மூன்று சொல்லியுங் கொடுத்தீர்கள். அவைகளைக் கேட்டவுடன் என்னமாய் நாம் இவைகளை சரிவர நடத்தி முடித்து நமது மகாராஜாவை திருப்திப்படுத்துவோம் என்ற அச்சமும் எனக்கு மனதுக்குள் இருந்துகொண்டேயிருந்தது. ஆனால் தங்கள் கடாக்ஷம் என்பேரில் வந்தபிறகும், சர்வசக்திக் கடவுளாகிய சாமுண்டியின் பிரஸாதம் என்பேரிலிருக்கிறவரையில் எனக்கு என்னகுறை? முகத்தை கறுப்பாய் வைத்துக்கொள்ளவேண்டுமென்று முதல்முதலில் கட்டளை இட்டீர்கள்; இதோ பாருங்கள். நேற்று பூசின கரி நான் இன்னமும் அலம்பவில்லை. தங்களுக்கு காட்டியபிறகு கலைக்கவேண்டுமென்றே அப்படியே நேற்றுபோட்ட பற்று அழியாமல் வந்திருக்கிறேன். இரண்டாவது, ராஜ்ஜியதந்திரங்களை சரிவர நடத்த எல்லார் காதையும் கடித்துப் பேச வேண்டும் என்றீர்கள். அப்படியே நான் நடந்துகொண்டேன்

என்பதை தங்களிடம் எப்படி நிரூபிக்கப்போகிறேன் என்பதாக நான் வெகு ஏக்கங்கொண்டிருந்தேன். நல்லவேளை என் சிரஸ்ததாரும் எனக்கு முன்னதாக இங்கு வந்து நிற்கிறான். அவனை வேண்டுமானால் கேட்டுக்கொள்ளுங்கள், அவன் காதை நான் கடித்துப் பேசினது உண்டா இல்லையாவென்று. ஆனாலிந்தவிஷயம் அவனை கேட்கவேண்டியதுகூட அனுவசியம், அவன் காதின்வீக்கம் ஒன்றே போதும். இன்னுமொன்று எல்லார் சிண்டும் நமது கையிலிருக்க வேண்டும் என்றீர்கள். நான் அப்படி செய்தேனா இல்லையா! இதோ பாருங்கள்! என்று சொல்லி தான் கட்டிவந்த நூறு குடுமிகளையும் துணியை அவிழ்த்துக் கொட்டினான்.

இவன் சொன்ன மாதிரியினாலும், சிரஸ்ததார் காதினாலும், இவன் முகத்தின்மேலிருந்த பற்றினாலும் கொட்டுண்ட குடுமிகளாலும் அரசனுக்கு குண்டப்பன் செய்த அதிகாரம் விளங்கிவிட்டது. குடுமியை குண்டப்பன் அவிழ்த்துக் கொட்டும்போது சாமுண்டன் கொல் என்று கொஞ்சம் சிரித்துவிட்டான். பிறகு பொறுக்கக்கூடாத துக்கம் வந்துவிட்டது. "ஐயோ! அற்பனை இவனுக்கு நாம் அரைநாழிகை அதிகாரங் கொடுக்கப்போய் அநியாயமாக இவ்வளவு கிரஹஸ்தர்கள் தங்கள் குடுமிகளை இழந்தார்களே. நிரபராதியான சிரஸ்ததாரின் காது அப்பம்போல் வீங்கித் தொங்குகிறதே" என்று புலவாறு அரசன் துக்கப்பட்டான். சிரஸ்ததாருக்கோ பிராது செய்ய வேண்டிய அவசியமேயில்லை.

இப்பொழுதுதான் அரசனுக்கு குண்டப்பாவின் புத்திசாலித்தனம் வியக்தமாயிற்று. ஐயா! குருவே, போதும் உமது அமில். ஒருநாளுடன் திரும்பிவந்தீரே! இதே நான் செய்த புண்ணியம் என்று குண்டப்பாவை கைதூக்கிக் கும்பிட்டு அன்றுமுதல் அவர் அரண்மனைக்கு வந்து புரோகிதம் பண்ணுவதைக்கூட அரசன் நிறுத்திவிட்டான். சிரஸ்ததாரிடம் தானிம்மாதிரி ஒரு அசடை அனுப்பி அத்தனை பெயர்களை அவமானம்பண்ணினதற்கு மன்னிக்க கேட்டுக்கொண்டான். குண்டப்பாவுக்கு தாசிலில் ஆசை விழப்போக எந்நாளுமிருந்த புரோகிதமும் போயிற்று. வயிறும் வாடிற்று.

முற்றிற்று.

S. P. C K. Press, Vepery, Madras—1897